# சாமி

## தமிழர் அறம்



வண. T.S யோசுவா

20/08/2018

# சாமி

## தமிழர் அறம்

வெளியீடு:
காவேரி கலாமன்றம்

வண T. S. யோசுவா

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | உள் செல்லும் முன் | i - ii |
| *2.* | அணிந்துரை | iii - v |
| *3.* | சாமி | *1 - 10* |
| *4.* | மக்கள் | *11 - 22* |
| *5.* | ஆட்சி | *23 - 42* |
| *6.* | சந்தனம் மிஞ்சினால் | *43 - 58* |
| *7.* | பட்டி | *59 - 73* |
| *8.* | நாணயம் | *74 - 87* |
| *9.* | அணில் கூடு | *88 - 101* |
| *10.* | வீரத்தாய் | *102 - 113* |
| *11.* | ஊறுகாய் | *114 - 128* |
| *12.* | மருந்து | *129 - 146* |
| *13.* | வாசித்தபின் தோன்றியவை | *147 - 159* |
| *14.* | நூலாசிரியரின் இதர நூல்கள் | *160* |

# சமர்ப்பணம்

இந்தப் புயலுக்குள்ளும்

சிறகு விரிக்கும்

உங்களுக்கு...

| | | |
|---|---|---|
| நூல் | : | சாமி (கதை சொல்லல்) |
| ஆசிரியர் | : | வண T. S. யோசுவா |
| முதற் பதிப்பு | : | 2018 ஆடி |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டை வடிவமைப்பு | : | ஓவியர் இராசன் |
| வெளியீடு | : | காவேரி கலா மன்றம் |
| பக்கம் | : | 170 |
| விலை | : | 150/= |
| பதிப்பு | : | சிவா பதிப்பகம், கிளிநொச்சி. |

Saami – Story telling

| | | |
|---|---|---|
| Author | : | Rev T. S. Joshuwa |
| First Edition | : | 2018 July |
| Copy Right | : | Author |
| Cover design | : | Artists Rajan |
| Publication | : | Kaveri Kala Manram |
| Pages | : | |
| Price | : | 150/= |
| Printers | : | Siva Printers, Kilinochchi. |
| ISBN | : | 978-955-7825-02-1 |
| Bar Code | : | 9 789557 825021 |

## உள்செல்லும் முன்....

இந்த அடைகாத்தலின் காலங்கள் நிறைவு பெற்றபோது அத்தனை குஞ்சுகளும் முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வந்து விட்டன. கருக்கொண்ட காலம் முதல் கரையேற்றி, அடைகாத்து, கருநாகம் கடைசியாக என்முன்னே ஒரு பாய்ச்சல் பாய்ந்து செல்லும் வரை அத்தனை எதிர் நீச்சலும் ஏற்படுத்திய சூட்டோடு சூடாய் இந்தக் குஞ்சுகள் இங்கே முட்டையைக் கொத்தி உடைத்து வெளிவந்து விட்டன. ஆனால் நான் இன்னும் இங்குதான் இருக்கின்றேன், இந்த அடை காத்தலின் தொடர்ச்சிக்காய்.

அதோ அங்கே பார், இதோ இங்கே பார் என்று சுற்றி சுற்றி பார்க்கச் செய்துவிட்டு சுற்றலில் தலை சுற்றி நிற்பதற்குள் கையிலிருந்த கோப்பையையும் காணவில்லை. "இனி" என்ன? இன்னும் இங்கே நாங்கள் பரிதாபப்பட வேண்டியவர் களாக்கப்பட வேண்டியது தான். இப்படியும் ஒரு யுக யுகமாய் வாழ்வதற்கான ஒரு பிறப்பு, நம்மைச் சுற்றி நாமே நாமாய் பிறக்கின்றோம்.

குருவிகளுக்கு கொஞ்சச் சூடும், சூட்டோடு நான் சேர்த்த பாட்டும், சிறகுகளை அசைத்து பறக்கச் செய்ததால் தான், இந்த பறப்பிற்கான சிறகு விரித்தல்கள். வானம் பெரிதென்று, கூட்டுக்குள் இருந்த வரை நினைத்த நினைவுகள்;

பறக்கத் தொடங்கத்தான் எல்லை இல்லா வானத்திலும் எல்லைக் கோடுகளாய் நாம் பறக்கின்றோம் என்று பறக்கத் தொடங்கியிருக் கின்றது இந்த குருவியின் குஞ்சுகள்.

உங்கள் முற்றத்தில் நின்று சில நேரம் நாளை இந்த குயில் கூவும், அது உங்கள் காதுகளுக்குள் ஓடி இதயத்தை சூடாக்கி, மூளையை எழுப்பி விட நீங்களும் பறக்கலாம் வானத்தின் எல்லைக் கோடுகளாய்.

அடைகாத்தலின்
சிறகுகளுடன்
வண T. S. யோசுவா

# அணிந்துரை

கலாநிதி வண யோசுவா அவர்களின் "சாமி" தமிழர் அறம் என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்குவதற்கு எனக்கு தகுதி இருக்கின்றதா என்பதற்கு அப்பால், எனக்கு வாழ்வியல் ஒழுக்கம் இருக்கின்றது என்பதை மனதில் நிறுத்தி இந்த நூலுக்கு அணிந்துரை வழங்குகின்றேன்.

கலை, இலக்கியம், சமூகப்பணிகள், அனைத்தையும் மனித வாழ்வியலுக்குள் கொண்டுவந்த, வருகின்ற தத்துவக் கருத்துக்களும், செயற்பாடுகளும் கொண்ட மனித ரட்சகராக கலாநிதி வண யோசுவா அவர்களை நான் பார்க்கின்றேன்.

ஊர்களின் திசை காட்டும் கட்டை, நின்ற இடத்தில் நின்று கொண்டுதான் திசையை காட்டும், ஆனால் நூலாசிரியர் யோசுவா அவர்கள் மக்களோடு மக்களாக சென்று திசை காட்டுபவர், வாழ்ந்து காட்டுபவர், வாழ வைப்பவர். இன, மத, பேதங்களற்ற மனிதர்களை உருவாக்க, மனிதத்தை போதிக்கும் மனிதரட்சகர், கலங்கரை விளக்கு அவரே.

சாமி,
மக்கள்,
ஆட்சி,
சந்தனம் மிஞ்சினால்,
பட்டி,
நாணயம்,
அணில் கூடு,
வீரத்தாய்,
ஊறுகாய்,
மருந்து

மருந்து, என பத்து கதைகள் படைத்து இயற்கைக்கும், செயற்கைக்கும் இடையேயான ஒவ்வாமையை காட்டி, மனிதர்கள் மனிதத்தை இழந்தவர்கள், ஆட்சியாளர்கள், அராசகர்கள், கொடூரர், தேவையானது, தேவையற்றது, நோய், நோயகற்றும் காரணிகள், முயற்சி, நாணயம், ஒற்றுமை, மனித நேயம், இலட்சியம், இயற்கை, ஆசை போன்றவற்றை உள்ளடக்கிய பத்துக் கதைகள், பலநூறு தத்துவங்களை இந்நூலில் உள்ளடக்கியுள்ளார். இந்தப் பத்துக் கதைகளும், மக்களை சீர்ப்படுத்த, அறியாமை இருள் அகற்ற, போட்டி, பொறாமை, பொய், சூது, சூட்சி, ஆசை, கோபம், கயமை, கபடம், தந்திரம், இவையெல்லாம் ஈட்டியின் முனை, இதை எய்தவன் மடிவான் என்ற தத்துவ விளக்கங்களைக் கொண்டு படைக்கப்பட்ட பத்துக் கதைகளும் அர்ப்பணிப்பு, நேர்மை, முயற்சி, எளிமை, தியாகம், பொதுமை வெற்றிபெறும். இயற்கை வாழவைக்கும் வெற்றி நிச்சயம் என்ற பொன்னான தத்துவங்களோடு கதைகள் நகர்கின்றன.பழைய ஏற்பாட்டில் இருக்கும் (old testament) ஆதாரங்களை வைத்துப் புதிதாக ஆராய்ச்சி செய்து கற்பனை கலந்த கதை அமைத்து. ஞானி மோசசின் வாழ்வை பார்ப்போர் வியந்து போற்றும் வண்ணம் பத்துக் கட்டளைகள் என்ற திரைப்படம் படைக்கப்பட்டது. பாரெங்கும் பவனிவந்தது.

அதற்கு இணையாக இந்தப் பத்துக் கதைகளும் வண யோசுவாவின் எழுத்துருவில் தத்துவமாய் பொன்மொழி கருத்தாக்கமாக படைக்கப் பட்டுள்ளது. நிசமானதே. மனிதத்தை உலுக்கும் நிகழ்வுகள், உள்ளத்தை சிதைத்து, குடும்பங்களைப் பிரித்து, உறவுகளை உடைத்து, இனங்களை மோதவிட்டு, மதங்களைப் பிரித்து, அறியாமையில் திண்டாடி, வாழ்வைத் தொலைத்த

மனிதர்களின் வாழ்வைச் செப்பனிட, இயற்கையை வணங்குவதற்கும், மரபை கொண்டாடு வதற்கும், யோசுவா அவர்களால் இந்த நூல் படைக்கப்பட்டுள்ளது. இந்நூல் பாரம்பரியத்தை மீட்கப் போராடுகின்றது. வெற்றி பெறும்.

ஆசிரியன் தன்னை தனது நூலில் அமைத்து விடுகின்றான். ஆசிரியரின் சீவநாடி அவனது நூலிலேயே துடித்துக் கொண்டிருப்பதாகும். ஆசிரியனுக்குரிய விசேட ஆத்ம குண மெல்லாம் நூலின் கருத்தில் காணப் படுதல் நிச்சயம். நூலில் எழுதியுள்ள கதைகளின் வாழ்க்கை நிலையில் ஆசிரியன் தானே வாழ்கின்றான். சுருங்கக்கூறின் ஆசிரியனது உயிர் வாழ்வின் சாராம்சமே. அவர் இயற்றியுள்ள இக் கதைகள் வாழ்க்கைத் தத்துவக் கதைகள் எனத் தகும்.

வெய்யில்கேற்ற நிழலுண்டு வீசும் தென்றல் காற்றுண்டு என்றார்

— கவிமணி —

வற்றிப்போன வயிறு
காற்றில் ஆடும் கந்தை
கன்னத்தை நனைக்கும் கண்ணீர்
இத்தனைக்கும் நடுவிலும்
மலர்ந்தாடிய கனவுகள்
என்றார் தத்துவ ஞானச்
செயற்பாட்டாளர் யோசுவா...

அவர் கனவு நினைவாகும், தமிழர் அறம் நிலைக்க எனது வாழ்த்துக்கள்.

கலாசோதி வல்லிபுரம்
ஏழுமலைப்பிள்ளை
எண்: 11/01 மலையாளபுரம்,
கிளிநொச்சி.




# சாமி

நீ போறதெண்டா வீட்டை விட்டு போகலாம். எனக்கொன்றும் பிரச்சினை இல்ல. நானும் மகள் ரேவதியும் இருந்துட்டு போவம் என்று நான் கூறியவுடன் வதனி இப்படி வெடித்து சிதறுவாள் என்று நான் எதிர் பார்க்கவே இல்லை. தனியா வாழ்றதுக்கு ஒரு நோக்கம் மனசில வந்திட்டா அதைப் பற்றி நிறைய யோசிக்கத் தான் வேணும், இப்ப அப்படித்தான் இருக்குது எல்லாம். யார் யார் எங்க இருக்கினம் என்று இப்ப சொல்லவே முடியாது என்று பொங்கி வெடித்துக்கொண்டிருந்தாள் வதனி. சும்மா ஒரு சின்ன பிரச்சினை இவ்வளவு பெரிய குடும்ப பிரச்சினையா வருமென்று யோசிக்கயில்ல, மகள் ரேவதியும் எத்தனையோ முறை ரெண்டு பேருக்கிடையிலும் சமாதானம் பண்ணப்பார்த்தாலும் சண்டை முடியுதில்லை என்று நினைத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தேன்.

வீட்டுக்கு வெளிய புதினம் பார்க்க பக்கத்து வீட்டு பத்துமா அக்காவும், அவான்ர புருசனும் என்னப்பா ஒருக்காலும் இல்லாம இப்ப இப்பிடி சண்டை பிடிக்கிறியள் என்று கேட்டார்கள். நான் பதில் சொல்ல முன்பு மகள் ரேவதி "சாமிச் சண்டை" அன்ரி, என்று சொன்னாள். ஏன் கோயிலுக்கு போறதுக்கு பிரச்சினைப் படுறியளே, இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே போறதெண்டா போட்டு வாங்கோவன் என்று பத்துமா அக்கா கூறினா. அது கோயில் சாமி இல்லை ஊர்ல இருக்கிற சாமியாம் என்று ரேவதி திரும்பவும் கூறிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டாள். சரி, சரி ஊர் சாமியோ கோயில் சாமியோ, சாமியை கும்பிடுங்கோ நல்லது நடக்கும் என்று பத்துமா அக்கான்ர புருசன், நானும் கோயிலுக்கு தான் போறன் என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

இடியுடன் பெய்த மழை ஓய்ந்தது போலிருந்தது வதனியுடன் பிடித்த சண்டை. திருமணம் முடித்து இருபது வருடத்தில இப்பத்தான் மோசமா சண்டை பிடித்திருக்கிறோம். அதுவும் அற்பமான சிறிய சாமி என்ற விடயத்திற்கு, குடும்பம் பிரியிற அளவு கதைகளை நான் கதைச்சிருக்கக் கூடாது.

நானும், வதனியும் கௌரவமான குடும்ப பின்னணியில் வந்தவர்கள். இருவருடைய பெற்றோரும் அரச உத்தியோகத்தர்கள். நாங்களும் அரச உத்தியோகத்தர்கள் என்றபடியால் சமூகத்தில் அடிமட்டத்தில் வாழுகின்ற மக்களின்ர துன்பங்கள், பிச்சினைகளை பற்றி ஏதாவது பேசினா வதனி அது நமக்கு தேவையில்லாத பிரச்சினை போல கதைக்கிறது எனக்கு மனதுக்கு சஞ்சலத்தை ஏற்படுத் துறதாலை தான் இந்த சண்டை. கலியாணம் முடிஞ்சு ஐந்து வருடம் பிள்ளை இல்லாமலிருந்து ஐயப்பன் சாமிக்கு நேத்தி வச்சுதான் ரேவதி பிறந்தவள், மானிப்பாய் அந்தோனி யாருக்கும் நேத்தி வச்சதால தான் இரண்டு சாமியின்ர கோயிலுக்கும் ரேவதியின்ரபிறந்த நாளுக்கு போயிட்டு வாறது. வதனியை பொறுத்தவரை ஐயப்பன் மற்றும் அந்தோனியார் சாமியை வழக்கமா வீட்டில கும்பிடுறது, கோயிலும், சேர்ச்சுக்கும் போறது எல்லாம் லீவு நாள்ளை நடக்கிற விசயங்கள்.

பல தடவை அவளே எனக்கு சொல்லி இருக்கிறாள். ஆக்கள சாமி என்று கூப்பிடுறது, கையெடுத்து கும்பிடுறது எல்லாத்தையும் குறைச்சுக் கோங்கோ, இது சாமிகள அவமாப்படுத்துறது என்று. ஆனால் என் மனம் அதற்கு இடம் கொடுக்குதேயில்ல. என்ன தான் செய்வது என்று பெருமூச்சுடன் திரும்பவும் வீட்டிற்குள் சென்றேன். வதனி மீண்டும் தொடங்கினாள், நீங்க என்னன்டு என்னை வீட்ட விட்டு வெளிய போக சொல்லுவியள். யாரை கூட்டி வச்சிருக்கப் போறியள் என்று கத்தத் தொடங்கினாள் வதனி. கொஞ்சம் மெதுவாக கதை ரேவதி O/L பரீட்சைக்கு படிச்சுக் கொண்டிருக்குது. ஏதோ வாய் தடுமாறி சொல்லிட்டன். நீ போனா எனக்கு யாரப்பா இருக்கிறது என்று கூறி ஆறுதல் படுத்தப் பார்த்தேன். என்றாலும், வதனியின் கோபம் அடங்கியதாக தெரியவில்லை, எனக்கு இண்டைக்கு ஒரு முடிவு தெரியணும், இனிமேல் ஆக்கள சாமி என்று கூப்பிடுறது நடந்திச்சு என்றால் அன்றைக்கு தான் இந்த வீட்டிலை நான் இருக்கிற கடைசி நாள். ஐயப்பனுக்கு மாலை போடுற ஆக்களையும், கத்தோலிக்க மதகுருமார்களையும் தான் சுவாமி அல்லது சாமி எண்டு சொல்லுறது. சும்மா ரோட்டிலை போற வாறவை எல்லாரையும் சாமி எண்டு சொல்லுறது எனக்கு பிடிக்கயில்லை, அது சாமிய அவமதிக்கிறது என்று பலமுறை சொல்லிட்டேன், ஆனால் இவர் வானத்தில இருந்து குதிச்சு வந்தவர் போல எல்லாத்தையும் புதுசு புதுசா கண்டுபிடிச்சு செய்வாராம், நாங்கள் அதுக்கு கும்பிடு போடணுமாம். என்று கூறிக்கொண்டு அடுப்பில இருந்த சுடுதண்ணிய எடுத்து வாளியில ஊத்தினாள். ரேவதி நீ வந்து சுடுதண்ணிய எடுத்துக்கொண்டு போய் குளிச்சிட்டு வா நாங்க கோயிலுக்கு போய்ட்டு வருவம் என்றா. அம்மா நான் குளிக்க முன்னுக்கு அப்பா எனக்கு சொல்ல வேணும் ஏன் சில ஆக்கள சாமி என்டு சொல்லுறவர். குறிப்பா சதாசிவம் ஐயாவையும், அவற்ர மனிசி செல்லம்மா அன்ரியையும் சாமி என்டு சொல்லி கூப்பிட்டு சில நேரத்தில, அவைய சந்திக்ககுள்ளை கும்பிடுவார். அப்பா, "நரர் துதி" கூடாது என்று எல்லா சமயங்களும் சொல்லுது. ஏனப்பா ஆக்கள சாமி என்று சொல்லுறியள். அவயள கும்புடுறியள் என்று இன்றைக்கு சொல்லித்தான் ஆகணும் என்று ரேவதி அழுத்தமாக கூறினாள்.

சரி ரேவதி நீ குளிச்சிட்டு வா, உன்னை நான்கோயிலுக்கு கூட்டிக்கொண்டு போறன், கோயில்ல வச்சு உனக்கு சொல்லுறன் ஏன் நான் ஆக்கள சாமி என்று சொல்லறநான் என்று கூறிவிட்டு நானும் கோயிலுக்கு வெளிக்கிட்டேன். எனது கோயில் தரிசன கதையுடன் வதனி அமைதியானாள். நானும் ரேவதியும் மாலை ஐந்து மணிக்கு கோயிலை நோக்கி புறப்பட்டோம், போகிற வழியில் என்னப்பா, இன்றைக்கு வேற கோயிலுக்கு போறமே ரோட்டு வித்தியாசமா இருக்குது என்று ரேவதி கேட்டாள். வழமையா நான் நினைக்கிற சாமிக்கிட்ட தான் போறோமென்டு மோட்டார் சைக்கிளை நேரா சதாசிவம் அண்ணன் வீட்டுக்கு விட்டேன். என்னப்பா கோயிலுக்கு நேரமாகுது இங்க வந்து நிக்கிறியள், இது சதாசிவம் ஐயான்ர வீடெல்லோ, ஆம் உன்ர சாமி கேள்விக்கு பதில் சொல்லிப்போட்டு தான் கோயிலுக்கு போவோம் என்று கூறிவிட்டு சதாசிவம் ஐயாவின் படலையை தட்டினேன். அவரின் பேத்தி வந்து கதவை திறந்தாள், அப்பப்பாவிடமே வந்தீர்கள், அவர் பின்னுக்கு தோட்டத்தில நிக்கிறார், என்று கூறிக்கொண்டு எங்களுக்கு முன்னாக தோட்டத்திற்குள் ஓடினாள். அழகான மாலைப்பொழுது கதிரவன் அமைதியாய் விடைபெறும் நேரம், மேற்கு திசையில் இருந்து மஞ்சள் வெயில் சதாசிவம் ஐயாவின் பசுமை மேனியை அழகாய் நனைத்துக்கொண்டிருந்தது. தூரத்தில் மேயும் மாடுகள், வேலியோரமாய் மேயும் ஆடுகள், காலை தாண்டி ஓடும் நாட்டுக்கோழிகள், திரும்பும் பக்கமெல்லாம் மரக்கறிகள் பூத்துக்குலுங்கும் தோட்டம், ஐயாவும் மகன் வேலனும் நாளை ஊர் சந்தைக்கு கொண்டு போவதற்கு போல கீரை பிடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

சாமி வணக்கம் என்றேன், வணக்கம் வணக்கம் என்ன தம்பி இந்த நேரத்தில் இங்கால பக்கம் என்றார். மகள் ரேவதி இந்த வருடம் O/L பரீட்சை எழுதிறா, கோயிலுக்கு போக வேண்டும் என்று கேட்டா போற வழியில சாமி உங்களை பாத்துட்டு போவோம் என்று வந்தனான் என்றேன்.

ஐயா, கொஞ்சம் பொறு தம்பி வாரேன் என்றார், ரேவதி, என்னண்டு அப்பா உங்களுக்கு இவரில இவ்வளவு பிரியம் என்றாள்.

ரேவதி சதாசிவம் ஐயாவ எனக்கு கடந்த 20 வருடங்களாகவே தெரியும், திருமணமாகி வந்தது முதல் அவருடன் எனக்கு இருக்கும் உறவு ஒரு தந்தை மகனுக்கு இருக்கும் உறவை போன்றது. இப்ப அவருக்கு 70 வயது கிட்ட இருக்குமென்டு நினைக்கிறேன், அன்று பார்தது போல் இன்றும் தளராத உடல் கட்டுடனும், மனமகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வருகின்றார். நடந்து முடிந்த யுத்தத்திற்கு பின்பு மீள்குடியேற்றத்தின் போது அவருக்கு கிடைத்த இந்த கிணறு புனரமைப்பு, வாழ்வாதாரமாக கிடைத்த மாடு, இவைகளை வைத்து வெற்றிகரமாக தொழில் செய்யும் விவசாயி, அவரது இரண்டு மகன்களில் ஒருவர் படித்து பட்டம் பெற்ற ஆசிரியர், அடுத்த வளவில் அவரும் பகுதி நேரமாக தோட்டம் செய்கின்றார். மற்றைய மகன் திருமணமாகி அவரோடை இருந்து சாமியின் தோட்டத்தை அடுத்த நிர்வாகியாக எடுத்து நடத்தி வருகின்றார். அரசாங்கம் 70 களில் படித்த வாலிபர் திட்டம் என்று கொடுத்த 10 ஏக்கர் காணியில் மகனுக்கும் மகளுக்கும் கொடுத்த காணிகளை தவிர 6 ஏக்கர் நிலத்தில் மிகப்பெரிய தோட்டம். கிளிநொச்சி சந்தைக்கு போகாமலே போட்டா போட்டி போட்டு மரக்கறி போய்விடும், கணவன்மாரை யுத்த காலத்தில் இழந்த மூன்று பெண்கள் நிரந்தர பணியாளராக வேலை செய்கின்றார்கள். அவர்களின் பிள்ளைகளில் பலர் படித்து உத்தியோகம் பார்க்கும் நிலைக்கு வருவதற்கு சாமி தான் காரணம், என்று கூறிய சாமியை பற்றிய அறிமுகத்தில் ரேவதியின் முகத்தில் ஆயிரம் கேள்விகள் இருந்தது போலிருந்தது.

என்ன தம்பி ஏனப்பா பிள்ளைய இந்த நேரத்தில அலைக் களிக்கிறா என்ற பேச்சுடன், ஐயா எங்கள் இருவரையும் தோட்டத்தின் நடுவில் இருந்த ஓலைக்கொட்டிலுக்கு கூட்டிக்கொண்டு சென்றார். நான் தாமதிக்காமல் "சாமி" உங்கட விவசாய முறைமைகளை கொஞ்சம் ரேவதிக்கு சொல்லணும் அது தான் கூட்டிக்கொண்டு வந்தனான் என்றேன்.

என்னம்மா ரேவதி உனக்கு என்னைபற்றி தெரியணும், கேளன் புள்ள, என்று சாமி ரேவதியை பார்த்து கேட்டவர், இல்ல சாமி ஏன் அப்பா உங்கள சாமி என்று கூப்பிடுறவர் என்று தான் கேட்டனான், நான் விவசாயம் பற்றி ஒன்றும் கேட்கயில்ல

என்று ரேவதி சொன்னாள், சாமி சிரிச்சுக் கொண்டு, அத உங்க அப்பாகிட்ட தான் கேட்கணும். நானும் பல முறை ஏன் தம்பி என்னை சாமி என்று கூப்பிடுரா என்று கேட்டிருக்கிறேன், நல்ல கேள்வி தான் கேட்டாய் நீ, என்று சிரிச்சுக்கொண்டே சாமி என்னைப்பார்த்தார், நான் சாமியிடம், உங்கள் வாழ்க்கையை எனக்கு சொன்னது போல் என் பிள்ளைக்கும் ஒரு முறை சொல்லுங்கோ சாமி அது போதும். அவள் வாழ் நாள் முழுவதும் தன் வாழ்வை அறத்தோடு வாழ்வதற்கு வழி செய்யும் என்று கூறினேன்.

ரேவதி நீயும், உன்ர அப்பாவும் இந்த காணிக்குள்ள வாரதுக்குள்ள, செருப்ப களட்டிப்போட்டு தான் வந்தநீங்கள். ஆனால் நான் விபரம் தெரிந்த காலம் தொடக்கம் செருப்ப போடுறதில்ல. ஏன் சொல்லு பாப்பம் என்று கேட்க, ரேவதி பதில் சொல்லவில்லை. ஆனால் ஆவலாய் பதிலை எதிர்பார்தவள் போல் நின்றாள். இந்த "பூமி தான்" என் "சாமிம்மா" என்று தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்த மண்ணை தன் கைகளால் தொட்டு வணங்கினார், எல்லா சமயங்களுமே பூமியை, மண்ணை தாய் என்றும், அதன் சக்தி இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்றும் சொல்லுது. வேதக்கார சனங்கள் தங்கட கடவுள் மனுச சாதியை மண்ணில இருந்து தான் படைத்தார் என்று சொல்லுவினம், நம்மட இந்து மதத்தில பூமா தேவியாக, சாமியாக பூமியை வணங்கிறம். நீ படிக்கிற புள்ள பூமா தேவியை பற்றி படிச்சிருப்பாய். அதால தான் என்ர தாய் மேல என் கால் படலாம், ஆனால் செருப்போடு அவள் மேனியை தொடக்கூடாது என்று நான் செருப்பு போடுறதில்ல. நான் இந்த ஊர்ல வந்து காடு வெட்டி, விவசாயம் செய்யத்தொடங்கின காலத்திலேயே, இந்த மண்ண சாமியாய் கும்பிடுற வழக்கம் இருந்தது. இப்ப கொஞ்சம் கொஞ்சமாய் எல்லாத்தையும் நம்மட ஆக்கள் மறந்திட்டு வருதுகள்.

இந்த மண்ணில நாங்க பரம்பர பரம்பரையாய் வாழ்ந்து வந்ததால இது எங்கட மண் என்று நாங்க போராடயில்ல. இந்த மண் எங்கட தாய் என்று போற்றி வணங்குவதால தான், எத்தனையோ பேர் இந்த மண்ணுக்காக தங்கட உயிரையே கொடுத்தார்கள் என்று சாமி சொல்லிக்கொண்டிருக்க அப்பா

ஏன் உங்களை சாமி என்று சொல்றார் என்று இன்னும் நீங்க சொல்லயில்ல என்று ரேவதி கேட்க, "சாமி" ரேவதியை உற்றுப்பார்த்தார், அவர் பார்வையில் ஒரு கோபம் இருந்தது போல் எனக்கு தெரிந்தது, எனினும் அவர் ரேவதியை பரிதாபத்துடன் பார்த்தது போலிருந்தது. ஒரு புதிய தலைமுறைக்கு ஒரு வாழ்வியல் உண்மையை சொல்ல தன்னை தயார்செய்வது போலிருந்தது.

சாமி, சாமி, சாமி, ஆமாம் நான் சாமிதான், ஆனால் உன்ர அப்பனுக்கு மட்டும் தான் தெரிந்தது, ஊரிலிருக்கிற அத்தனை பேருக்கும் நான் சதாசிவம், ஆனால் உன்ர அப்பனுக்கு மட்டும் தான் நான் சாமி என்ற உண்மை தெரிந்தது, நான் மட்டுமல்ல என்னைப்போல பல சாமிகள் இந்த மண்ணில் இருக்கிறோம், இந்த உலகத்தில வாழ்ர அத்தனை உயிர்களையும் காப்பாற்றப் பிறந்த சாமிகள் நாங்கள், என்று ஆவேசமாக சாமி பேசத்தொடங்கினார். ரேவதி அமைதியாக அவர் முகத்தைப்பார்த்து அமர்ந்திருந்தாள்.

கதிரவன் கண்ணயர்ந்துவிட்டான். இருள் எங்களை அரவணைத்துக் கொண்டது, இருளின் மடியில் அந்த தோட்டத்தில் இலைகளோடு விளையாடிய தென்றல் எங்களையும் தாலாட்டி சென்றது. சாமியின் மனைவி செல்லம்மா, அந்தக்கொட்டிலில் இருந்த சாமிப் படத்திற்கு விளக்கு ஏற்றிய வெளிச்சம் மட்டும் மிக அழகாய் பிரகாசித்தது.

சாமி தொடர்ந்து பேசினார், இன்றைக்கு மதியம் என்ன சாப்பிட்டா என்று கேட்டார், சோறும், கீரையும் கோவாவும், போஞ்சியும் என்றாள். நீ சாப்பிட்ட அத்தனையும் இந்த மண்ணிலிருந்து வந்த உணவுகள், உனக்கு தெரியும் தானே இந்த உணவுகளை உற்பத்தி செய்றதுக்கு இந்த மண்ணக்குள் எத்தனை எத்தனை உயிரிகள் இருக்குது என்று, நீ படிக்கிறாய் உனக்கு தெரிஞ்சிருக்கும். இது சும்மா "மண்" இல்ல ஆயிரம் ஆயிரம் உயிர்களின் கூட்டுறவு, அத்தனை உயிர்களும் நமக்காக, நாம் வாழ்றதற்காக இங்கு மண்ணாக இருக்குது, இந்த மண்ணில இருக்கிற பல உயிரிகள் தான் நம்மட உடம்பிலேயும் இருக்குது.

நீ சுவாசிக்கின்ற காற்று,
நீ குடிக்கிற தண்ணீர்
நீ சாப்பிடுற சாப்பாடு,

எல்லாத்திலும் இந்த உயிரிகள் இருக்குது, ஆனால், இந்த மனுச சாதிக்கு அது தெரியல, ஆனபடியால் தான், எல்லாத்தையும் நஞ்சாக்கிட்டோம்,

விவசாயம் என்றது தெய்வத்திற்கு செய்ற தொண்டு, என்று எங்கள போல கொஞ்ச விவசாயிகளுக்கு தான் தெரியும், இந்த மண்ணையும், மனுசரையும் காப்பாற்றுகிற ஒரு சக்தி விவசாயம் தான், விவசாயி தன்ர தெய்வத் தொண்டை மறந்து வியாபாரத்திற்கு விவசாயம் செய்தால், மண்ணும் மனுசனும் கொஞ்சம் கொஞ்சமா செத்திடுவாங்க, அது தான் இப்ப உலகத்தில நடந்திட்டு இருக்கு, ஆனால் நம்ம ஊரில, தமிழர் தாயகத்தில, மண்ணையும் மனுசரையும், காக்க போராட்டத்தை நானும், கொஞ்ச விவசாயிகளும் செய்திட்டு வாறோம்.

உலகத்தில இளம் வயதிலேயே சாகிற மனுசன் எதால சாகிறாங்க என்று ரேவதியை பார்த்து கேட்டார். சாமி, தொற்றாத நோய்களான, சீனி வருத்தம், இரத்தச் சோகை, கேன்சர், என்று மெதுவாக சொன்னாள் ரேவதி. ஊனமாக பிறக்கும் குழந்தைகள், தொடக்கம், குழந்தை பிறப்பதா இல்லையா என்று தீர்மானிக்கும் மலட்டுத்தன்மைய உருவாக்கும் அனைத்து விசயங்களும் நாம் இந்த மண்ணில போடுர உரத்திலேயும், அடிக்கிற மருந்தாலேயும் தான் நடக்குது.

இந்த மண்ணுக்குள்ள எல்லா ஆக்க சக்திகளும் இருக்குது, அது அனுபவிக்கவும், பயன்படுத்தவும் தெரியாதவர்கள் மண்ணுக்குள்ள நஞ்சை போட்டு, நஞ்சை உற்பத்தி செய்து, நம் எல்லாருக்கும் உணவாய் தருகின்றார்கள், நாம அத தெரியாம வாங்கி சாப்பிடுரோம். ரேவதி அப்பா நேரமாகுது நாளைக்கு கொலிச்சிலை எக்சாம் இருக்குது போவமப்பா

என்று எனக்கு மெதுவாக கூறியதை "சாமி"க்கு விளங்கி விட்டுது அவர் அமைதியானார். அப்பா நீங்க ஏனப்பா அவர சாமி என்று சொல்லுற நீங்க. என்று ரேவதி கேட்டவுடன் சாமி இருந்த இடத்தைவிட்டு எழுந்து நான் உன் கண்ணுக்கு சாமியாக தெரியல இல்ல, ஏனென்டா நீ சின்ன குழந்தை, உனக்கு உங்க அம்மா, அப்பா, இன்னும் சரியா இந்த சாமிய பற்றி சொல்லேல்ல,

உன்ர அப்பாவுக்கு இப்ப 45 வயது, உன்ர அம்மாவுக்கு 43 வயது, உனக்கு 15 வயது, இந்த ஊருல, இவங்கள், மாதிரி ஆயிரமாயிரம் குடும்பங்கள் இருக்கிறாங்க, போய் கேளு, யாரின்ட வீட்டிலயாவது, கேன்சர், கிட்னி வருத்தம், இருக்கா என்று இல்ல ஒருத்தருக்கும் இல்ல, இந்த நாட்டில யுத்தம் நடந்து முடிஞ்சு 35 வருசமாகுது, அந்த யுத்தம் முடியக்குள்ள, எல்லாரும், இந்த மண்ணுக்காக, எத்தன உயிரக்கொடுத்தும் எங்களுக்கு ஒன்றுமே கிடைக்கல என்று புலம்பினார்கள், ஆனால் நான் எல்லாருக்கும் சொன்னான், நம்மட தலைமுறைய பாதுகாப்போம் வாருங்கள், என்று சொல்லித்தான் நானும் என்னைப்போல் பல இளைஞர்களும் இந்த விவசாய தொண்டுக்கு எங்கள அர்ப்பணித்தோம். நாங்க எல்லாரும் ஒரு உறுதி எடுத்தோம். எங்கட தலைமுறையை பாதுகாக்க, எங்கட மண்ணை பாதுகாக்க எந்த நஞ்சையும், இந்த மண்ணுக்குள்ள போடமாட்டோம், அந்த உறுதியில் இது வரைக்கும் நானும் எனது நண்பர்களும் உறுதியாக இருக்கிறோம்.


நாங்கள் எல்லாரும் சேர்ந்து உருவாக்கின திட்டம்தான் "தேனமுது" திட்டம். இதில இந்த சுற்று வட்டாரத்தில இருக்கிற 116 விவசாயிகள் இருக்கிறோம், நாங்க எல்லாரும், விவசாயத்தை இறைவனுக்கு தொண்டா செய்றம், எங்கட தோட்டத்தில் உற்பத்தி செய்ற உற்பத்திகள் எல்லாம், இந்த சுற்று வட்டாரத்தில் இருக்கிற எங்கட மக்களுக்கே, கொடுக்க வசதியாக 10 குடும்பத்திற்கு ஒரு விவசாயி என்ற நிலையில் தேவையான அனைத்து உற்பத்திகளையும், கூட்டுறவு அடிப்படையில நாங்களே, செய்து கொடுத்து வாரோம், இந்த 35 வருடத்தில, உலகத்திலயே போற்றப்படும் ஒரு திட்டமாக, இந்த திட்டம் செயல்பட்டு வருகின்றது.

விவசாயம் செய்றது காசு பணம் உழைக்க இல்ல, உயிர்கள் காத்திடும் பணி, உயிர்கள் படைக்கிற பணி, நாங்க அழிக்கிற பணி செய்றதில்ல படைத்தலும், காத்தலும் எங்கட கைல தான் இருக்குது, "நீ" இன்றைக்கு ஊமையற்ற பிள்ளையா பிறந்ததற்கு உங்க அம்மா அப்பா சாப்பிட்ட நஞ்சற்ற உணவு தான் காரணம்,

"தேனமுது" விவசாய திட்டத்தில நம்மட மாவட்டத்தில நான் ஒருவன் தான் முதல்ல தொடங்கினேன், ஆனா இன்றைக்கு நம்ம ஊர்ல 116 பேர் செய்கின்றனர். ஆனால், உலகத்தில எங்களிடம் கற்று ஆயிரக் கணக்கானவர்கள் உயிர்காக்கும் இந்த பணியை செய்கிறார்கள். போற உயிரை காப்பாத்திறதிற்கு வைத்தியர்கள் இருக்கிறார்கள், ஆனால் நோயே வராத உணவு உற்பத்திகள், நோய் எதிர்க்கும் உணவு உற்பத்திகள், நல்ல உணவாக நாம உற்பத்தி செய்து தாரதால நாங்கள் வைத்திய சேவைய விட பெரிய சேவை செய்றம்.

படைக்கிறதும், காக்கிறதும் இறைவனின் செயல் அவர் நம்ம மாதிரி மனுசர்கள் வழியாதான் அத செய்யணும், அதுதான் நானும் செய்றன், என்று சாமி கூறி முடித்தவுடன், ரேவதி சாமியின் காலில் விழுந்து, சாமி உங்களுக்குள்ள சாமியே இருக்கிறார் என்று அப்பா சொல்லுவார் ஆனால் நீங்களே. சாமி என்று கூறிய போது, சாமி, ரேவதியை ஆசீர்வதித்து தூக்கி நிறுத்தி நீயும் படித்து முடித்து ஒரு சாமியாக வேண்டுமென கூறினார்.

சரி நேரமாகி விட்டது காளி கோயிலுக்கு போயிட்டு வீட்ட போக வேண்டுமென நானும் ரேவதியும் சாமியின் வீட்டில் இருந்து புறப்பட்டோம். சாமியின் படலையை தாண்டும் போது ரேவதி கூறினாள் அப்பா, நேர வீட்டுக்கு போவோமென்று.





# மக்கள்

தயவு செய்து கொஞ்சம் அமைதியாய் இருங்கோ! என்று நான் கத்தினது ஒருத்தருக்கும் அவ்வளவாக பிடிக்கயில்ல. நான் இந்த கலியாண வீட்டுக்கு இப்படியொரு மனநிலையோட புறப்பட்டிருக்க கூடாது. கலியாண வீட்டு வசு என்றால் எல்லாரும் இப்படித்தான் கொண்டாடிக்கொண்டு வருவார்கள். நாமும் அவர்களோடு கொண்டாடி மகிழ்ச்சியை காட்டவோ அல்லது அது போல நடிக்கவோ முடியாவிட்டால் அமைதியாக சீட்டில சாய்ந்து நித்திரை கொள்ள வேண்டியது தான். கண்களை மூடினால் நினைவுகளும் அது கொண்டு வரும் கடந்த காலமும் தான் மனக்கண் முன் வருகின்றது என்று என் பக்கத்து சீட்டில இருந்த ஞானம் அண்ணனிடம் சொல்ல, ஏனப்பா பழசையெல்லாம் திரும்பத் திரும்ப யோசிக்கிறா. இங்க பாரேன் யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று வசு நிறைய கொட்டகத்தோட்டையிலுள்ள ஒரு கலியாண வீட்டுக்கு போவோம் என்று யார் நினச்சநாங்கள்.

அந்த காலத்தில இப்படிப்பட்ட சிங்கள கிராமங்களுக்கு போய்ட்டு வாரது என்றாலே ஏதோ கண்டம் தப்பிய காகம் போல தான் தப்பி வரணும். எல்லாம் இப்ப மாறிப்போய்ச்சு என்று ஞானம் அண்ணன் கூறியது, இன்னும் எனக்கு கொஞ்சம் கயிற்டமா தான் இருந்தது. தம்பி சுரேசு நீ படுத்து தூங்கப்பா, இவங்கள் இப்பிடித்தான் குழறுவாங்கள் விடு என்றார்.

யாழ்ப்பானத்தில கராச் வைத்து எங்களைப் போல குடும்ப காரங்களுக்கு இன்றைக்கும் அடுப்பெரிக்க காரணமாயிருக்கிற சின்னையா அண்ணனும் இந்த கலியாணத்திற்கு வாரது ஆச்சரியம் தான். ஒரு இடத்திற்கும் அசையாதவர் இந்த சிங்கள வீட்டு கலியாணத்திற்கு அவரும் அசைந்து போட்டார். ஆச்சரியம் தான். என்ர மனுசி, மகன் நிலவன், மகள் கௌரி எல்லாரும் இந்த கலியாண வீட்டுக்காக இவ்வளவு ஆத்மார்த்தமா வெளிக்கிடுவினம் என்று நான் கனவிலும் நினைக்கயில்ல.

வசு தம்புள்ள சந்திய கடந்து மாத்தளை ரோட்டில கொஞ்ச தூரம் போக, மூன்று வசுவையும் லைன்ல நிப்பாட்டி போட்டு, எல்லாரும் இறங்குங்கோப்பா என்று பயண ஒழுங்கமைப்புக்கு பொறுப்பாயிருந்த பாற்கரன் அண்ணன் சொல்லிக் கொண்டு வந்தார்.

எல்லாரும் இறங்கி ரோட்டுக்கு வந்தா, கொஞ்சம் சிங்கள சனங்கள் ரோட்டுக்கு வந்து எங்கள வாங்கோ, வாங்கோ என்ற அந்த ரோட்டுக்கு முன்பக்கம் இருந்த வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போனார்கள். இந்த வீட்டுக்கார பிள்ளையும், பாற்கரன் அண்ணன்ர மகளோட கம்பசிலை படிச்ச பிள்ளையாம், காலை சாப்பாடு பால்சோறும், சம்பல், எண்ணைப் பணியாரம், வாழைப்பழம் என்று இவ்வளவு சனத்திற்கும் சாப்பாடு, பந்தி என்று பெருங்கவனிப்பு. நாங்களும் நேரத்தோட வெளிக்கிட்டது தானே, பசியாற சாப்பிட்டோம். எல்லாரும் நல்லா கவனிச்சதுகள், சாப்பிட்டு கொண்டிருக்கைகுள்ள ஒரு வயது போன சிங்கள ஐயா நடுவில எழும்பி சிங்களத்தில ஆயுபோவன், வணக்கம் என்று கூறி ஏதோ சொல்லத் தொடங்கினார்.

பாற்கரன் அண்ணன் மொழிபெயர்த்தார். மகா சனங்களே நான் இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து வாழ்றன் இன்றைக்கு தான் சுதந்திரத்த அனுபவிக்கிற பாக்கியம் கிடச்சிருக்கு. சுதந்திரம் என்றது நானும் என்ர இனமும் வாழ்றது இல்ல, என்னோட வாழ்றவனுக்கு நான் இடஞ்சல் இல்லாம இருக்கிறன் என்று அவன் நினைக்கிறதற்கு நான் வாழ்றது தான் சுதந்திரம். நாடு சுதந்திரம் பெற்ற போது நாங்கள் சிறுவர்கள், அன்று தொடக்கம் தமிழரும் நாங்க சிங்களவர்களும் எதிரிகளாக்கப்பட்டு பகைவர்களாக்கப்பட்டு, எங்கட உரிமைகளுக்காக நாம் போராடியதே இந்த எழுபது வருட நம்மட வரலாறாகி விட்டது. இந்த வரலாற்றை நாங்களோ நீங்களோ உருவாக்கயில்ல, எங்களை ஏமாற்றி இன்று வரை அரசியல் செய்து பிழைத்துவரும் அரசியல் வாதிகளே காரணம் என்று பேசிக்கொண்டிருந்தார். எனக்கு அவரின்ர கதை அவ்வளவா பிடிக்கயில்ல. ஏதோ சிங்களவர்கள் ஏமாற்றப்பட்டு ஏவப்பட்ட அம்புகளாம், பாவம் என்னதான் சொல்லுறது. என்று நொந்துகொண்டு சாப்பிட்டு, தண்ணியும் குடிக்காம வசுவில வந்து ஏறிட்டன். எங்கட சனங்கள் ஐயா விமலரட்ண பேசுறத கேட்டுக் கொண்டிருந்ததுகள். எனது நினைவுகளோ நான் கடந்து வந்த பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

நானும் மனைவி சுகந்தியும் இந்த மயிலிட்டியில இருந்து இடம்பெயர்ந்து முப்பது வருடத்திற்கு மேலாகின்றது. இப்பத்தான் மீள்குடியேற்றம் என்று எங்கட வீடு வாசலுக்கு போற வாய்ப்பு கிடைச்சிருக்கு. அங்க போனா, எது காணி, எது வேலி, எது வீடு, எங்க நட்ட மரம், எங்க கிணறு என்று தேடி பார்க்கவே ஒரு மாதம் போயிற்றுது.

முப்பது வருட அந்த அகதி முகாம் வாழ்க்கையில பாற்கரன் அண்ணா மட்டும் தான் எனக்கு ஆதரவு. இந்த இடப்பெயர்வால முள்ளிவாய்க்கால் வரை போய் திரும்பவும் யாழ்ப்பாணம் வந்து அதே அகதி முகாமில தான் இருந்தோம். என்ர சகோதரங்கள்ள மூன்று பேர் சுகந்தியின்ர அப்பா, அம்மா, ஒரு தங்கச்சி என்று எல்லாரையும் பலி குடுத்திட்டு இன்றைக்கும் நினைச்சாலும் நெஞ்சு வெடிக்கிற நிலமையில தான் வாழுரோம்.

கராச்சில நானும் பாற்கரன் அண்ணனும் நீண்ட காலமா வேல செய்தநாங்கள், வீட்டு செலவுக்கு மட்டும் கிடைக்கிற பணத்தை வைச்சு என்னதான் செய்யிறது என்று சொல்லிப்போட்டு தான், கடந்த 4 வருடமா சவுதிக்கு போனனான். நான் சவுதிக்கு போகைக்க பாற்கரன் அண்ணன்ர மகள் கண்டி கம்பசுக்கு போனது, இப்ப நான் திரும்பி வர அவளும் கம்பசு முடிச்சு வந்திட்டாள். இந்த நாலு வருசத்தில எங்கட அகதி முகாமுக்கும், கொட்டகத்தோட்டைக்கும் வந்த தொடர்பு, உறவு, இனிமை, இன்பம், கொண்டாட்டம் வரைக்கும் வந்திட்டுது என்று யோசித்து கொண்டிருக்க எல்லாரும் வசுவில வந்து ஏறிட்டுதுகள். வசு கொட்டகத்தோட்டம் நோக்கி போய்க்கொண்டிருக்க மூன்று வசு நிறைய சனம், நாளைக்கு நடக்கப்போற கலியாணத்திற்கு நம் ஊரில இருந்து இவ்வளவு சனம், நான் தான் பாற்கரன் அண்ணாவுக்காக போரன், இந்த இவ்வளவு சனமும் என்னத்திற்கு வெளிக்கிட்டதுகளோ தெரியாது.

வசுவில முதலிருந்த சனத்தை விட கொஞ்ச சனம் கூடின மாதிரி கிடக்கே என்று பார்த்தால், எங்களுக்கு காலை சாப்பாடு தந்த தம்புள்ள சனங்களும் வசுவில ஏறியிருந்ததுகள். ஐயா விமலரட்ணவும் பின்னுக்கு ஒரு சீட்ல இருக்கிறார் போல, பெரிய சத்தமா எல்லாரும் கதச்சுக்கொண்டு வருகினம். எங்கட சனங்களும் கொஞ்சம் கொஞ்சம் சிங்களம் கதைக்குதுகள். அவையளும் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் கதைக்கினம். வசு மாத்தளய கடக்கைக்குள்ள ஒரு இடத்தில வாகனத்த நிறுத்தினவை, நான் நினைக்கிறன் "நாவுல" போல, அங்க கொஞ்சம் சிங்கள சனங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பொதி கொடுத்ததுகள். வசுவுக்குள் ஏறின சிங்கள சிறுவர்கள் அதை சிரித்த முகத்துடன் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். நான் கை நீட்டாமலே இருந்தேன். என்னிடம் வந்த சிறுவன் மாமா இந்தாங்கோ இது எங்கட வீட்டு பழம் என்று எந்த வஞ்சகமும் இல்லாத முகத்துடன் கூறிய வசனம் எனது மனதை தொட்டது. வாங்கி விரித்துப்பார்த்தேன். அதில ஒரு மங்குத்தான், கொய்யா, மாம்பழத்தோட தொதல் துண்டும் இருந்தது. துண்டோட ஒரு பேப்பர் துண்டு இருந்தது, நாங்கள் உங்கள் உணர்வுகளின் வலியை உணர்கின்றோம்.

என்ற வசனம் எனக்கு கொஞ்சம் விழிப்பை ஏற்படுத்தியது. அதிலிருந்த மங்குத்தான் பழத்தை எடுத்து சாப்பிட்டேன். எல்லாரும் இறங்குங்கோ என்று கூறினார்கள். ஒரு மலை சரிவில் நாங்கள் நிற்கின்றோம். ஒரு குறுகலான பாதை ஒன்று இருந்தது. வீதி திருத்தப்படாத படியால் கொஞ்ச தூரம் நடக்க வேணும் என்று பாற்கரன் அண்ணா சொல்லிக்கொண்டு வந்தார்.

எல்லாரும் இறங்கி அந்த ஒடுக்கமான பாதையில் நடக்க தொடங்கினோம். கரடு முரடான பாதை, நீண்ட நாட்கள் திருத்தப்படாமல் இருந்த நிலையை அவதானிக்கக்கூடிய தாகவிருந்தது. கடைசியாக ஒரு மாதிரி வந்து சேர்ந்தோம். அழகான இடம், சின்ன சின்ன வீடுகள் நெருக்கமான குடியிருப்புக்கள். உயரத்திலும் பள்ளத்திலுமான வீடுகள். நாங்கள் குடியிருப்புகளை நெருங்கும் முன்னரே பல பெண்களும் ஆண்களும் எங்களை நோக்கி முன்னோக்கி வந்து, கரம் கொடுத்தும் கட்டியணைத்தும் வரவேற்றார்கள். எங்களோடு வந்த சில பெண்கள் அங்கிருந்த பெண்களின் பெயர்களை சொல்லி கதைத்துக்கொண்டார்கள். அது போல அங்கத்த ஆக்களும் எங்கட ஆக்களின்ர பேர் சொல்லி கதைத்தத பார்த்தா எல்லாரும் முதலிலே நல்லா பழகியிருக்கினம் போல, நாங்கள் வீட்டின் முற்றத்திற்கு வந்த போது பெருந்திரளான சிங்கள சிறுவர், சிறுமிகள் தமிழர் பெரியவர்களின் காலில் விழுந்து ஆசி பெற்றார்கள். அது போல எங்களோட வந்த பிள்ளைகளும் சிங்கள பெரியார்களின் கால்களில் விழுந்து ஆசி பெற்றார்கள். மகன் நிலவனும் மகள் கௌசியும் ஆசி பெற்றார்கள். எல்லாருக்கும் கதிரை போடப்பட்டிருந்தது. எல்லாருக்கும் பெசன் புரூட் கரைச்சு தந்தார்கள். குடித்துக் கொண்டிருந்த போது இரண்டு சிங்கள தம்பதிகள் வந்தார்கள், அவர்களோடு பாற்கரன் அண்ணன்ர மகள் நந்தினியும் வந்தா.. எல்லாருக்கும் வணக்கம் இவர்கள உங்களுக்கு தொரியும் தானே, இவர்கள் மாலினின்ர அப்பா, அம்மா. அவங்க சிந்துவின் அப்பா, அம்மா அவங்கட இரண்டு பிள்ளைகளுக்கும் தான் நாளைக்கு கலியானம் என்றா.

உடனே ஞானமண்ணா நாங்க முதல்ல சம்மந்தக்கலப்புக்கும் வந்தனாங்க இந்த அறிமுகம் தேவையில்லை என்று யோக் அடித்தார். இல்ல, சுரேசண்ணா மாதிரி சவுதி வாசிகளுக்கு தெரியாதல்லோ என்று நந்தினி கூறினா.

தொடர்ந்து மாலினியின் அப்பா தயாவன்ச வந்திருக்கும் எல்லாரும் யார் யாரோடு இருப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கு என்று கூறினார். காலையில நேரத்தோட எழும்பினதால நித்திரை மயக்கமாயிருந்தது, என்றாலும் எல்லாருக்கும் மதிய உணவு ஆயத்தமாக இருக்கிறது சாப்பிடனும். பிறகு பின்நேரம் இங்கத்தய ஊர் மக்களின் கலாசார நிகழ்வு இருக்குது 6 மணிக்கு தொடங்கினா இரவு 12 மணி வரைக்கும் நடக்கும் என்று கூறினார்.

நாங்கள் எல்லாரும் எங்களுக்கு தரப்பட்ட வீடுகளுக்கு சென்றோம். நாங்க போன வீட்டில வயது போன அம்மாவும் அப்பாவும் இருந்தார்கள். எங்களை அன்போடு வரவேற்றார்கள். ஒரு சிறிய வீடுதான், எங்கள் குடும்பத்திற்கு ஒரு அறையை ஒதுக்கி தந்தார்கள். அவர்கள் முன்னுக்கு இருந்த சிறிய அறையில் தாம் இருப்போம் என்று கூறி, எங்களுக்கு குளிப்பதற்கு சுடுதண்ணீர் எரிவதாக கூறி எங்களை குளிப்பதற்கு ஆயத்தப் படுத்தினார்கள்.

வீட்டு சுவரில இரண்டு படங்கள் பக்கத்து பக்கத்தில கொழுவி இருந்தது. பார்க்க தெரிஞ்சது இரண்டு ஆமிக்காரரிண்ட படங்கள். நான் படத்த பார்த்துக்கொண்டிருக்க பக்கத்தில வந்த அந்த ஐயா அவர்கள் இருவரும் தங்கள் பிள்ளைகள் என்றும், இராணுவத்தில ஒருவர் பின் ஒருவராக சேர்ந்து கடைசியில இருவரும் யுத்தத்தில இறந்து விட்டதாகவும். தனக்கு தெரிந்த தமிழில் கூறினார். இப்ப நீங்க தான் என்ர பிள்ளைகள் என்று என்ர கையை பிடித்து முத்தமிட்டார். எனக்கு மிக சங்கட மாயிருந்தது. என்றாலும் இது என் வாழ்நாளில் புதிய அனுபவம். நிலவன் குளித்துவிட்டு வர கௌரியும் மனைவி சுகந்தியும் குளிக்க போனார்கள். மகன் நிலவனுக்கு அந்த அம்மா தலை துவட்டினார்.

தலை துவட்டும் போது தலையில பேன் இருக்குது போலிருக்கு, போரதுக்குள்ள பேன் எல்லாத்தையும் எடுத்துப்போட்டு தான் விடுவன். என்று கூறினா, எல்லாரும் குளிச்சு முடிச்சதும் அம்மா சாப்பாடு தந்தார். பிலாக்காய் கறியும் அம்பர்லங்காய் கறியும் பிரதான கறியாகவும், ஆத்து மீன் பொரியலுடன் சாப்பாடு இருந்தது. எளிமையான உணவு, ஆனால் மிக சுவையாக இருந்தது. சாப்பிட்டு முடிந்ததும் சுகந்தியும் அந்த அம்மாவும் சிங்களத்திலும் தமிழிலும் ஏதோ பேசிக்கொண்டார்கள். அவ கதைச்சத பார்க்க ஏதோ அவர்கள் எங்க வீட்டில முதல்ல வந்து இருந்திட்டு போன மாதிரி அந்த அம்மா, எங்கட உறவுகளை பற்றி சுகம் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். பிள்ளைகள் மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து கீழே இருந்த மர நிழலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

நான் கொஞ்சம் படுப்பம் என்று யோசிக்க ஐயா எனக்கு பக்கத்தில வந்திருந்து "புத்தே" எப்படி சவுதி என்று கதைக்க தொடங்கினார். பக்கத்து வீட்டில நின்ற ஞானம் அண்ணனும் குளிச்சிட்டு சாப்பிட்டு வந்திட்டார், மூன்று பேரும் அந்த அப்பர்லங்கா மரத்தின் கீழிருந்து கதைக்க தொடங்கினோம். ஐயா யார் தெரியுமா என்று ஞானம் அண்ணனிடம் கேட்டேன். இரண்டு ஆமிக்காரனின்ட அப்பா என்று சொன்னார். அவருக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. நான் இதோட நாலாவது தடவ இங்க வாரன் என்று ஞானம் அண்ணன் கூறியதும் என்னத்திற்கு வந்தநீங்க என்று கேட்டேன். ஓ உனக்க தெரியாது தானே பாற்கரன் அண்ணன் சொல்லயில்லையே. நான் நினைச்சனான் நந்தினியும் மாலினியும் பற்றி அவர் சொல்லியிருப்பார் என்று ஞானமண்ணா கூறினார்.

அது ஒரு அழகான கதையப்பா என்று ஞானமண்ணா சொல்லத்தொடங்க இடைக்கிடை ஐயா குணரடணவும், ஞானம் அண்ணனின்ர கதைக்கு உரம் கொடுத்தார்.

நீ சவுதிக்கு போரதுக்கு வெளிக்கிட்ட அன்றைக்கு தான் நந்தினிக்கு கம்பசுக்கு கடிதம் வந்தது. கண்டி பெரதெனியா பல்கலைக்கழகத்தில படிக்கவேணும் என்று எழுதியிருந்தது.

அந்த காலத்தில சண்டை முடிஞ்சிருந்தாலும் சிங்கள ஊருக்கு புள்ளயள படிக்க அனுப்புறதில்ல என்று பாற்கரன் அண்ணன் கடும் பிடியில நின்டுட்டார். என்றாலும் நந்நினி விடாப்பிடியா படிச்சாகணும் என்றதில உறுதியாயிருந்தா. அன்றிரவு ஒரு தொலைபேசி அழைப்பு இங்கிருந்து வருகுது. மாலினிட்ட இருந்து. மாலினி நந்தினிக்கு ஒரு ரூர் போகேக்க பழக்கமாம். இரண்டு நாள் பழக்கம். தொலைபேசி நம்பரை நந்தினி கொடுத்திட்டு வந்திருக்கு மாலினியும் அதை கவனமா வச்சிருந்தது போல. சரி என்னத்திற்கு தான் மாலினி கோல் எடுத்தவா என்று நான் ஆவலோடு கேட்டேன். அவாவுக்கு யாழ்ப்பாணம் நுண்கலைப்பீடத்தில சித்திரம் படிக்க கிடச்சிருக்கு நான் அங்க வரப்போறன். வந்தா சந்திக்கலாமே என்று கேட்டிருக்கு, நந்தினியும் வர சொல்ல ஒரு கிழமையில மாலினியும் அப்பா தயாவன்சவும் தாய் லீலாவதியும் யாழ்ப்பாணத்துக்கு வந்து கடைசியா எங்கட கேம்புக்க அகதி முகாமிற்கு விலாசம் பிடிச்சு வந்து சேர்ந்ததுகள். நந்தினி அவைய மதிய உணவுக்கு வரச்சொல்லி இருந்தவா. அவை பிந்தி வந்தாலும் எல்லாம் ஆயத்தப்படுத்தி வச்சு இருந்தநாங்கள். அவை வந்து எங்களோட இருந்து சாப்பிட்டு போட்டு கதைக்கைக்குள்ள தான் பாற்கரன் அண்ணன் நந்தினிக்கு கண்டியில கம்பசு கிடச்சிருக்கு என்றும், ஆனால் நாங்கள் அனுப்புறதில்லை என்று தீர்மானித்திருக்கின்றார் என்று சொன்னவர். தாயவன்ச ஏன் படிக்கிற பிள்ளைய குழப்புறீங்க என்று கேட்ட போது தான் , நாட்டில இன்னும் பிரச்சன முடியல எந்த நேரத்தில எதுவும் நடக்கலாம் என்று கூற, தாயவன்ச அப்ப என்ன உங்கட பிள்ளைக்கு கண்டியில பாதுகாப்பு இல்ல என்று சொல்லுறீங்களா என்று கேட்டார். பாருங்கோ நாங்களும் எங்கட மாலினிய இங்க படிக்க கூட்டிக்கொண்டு வந்திட்டோம். ஆனா ஒருத்தரையும் தெரியாது, சிங்கள ஆக்களுக்கு தமிழர் எல்லாரும் பயங்கரவாதிகள் என்று கூறிக்கூறி எங்கள வளத்துப்போட்டினம் என்றாலும் எங்கட பிள்ளைய நாங்க கூட்டிக்கொண்டு வந்தநாங்க. என்று கூறி பெருமூச்சு விட்டார்.

கடசியா எங்கட முகாம் வாழ்க்கை பற்றிய கதை வந்திச்சு. அப்பதான், தான் ஒரு பீ.எம் என்றும், இவ்வளவு காலமும் எனக்கு தமிழ் ஆக்கள் இப்படி முகாமில இருக்கிறது.

இவ்வளவு சிரமப்படுறது. என்னப்பா இவ்வளவு குடும்பங்களுக்கு இரண்டு மலசலகூடம், 30 வருடம் குடிக்க சரியா தண்ணீர் கூட இல்ல. இந்த சின்ன இருப்பிடத்தில இவ்வளவு சிரமப்படுறியள். உண்மையா உங்கட நந்தினி கெட்டிக்காரி. இந்த சிரமத்தில இருந்து படிச்சு கண்டி கம்பசுக்கு வாறா என்று சொல்லி பாராட்டிப்போட்டு, ஒரு குண்டை தூக்கி போட்டார் என்றார் ஞானம் அண்ண. எனக்கு இரண்டு பிள்ளைகள் இவா மாலினியும் மற்றது பாலித்தவும். பாலித்த இப்ப ஆமியில வேலை செய்யிறார். முல்லைத்தீவில ஒரு கேம்பில இருக்கிறார்.

எங்களுக்கு கொஞ்சம் படபடப்பா தான் போயிட்டு, என்றாலும் தயாவன்ச தொடர்ந்து பேசினார். நாங்க என்ர பிள்ள நின்று படிக்க யாழ்ப்பாணத்தில ஒரு வீட்டில ரூம் எடுத்திருக் கின்றோம். ஆனா. என்று இழுத்தார். வார்த்தைகள் வரயில்ல. போயிட்டு ஒரு கிழமையால திரும்பி வருவம் அப்ப அத பற்றி பேசுவோம். நீங்க மகள் நந்தினிய கூட்டிக்கொண்டு கண்டிக்கு வாங்கோ என்று கூறிவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

அவை போன கையோட நந்தினி வீட்டில ஒரே அடம்பிடிக்க தொடங்கிட்டா நான் கண்டிக்கு போய் படிச்சே ஆக வேண்டும் என்று. கடைசியா தயாவன்சவுக்கு போன் பண்ணிப்போட்டு பாற்கரன் அண்ணனும் நந்தினியும் மனுசியும் இங்க கண்டிக்கு வந்து, இங்க கொட்டகத்தோட்டவுக்கு வந்தவை என்று ஞானமண்ணா குணரட்ண ஐயாவை கேட்க ஓ அவை முதல் முதல் இங்க தயாவன்ச கூட்டிக்கொண்டு வரேக்க கொஞ்சம் புதினமாத்தான் இருந்தது. இங்க வந்து மூன்று நாள் இருந்து தான் நந்தினியும் கம்பசிலை அலுவல் பாத்தவா. நந்தினி நிக்கிறதுக்கு சரியான இடம் கிடைக்காததால தயாவன்ச வீட்டிலயே ஒரு அறையை ஒதுக்கி கொடுத்தார். மாலினி இருந்த அறையில நந்தினி இருந்து படிக்கிறதுக்கு ஒழுங்குசெய்து விட்டு பாற்கரனும் அவரின்ர மனிசியும் போயிட்டினம். ஒரு கிழமையால தயாவன்ச தன்ர மகள் மாலினிய கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் பேனவர் என்று குணரட்ண சொல்லத் தொடங்கினார்.

உடனே ஞானமண்ணா அத ஏன் கேக்கிறியள் தயாவன்ச நேர எங்கட முகாமுக்கு புள்ளய கூட்டிக்கொண்டு வந்து, மாலினின்ர ரூம்ம நான் நந்தினிக்கு கொடுத்திட்டன். நீங்க நந்தினியின்ர ரூம்ம மாலினிக்கு கொடுங்கோ என்று கூற நாங்கள் எல்லாம் அதிர்ந்து போனோம். ஐயா நாங்கள் முகாமில இருக்கிறம் எங்கட வீடே ஒரு ரூம்தான் என்று கூற, மாலினி நான் நந்தினியின் வீட்ட இருந்து படிக்கிறதா அன்றைக்கே தீர்மானித்து போட்டேன் என்று கூறினா.

ஓ அது தான் அன்றைக்கு கதைக்க ஆனா என்று இழுத்தது இதற்கு தானா என்று நாங்க கேட்க தயாவன்சவும் ஓம் என்று சொன்னார்.

காலம் உருண்டோடியது. நந்தினி தயாவன்ச வீட்டையும், மாலினி பாற்கரன் வீட்டையும் இருந்து படிச்சுக் கொண்டிருந்தவை இரண்டு வீட்டுக்காரர் மட்டுமல்ல இரண்டு ஊர்களும் கொஞ்ச நாளில மாறி மாறி போய் வரத்தொடங்கினோம் கடைசியா இந்த கலியாண வீடு வரைக்கும் இந்த உறவு தொடருது என்று ஞானம் அண்ணா சொல்லி முடித்தார்.

என்றாலும் குணரட்ண ஐயா கதையை தொடர்ந்தார். நந்தினி இந்த நாலு வருசத்தில எங்கட எல்லா வீட்டுக்கும் ஒரு பிள்ளைய போல வந்துட்டா. ஒரு நந்தினி தான் இத்தனை ஆயிரம் தமிழர்களின். பண்பாடு, வரலாறு குறித்த அடையாளமாக எங்கட எல்லாரின்ர இதயத்திலும் இடம்பிடிச்சுப்போட்டா என்று சொல்லும் போது அவருடைய கண்கள் கலங்கியது போலிருந்தது.

நந்தினிக்கும் திருமணம் நடக்க போகுதாம். நாங்கள் எல்லாரும் யாழ்ப்பாணம் வர இருக்கின்றோம். அவாவ கண்டியிலே வேலை எடுக்க கேட்டிருக்கிறோம். என்று கூறி அது கட்டாயம் நடக்கும் என்றார். எல்லாரும் கலை நிகழ்வுகளுக்கு வாருங்கோ என்று நந்தினி எல்லா வீட்டுக்கும் சொல்லிக்கொண்டு வந்தா.

மாலை நேரம், அமைதியான பொழுது, மெல்லிய தென்றல் குளிராக வீசியது. அந்த அழகான மலைச்சரிவில் ஒரு மண் மேடை ஒரு அலங்கார மேடயாயிருந்தது. திருமணத் தம்பதிகளின் படத்தோட "பண்பாட்டு கோலங்கள்" என்று தமிழிலும் சிங்களத்திலும் எழுதப்பட்டிருந்தது.

தமிழர் மரபுப்படி மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில். எனது மகள் கௌரியின் பரதநாட்டியத்தோடு நிகழ்வு ஆரம்பமாகியது. எனக்கே தெரியாது இத்தனை ஆயத்தங்களோட இங்க வந்தவை என்று பெருந்திரளான சிங்கள மக்கள் நிகழ்விற்கு கூடி வந்திருந்தார்கள்.

கலை நிகழ்வுகளில் அனேகமான நிகழ்வுகள், சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் பொதுவாக இருக்கும் கலை நிகழ்வுகள் மேடையை அலங்கரித்தன. குறிப்பாக கண்டிய நடனமும், நமது வடமோடி கூத்தும் இணைந்த ஒரு நிகழ்வு நடைபெற்றது. மிகச்சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் விசேட பேச்சு நிலவன் என்றவுடன், எனது மகன் மேடைக்கு வந்து பேசத்தொடங்கினான்.

நாம் இரு இனங்கள், நம்மோடு இசுலாமிய சகோததர்கள் இன ரீதியாக மூன்று இனங்களும் மதம் மொழி என்று பல வடிவங்களில் நாம் பிரிந்திருக்கின்றோம். நம் நாட்டில் நாம் கடந்து வந்த பாதை நிறையவே அனுபவங்கள் இருக்கின்றன. அவை இன்னும் ஆற்றப்படாத புண்ணாக இருக்கின்றது. அதற்கான மருந்தை நாம் அரசியல்வாதிகளிடமிருந்து அனைத்து சமூகங்களும் காத்துக்கிடக்கின்றோம். நமக்கு புண் உண்டாக்கியவர்களும் நமது புண்ணை வைத்து வியாபாரம் செய்பவர்களும் அவர்களே, இலங்கையின் 70 வருட கால அரசியல் வரலாற்றில் மக்களை பிரித்து, நமது உணர்வுகளை சிதைத்ததால் தான் நமது உரிமைகளுக்காக நாம் போராடினோம். இன்று எமக்கு ஒரு அழகான வாழ்க்கை தேவை. அந்த வாழ்க்கையை எந்த அரசியல்வாதிகளும் எமக்கு அமைத்துத்தரப் போவதில்லை. நாம் தான் நமக்கான அமைதியை தேட வேண்டும்.

ஒரு தயாவன்சயும், ஒரு பாற்கரனும், ஒரு மாலினியும், ஒரு நந்தினியும் இத்தனை ஆயிரம் மக்களை ஒன்றுசேர்க்க முடிந்திருக்கின்றது என்றால், நாம் ஏன் அந்த ஒருவராக மாறக்கூடாது என்று கூறியதும் ஒரே கரகோசம், நந்தினி நிலவனின் பேச்சை அழகாக மொழிபெயர்த்தார். நிறைவாக தயாவன்சவின் மகன் மேடைக்கு வந்தார். அவர் தன்னை "அமுதாவ" ஆமி என்று எல்லாரும் நினைப்பீர்கள். இப்பொழுது நான் ஆமியில் இல்லை, இனி ஒரு யுத்தம் வரக்கூடாது என்பதற்காக உழைக்கும் "அமைதி" என்ற ஒரு இயக்கத்தை தொடங்கியிருக்கின்றேன். நானும் எனது சகோதரி மாலினியும் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள கிராமங்களுக்கு சென்று தமிழர் நம்மிடம் கேட்பது நம்முடையதை அல்ல அவர்கள் தங்களுடையதை தான் கேட்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டில் வாழும் உரிமையை நாம் அவர்களுக்கு கொடுப்பது தான் பௌத்த தர்மம் என்ற சிந்தனையை அமைதி இயக்கத்திற்கூடாக செய்து வருகின்றோம்.

பல்வேறு பிரதேசங்களில் மக்கள் பெருந்திரளாக சிறுவர், முதியவர், இளைஞர் என்று வேறுபாடின்றி எம்முடன் இணைந்து வருகின்றார்கள். என்று கூறி தன் தங்கையின் திருமணம் இந்த இயக்கத்தின் ஒருங்கிணைப்பில் தான் நடைபெறுகின்றது என்று கூறினார்.

நிகழ்வு முடிந்து இரவு 10 மணிக்கு அனைவரும் இரவு சாப்பாட்டுக்கு வீட்டுக்கு போனோம். குணரட்ணா ஐயாவும் அம்மாவும் தானம் கொடுப்பதற்காக விகாரைக்கு சென்றுவிட்டதாகவும், வந்து விடுவார்கள், உங்களுக்கான உணவு ஆயத்தமாக இருக்கின்றது, வந்து சாப்பிடுங்கள் என்று நந்தாவதி அக்கா கூறினார். யாருக்கு தானம் கொடுக்க போனவை என்று கேட்டேன். பாற்கரன் அன்னையின்ர மூத்த மகன் ஒரு தியாகி. இன்றைக்கு தான் அவர் இறந்த நாள் என்று மனுசி சொன்னா. தொண்டைக்குள் விழுங்கிய சோறு அடைக்குமா போலிருந்தது. தண்ணீரை கேட்டேன், குணரட்ண ஐயா கதவை திறந்து உள்ளே வந்தார். அவரின் கையில் பாற்கரன் அண்ணனின் மகனின்ர படம் இருப்பதை கண்டேன். தண்ணீர் இல்லாமல் சோறு வயிற்றுக்குள் இறங்கியது.



# ஆட்சி

இன்னும் சில நாட்களில் நடக்கவிருக்கும் தேர்தலுக்கான இறுதி பிரச்சார நாள் இன்றாகும். இன்று நள்ளிரவு 11 மணிக்கு விசேட செய்தியாளர் சந்திப்பொன்றை தற்போதய சனாதிபதி அவர்கள் நடாத்தவிருக்கின்றார். என்னதான் வேலைகளை ஒழுங்குபடுத்தி செய்தாலும், ஒரு ஊடகவியலாளனாக எனக்கு இருக்கும் பரபரப்புக்கு ஒருநாளும் முடிவிருக்காது போல கிடக்கு. கடந்த இரண்டு மாதமாக எனது "மானுடம்" தொலைக்காட்சிக்கான மிக முக்கிய நிகழ்வுகளை நாடு முழுவதும் இருந்து தொகுத்து கொடுத்தது. மிகச்சிறப்பான அனுபவத்தை தந்துள்ளது. என்று நினைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறி வீட்டுக்கு புறப்பட்டேன். கடந்த ஒரு வாரமாக வீட்டுப்பக்கம் செல்லவேயில்லை. தொலைக்காட்சி நிறுவனத்துடனேயே எனது நேரமும் காலமும் போய்விட்டது.

மனைவி லதா ஒரு ஆசிரியை, மகள் பூரணி, மகன் பூரணன் இருவரும் O/L மற்றும் A/L படிக்கும் மாணவர்கள். அவர்களுக்காக நான் கொடுக்கும் நேரம் மிகக்குறைவு என்ற குற்ற உணர்வோடு வீட்டை வந்தடைந்தேன். இன்று சனிக்கிழமை என்றபடியால் லதா வீட்டு வேலைகளிலும், பிள்ளைகள் ரியூசனுக்கும் போய்விட்டார்கள். எத்தனை சுமைகளை சுமந்தாலும் எனது ஊடகப்பணியை தெய்வீக பணியாக நான் நினைத்து செய்யும் உறுதிப்பாட்டுக்கு லதாவும் பிள்ளைகளும் எப்பொழுதும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தே வந்துள்ளார்கள்.

என்னப்பா, இன்றைக்கு இரவு 11 மணிக்கு நாட்டு மக்களுக்கு சனாதிபதி அறிவுச்செல்வன் உரையாற்றுகிறாராம், அது தன் அரசியலின் நிறைவு உரையாக கூட இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறாராம், உண்மையே என்று லதா கேட்டா, இல்லை லதா அது மக்களின்ர கையில தான் இருக்கு. மக்கள் கடந்த ஐந்து வருட காலத்தில அனுபவித்த அனுபவங்கள் தான் இந்த ஜனாதிபதி தேவையா இல்லையா என்பதை முடிவெடுக்கும்.

எங்கள் மானுடம் தொலைக்காட்சியின் விசேட நேர்காணல் ஒன்று இன்று மாலை இரண்டு மணிக்கு சனாதிபதியோட இருக்குது, நான் தான் அந்த நேர்காணல் செய்யப்போறன். அந்த நேர்காணல் பின்நேரம் 6 மணியிலிருந்து 7 மணி வரை ஒளிபரப்பு செய்யவிருக்கின்றோம். அந்த நேர்காணல்ல முக்கியமான பதில்கள் பலருடைய கேள்விகளுக்கு பதிலாக இருக்கும் என்று கூறினேன். நாங்கள் கதைத்துக்கொண்டிருந்த போதே பூரணியும், பூரணனும் ரியூசன் முடித்து வந்து விட்டார்கள்.

அப்பா இன்றைக்கு நீங்கள் சனாதிபதியுடன் நேர்காணல் செய்யப் போறியள் என்று மானுடம் செய்தியில சொன்னது, என்ன கேள்வியப்பா அவரிட்ட கேக்க போறியள் என்று மகள் பூரணி ஆர்வமுடன் கேட்டாள். 10 கேள்விகளுடன் இந்த நேர்காணல் நடைபெறுகின்றது.

கேள்விகள முதல்ல சனாதிபதிக்கு கொடுத்திட்டீங்களா? அவர் ஆயத்தப்படுத்திக்கொண்டா வருவாரப்பா என்று பூரணன் கேட்டான். இல்லைத் தம்பி அவருக்கு அதெல்லாம் பிடிக்காது, நேரடியாக எந்த கேள்வியும் கேட்க வேண்டும், அதற்கு அவர் பதிலளிக்க முடியாவிட்டால் தான் ஏதோ தவறான தளத்தில் நிற்பதாக கூறி அதற்காக மன்னிப்பு கேட்பார். நீங்கள் மாணவ மாணவிகளாக கடந்த ஐந்து வருடத்தை எப்படி பார்க்கிறியள். அவர் சனாதிபதியாக வரும் போது நீங்கள் சின்ன பிள்ளைகள். இப்போது தான் ஓரளவு நாடு, சமூகம், பொருளாதாரம், சுகாதாரம், அபிவிருத்தி குறித்த விடயங்களை அறிந்து கொள்கிறீர்கள் என்று பிள்ளைகளிடம் கேட்டேன், பூரணி மிக தெளிவாக பதிலளிக்க தொடங்கினாள். அப்பா கல்விய பற்றி கேட்கயில்ல. நான் 7ஆம் ஆண்டு படிக்கைக்குள்ள இவர் சனாதிபதியா வந்தார். இப்ப நான் A/L படிக்கிறேன், அவர் சனாதிபதியா வந்தவுடன் கல்வி சீர்திருத்தம் செய்தவராம். இப்ப பாடசாலையில் படிக்கும் நேரத்தை விட சமூகத்தில தான் பிள்ளைகள் அதிக நேரம் இருக்கினம். 1ஆம் ஆண்டு முதல் 4ஆம் ஆண்டு வரை ஒரு பிரிவாகவும், 5ஆம் ஆண்டு முதல் 9ஆம் ஆண்டு வரை ஒரு பிரிவாகவும், 10ஆம் ஆண்டு முதல் 12ஆம் ஆண்டு வரை ஒரு பிரிவாகவும் பாடசாலை கல்வித்திட்டம் நடைபெறுகின்றது.

1ஆம் பிரிவு பிள்ளைகளுக்கான கல்வி, காட்சிக் கல்வியாகவே இருக்கின்றன, மனநிலை, மேம்பாடு, உறுதிப்பாடு, உடல் வளர்ச்சி, சமூக ஈடுபாடு குறித்த விடயங்கள் தான் இந்த முதலாம் பிரிவில் நடத்துகிறார்கள். முன்பு இருந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் இப்போது இல்லை. அதற்கு பதிலாக 4ஆம் ஆண்டின் நிறைவில் "பிள்ளை உலகம்" என்ற ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோரும் இணைந்து நடத்துகின்ற மாபெரும் செயல்விளக்க காட்சி நடாத்துவார்கள். அதுபற்றி இப்போது A/L மாணவர்கள் நாங்கள் ஆய்வு செய்கின்றோம். என்று பூரணி மிக தெளிவாக கூறினாள்.

பூரணன் தனது அனுபவத்தை கூறத்தொடங்கினான், 5ஆம் ஆண்டு முதல் 9ஆம் ஆண்டு வரை பாடசாலை மைய கல்வி,

மொழி, வரலாறு, இலக்கியம், விஞ்ஞானம் என்று அனைத்து துறைகளிலும் பிள்ளைகள் அறிவூட்டப்படுகின்றார்கள். இதற்கு நல்ல அடிப்படையாக காட்சி கல்விச் செயற்பாடு இருக்கின்றபடியால் பிள்ளைகள் அந்த அனுபவத்தோடு இந்த இரண்டாம் பிரிவில் படித்து வருகின்றார்கள். அப்போது நடந்த O/L பரீட்சை தற்போது 9ஆம் ஆண்டிலேயே நடைபெற்று 10ஆம் ஆண்டில் துறை சார் கல்வி பகுதியின் மூன்றாம் பகுதிக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப் படுகின்றார்கள் என்று பூரணன் மிக தெளிவாக கூறினான்.

நான் மகள் பூரணியிடம் கேட்டேன், நீ இந்த மூன்றாம் பகுதியின் நிறைவில் இருக்கின்றாய், இந்த வருட கடைசியில் A/L பரீட்சை எழுதபோகிறாய். நீ தெரிவு செய்த சமூகவியல் அரசியல் துறையில் உனக்கு திருப்தியாக இருக்கின்றதா? என்று கேட்டேன், மிகவும் உயர்ந்த இலட்சியங்களோடும் உயர்ந்த அனுபவங்களோடும் இருக்கின்றேன். மூன்றாம் பிரிவான 10 தொடக்கம் A/L முடியும் வரை சமூக மைய கல்வி, கேட்டல், ஒப்புவித்தல், நிறுவுதல் போன்ற சமூக செயற்பாடுகள் தான், இதுவரை நூற்றிற்கும் மேற்பட்ட சமூகவியல் அரசியலோடு தொடர்புபட்டு வாழ்ந்துகொண்டு இருக்கின்றவர்களோடு இணைந்து பணியாற்றி இருக்கின்றோம், எங்களை போலதான் ஏனைய துறைகளான மருத்துவம், கணிதம் மாணவர்களும். தற்போது நான் எனது முழுமையான செயற்றிட்டத்தை தயார்ப்படுத்தியிருக்கின்றேன். அந்த செயற்றிட்டமானது எனது எதிர்கால உருவாக்கங்களுக்கான அடிப்படைகள். இதற்கு 50% புள்ளிகளும் இறுதிப்பரீட்சைக்கு 50% புள்ளிகளும் வழங்கப்பட்டு, 70%ற்கு மேல் எடுக்கும் மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கும், குறைவாக எடுப்போர் 10% வரை வெவ்வேறு துறைகளுக்கும் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. உங்களுக்கு தெரியும் தானே அப்பா, என்று மகள் கூறினாள். நான் சிரித்துக்கொண்டே எல்லாம் எனக்கு தெரிந்திருந்தாலும், அது உன்ர வாயால் நீ சொல்லும் போது கிடைக்கும் இன்பம் ஒரு வரம் என்று சொல்லிவிட்டு குளித்து, சாப்பிட்டுவிட்டு நேர்காணலுக்கான தயார்ப்படுத்தலை செய்யத்தொடங்கினேன்.

பிள்ளைகள் இருவரும் சிறுவர்களாயிருந்தாலும் புதிய கல்வி சீர்திருத்தம் குறித்து ஒரு தெளிவுடன் இருப்பதே நாட்டின் திட்டங்கள் குறித்து அடிமட்டத்திலிருப்பவர்களுக்கும் தெரிந்திருக்கும் அளவிற்கு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன, என்று நினைத்துக்கொண்டு வீட்டிலிருந்து விடைபெறத் தொடங்கினேன். வழமை போல அனைவரும் வாழ்த்தி அனுப்பினார்கள். சனாதிபதியின் நேர்காணலை வெற்றிகரமா முடித்துவிட்டு வருகின்றேன் என கூறி புறப்பட்டேன். "மானுடம்" தொலைக்காட்சியில் ஒரு சிறிய ஊடகவியலாளராக சேர்ந்த நான் ஊரில இருந்து கொழும்பு வரைக்கும் வந்து சேர்ந்து , கொழும்பிலேயே குடியிருக்கும் அளவிற்கு கடந்த 10 வருட வாழ்கைய இந்த ஊடக நிறுவனம் மாற்றியிருக்கின்றது. குறிப்பாக நாட்டின் தலைவர்களை நேர்காணல் செய்யும் பொறுப்பை எங்கள் தொலைக்காட்சி நிறுவனத்தின் நிறுவுனர் ஐயா பரமேசுவரன் அவர்கள் என்னிடமே தந்திருக்கின்றார்.

பரமேசுவரன் ஐயா அவர்கள் இந்த "மானுடம்" ஊடக நிறுவனத்தை தொடங்குகின்றபோது, இது இந்த நாட்டின் அனைத்து இன மக்களுக்குமான ஒரு வாழ்வியல் மாற்றத்தை ஏற்படுத்தும் நிறுவனமாக தொடங்கினார். தனியாக தகவல்கள், விளம்பரங்கள் வழங்குவது தான் ஊடகம் என்ற நிலையிலிருந்து. மக்கள் எதை செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்ற எண்ணத்தை மக்களாகவே வெளிப்படுத்தும் ஒரு ஊடகமாகவே மானுடம் வெற்றிநடை போடுகின்றது. இதற்கான அடிப்படை பரமேசுவரன் ஐயாவின் "அறவாழ்வு". ஊடகத்தை வைத்துப் பிழைப்பு நடத்துறதுக்கு அவர் ஒருபோதும் அனுமதித்ததில்லை. எத்தனை அரசியல்வாதிகள் இந்த ஊடகத்திற்கு விலை பேசினார்கள். அறம் காக்கும் ஐயாவின் வழியில் நாம் பயணிப்பது எவ்வளவு பெருமையாக இருக்கின்றது என்று நினைத்துக்கொண்டு மானுடம் அலுவலகத்திற்குள் நுழைந்தேன்.

பிற்பகல் 2 மணிக்கு நேர்காணல் என்றாலும், எங்கும் அமைதியாகவே இருந்தது. ஒரு சனாதிபதி நமது தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வரப்போகிறார் என்ற கோதாவில் எந்த பதட்டம், பாதுகாப்பு என்று யாரும் அங்கில்லை.

எனது தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழுவினர் இந்த நேர்காணலுக்கு ஆயத்தங்களை செய்திருந்தோம். ஐயா பரமேசுவரன் அவர்களும் செய்தி இயக்குனர், தொலைக்காட்சி நிறுவன இயக்குனர் மூவரும் என்னுடன் தனியாக சந்தித்து, எனது கேள்விகளை சரிபார்த்தார்கள். ஒரு சில திருத்தங்கள் கோரப்பட்டதுடன், மிகச்சிறப்பானதென்று ஐயா பரமேசுவரன் ஊக்கப்படுத்தினார்.

நாங்கள் 1.30 மணிக்கு ரூடியோவுக்குள் சென்றுவிட்டோம். சரியாக 1.45க்கு சனாதிபதி அறிவுச்செல்வன் ரூடியோவுக்குள் வந்தார். எளிமையான தோற்றம், கவர்ச்சிகரமான புன்னகையும், பார்வையும், வந்தவுடன் எங்கள் பேரை சொல்லி அழைத்து நலன் விசாரித்தார். குறிப்பாக என் தோள்களில் கையை வைத்து தம்பி அன்புமாறன் எப்படி மனைவி லதா, பிள்ளைகள் பூரணன், பூரணி என்று கேட்டார். சுகம் என்று சொன்னேன். அவர் எப்போதுமே விசேட சந்திப்புக்களில் உணர்வுபூர்வமாக உறவாடுவார் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம். சரியாக 2 மணிக்கு நேர்காணல் ஆரம்பமானது.

நேர்காணலின் முதலாவது கேள்வியை நான் கேட்க வாயெடுக்க சனாதிபதி அறிவுச்செல்வன் தான் முதலாவது ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன் என்று என்னிடம் முதலாவது கேள்வியை கேட்டார்.

நீங்கள் ஒரு ஊடகவியளாளராக அதிலும் குறிப்பாக இந்த மானுடம் நிறுவனத்தில் மதிப்பார்ந்த ஊடகப் பிரதிநிதியாக மக்களுடன் மக்களாக வாழும் நீங்கள், மக்கள் என்னிடம் என்ன எதிர்பார்க்கின்றார்கள்?

என்று கேட்டார், கேள்விகளை கேட்க ஆயத்தமாயிருந்த எனக்கு பதிலளிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. எனினும் என்னை தயார்ப்படுத்திக்கொண்டு பதிலளிக்கத் தொடங்கினேன். மக்கள் உங்களிடம் ஒன்றையும் எதிர்பார்காத படியால் ஏமாற்றம் அடையாதவர்களாகவே காணப்படு கின்றார்கள். ஏனென்றால் உங்களிடம் ஒன்றுமில்லை, மக்களாகிய உங்களிடமே எல்லாம் இருக்கின்றது. அதை நீங்கள் பார்ப்பதற்கு உங்கள் கண்களை திறப்பதே என் பணி என்று தான் நீங்கள் கடந்த தேர்தலில் வாக்கு கேட்டீர்கள். எனவே மக்கள் உங்கள் திட்டங்களை தற்போது சுவைக்கத் தொடங்கியுள்ளார்கள். என்பதை தான் ஒரு ஊடகவியலாளனாக என்னால் கூற முடியும் என்று கூறினேன்.

சரி இனி நீங்கள் கேளுங்கள் எனக் கூறினார். நான் எனது முதலாவது கேள்வியை கேட்டேன்.

கடந்த ஐந்து வருடங்களாக ஜனாதிபதியாக இருந்து நாட்டுக்கு நீங்கள் வழங்கிய சேவைக்கு உங்களால் திருப்தியடைய முடிகின்றதா?

நல்ல கேள்வி திருப்தியடைந்தேன், அல்லது திருப்தி அடையவில்லை என்ற ஒரு வரியில் நான் பதில் கூற முடியாது. இந்தக் கேள்விக்கு பதில் ஒரு வரலாற்றோடு தொடர்புடையது. அது நீண்ட வரலாறு.

இந்த நாடு, பல்லின சமூகங்கள் வாழ்ந்து வரும் ஒரு நாடு. இந்த பல்லின வாழ்வு முறைமைக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இந்த நீண்ட வரலாற்றில் ஒரு இனம் இன்னுமொரு இனத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்து ஆழ்வதற்கான போர்களும் அதன் வெற்றிகளும், தோல்விகளுமே நமது நாட்டின் வரலாறு இந்த வரலாற்றைத் தான் நான் சனாதிபதியாக வரும்வரை தமது தேசத்தின் வரலாறாக நமது பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட வரலாற்றை படிக்கும் எந்த மனித உள்ளத்திலும் ஒரு அழகான தேசத்தைக் காணும் கனவு பிறக்க முடியாது. மாறாக தம்மோடு வாழும் ஏனைய இனங்களை சந்தேகத்துடன் தான் பார்க்கத் தூண்டும்.

இந்த நீண்ட சந்தேகம் நிறைந்த வரலாற்று அனுபவங்களின் காயங்களிலிருந்து இன்னும் இந்தச் சமூகம் மீண்டு வரவில்லை. என்று கூறினாலும் இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் இந்த நாட்டை பற்றிய ஒரு கனவு இருந்தது. அந்த கனவுகளுக்கு சிறகு கொடுக்கும் ஒரு தலைவனுக்காக காத்திருந்தர்கள். அந்த தலைவன் நம் நாட்டின் பிரசையாக இருந்தால் போதுமானது. அவர் எந்த இனத்தை சார்ந்தவர் என்று அவர்கள் சிந்திக்கவில்லை. அப்படி சிந்தித்திருந்தால். சிறுபான்மை இனத்திலிருந்து நான் இந்த நாட்டுக்கு சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டிருக்கமாட்டேன். ஆனால் அதற்கான பயணம் நெடியது. நீண்ட காலம் இந்த நிலையை உருவாக்க. நானும் எனது அனைத்து இன நண்பர்களும் பாடுபட்டோம். இந்த நாட்டு மக்கள் ஒரு நேர்மையான, புத்திசாலியான, கபடமற்ற, உண்மையான, வெளிப்படைத் தன்மையுள்ள, தீர்க்கதரிசனமுள்ள எல்லாரையும் ஒரே பார்வையில் பார்க்கின்ற ஒரு தலைவனை எதிர்பார்த்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தவை என்னிடம் இருப்பதாக கண்டபடியால் அவர்கள் என்னைத் தெரிவு செய்தார்கள். இதனால் என்னை விட வேறு யாரும் எங்கும் இல்லை என்று நினைக்கவில்லை. பலர் இன்று இருக்கிறார்கள், அவர்களில் என்னையும் எனது கொள்கைகளையும் அவர்கள் இரசித்தார்கள். தற்போது ருசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இங்கே எனது ஆட்சிக் காலத்தை குறித்த “திருப்தி” என்பது. ஒரு வரலாற்றை புதிய பாணியில், புதிய நோக்கில் இந்த சமூகம் எழுத தொடங்கியிருக்கின்றது. என்பது தான் எனது திருப்தி. இந்த புதிய வரலாற்றுக்காக இந்த நாடு 2000 வருடங்கள் காத்திருந்தது. இனி இது தான் உலக புதிய வரலாற்றுக்கான தொடக்கப்புள்ளியாக இருக்கப் போகின்றது. என்று கூறினார்.

என்ன! என் பதில் உங்கள் கேள்விக்கான பதிலாக இருக்கின்ற திருப்தி உங்களுக்கு இருக்கின்றதா? என்று கேட்டார். மிகச்சிறந்த பதில், என்று கூறி எனது இரண்டாவது கேள்வியை கேட்டேன்.

உங்கள் ஐந்து ஆண்டு கால ஆட்சியால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.5 இலிருந்து 15.8 வரை உயர்ந்திருக்கின்றது என்று புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இந்த பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படை காரணிகளாக நீங்கள் கடைப்பிடித்த உத்திகளில் உங்களுக்கு திருப்தி இருக்கின்றதா?

மறுபடியும் "திருப்தி" என்பது பற்றியே கேட்கின்றீர்கள். ஒரு நாட்டின் பொருளாதாரம் என்பது அந்த நாட்டின் வளங்களில் இருந்து ஆரம்பிக்கின்றது. அந்த வளங்களில் மக்களே பிரதான வளம் என்பது தான் எனது கோட்பாடு. எமது நாட்டை பொறுத்தவரை அறிவும் ஆற்றலும் நிறைந்த ஒரு மனித சக்தி தனியாக அரச நிர்வாக தளத்தில் மட்டுமே தங்கியிருந்தது. அதற்கு அப்பாற்பட்ட அனைத்து மனித வளமும் ஒழுங்கமைக்கப்படாமல் சிந்திச் சிதறிக் கிடந்தது. அந்த மனித வளங்களை நாட்டின் வளங்களோடு இணைக்கும் ஓர் "நேர்கோட்டு" கோட்பாட்டை உருவாக்கினேன். அதற்கு ஒரு உதாரணத்தையும் கூற முடியும். சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் அந்த உதாரணம் இருக்க விரும்புகின்றேன்.

எமது நாடு மீன் வளம் நிறைந்த நாடு. நமது மீனுக்கான சந்தை சர்வதேச நிலையில் மிகவும் பலவீனமாகவே இருந்தது. அதற்கான காரணம், நமது மீன் வளத்தின் ஊட்டச்சத்து குறித்தும் மற்றும் அதன் மருத்துவக்குணம் குறித்தும் சர்வதேச தரத்திலான ஆய்வுகள் நடைபெற்றிருக்கவில்லை. மீன் என்பது ஒரு உணவுக்கான உற்பத்திப்பொருள் மட்டுமல்ல, அது ஒரு சிறந்த ஊட்டச்சத்து நிலையும் கடந்து, உலகளாவிய மகா நோய்களுக்கான தடுப்பு சக்தியுமாயிருக்கின்றது என்பதை நிரூபிக்கும் வேலைத்திட்டத்தை எனது ஆட்சியின் முதல் மூன்று மாத காலத்தில் செய்தேன். அதன் விளைவாக கடற்கரைகள் தொழில் கூடங்களாகவும் ஆய்வு நிறுவனங்கள் அமைக்கப்பட்ட இடங்களாகவும் மாறியது.

மீன் பிடிப்பவர்களோ அல்லது அது சார்ந்தவர்களோ அதன் சர்வதேச விற்பனை வியாபாரிகளாக மாறுகின்ற நிலைக்கு அவர்கள் தரமுயர்த்தப்பட்டார்கள். இது தான் நேர் கோட்டுக் கோட்பாடு. இங்கு ஒரு தொழில் உருவாக்கும் பல தொழில்களை எங்கேயோ இருக்கும் ஒருவர் முதலாளியாக இருந்து நடாத்த முடியாது, எனவே பல்கலைக்கழகத்தில் படித்த கரையோர கிராம மாணவர்கள் தமது ஊர்களுக்கு திரும்பிச்சென்று தமது தொழில்களை தமது கல்வி அறிவின் அடிப்படையிலும் தமது மரபு சார் தொழில் விருத்திக்கான கனவுகளின் அடிப்படையிலும் ஆரம்பிக்க விரும்புகின்றார்கள்.

எனவே நமது மண்ணின் வளங்களுக்கான மகிமையை நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியிலும் கொண்டு செல்லும் ஒரு விசேட அமைச்சு என்னால் உருவாக்கப்பட்டு சகல வளங்களையும் நோக்கி உலகத்தை திரும்பி பார்க்கச் செய்வதற்கான 10 அம்ச செயற்றிட்டத்தை உருவாக்கியதன் மூலம் இன்று உலகம் முழுவதம் நமது நாட்டின் வளங்களை தேடிய ஒரு புதிய பயணத்தை ஆரம்பித்ததன் விளைவே, தற்போது நாடு முழுவதும் தொடங்கப்பட்டுள்ள உற்பத்தி நிறுவனங்கள்.

நமக்கான சந்தையை நாம் சர்வதேசத்தில் உருவாக்கிவிட்டு அங்கிருந்து அதை தேடி வரும் வியாபாரிகளை உருவாக்கும் போது நாட்டில் தொழில் உற்பத்தி நிறுவனங்கள் மலர்கின்றன. இதன் விளைவாக இன்று நாடு முழுவதும் உற்பத்திப் பொருளாதாரம் உச்சமடைந்துள்ளது. நமது வெளிநாட்டு வருமானம் தெளிவான நிலையிலிருக்கின்றது. என்று கூறி முடித்தார். மூன்றாவது கேள்வியை நான் கேட்க ஆயத்தமான போது ஒரு தொலைபேசி அழைப்புக்கு நேரம் தரும்படி கேட்டு, அங்கிருந்தே தனது செயலாளருக்கு ஒரு அழைப்பை மேற்கொண்டு, மாலை நடைபெறும் தேர்தல் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொள்ள இருப்பதால் அனைவருக்குமான உணவுப்பொதிகளை உள்ளூர் தோழர்கள் தங்கள் வீடுகளில் தயாரிக்கின்றார்கள்.

அந்த உணவில் போடப்படும் "உப்பு" குறித்து அவதானத்தை பேணும்படி நான் ஏற்கனவே கூறினேன், அதை மீளவும் அறிவுறுத்தும்படி கோரினார்.

சாதாரண தொண்டன் சாப்பிடும் உணவில் உப்பின் அளவு குறித்தும் சிந்திக்கின்ற ஒரு தலைவனை இந்த நாடு பெற்றிருக்கின்றதே என்று மனதிற்குள் பெருமைப்பட்டுக் கொண்டு மூன்றாவது கேள்வியை கேட்டேன்.

தங்கள் பதவிக்காலத்தில் நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்கான புதிய திட்டங்கள் மேம்படுத்தவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றனவே. நாட்டில் அரசு ஆசுப்பத்திரிகள் குறைவதா கூடுவதா எது நல்லது? என்று சிரித்துக்கொண்டே கேட்டார். குறைவது நல்லது. ஆனால் மக்களுக்கான வசதிகள் செய்யப்பட வேண்டுமல்லவா? என்று கேட்டேன். எதில் வசதி என்பதில் நான் கவனமாக இருக்கின்றேன். வளர்ந்து வரும் பூகோளமயமாக்கலின் விளைவாக மனித சக்தியும், அதன் உயிர்ப்பும், தனது முழுமையை இழந்து வருகின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு அறிவியல் வளர்ச்சி பெற்றாலும் நோய்களுக்கான நிவாரணிகளுக்கு இன்னும் தேவை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

நம் நாட்டில் மக்கள் நல்வாழ்வு என்பது, மருந்துகளினதும், மருத்துவர்களினதும் கைகளில் இருப்பதாக தான் மக்கள் இதுவரை நினைத்துக்கொண்டிருந்தார்கள். இது அப்படியல்ல. ஒவ்வொரு தனிமனித நல் வாழ்வும் தனிமனித நடைமுறை வாழ்வில் தங்கியிருக்கின்றது. நோய்க்கான நிவாரணி என்பது வைத்தியசாலையில் மட்டுமல்ல என்பதை உணர்ந்து தான் சமுதாய மக்கள் நல்வாழ்வு இயக்கம் என்னால் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் இந்த இயக்கம் செயற்படுகின்றது. இந்த இயக்கத்தில் தாய்மார் தந்தைமார், முக்கிய பங்கினை வகிக்க வேண்டும். முதியவர்கள் அதன் பிரதான அங்கத்தவர்களாக இருப்பார்கள். மாதாந்தம் இவ்வியக்கம் கூடி நோய் எதிர்ப்பு வாழ்வியல் முறைமைகள் குறித்து சிந்திப்பது, நடைமுறைப் படுத்துவது என்ற மும்முனை செயற்பாட்டை செய்ய வேண்டும், ஒவ்வொரு கிராம மட்ட

இயக்கத்திற்கும் அப்பிரதேச சுகாதார தொண்டர்கள் வழிகாட்டுனர்களாக இருப்பார்கள். மாதாந்தம் எடுக்கும் தீர்மானங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் சுகாதார தொண்டர்களுக்கு அரச விருது வழங்கும் நிகழ்வில் விருது வழங்கப்படுகின்றது.

நாட்டில் நிலவிய அனைத்து தொற்றும் மற்றும் தொற்றா நோய்கள் வீதமும் குறைவடைந்துள்ளது. நோய்க்கான அடிப்படை மருந்தாக, நல்ல மனநிலை, சிறந்த உணவு முறைமை, தொடர்ச்சியான உடற்பயிற்சி என்பன ஒவ்வொரு வீட்டிலும் நடைபெறுவதை அரசாங்க சுகாதார தொண்டர்கள் உறுதிப்படுத்தி அதைச் செய்வதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும். அதன் முதல் முன்மாதிரி திட்டமாக கிராம மட்ட சுகாதார தொண்டர்கள் மோட்டார் சைக்கிளை தவிர்த்து, சைக்கிள் ஓடுவதை ஊக்கப்டுத்தப் படுகின்றார்கள். மேலும் ஒவ்வொரு பாடசாலையிலும் யோகா ஒரு பாடமாகவும், யோகா பயிற்சிக்கூடம் ஒரு அங்கமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

நோயாளிகளை உற்பத்தி செய்யும் மருத்துவத் திட்டங்களை அல்ல, நோய் எதிர்ப்பு சக்திகளை உருவாக்கும் மருத்துவத் திட்டங்களை கடந்த ஐந்து வருட காலத்தில் என்னால் உருவாக்கப்பட்டுள்ளது, என்று கூறி முடித்தார். மிகத் தெளிவான பதில்களாக இருப்பதால் நான் இடையில் கேள்விகளை இடைக் கேள்விகளாகக் கேட்க முடியவில்லை.

நான்காவது கேள்வியாக வேலையற்ற பட்டதாரிகள் குறித்த தங்களின் நிலைப்பாடு வெற்றியடைந்துவிட்டதா? என கேட்டேன்.

நீங்கள் ஊடகங்கள் தான் சொல்ல வேண்டும், வேலையற்ற பட்டதாரிகள் நாட்டில் இருக்கின்றார்களா? என்று சொல்லுங்கள் என்று மறுபடியும் கேட்டார், இருக்கின்றார்கள் என்றேன். பட்டதாரிகள் வேலையற்றவர்களாக இருக்க முடியாத ஒரு கல்வித்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

ஒருவர் பட்டதாரி ஆகிய பின்பும் அவர் வேலையற்று இருப்பாரானால் அது அவர் செய்த குற்றமல்ல, நாட்டின் கொள்கை வகுப்பாளர்களே அதற்கு பதில் சொல்ல வேண்டும். உலகத்திற்கு தேவையான மனிதர்களை உருவாக்கும் எமது கல்வித்திட்டத்தில், நமது தேவைகளுக்கானதும், உலகத்தின் தேவைகளுக்கானதுமான வினைத்திறன் மிக்க இளைய சமுதாயத்தின் வகிபாகம் குறித்த எனது 10 ஆண்டு செயற்றிட்டத்தில், நமது நாட்டுக்கு அடுத்த 10 ஆண்டுக்கு தேவையான மனிதவளம் எவ்வளவு என்பது நிறுவப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் செல்லும் ஒரு மாணவர், ஒரு தொழில் நிறுவனத்தின் வேலையாளாகவே பல்கலைக்கழகம் செல்கின்றார். அவர் படிக்கும் காலத்தில் அவர் துறை சார்ந்த நிறுவனத்தில் அவர் 10% தொடக்கம் 40% வரை தனது பங்களிப்பை வழங்கிக்கொண்டே படிக்க வேண்டும். பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் போது ஒரு நிறுவனத்தின் பணியாளராகவோ அல்லது ஒரு நிறுவனத்தின் தொழில் வழங்குனராகவோ தன்னை பதிவுசெய்து கொண்ட பின்னரே அவர் தனது பல்கலைகழக படிப்பை தொடங்குகின்றார்.

பல்கலைகழகம் என்பது அறிவுக்கூடமாக பார்க்கப்படாமல் அது வீட்டினதும் நாட்டினதும் மேம்பாட்டுக்கும், உலகத்தின் வளம் சார் பாதுகாப்புக்கான இடமாகவும், இருப்பதால் அங்கிருந்து வெளியேறுபவர்கள். வேலையுள்ள பட்டதாரிகளாகவே வெளியேறுகின்றார்கள்.

அத்தோடு நீங்கள் அறிந்தபடி கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் அவரவர் திறமைக்குத் தக்கதான பல்கலைகழக அனுமதி பெற்றேயாவார்கள். முதலாம் தரத்தில் பாடசாலையில் சேர்க்கப்படும் ஒரு மாணவனுக்கு பல்கலைகழகம் வரை கட்டாயக்கல்வியே நமது புதிய கல்விக் கொள்கை. படித்து வெளியேறும் அனைவரும் பட்டதாரி களாகவே வெளியேறு கின்றார்கள். பட்டமில்லாமல் யாரும் வெளியேறலாம் ஆனால் வேலை இல்லாமல் வெளியேற முடியாது.

நாட்டில் அரச உத்தியோகஸ்தர்கள் வீதம் குறைக்கப்பட்டு கவர்ச்சிகரமான தனியார் தொழில்வாய்ப்பு சிறப்பாக நடைபெறுகின்றது. எனவே என்னைப் பொறுத்தவரை தொழில்வாய்ப்புக்கான இடங்கள் அனேகம் உண்டு. பட்டதாரிகளின் எண்ணிக்கையே குறைவு. அது ஒரு மேம்பாடு முன்னேற்றமாகவே நான் கருதுகின்றேன்.

அடுத்ததாக மிக முக்கியமான கேள்வி நமது நாட்டின் நீர்வள மேம்பாடு முந்தய அரசாங்கம் செய்தது போல சரியாக நடைபெறவில்லை என்று சொல்லப்படுகின்றதே.நாடு முழுவதும் ஏற்கனவே இருந்து வருகின்றதும், கட்டப்பட்டதுமான நீர் நிலைகள் மிகச்சரியான முறையில் பராமரிக்கப்படுகின்றன. நாட்டின் விவசாய உற்பத்திக்கு நமது நீர் நிலைகள் அளித்து வரும் பங்களிப்பு குறித்து எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் நீர்நிலைகளை தன்நிறைவுப் படுத்துவதில் புதிய உத்திகள் கையாளப்படுகின்றன.

குறிப்பாக நிலத்தடி நீரை தூய்மையாக வைத்திருப்பது, நீரை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வது என்பதில் நாம் கவனமாக இருக்கின்றோம். குறைந்த நீர்வளத்தில் பெரும் விளைச்சலை தரும் உற்பத்திகள் நம் பிரதேசத்தில் பாரம்பரியமாக இருக்கின்றன. அவை மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இன்று சர்வதேச சமூகம் அது குறித்து ஆச்சரியப்படும் அளவிற்கு நமது விவசாயத்துறையும் நீர்வளத்துறையும் மேம்பாடு அடைந்துள்ளது. விவசாயம், கால்நடை, உற்பத்தி நிறுவனம் என்ற மும்முனை உற்பத்தி வலயங்கள் நாடு முழுதும் உருவாக்கப்பட்டு விட்டது.. நெல் உற்பத்தி செய்யும் விவசாயி அரிசியை தான் விற்க முடியும், அப்படி அவர் அரிசி விற்பனையாளராக மாறும் போது தமது விளைச்சலின் முழுமையை அவர் அனுபவிக்க முடியும். மேலும் விவசாயி, வியாபாரி என்ற இரு நிலைகளில் அவரது தரம் உயர்த்தப்படுவதால் அவர் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கிறவராக மாறி விடுகின்றார். நாடு முழுவதும் அனைத்து விவசாய மற்றும் கால்நடை தொழில்களும், கிராம மட்ட உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களாக, கூட்டுறவு

சங்கங்களாக மாறியதன் விளைவாக நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் முதலாளிகளாக மாறியுள்ளார்கள். என்று கூறினார்.

ஆறாவது கேள்வி இப்போது கேட்க வேண்டும் ஆனால் அவருக்காக ஒதுக்கப்பட்ட நேரம் இன்னும் 20 நிமிடங்கள் தான் இருக்கின்றது, சுருக்கமாக பதில் சொல்ல சொல்லுவோமோ? என்று நான் மனதில் யோசிக்க. நீங்கள் நேரத்தை பற்றி யோசிக்கிறீர்கள் போலிருக்கின்றது. கவலைப்படாதீர்கள் சுருக்கமாக பதில் சொல்லுகிறேன் என்றார். ஆச்சரியமாக இருந்தது, நான் மனதில் நினைப்பதை அவர் கேட்கிறார்.

உங்கள் ஆட்சிக்காலத்தில் போதை பொருள் பாவனையை முழுமையாக நீங்கள் கட்டுப்படுத்தியதாக பல உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்கள் பாராட்டினாலும் அதற்காக நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பொது வெளியில் கடுமையான விமர்சனங்கள் உள்ளது, அது குறித்து உங்கள் கருத்து என்ன?

போதை பொருள் பாவனை என்பது ஒரு சர்வதேச பிரச்சினை. சிறுவர்கள், இளைஞர்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றார்கள். நான் பதவிக்கு வரும் போது போதைப்பொருள் பாவனையால் நாட்டில் ஒட்டுமொத்த எதிர்கால சந்ததியினரும் பாரிய நெருக்கடியை சந்தித்திருந்தனர். போதைப்பொருள் கட்டுப்பாட்டுக்கான மக்கள் இயக்கத்தை நான் ஆரம்பித்த போது அது குறித்து எதிர்கட்சிகள் கேலி செய்தனர். ஆனால் அது தான் இன்று இந்த மாற்றத்திற்கான காரணியாக மாறியுள்ளது. ஒரு நாடு, ஒரு இனம் அழிக்கப்பட வேண்டுமானால் தற்போது குண்டுகளோ, வன்முறையோ தேவையில்லை. “போதை” ஒன்றே போதும் ஒரு இனத்தை அழிப்பதற்கு. சர்வதேசத்திலும் உள்நாட்டிலும், நமது எதிர்காலம் குறித்து வகுக்கப்படுகின்ற திட்டங்களில், நமது மனித வளத்தை கையாளும் ஒரு யுக்தியாகவே நான் போதைப்பொருளை பார்த்தேன்.

மேலும் அரசியல்வாதிகள் தொடக்கம் அடிமட்ட ஏழைகள் வரை குறுகிய காலத்தில் மிகப்பெரிய செல்வந்தர்களாக மாறுவதற்கு "போதை" பொருள் விற்பனை ஒரு சிறந்த வழிமுறையாக கையாளப்பட்டு வந்தது. முதலாவது காவல்துறை மற்றும் அடிமட்ட சட்ட வல்லுனர்கள் துறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி மிகவும். அர்ப்பணிப்பும், தேச பக்தியும் நிறைந்த அதிகாரிகளை நியமித்து அவர்களுடன் பணியாளர்களாக திறந்த உத்தியோகத்தர்களை நியமித்து நேரடியாக எனது கட்டுப்பாட்டில் என் உத்தரவிலும் எனது மேற்பார்வையிலும் நடக்கும்படி கூறினேன். அந்தக் குழு எடுக்கும் அதிரடி நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அதில் முக்கியமான சட்டதிருத்தம் உங்களுக்கு தெரியும்.

ஒருவர் சட்டவிரோத போதை பொருள் பாவித்தவராக அல்லது விற்பவராக இனங்காணப்பட்டால் அவருக்கு பத்து வருட கடூழிய சிறைத் தண்டனையும் 5 வருட புனர்வாழ்வும் வழங்கப்படும், மேலும் 25 வயதுக்கு உட்பட்டவர்களானால், அவர்களின் பெற்றோருக்கு ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும், ஒரு வருட பிள்ளை வளர்ப்பு குறித்த பயிற்சியும் வழங்கப்படும். என்ற சட்டதிருத்தம் விற்பவருக்கும் வாங்குபவருக்கும், வைத்திருப்பவருக்கும் பொருந்தும். மேலும் ஒரு வீட்டில் அல்லது வளாகத்தில் போதைப்பொருள் விற்பனவு செய்யப்பட்டால், அந்த வளாகத்தின் உரிமையாளர் உட்பட அந்த வீட்டில் உத்தியோக பூர்வமாக வசிக்கும் அனைவர் பேரிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக தேசத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இதே சட்டம் பெண்கள் மற்றும் சிறுவர் தப்பானபிரயோகத்தில் ஈடுபடுகிறவர்களுக்கும் பொருந்தும். இந்த சட்டதிருத்தத்தை நான் கொண்டு வந்தபோது கடுமையான விமர்சனங்கள் வந்தன, சிறைச்சாலைகள் நிறைந்தன புனர்வாழ்வு மையங்கள் நிறைந்தன, மேலும் இவ்வித குற்றச்சாட்டுகளில் ஈடுபடுபவர்களின் இரத்த உறவுளின் அரச உத்தியோகம் பறிக்கப்படும் போன்ற சட்டங்களால் இந்த மாற்றத்தை உருவாக்க முடிந்தது.

மேலும் போதைப்பொருள் அருந்துதல், விற்றல், வாங்குதல் விடயத்தில் தொடர்புபடும் அரசியல் வாதிகள் வாழ்நாள் முழுவதும் அரசியலில் ஈடுபடாதபடி தடைகள் விதிக்கப் பட்டுள்ளது. ஒருவன் கெடுவதற்கும் திருந்துவதற்கும் சமூகமே பொறுப்பேற்க வேண்டும், அரசு மட்டும் இந்தப் பொறுப்பை ஏற்க முடியாது. நான் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தனிமனித சுதந்திரம், உரிமைகள் பறிக்கப்பட்டிருப்பதாக கூறியவர்கள் இந்த நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் ஒரு இனத்தின், சமூகத்தின், தேசத்தின் ஒட்டுமொத்த உரிமைகளையும், எதிர்காலத்தையும் கருத்தில் கொள்ளவில்லை என்பதே எனது நிலைப்பாடு, கடந்த ஐந்து வருடத்தில், முதல் இரண்டு வருடத்தில் சட்டவிரோத போதைப்பொருள் இல்லாத நாட்டை என்னால் உருவாக்க முடிந்தது. கடந்த மூன்று வருடங்களில் நாடு முழுவதும் ஒரு வன்முறை கூட பெண்களுக்கு எதிராக பாலியல் துர்ப்பிரயோகமாக பதிவுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, ஏனென்றால் உங்களுக்கு தெரிந்திருக்கிற படி ஒரு பாலியல் துர்ப்பிரயோகத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவரின் பெற்றோர், மற்றும் இரத்த உறவினர் யாவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டார்கள். இது கடினமானது. ஆனால் அது நாட்டை மீட்டெடுத்துள்ளது என்று கூறினார். நேரத்தை கருத்தில் கொண்டு நிறைவாக ஒரு கேள்வி மாத்திரம், பல்லினங்கள், பெரும்பான்மை, சிறுபான்மை இனமாக வாழும் இந் நாட்டில் இனங்களுக்கிடையிலான இணக்கப்பாடு உங்களால் எப்படி கட்டியெழுப்பப்பட்டது? குறிப்பாக கடந்த கால இன முரண்பாடுகளின் கசப்பான விடயங்களை எப்படி கையாண்டீர்கள்? எப்படி அப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகின்றது?

இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் என்பது. அரசியல் உள் நோக்கங்களால் உருவாக்கப்பட்டு நாட்டில் இன முரண்பாடுகளை உருவாக்கியது என்பதே வரலாற்று உண்மை, அதை யாரும் மறுக்க முடியாது.

அந்த இன வன்முறைகளால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அவர்கள் எந்த இனத்தை சார்ந்தவராக இருந்தாலும் நட்ட ஈடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் நான் ஆட்சிக்கு வந்தவுடன் ஆரம்பித்த இன நல்லிணக்கத்துக்கான பொறிமுறைகள், என்ற 10 அம்ச செயற்றிட்டத்தின் ஒரு அலகாக இருக்கும், இன நல்லிணக்க வரலாற்றை உருவாக்குவோம் என்ற பாடத்திட்டம், முதலாம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகம் வரை ஒரு பாடமாக கற்பிக்கப்படுகின்றது. அது ஒருபுறமிருக்க பிராந்தியங்களுக்கான அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கான திட்டமானது நாட்டின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு குறித்த பார்வையில் மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்பட்டது.

ஒரு இனத்திற்கு வழங்கப்படும் அதிகாரமாக பார்க்கப்படாமல், அப்பகுதியில் வசிக்கும் அனைவரும் எப்படி நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்ய இந்த அதிகாரப்பகிர்வு பங்களிப்புச் செய்கின்றது. என்பதை அனைத்து மக்களும் புரிந்து கொள்ள செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, நீங்கள் அறிந்த வண்ணம் எனது ஐந்து ஆண்டு கால ஆட்சியில் நிறைவு ஆண்டான இந்த ஆண்டில் "அபிவிருத்திக்கும் பொருளாதார மேம்பாட்டுக்குமான தேசிய இலக்கை அடைவதற்கான அதிகாரங்களை பிராந்தி யங்களுக்கு வழங்குதல்" என்ற சட்டதிருத்தம் கொண்டு வரப்பட்டு தற்போது வினைத்திறன் மிக்க பிராந்திய அரசுகள் நாட்டின் தேசிய இலக்குகளை அடைவதற்கு சிறப்பாக நடைபெறுகின்றன. நாட்டின் அனைத்து மக்களும் தமது பிராந்தியத்தின் தனித்துவமான கலை, கலாசாரம், பொருளாதார விழுமியங்களை வெளிப்படுத்தவும், பயன்படுத்தவும் அதை விரிவுபடுத்தவும் புதிய சட்டம் வழிவகுத்துள்ளது. குறிப்பாக நாட்டின் அனைவருக்குமான பொது இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன, அது தான் அடுத்த 10 ஆண்டுகளில் நமது நாட்டை இப்பிராந்தியத்தின் பொருளாதார பலம் மிக்க நாடாக மாற்றுவது. அது தற்போது நாட்டின் அரசியல் கட்சிகளின் கொள்ளைகளாகவும் கோட்பாடாகவும் இருக்கின்றது.

முன்பெல்லாம், எப்படி ஒரு இனத்திடமிருந்து இன்னுமொரு இனம் பாதுகக்கப்படும், உரிமை மீட்டெடுக்கப்படும் என்று தான் அரசியல் செய்யப்பட்டது. அது தற்போது முடிவுக்கு வந்துள்ளது என்று கூறினார். இன்னும் இரண்டு நிமிடங்கள் உள்ளன. மேலும் நிறைவாக ஒரு கேள்வி நீங்கள் ஒரு சிறுபான்மை இனத்தை சேர்ந்தவராக ஐந்து வருடம் இந்த நாட்டை சிறப்பாக வழிநடத்தியதாக உங்கள் சார்பான ஊடகங்கள் தெரிவிக்கின்றன, அப்படியிருந்தும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இன ரீதியிலான பாகுபாடு, ஓரங்கட்டுதல் தொடர்பாக நீங்கள் அனுபவத்தை பெற்றுள்ளீர்களா?

ஒரு வார்த்தையில் சொல்வதானால், அப்படிப்பட்ட காலம் முடிவுக்கு எப்போதோ வந்து விட்டது. நாட்டில் இருக்கும் அனைவரும் என்னை கொண்டாடினார்கள், கொண்டாடுகிறார்கள், கொண்டாடுவார்கள் என்று நினைக்கின்றேன். அவரவர் தத் தம் உரிமைகளோடு வாழ்வதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான எனது அரசியல் பயணத்தில், பெரும்பான்மை, சிறுபான்மை என்ற கருத்தியலுக்கு அப்பால், உரிமை கிடைத்தவர்கள், கிடைக்காதவர்கள் என்று பார்த்ததன் விளைவு பாதிக்கப்பட்டவர்கள் எங்கும் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்ததால் எனக்கு அவ்விதமான அனுபவங்கள் ஏற்படவில்லை. நமது தேர்தல் பிரச்சாரத்தில் யார் அடுத்த சனாதிபதி என்பதில். எந்த இனத்தை சேர்ந்தவர் என்பதல்ல, எந்த கெட்டிக்காரன் என்பது பற்றி தான் பேசப்படுகின்றது என்று கூறினார். குறிப்பிட்ட நேரத்தில் நேர்காணல் நிறைவுக்கு வந்தது. சனாதிபதி அறிவுச்செல்வன் ஒரு சாதாரண பிரசையை போல அரங்கை விட்டு வெளியேறினார். மாலை 6 மணி முதல் 7 மணி வரை அவரது நேர்காணல் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

காலை விடிகின்ற போது உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களில் நாடே கொண்டாடும், சிறந்த தலைவர் என்ற தலைப்பில் செய்திகள் வெளியிடப்பட்டன.

அன்று காலை வீட்டுக்கு சென்றேன், மகன் பூரணன் மற்றும் பூரணி, அப்பா இந்த சனாதிபதி மீண்டும் வருவாரா என்று என்னிடம் கேட்டார்கள். ஏன் என்று அவர்களை கேட்டேன். எங்களுக்கான, எங்கள் நாட்டுக்கான எதிர்காலம் அவர் கையில் தான் இருக்கின்றது என்று அந்த பிஞ்சு உள்ளங்களில் இருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன. நான் சிரித்துக்கொண்டு கூறினேன், பிள்ளைகளே உங்களைப் போல நாட்டிலுள்ள 20 இலட்சம் சிறுவர்களும் தங்கள் பெற்றோர்களை நிச்சயம் கேட்டிருப்பார்கள். அப்படி கேட்டிருந்தால். இந்த தலைமுறைக்கும் அடுத்த தலைமுறைக்கும் அவர் தான் சனாதிபதி என்றேன்.





# சந்தனம் மிஞ்சினால்

இரண்டு நாட்களுக்கு முன்பு பெய்திருந்த மழை நீர் நன்றாகவே நிலத்திற்குள் ஊறியிருந்த பொழுதிலும், காலையிலேயே வாசலில் நிற்கின்ற செடிகளுக்கு தண்ணீரை பீய்ச்சியடித்துக்கொண்டிருந்ததை பார்த்த சங்கரன் ஐயா "சந்தனம் மிஞ்சினால் இப்படித்தான்" என்று நக்கலாக கூறியது எனக்கு கொஞ்சம் சஞ்சலமாகத்தான் இருந்தது. சங்கரன் ஐயாவை பொறுத்தவரை எங்கள் முன்னேற்றத்தின் மிகப்பெரிய சௌபாக்கியங்களை நானும் எனது கணவரும், பிள்ளைகளும் வீணடிக்கின்றோம் என்பது போலத்தான் தெரிகின்றது.

இந்த நிலைக்கு உயர்வதற்கு எங்கள் முயற்சி, கடின உழைப்பு, அறம் சார்ந்து இன்றுவரை நானும் எனது பிள்ளைகள் குடும்பங்களும் வாழ்ந்து வருகின்ற வாழ்க்கையும், சங்கரன் ஐயாவுக்கு அவ்வளவு புதினமாக இருப்பதில்லை. வீட்டுக்கு பக்கத்தில் ஒரு சைக்கிள் கடைதான் அவரது வருமானத்திற்கான தொழில்களம். அன்று தொடக்கம் இன்றுவரை அப்படியேதான் அவருடைய தொழிலும் முன்னேற்றமும் இருக்கின்றது. ஆனால் அவர் பார்த்திருக்க எங்கள் முன்னேற்றமும், எங்கள் வாழ்க்கை முறைமையும் சில நேரங்களில் அவருக்கு எரிச்சலையும் பொறாமையையும் ஏற்படுத்தியிருக்கத்தான் கூடும். என்றாலும் அவரோ அவரது குடும்பத்தவர்களோ அதை நேரடியாக ஒருபோதும் வெளிப்படுத்தியது இல்லை. காரணம் அவர்கள் துன்பங்களில் கைகொடுத்துவரும் ஒரே ஒரு குடும்பம் நாங்கள் தான். யுத்தம் முடிவடைந்த பின்பு சங்கரன் ஐயாவின் புதிய வாழ்க்கையில் மிஞ்சிய பிள்ளைகளும் கனவுகளும் கொஞ்சம் தான் சுருக்கமாக சொன்னால் "ஏதோ வாழ்ந்துவிட்டு போவோம்" என்றுதான் அடிக்கடி சொல்லுவார். ஆனால் யுத்தம் தந்த இழப்புக்களை விட அவை கற்றுத்தந்த பாடங்களை, கற்று கரையேறியவர்களாகவே நான் என்னை கருதுகின்றேன். யுத்த காலத்தில் சாப்பிட்ட சாப்பாடு, இருந்த வீடு, கட்டிய உடுப்பு, கூடிவாழ்ந்த முறைமை, நாளாந்த கடின உழைப்பு, முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள், இவை எல்லாம் யுத்தத்தால் நாம் சேர்த்த சொத்துக்கள். இழந்தவைகளால் பெற்றுக்கொண்ட இந்த சொத்துக்களை நானும் எனது கணவரும் எம் தலைமுறைகளுக்கும் கொடுத்துத்தான் வருகின்றோம். என்றாலும் இன்றைக்கு சங்கரன் ஐயாவுக்கு ஒரு விளக்கம் கொடுக்கத்தான் வேணும். ஏனென்றால் இது நாலாவது தடவையாக இந்த "சந்தனம் மிஞ்சினால்" கதைய சொல்லிப்போட்டார். ஒருக்கா கதைக்கத்தான் வேண்டுமென்று தீர்மானித்து ஐயாவ கூப்பிட்டன்.

ஐயா, சந்தனம் மிஞ்சினால் நாலு பேருக்கு கொடுக்கத்தான் வேணும். நீங்க நினைக்குமாப்போல நாங்க ஒன்றும் அங்க இங்க பூசிக்கொள்ளயில்ல என்று கூறினேன்.

இல்ல பிள்ள நானும், நீ நெடுகலும் தான் மழை காலத்தில தோட்டத்திற்கு தண்ணீர் பாச்சுறது என்னத்திற்குதான் என்று எனக்கு புரியல்ல என்று கூறினார். ஐயாவின் புரிந்து கொள்ளுதலுக்கு என் நோக்கத்தை சொல்லித்தான் ஆக வேண்டும். என்ற நிலை வந்தபடியால் என் தண்ணீரின் கதையை அவருக்கு சொல்லத்தொடங்கினேன்.

செடிகளுக்கு தண்ணீர் விடுகின்றவர்கள் வேர்களை பார்த்துத்தான் தண்ணீர் விட வேண்டும், வேர்கள் தான் தண்ணீரை குடிக்கும் வாய்கள். ஆனால் என் வீட்டு முற்றத்தில் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் சில குருவிகள் வருகின்றன. காலை விடிந்து விட்டால் சிட்டுக்குருவியின் பாடல் கேட்காத நாளில்லை, என் வீட்டு பூந்தோட்டத்தில் தேன் குடிக்கும் குருவிகளும் சில நேரங்களில் தண்ணீரை குளிப்பதற்கும், குடிப்பதற்கும் என் செடிகளின் இலைகளைத் தான் நம்பியிருக்கின்றன. ஆனபடியால், நான் ஊற்றும் தண்ணீர் வேர்களுக்காக மட்டுமல்ல சிட்டுக்குருவிகளின் தாகம் தீர்ப்பதற்காகவும் தான். என்று கூறிய போது ஐயா உண்மையாகவே ஒரு கணம் உறைந்துதான் போனார்.

எனக்கு புதினமல்ல ஏனென்றால் பிள்ள நீ சொல்லுறதை செய்யிற ஆளா இருக்கிறாய் என்றது தான் புதினமாயிருக்கு. காகத்திற்கும் சோறு கொடுக்கும் பழக்கமும், எறும்புக்கு தீனி போடும் கூட்டமும் நாம் தான், என்றாலும் நீ ஒரு சிட்டுக்குருவி குளிப்பதற்காய் செடிகளின் இலைகளுக்கு நீர் பாச்சுவது ஆச்சரியமாய் தான் இருக்குது. எப்படியப்பா இப்படியெல்லாம் யோசிக்கிறியள், யுத்தம் முடிந்த பிறகு மனிதம் செத்துவிட்டது என்றல்லோ எல்லோரும் பேசிக்கொள்ளினம், நல்லது நினைச்சு நல்லதா வாழ்ற ஒரு சமூகத்தில நானும் வாழுறது பெருமையாய் இருக்கு என்று சங்கரன் ஐயா கூறியது எனக்கு ஊக்கத்தைக் கொடுத்தாலும், என்ர வாழ்க்கையின்ர அழகான பக்கங்கள் உருவான கதையை உங்களுக்கும் சொல்லாமல் விட எனக்கு மனமில்ல என்றேன்.

ஐயா எங்கட குடும்பத்தோட இவ்வளவு உரிமையோட பழகினாலும் என்ர குடும்பத்தின் ஆரம்பகால துன்பங்கள் உங்களுக்கு அவ்வளவா தெரியாது என்று நான் கூற, பிள்ள கடையில வேலையும் இன்னும் வரல, உன்ர கதைய கேக்கிறதுக்கு இதை விட வேற ஒரு நல்ல நேரமும் கிடைக்க போறதில்ல. சொல்லு, பிள்ள உங்கட கதைய கேட்பம் என்று அவர் கூற நான் எப்படி என் கதை சொல்லாமலிருக்க முடியும்.

அது ஒரு இருண்ட காலம், யுத்தம் முடிந்து ஏழெட்டு வருடங்கள் முடிஞ்சிருக்கும். நானும் எனது கணவரும் பிள்ளைகளும் வாழ்றதுக்கு வழியின்றி திரிஞ்ச காலம். என்னம்மா சொல்லுறா, அந்தக் காலத்தில தான் எல்லாத்திற்கும் நிவாரணமும், வாழ்வாதாரங்களும், நிறைஞ்சு வழிஞ்சது என்று சொல்லினம். ஓம் ஐயா நிறஞ்சு வழிஞ்சது தான் ஆனா ஒருத்தரும் அதை சரியா பிடிச்சு வைக்கல என்றுமெல்லோ இப்ப கதைக்கினம்.

தற்காலிக வீடு, நிரந்தர வீடு, வரட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம், வேலைக்கு நிவாரணம், கத்தி, அலவாங்கு, கோடரி, உடுப்பு, சட்டி, பானை, ஆடு, மாடு, பன்றி, இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். எல்லாம் கிடச்சும் "ஒன்றுமே இல்ல" என்றது தான் எங்கட வாழ்க்கையாயிருந்திச்சு. என்ர வீட்டுக்கார், உங்களுக்கு தெரியும் தானே நல்ல உழைப்பாளி, இந்த இரணைமடு காட்டுக்கு போய் காஞ்ச விறகுகள தேடி, சைக்கிள்ள கட்டி கிளிநொச்சியில இருக்கிற ஒரு பத்து குடும்பங்களுக்கு கொடுத்து வந்தா தான் சாப்பாடு என்ற நிலைக்கு எங்களிடத்தில ஒன்னும் இல்லாத காலம்.

எல்லாம் கொடுத்தாங்க நாங்களும் வாங்கினம், ஆனால் ஒன்றுமே எங்களுக்கு மிஞ்சல. பள்ளிக்கூடம் போறதுக்கு நல்ல உடுப்பு, நேரத்திற்கு சாப்பாடு, இப்படி ஒண்ணுமே சரியா கிடைக்காததினாலதான் செல்வியும், ரவியும் படிப்பை பாதியிலயே விட வேண்டி வந்திருச்சி. பாவம் அதுகள் அந்த முனிவர் கொஞ்ச நாளுக்கு முன்னுக்கு வந்திருந்தா இந்த பிள்ளைகளையும் படிக்க வைச்சிருக்கலாம். என்று நான் கூறியதும், யார் அந்த முனிவர்? என்னத்திற்கு வந்தார்?

என்று சங்கரன் ஐயா ஆவலா கேட்டார். ஐயா உங்களுக்கு தெரியும் தானே எங்கட சனங்கள் என்ன கொடுத்தாலும் வேண்டாம் என்று வாங்குறதுகள், யுத்தம் எங்க உழைப்ப, நாணயத்த, கௌரவத்த எல்லாம் சிதைத்திருந்த காலம் ஐயா, எல்லாரும் “இல்லை” என்று சொல்லுறத ஒரு முதலீடாக வச்சு அனுதாபத்த தேடி தேடி அலஞ்ச காலம். அப்படித்தான் நானும் ஒரு நாள் வீட்டு துன்பத்தை சொல்லி யாருக்கிட்டயும் உதவி வாங்கிறதற்கு போகேக்க தான், பக்கத்து வீட்டு வான்மதியும் என்னோடு சேர்ந்து வந்தவா, அவதான் சொன்னா நம் ஊருக்கு ஒரு முனிவர் வந்திருக்கின்றாராம் கதை கதையாய் சொல்லுவாராம், போய் கேட்டுட்டு போவம் வா என்று என்னையும் நம்மட ஊருண்ட காளி கோவிலுக்கு கூட்டிக்கொண்டு போனா. அங்க போனா, அவர பார்க்க சாமியார் மாதிரியே தெரியல சும்மா சரமும் சேட்டும் போட்டுக்கொண்டு, மரத்தடியில இருந்துகொண்டு போறவைக்கு கதை சொல்லிக்கொண்டிருந்தார்.

ஒவ்வொருவரா வரச்சொல்லி கதை சொல்ல எல்லோரும் கேட்டுட்டு ஆச்சரியமா, சந்தோசமாய் போனதுகள், நானும் வான்மதியும் ஒரு முடிவோட தான் நிண்டம். இன்றைக்கு இவர் என்ன கத தான் சொல்ல போறார் என்று பார்க்கத்தான் வேணும். என்ற உறுதியோடு காத்திருந்தோம். என்ர ரேண் வந்ததும் நான் போய் என்ர துயரத்தை சொன்னன். ஐயா என்ன! ஏது மந்திரம் ஏது சொன்னவரே புள்ள?, இல்ல ஐயா அது ஒன்றும் சொல்லவில்ல, அவர் ஒரு கதை சொன்னவர் எல்லாருக்கும் அப்படி கதை தான் சொல்றவராம். கதையாலேயே ஒரு காவியம் செய்தார் ஐயா அந்த முனிவர். புள்ள தாமதிக்காம அவர் சொன்ன கதைய ஒருக்க சொல்லம்மா. என்ன தான் சொன்னவர், நான் அவருக்கு முன் அமர்ந்து என் வீட்டு துயரத்தை சொன்னன். யுத்தத்தில் பாதிக்கப்பட்டு இரண்டு பிள்ளைகளை இழந்து அகதி முகாமில துன்பப்பட்டு, எல்லாத்தையும் இழந்து வந்திருக்கின்றேன் என்று சொன்னேன். சொல்லும் போது அழுகையும் வந்துட்டது.

எத்தினை துன்பங்கள் கடந்து வந்தோம், கால் வைத்த இடமெல்லாம் முள்ளுகளும் கல்லுகளும் தான். கண்பட்ட இடமெல்லாம் கவலையும் கண்ணீரும் தான். தேடியது எல்லாம் தொலைத்தோம், தேடாதது எல்லாம் எங்களுடன் சேர்ந்து கொண்டது கண்ணீர், கவலை, நோய்கள் பார்த்தவர் எல்லார்க்கும் பரிதாபப் படக்கூடிய ஒரு நிலை இருந்ததால் என்னவோ, வயிற்றிற்கு சோறு, வாழ்வதற்கு ஒரு வீடு, காலத்திற்கு காலம் சில நிவாரணம் இப்படி வந்து சேர்ந்ததும் வராதது போல கரைந்தது. "இல்லை" என்பதை தவிர வேறேது என்னிடம் இருக்கின்றது என்றும், அது தான் செல்வம், அது மட்டும் என் செல்வம், முதலீடு. பார்ப்பவர் பரிதாபப்பட அது மட்டும் தான் இருக்கின்றது. "இல்லை" என்பதற்கு இன்னுமொரு காலம் இருந்துட்டு போய்விடுமோ என்று கண்ணீர் விட்டேன்

அவர் நான். சொன்ன எல்லா கதையும் கேட்டார் பின் பேசத் தொடங்கினார்.

நிறைய கண்ணீர் வைத்திருக்கின்றாய், அதை சிந்த கண்கள் வைத்திருக்கின்றாய். அதை சீண்ட உணர்ச்சிகளும் உண்டு. அந்த உணர்ச்சிகளுக்கு உன்னிடம் நீங்காத நினைவுகளுண்டு. இருப்பதற்கு ஒரு வீடுண்டு, வீடிருக்க உனக்கொரு நிலமுண்டு, நிலவும், காற்றும், ஒளியும் உன் வீடு வந்து செல்வதுண்டு, காலையிலே கதிரவன் முத்தத்தில் விழிப்பதுண்டு, உன்னை நினைப்பதுண்டு, உன் வீட்டு முற்றத்தில் நீ நடாது வளர்ந்திருக்கும் புல்லுண்டு, புல்லிலே மென்மையான பூக்களுண்டு, பூக்களுக்குள் தேனுண்டு, தேன் குடிக்க வண்டுகள் உண்டு,

> வண்டுகளை சுற்றி பறந்து தேன் குடிக்கும் குருவிகளும் உன் முற்றத்திற்கு வருவதுண்டு, வந்து தேன் விருந்துண்டு செல்லும் பறவைகள், உனக்காக ஒரு பாடல் பாடுவதுண்டு, அப்பாட்டிலே உன் புகழ் கூறுவதுண்டு, காக்காவும் கரைவதுண்டு, உனக்காக பாடுவதுண்டு, உன் வீட்டுச்சுவரிலே பல்லியும் உன்னோடு வாழ்வதுண்டு. அது பசிக்கு சின்ன பூச்சிகளும் உணவாகுவதுண்டு, சின்ன சின்ன மின்மினிப் பூச்சிகளும் இரவிலே வருவதுண்டு, அது உன் முற்றத்து வானத்திலே பறப்பதுண்டு, ரீங்காரம் செய்யும் சில் வண்டுகளும் இரவிலே வருவதுண்டு, அப்பாட்டுக்கு ஆட்காட்டி குருவியும் எதிர்ப்பாட்டு பாடுவதுண்டு, முற்றத்தில் பாய்விரித்து வானத்தை நீ பார்ப்பதற்காய் எங்கோ ஓடிய நட்சத்திரங்கள் உன் முற்றத்தை மிதித்து செல்வதுண்டு, இருட்டும் உண்டு உறக்கம் தருவதுண்டு, உறங்காத உன் விழிகளுக்குள்ளும் நாள்தோறும் கதை சொல்லும் கனவுகளும் வந்து போவதுண்டு.

இத்தனை "உண்டு" உனக்குள்ளும், உன்னை சுற்றிலும் இருப்பதை நீ இன்னும் பார்க்காமல் ஒன்றுமே இல்லை என்ற ஒன்றைச்சொல்லி உன்னை ஏழையாக்கி, உன் குடும்பத்தை வறுமைப்போர்வைக்குள் மூடி, நாள்தோறும் அதற்குள் குடியிருந்து, உன் உடலுக்குள் கவலையை எழுந்தாடச்செய்து, அதன் கூட்டுறவில் மலரும் அத்தனை நோய்களையும் சுமந்துகொண்டு வந்து நிற்கிறாயே இது தகுமா? என்று கேட்டார். ஒரு கேள்வி பாருங்கோ நான் அப்படியே ஆடித்தான் போனேன்.

> என் கண்களில் வடிந்த நீர்
> சற்றென நின்று விட்டது
> சுட்ட நீர் உருகியது
> உடம்பெல்லாம் குளிர்ந்தது.

அவர் என்னை பார்த்தார், அவர் கண்களில் இருந்து ஏதோ ஒரு ஒளி என்னை நோக்கி வந்ததை போலுணர்ந்தேன். பரிதாபப்படாத பார்வை, கோபப்படாத உணர்வு, சமயங்கள் கூறும் இரக்கம், அருள் மகிமை ஒன்றும் அவர் பார்வையில் இல்லை. ஆனால் ஒரு ஒளி அவர் கண்களில் இருந்து பாய்வது போலிருந்தது.

இருப்பதை பற்றி பேசுவோம் என அவர் பேசத்தொடங்கினார். நீ மட்டுமல்ல, உன் வீடு மட்டுமல்ல, உன் ஊரும், உன் மாவட்டமும் பட்டினி பசி பற்றி அதிகமாக பேசுகின்றீர்கள். உணவுக்களஞ்சியத்தின் மேல் அமர்ந்து கொண்டு பட்டினி பற்றி பேசும் ஓர் சமூகம் நீங்கள் தான்.

அழகான காடு
காட்டுக்குள் கூடு
கூட்டுக்குள் குருவி
கும்மாளம் போடும்

குருவிகளுக்காய் பூந்தோட்டங்கள்
தேன் சிந்தும் ஆறுகளாய் பாயும்
ஆற்றுக்குள் மீன்கள்
மீன்களுக்காய் நாரைகள்

ஐந்தறிவு சீவன்கள் இங்கே பட்டினியால் தவிப்பதில்லை, தாம் பாடுவதையும் கூவுவதையும் நிறுத்துவதும் இல்லை. வாழத்தெரிந்தவைகள் அவை பிழைத்துக்கொண்டன. நீங்கள் வாழ்வைத் தொலைத்தவர்கள் "இல்லை" அதை உங்களுக்குள்ளே வைத்துக்கொண்டு தேடுகின்றீர்கள் என்று மெதுவாக சிரித்தார்.

இப்பொழுது தென்றல் மெதுவாக வீசியது போலிருந்தது. எங்கோ கூவிய குயில் எனக்காய் பாடுவது போலிருந்தது. மெல்லமாய் தொட்டுச் சென்ற தென்றல் என்னோடு கதை பேசுவது போல் உணர்ந்தேன்.

அவர் மேலும் பேசத்தொடங்கினார். "நடந்தா வந்தாய்" என்றார், ஆமாம் என்று கூறினேன். நீ பாக்கியசாலி, நடப்பதற்கு காலிருந்தும் பறந்து செல்லும் மனிதர்களை விட நீ பாக்கியசாலி. நடப்பவர்கள் எல்லாரும் தாம் ஏழைகள் என்றும், பணக்காரர் காரிலும் வாகனத்திலும் போகின்றார்கள், நாம் வாழ்நாள் முழுவதும் நடக்க பிறந்தவர்கள் என்று சலித்துக் கொள்கின்றார்கள்.

நடப்பது ஒரு வரம்
அது இப்போது சிலருக்கு தான்,
கிடைத்திருக்கும் பெரும் வரம்.
உன் ஆயுளுக்கு நீ
கொடுக்கும் வெகுமதி
நடையால் உன் நரம்புக்குள்
உன் குருதியை
ஓடச்செய்யும்.

இப்படி நாளெல்லாம் நீ வாழ்வதற்கு நிறையவே வைத்திருந்தும் "இல்லை" என்பதை ஒரு சொத்தாக சுமந்து திரிவது உன் குற்றமல்ல. அது காலத்தின் கட்டாயமாய் உங்கள் தலைகளில் எழுதப்பட்ட விதியாகிவிட்டது.

ஒரு இனம் அழிக்கப்பட வேண்டுமானால், அதன் நம்பிக்கைகள் சிதைக்கப்பட வேண்டும். முதலாவது உன் மீது உனக்கிருந்த நம்பிக் கையை நீ இழந்து வருவதும், உன்னை சுற்றிலும் உனக்காக இருக்கின்றவைகளை நீ இழந்து விடுவதும் தான் உன் இருப்பை நீ இழக்கும் முதல் தருணமே. நீ எதிர்பார்க்காத எல்லாம் உன் வாசல் வரை தேடி வரும், எல்லாவற்றையும் நீ அனுபவிக்க நீ ஆசைப்படும் அளவிற்கு அது அழகாகவே வந்து செல்லும். அதை அனுபவிக்க உன்னிடம் பணம் "இல்லை" என்று நீயும் உன் வீட்டாரும் பெருமூச்சு விடும் நேரம், உன்

நம்பிக்கை வேர்கள் அறுந்து சிதறுகின்றன. எட்ட முடியாத ஆசைகளுக்குள் உன்னை சிக்க வைத்து அதை நோக்கி உன்னை அலையவிட்டு களைத்துப் போக பண்ணுவதே உலக அடக்குமுறையாளர்கள் தாம் அடக்க விரும்பும் இனங்களுக்கு செய்யும் தந்திரங்கள் என்றார்.

நான் எனக்கு பின்னால் இருந்தவர்களை பார்த்தேன். அவர்களும் என்னைப்போல தங்கள் கதைகளுக்காய் அதிக நேரம் காத்திருந்தார்கள். என்ன! பின்னால் இருப்பவர்களை பார்க்கின்றாயா? அவர்களுக்கும் ஒவ்வொரு கதையுண்டு. ஆனால் உனக்காக ஒரு கதையுண்டு. சொல்கிறேன் கேள். என்று கதையை சொல்லத் தொடங்கினார்.

நான் ஒரு நாள் உன் வீட்டிற்கு வருவேன். அப்போது நீ என்னை மலர்ந்த முகத்துடன் வரவேற்பாய். உன் வாசலில் அழகான பூஞ்செடிகள் இருக்கும். அவை தான்தோன்றிய பூஞ்செடிகள். குப்பைக்கீரை அதிலும் அழகான பூ உண்டு. தவசி முருங்கை, பசளி, தூதுவளை இப்படி எண்ணற்ற செடிகள் அங்கே பூத்திருக்கும். நீ முற்றத்தில் ஒரு அழகான கட்டையை அழகாக கதிரையாக்கியிருப்பாய், அங்கே நீ என்னை அமரவைத்து விட்டு, உன் வழக்கப்படி வந்தாரை உபசரிக்கும் முறைப்படி எனக்கு பழரசம் கொண்டு வருவாய். அது கோடை காலத்தின் நிறைவு என்றபடியால் நாவல் பழரசமாய் இருக்கும். உன் வீட்டு மூலையில் இருக்கும் இரண்டு நாவல் மரங்களும் அன்று உனக்கு மிகச்சிறந்த சொத்தாக இருக்கும். நான் உன் பிள்ளைகளை விசாரிப்பேன். நீ சொல்லுவாய் அவர்கள் பாடசாலையில் இருந்து வந்து ஆண் பெண் வேறுபாடின்றி தோட்டத்தில் வேலை செய்கின்றார்கள் என்று.ஐயோ சிறுவர்கள் வேலை செய்வது குற்றமே என்றால், நீ எனக்கு அறிவுரை சொல்லுவாய்.

ஒரு கருவின் உழைப்பே குழந்தை
ஒரு குழந்தையின் உழைப்பே தாய்மை
ஒரு தாய்மையின் உழைப்பே பிறப்பு
ஒரு பிறப்பின் நோக்கம் உழைப்பு

நான் ஆச்சரியப்படுவேன். உன் வீட்டு தோட்டத்தை நான் பார்க்கலாமா என்று நான் கேட்பதற்கு வாய் எடுக்க முன்னே, நீ என் தோட்டத்தை வந்து பாருங்கள் என்று அழைப்பாய்.

அழகான தென்னை மரங்கள்,
தேங்காய் குலைகளுடன்
என்னை வரவேற்கும், அது
உன் குடும்பத்தின் உழைப்பை
தென்றலோடு இணைந்து
பாடும்.

பார்க்கும் இடமெல்லாம் பசுமை, நீ நடாத செடிகள் உன் வளாகம் எங்கும் ஓங்கி வளர்ந்திருந்தது, அறுகம்புல் தொடக்கம், காட்டு பீர்க்கு, மொடக்கத்தான், குறிஞ்சா, முல்லை, தூதுவளை, குப்பைமேனி, தேங்காய்ப்பூக் கீரை, காட்டு பொன்னாங்காணி, குப்பைக் கீரை, வட்டுக்காய், சுண்டங்காய், புளிச்சல் கீரை, கங்குன் கீரை, பனங்கீரை, தகரக்கீரை, பசளிக்கீரை இப்படி கண் பட்ட இடமெல்லாம் நீ நடாத, நீ தண்ணீர் வார்க்காத, நீ உரம் இடாத அனேக மரக்கறிகளும் கீரைகளும் உன் வளாகமெங்கும் நிறைந்திருந்தது.

உன் பிள்ளைகளிடம், என்ன! தோட்டத்தில் வேலை செய்து களைத்து போய் விட்டீர்களா? என்று கேட்பேன், அவர்கள் உன்னை விட அழகாகவும் அறிவாகவும் பேசுவார்கள்.

உழைப்பது தான் உற்சாகம், சும்மா இருந்து கதையளப்பது தான் சோர்வும் களைப்பும் தரும். குனிந்து நிமிர்ந்து உடலை அசைத்து செய்யும் வேலை எங்கள் குருதியை மூளைக்கு கொண்டு சென்று அதை பூத்துக்குலுங்கசெய்கின்றது.

> ஆனபடியால் தான் எங்கள் மனம் இந்த பூக்களையும், அதை தேடி வரும் குருவிகளையும் நோக்கி நாள்தோறும் ஈர்க்கின்றது. படிப்பதை இங்கே பார்க்கின்றோம், இங்கே பார்ப்பதை தான் படிக்கின்றோம்.

என்று உன் பிள்ளைகள் கூறுவார்கள். உன் கணவர் எங்கே அவரை காணவில்லையே என்று கேட்பேன், அவர் தன் வெற்றிக்கதையை தன் நண்பர்களுக்கு பகிர்வதற்கு போய்விட்டார் என்று கூறுவாய். எனக்கு புரியவில்லையே, எது வெற்றிக்கதை, ஏன் அவர் கதை சொல்ல எங்கே செல்ல வேண்டும்? என்று கேட்பேன், நீ எனக்கொரு கதை சொல்லுவாய்.

ஐயா, இன்று நாங்கள் வாழும் இந்த முன்னேற்றமான வாழ்க்கை இன்று எங்களோடு மட்டுமல்ல, எங்கள் ஊருக்கும், ஊரைத்தாண்டி வெளி கிராமங்களுக்கும் சென்று விட்டன. எப்படி உழைப்பது?, உழைக்கும் பணத்தை எப்படி சேமிப்பது?, எப்படி உணவு முறைமைகளை மாற்றிக்கொள்வது என்று எத்தனையோ வெற்றி கதைகள் எங்களிடம் உண்டு. அதை பகிர்வதற்கும், கேட்பதற்கும் ஆர்வமுள்ள சமூகமாய் நாம் மாறிவிட்டதால் வாரத்தில் ஒரு நாள் குடும்பத்தில் ஒருவர் எமது வெற்றிக்கதையை ஊருக்கு ஒருவர் வீதம் கூறிவருகின்றோம் என்று கூறுவாய்.

நான் ஆச்சரியப்படுவேன், அப்போது என் கண்களின் ஓரத்தில் ஒரு துளி நீர் கசிவதை நீ அவதானித்து, ஐயா, ஏன் கலங்குகின்றீர்கள் என்று கேட்பாய். நான் கலங்கவில்லை கனிந்துருகும் என் ஆனந்த உணர்ச்சியான ஒரு துளி இங்கே இந்த மண்ணில் சிந்தட்டும் என்று கூறி என் கண்ணீரை துடைத்து உன் நிலத்தில் விதைப்பேன்.

நான் மீண்டும் உன் வீட்டு முற்றத்தின் மரக்குற்றியில் அமர்ந்து விடுவேன். எனக்கு முன்பாக நீயும் உன் பிள்ளைகளும், உன் சுற்றத்தார் அனைவரும் அமர்ந்திருப்பீர்கள்.

அது கதிரவன் கண்மூடும் நேரம். இருள் என்னும் செல்வம் நம்மை அணைத்துக்கொள்ளும் நேரம், கொஞ்சங் கொஞ்சமாய் வானம் தன் போர்வையை நீக்கத்தொடங்க, ஆயிரம் ஆயிரம் நட்சத்திரங்கள் மின்னி மறையும் காட்சி, நாலாம் பிறை போல அன்று நிலவு மெல்லமாய் முகம் காட்டும் காட்சி, சில்வண்டு எங்கோ கதை பேசும் சத்தம், மின்மினி நம்மை தாண்டிச்செல்லும் நேரம், மெல்லமாய் தென்றல் நம்மோட விளையாடும் பொழுது நான் உன்னிடம் "எப்படி இது" என்று கேட்பேன். "இல்லை" என்று தானே என்னிடம் வந்தாய், இன்று எப்படி இந்த மகிழ்ச்சி, மனநிறைவு, நின்மதி, பரவசம் ஏதோ தெய்வம் வந்து தந்து விட்டதா என்று கேட்பேன். அந்த மெல்லிய இருட்டிலும் நிலவின் மெல்லிய ஒளியிலும் உன் முகம் மலர்வதை நான் பார்ப்பேன். உன் கண்களில் இருந்த ஒரு ஒளி என்னை நோக்கி வருவதை பார்ப்பேன். நீ பேசத்தொடங்குவாய்.

ஐயா உங்களை நான் சந்தித்த போது நீங்கள், என்னை மூடியிருந்த வறுமை என்னும் போர்வையை மெதுவாக கழைந்து விடச்செய்தீர்கள். நான் சுமந்து வந்தது "இல்லை" என்ற பாத்திரத்தை நீங்களோ அதை திறந்து அதற்குள் இருக்கின்ற பல "இருத்தல்களை" காணும்படி என் கண்களை திறந்தீர்கள்.

முதலாவது நீங்கள் என்னோடு பேசத்தொடங்கிய போது.

> இந்த உலகத்தில் நான் இருப்பதை உணர்ந்திருந்தேன். நான் உயிருடன் இருப்பதே மிகப்பெரிய வெற்றி நடப்பதற்கு கால்கள், பேசுவதற்கு வாய், சுவாசிக்க மூக்கு, குருதியை அழுத்த இதயம், சிந்திக்க மனமும் மூளையும், சுவாசிக்க காற்று, பார்ப்பதற்கு கண்கள், அதற்கு எல்லையில்லா பசுமை நிறை காட்சிகள், இப்படி பல விடயங்கள் என்னிடம் இருப்பதை உணர்ந்தேன்.

நான் சொன்னதை கேட்ட நீங்கள் மெதுவாக புன்முறுவல் செய்தீர்கள். உங்கள் முகத்தில் ஒரு ஒளி வெள்ளம் பளிச்சென படர்வதை உணர்ந்தேன்.

என் உடலுக்கள் ஓராயிரம் நோய்களோடு தான் உங்களிடம் வந்தேன். வறுமை, அது தரும் நோய் என் பாடுகள் அதிகமாகவே என்னிடம் இருந்தது. ஆனால் அதற்குரிய மருந்தும் தீர்வும் எனக்குள் இருந்ததை நான் புரிந்துகொண்டேன்.

நடக்காமல் இருப்பதே நோய்க்கான முதல் காரணி. வாயை கட்டினால் நோயை கட்டலாம் என் உதிரத்தை உடலின் நரம்புகள் அத்தனைக் குள்ளும் ஊடுருவி பாய்ச்சி விடுவதே நோய்க்கான இரண்டாவது மருந்து. நல்ல சிந்தனை நல்ல உணவு, நல்ல உழைப்பு, நேர்மையான வாழ்வு, அமைதியான நித்திரை இவை எல்லாம் எனக்குள் இருக்கும் நோய்க்கான மருந்துகள், நோய் வராமல் தடுக்கும் மருந்துகள். கொஞ்சம் வேகமாகவே நடக்கத் தொடங்கினேன், எனக்குள் மலர்ச்சியும், புதிய சக்தியையும் காணத் தொடங்கினேன், ஆழமாக மூச்சை எடுத்து என் வயிறு வரைக்கும் மூச்சைக் கொண்டு சென்று மெதுவாக மூச்சை வெளியில் விடத்தொடங்கினேன். ஆச்சரியம், என்னை மூடியிருந்த சோம்பலும் சோர்வும் கொஞ்சம் கொஞ்சமாய் விலகத்தொடங்கியது.

என்வீட்டு வாசலில் வந்து நின்றேன், நான் நிற்பதற்கு எனக்கொரு பூமி, இருக்கின்றது. அந்த பூமியில் தான் தோன்றியாக வளர்ந்து கிடந்தவைகளை, புல், பூண்டாய் நஞ்சாய் தான் இதுவரை பார்த்தேன், அப்பொழுது உங்கள் கண்களால் அவைகளைப் பார்த்தேன். உணவுக்கு ஒன்றுமில்லையே என யோசித்து எத்தனை நாள் கலங்கி இருப்பேன். என் முற்றத்தில் உணவுகளையும் காக்க வைத்து நாம் பட்டினியாக இருந்தோமே.

பசிக்காக உணவருந்தாமல்
ருசிக்காக உணவைத்தேடி
உழைத்த பணம் உடல்
நலம் எல்லாவற்றையும்
தொலைத்து காலம் முழுவதும்
ஏழை, வறியவர் என்று
வாழ்கின்றோமே என
எனக்குள் எண்ணத்தோன்றியது.

செடிகளோடும் கொடிகளோடும் கதை பேசினேன், அவைகள் எனக்காகவே வாழ்கின்றோம் என்று கதை பகிர்ந்தன. அன்றிரவு ஒரு கொஞ்ச அரிசியோடு இலைகள் பல சேர்த்து ருசியான "சூப்" செய்து குடும்பமாக அருந்தினோம், இருளுக்குள் இருள் விலகியது. காலை விடிந்த போது எங்கள் வாழ்வு விடிந்தது. "கைக்குள் செல்வம்" என்ற உங்களின் வரிகளை வாழ்க்கையின் தத்துவமாக்கினேன், பொழுதும் விடிந்தது, வாழ்வும் விடிந்தது, கொஞ்சம் கொஞ்சமாய் உழைக்கத் தொடங்கினோம் உயரத் தொடங்கினோம், இன்று உங்கள் முன் பேசும் வலிமையோடு வாழ்கின்றேன் என்று நீ பேசி முடிப்பாய்.


நீ பேசி முடித்ததும், நீல வானத்தின் அழகை ஒருமுறை நிமிர்ந்து பார்ப்பேன். அங்கு ஒட்டியிருக்கும் ஒரு நட்சத்திரம் கொஞ்சம் பெரிதாய் என் கண்களுக்குத் தெரியும் அது கிழக்கில் தோன்றி மேற்கே மெதுவாய் நடந்து செல்வதைக்கண்டு அது தான் நீ என்பேன். என்ன நான் நட்சத்திரமா? என்று நீ என்னை கேட்பாய் ஆம் இருட்டில் ஒளிரும் சுடர் நீ அனேகருக்கு நீ ஒரு வழிகாட்டி என்பேன். நீ எழுவாய், துள்ளுவாய், மகிழ்வாய், ஆனந்த களிப்பாடுவாய். அப்போது உன் கணவன் தன் வெற்றி கதை பகிர்வின் நிறைவில் வீட்டுக்குள் வருவான். என்னை கண்டதும் கையெடுத்து வணங்குவான். நான் அவன் கால்களை தொட்டு வணங்க முற்படுவேன். அவன் ஐயா நீங்களா? என் பாதத்தைத் தொடுவது என்று தடுமாறுவான் ஆனால் நான் அவன் தடைகளையும் தாண்டி அவன் பாதத்தைத் தொட்டு வணங்குவேன். உன் பிள்ளைகள் அதை ஆச்சர்யத்தோடு பார்ப்பார்கள். அவர்கள் ஆச்சர்யத்திற்கு நான் பதில் சொல்லுவேன்.

பிள்ளைகளே, எவன் ஒருவன் உழைத்து உழைப்பினால் நேர்மையாய் வாழ்ந்து இந்த இயற்கை கொடுத்த அத்தனை வளங்களையும் நேசித்து, அந்த இயற்கையோடு இணைந்து வாழ்ந்து அதனையும் வாழ்வித்து அந்த வாழ்வின் இன்பங்களை பிறர்க்கும் பகிர்ந்து வாழ்வானோ அவன் மனிதன்.அவனுக்குள் ஓராயிரம் மனிதர்களை வாழ்விக்கும் மருந்து, விருந்து இருக்கின்றது, அவன் பாதங்களை தொடுவதும், வணங்குவதும், நாம் பெற்ற பெறும் பேறு என்று சொல்வேன்.

"நீ" உன் கணவன், உன் பிள்ளைகள், உன் சுற்றத்தார் எல்லாரும் தெய்வத்தைக் காண்பது போலிருக்கிறது என்று மனதால் நினைப்பதை நான் உணர்ந்து நீங்களே தெய்வங்கள் என்பேன். நாங்களா? என்பீர்கள், ஆம் நீங்களே கோயில்கள், நீங்களே தெய்வங்கள், நீங்களே நன்மைகள், நீங்களே வரங்கள் என்று நான் கூறியதும் கிழக்கில் ஒரு மின்னல் தோன்றி மேற்கில் மறையும், அப்போது நீ சொல்வாய் நாளைக்கு மழைவரும் போலிருக்கின்றது என்று. உன் வார்த்தைகள் என்னவோ உன் முற்றத்தில் இருக்கும் செடிகளுக்கு புரிந்து விட்டது. அவை மெதுவாக ஆடியது, அந்த ஆடலினால் வந்த தென்றல் என் முகத்தை முத்தமிட்டு செல்வதை நான் உணர்ந்த பொழுது நான் அங்கிருந்து மறைந்து விடுவேன் என்று அந்த முனிவர் கதையைக்கூறி முடித்தார்.

சங்கரன் ஐயா அந்த முனிவனின் கதையைக் கேட்டு வாயடைத்துப்போனார், நீ சொன்ன அந்த கதை அந்த முனிவர் சொன்னது என்று சொல்கின்றாய், ஆனால் அது தானே நீ இப்போது வாழ்கின்ற வாழ்க்கை என்று கூறி மெதுவாக எழுந்து கடையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

என் முற்றத்தின் பூஞ்செடிகளின் இலைகளில் குடிக்க தண்ணீர் தேடிய சிட்டுக்குருவி ஒன்று என்னையே பார்த்துக் கொண்டிருந்தது. காய்ந்து போன இலைகளை நனைத்தேன். அது இலைகளில் நின்ற நீரில் குளிக்கும் காட்சியை பார்க்கும் என் கண்களுக்கு ஒரு வரமாகவே அமைந்தது.



# பட்டி

வௌவால் கூட்டத்தின் கொண்டாட்டத்தில் என் மாமரத்தின் பழமும், பிஞ்சும், பூவும் சிதைந்து கொண்டிருந்தன. இந்த இரவின் அமைதியையும் சேர்த்து சாப்பிட்ட வௌவால்களின் எச்சங்களும் மாமரத்தின் மிச்சங்களும் வீட்டு கூரைத் தகடுகளுள் பதம் பார்த்துக்கொண்டிருந்தன, பக்கத்து அறையில் படுத்திருந்த அம்மா இந்த 12 மணிக்கும் நித்திரை கொள்ள முடியவில்லையே வௌவாலின் அட்டகாசம் தாங்க முடியவில்லை என்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார், கிளிநொச்சி நகர் எத்தனையோ மனிதர்களையும், வளங்களையும், இழந்திருக்கின்றது. எத்தனையோ மனிதர்கள் துரத்தப்பட்டு விட்டார்கள்.

ஆனால் நகரத்தின் மையத்தில் பரம்பரை பரம்பரையாக இந்த வௌவால் கூட்டங்கள் மட்டும் வாழ்ந்து கொண்டு, எங்கள் வீட்டு மாமரங்களையும், இலுப்பைகளையும் குத்தகைக்கு எடுத்து கும்மாளம் போடுகின்றதே என்று நினைத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தேன். ஆயிரக்கணக்கான வௌவால்கள் என் வீட்டு வானத்தில் பறந்து கொண்டிருந்தன. என் மாமரமும், எங்கள் ஊர் மாமரங்களும் தான் இந்த வாரம் இவைகளின் குத்தகை வீடுகள், என நினைத்துக்கொண்டு முற்றத்தில் இருந்த மாமரக்குற்றியில் அமர்ந்தேன். அது ஒரு நிலா காலம், பௌர்ணமிக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்ற போதிலும், நிலவுத் தாய் தன் முகத்தை நன்றாகவே காட்டிக் கொண்டிருந்தாள். வௌவால்கள் என்ன தான் நித்திரையை குழப்பினாலும், நிலவின் அழகை இந்த நேரத்தில் இரசிப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பைத் தேடித் தந்தனவே என்று நினைத்து கொண்டு வானத்தின் அழகை இரசிக்கத் தொடங்கினேன்.

காலை விடிகின்றபோது இந்த நிலவும், வௌவால்களும் இங்கிருக்காது. ஆனால் அதன் நினைவுகளும் அவை விட்டுச் செல்லும் எச்சங்களும் இங்கே எனக்குள்ளும், என்னை சுற்றியும் சிந்தி கிடக்கத்தான் போகின்றன.

அழகான குடும்பம், இன்று நானும், அம்மாவும், இந்த பெரிய வளவில், பெரிய வீட்டில் வாழ்கின்றோம். ஒரு காலம், எங்கள் உறவுகளை தன்னோடு சேர்த்து கொண்டு போய் விட்டது. மிஞ்சியவர்கள் நாங்கள், இந்த மண்ணுக்கே உரமாகி விடவேண்டும் என்பதற்காகவே உழைக்கின்றோம். நாளை நடக்கவிருக்கும் அந்த அழகான நிகழ்வின், உரையை நிகழ்த்துவதற்கு மிகச்சரியான ஆயத்தங்களை இந்த இரவு அள்ளித்தந்திருக்கின்றது.

தூக்கத்தை தொலைத்த இரவுகள், சில நேரங்களில் மிக ஆழமான அனுபவங்களைப் பெற்றுத் தந்திருக்கின்றது. 15 வருடங்களுக்கு முன்பு, இப்படியான ஒரு இரவு, என் மாமரமும் பூப்பெய்யாத காலம், ஆனால் நான் தூக்கமின்றித் தவிக்க

என் இதயத்தில் ஆயிரம் அடி திரும்ப, திரும்ப அடித்த வார்த்தை அந்த அடிகளை நினைத்து பார்க்கின்றேன். அந்த அடிகள் கொடுத்த உரமே, இன்று நான் பூக்கும், காய்க்கும், மரமானேன். இன்று இந்த மரத்தில் ஆயிரம் குருவிகள் கூடு கட்டி, குடும்பத்தோடு வாழ்கின்றதே என்று நினைத்துகொண்டு வானத்தை பார்த்தேன், நிலவு என் தலையை தாண்டி செல்லத்தொடங்கியிருந்தது. மணி 2 மணியை தாண்டுவதை எங்கிருந்தோ கூவிய ஆட்காட்டி குருவியும் வெளிப்படுத்தியது. நாளை என் உரையின் தலைப்பு "பட்டி" என்ற நினைவுடன் படுக்கைக்குச் சென்றேன். காலை விடிகின்ற போதே ஆயிரம் நினைவுகளும் சேர்ந்தே மனதில் விடிந்திருந்தது. என் உரையை கேட்க, இன்று வரும் அத்தனை மாணவர்களுக்கும் "நானும் எனது கதையும்" அவர்களின் வாழ்க்கை சுவடுகள் ஆகப்போகின்றோம், என்ற மகிழ்ச்சியில் அம்மாவை வேகப்படுத்தினேன். 9 மணிக்கு நாம் அங்கு நிற்பது, கட்டாயம் 9.05 க்கு நிகழ்வின் தொடக்கம் என்பதில் மாற்றம் இருக்காது என்று கூறி ஊக்கப்படுத்தினேன். காலை உணவின் பின் நானும் அம்மாவும் எனது காரில் நிகழ்வின் மண்டபத்திற்கு சென்றடைந்தோம்.

வாசலில் என் படத்துடன் அம்மாவின் படமும், இணைத்து பெரிய கட்அவுட்டாக வைக்கப்பட்டிருந்தது. அந்த கட்டவுட்டில், "எதுவும் இலகுவானதும் அல்ல, எதுவும் கடினமானதுமல்ல" என்ற எனது நிறுவனத்தின் மகுட வாக்கியம் பொறிக்கப் பட்டிருந்தது.

சர்வதேச இளம் தொழிலாளர்கள் மகாநாடு என்ற அரங்கின் மேடையில் அமைக்கப்பட்டிருந்த காட்சிப்படுத்தலில், எனது படமே முதலாவதாக இருந்தது. இந் நிகழ்வில், நான் முக்கியமானவன் என்பதை வெளிப்படுத்தியிருந்தது. அரங்கு நிறைய பல்கலைக்கழக மாணவர்களும், உயர் கல்வி மாணவர்களும் பல நாடுகளில் இருந்து வருகை தந்திருந்த இளம் தொழிலதிபர்களும் கூடிவந்திருந்தார்கள்.

நிகழ்வின் தலைவர் தென்கொரியாவைச் சேர்ந்த "கிம்குவா" என் கரங்களை பிடித்து தனது உரிமையை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தி, நீங்களே! இன்று இந் நிகழ்வின் "நாயகன்", என்று கூறினார். கிளிநொச்சி நகரின் பல முக்கியஸ்தர்களும் நிகழ்வில் கூடி வந்திருந்தார்கள். சிலர் என் இளம் வயது தொடக்கம் என் முன்னேற்றத்தை அறிந்தவர்களும் வந்திருந்தார்கள். என் நிறுவனத்தை சேர்ந்த சில முக்கிய நிறைவேற்று அதிகாரிகளும் பின் வரிசையில் அமர்ந்திருந் தார்கள். காலை 9.05 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. மிக சிக்கனமாக ஆனால் மிக அழகாக ஆரம்ப நிகழ்வு ஆரம்பமானது. எனது தாயாரை மட்டும் அழைத்து அங்கேயிருந்த தீபத்தை ஏற்றும் படி கூறி மங்கல விளக்கை ஏற்றுவதில் யார் முன், யார் பின், யார் பெரியவர், யார் சிறியவர் என்ற வேறுபாட்டை எல்லாம் தகர்த்தெறிந்தார்கள், நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்கள்.

தலைவர் "கிம்குவா" தனது தலைமையுரையில், இந்த மகா நாடு குறித்து சிறப்பான ஒரு விளக்கவுரை ஆற்றினார். உலகப் பந்தில் கிளிநொச்சி நகரின் சிறப்பு, அது கடந்து வந்த பாதை, இன்று இலங்கையில், கிளிநொச்சி நகர் செலுத்தும் பொருளாதார செல்வாக்கு, உலகம் ஏன் இன்று கிளிநொச்சியை நோக்கி பார்க்கின்றது, என்பது குறித்து அழகான விளக்கம் கொடுத்தார்.

குறிப்பாக இலங்கையில், சர்வதேச தரத்திலான இளம் தொழிலதிபர்கள் அதிகமாக இருக்கும் மாவட்டமாக கிளிநொச்சி இருப்பது மகிழ்ச்சி! என்று கூறியவுடன் மிகப்பெரிய கரகோசம் எழும்பியது. அதிலும் குறிப்பாக உலகத்தின் தலை சிறந்த இளம் தொழிலதிபர் உங்கள் மாவட்டத்தின் இளம் தொழிலதிபர் "இப்போது கௌரவ மாணிக்கம் இராமச்சந்திரன் அவர்களை அன்புடன் மேடைக்கு சிறப்புரை ஆற்ற அழைக்கின்றேன்." என்று கூறியதும், அரங்கம் அதிரும்படியான கரகோசம் எழுந்தது. நான் எழுந்து அனைவருக்கும் வணக்கம் கூறி, என் தாயாரின் கால்களைத் தொட்டு வணங்கி விட்டு பேச ஆரம்பித்தேன், ஒருவரும்

எதிர்பாரா விதமாக அரங்கிற்குள் நுழைந்த ஒருவர், "இடையன் நீ ஒரு மடையன்" என்று கத்தியது எல்லாருக்கும் ஆச்சரியத்தையும், சலனத்தையும், ஏற்படுத்தியது. நான் பேசுவதற்கான எனது தொடக்கத்தை குழப்ப வேண்டுமென யாரோ செய்த சதியாக இருக்குமோ என்று யோசித்தேன். எனினும் அங்கிருந்த நிகழ்வு ஒருங்கிணைப்பாளர்கள், அவர் ஒரு மன நோயாளி என்றும் அயல் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்பால் மனநோய்க் குள்ளானவர் என்றும், அவரும், இந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்கான அனுமதிச் சீட்டுப் பெற்றே வந்திருக் கிறாரென்றும், ஒரு தொழிலதிபரை போன்ற தோற்றப்பாட்டுடன் அவர் காணப்பட்டாலும், மன நலன் குன்றியவர் என்றும், இராமச்சந்திரன் வளர்ச்சியில் அவர் அதிகமான அவதானிப்பை வைத்திருந்ததால் இவ்விதம் நடந்து கொண்டாரென்றும், ஆங்கில மொழியில் அறிவிப்பாளர் மிக தெளிவாக அறிவித்தார். எனினும், "நான் இடையன் ஒரு மடையன்" என்று அவர் சொன்ன வார்த்தைகளால், என் மனம் ஒரு கணம் சலனத்திற்கு உள்ளாகி தெளிந்தது என்றே கூறவேண்டும். நாம் உயரும் போது நம்மைப் பற்றிய அபிப்பிராயங்களும் அதேபோல் உயர்வதில்லை என்பதைப் புரிந்து கொண்டு என் உரைக்கான தலைப்பாக, " நான் ஒரு இடையன்" என்ற தலைப்பை வைத்தே பேச ஆரம்பித்தேன்.

உலக மகா சகோதரர்களே, எமது தாயகத்தின் உறவுகளே, கல்வி புலம் சார்ந்தும் பொருளாதார வளம் சார்ந்தும் இங்கு வருகைதந்துள்ள சீமான்களே, சீமாட்டிகளே, கிளிநொச்சி மண்ணின் ஆச்சிரியமான வரலாறுகளின் அனுபவங்களோடு உங்களுக்கு வாழ்த்துதல் தெரிவித்துக்கொள்கின்றேன். நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடைபெரும் இளம் தொழிலதிபர்கள் மகாநாட்டை இம்முறை கிளிநொச்சியில் நீங்கள் நடாத்துவதற்கு தீர்மானித்தமைக்கான காரணம், நானே! என இங்கு எனக்கு முன்பு வாழ்த்துரை வழங்கியவர்கள் கூறினார்கள், இலங்கையின் பொருளாதாரத்தில் இன்று கிளிநொச்சியின் பங்களிப்பு என்பது வளமும், கனமும் பெரியது, விவசாயமும், கால்நடை வளர்ப்பும், அது சார்ந்த

உற்பத்திப் பொருட்களும், இன்று உலக சந்தையின் மிக முக்கியமான வியாபார பொருளாக மாறியதன் விளைவாக, இம் மாவட்டத்தினதும், இலங்கையினதும் 10 இலட்சம் இளைஞர் யுவதிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும், தொழில் பெறுநர்களாக மாறியிருக்கிறார்கள். இந்த மிகப்பெரிய ஆச்சர்யத்தை அடைய பலரும் தம்மை அர்ப்பணித்திருக்கிறார்கள், அவர்களில் பலர் இந்த அரங்கில் இருக்கிறார்கள், இப்படியான கனவு கண்டவர்களில் மிக முக்கியமான சமூகத்தின் ஆணிவேர்கள் இங்கேயே இருக்கிறார்கள். அவர்களின் பாதங்கள் தொட்டு வணங்குகிறேன்.

இந்த மகா பொருளாதாரப் புரட்சிக்கு இந்த மாவட்டத்தினதும், எமது தமிழர் பிரதேசத்தின் அனைத்து பகுதிகளிலிருந்து பிரகாசித்து கொண்டிருக்கும் தொழிலதிபர்களுடைய பங்களிப்பு மகத்துவமானது எனக்கூறி, எனக்கு கொடுத்திருக்கும் நேரத்திற்குள்ளே எனது அனுபவ பகிர்வை இந்த இடத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டியிருப்பதால் எனது கதையினை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கையில் நடந்து முடிந்த இனப்போர் முடிவுற்ற போது, என்னைப் போன்ற பலர் இம் மண்ணில் பிறக்க வேண்டியிருந்தது. நான் என் தாயின் கருவில் இருக்கும் போதே என் தந்தை நடைபெற்ற யுத்தத்தால் இறந்திருந்தார். இளவயதுத் திருமணத்தால் என் தாயாரின் பதினெட்டாவது வயதில் நான் பிறந்தேன். நடந்து முடிந்த யுத்தம், என் அப்பாவை மட்டுமல்ல என் அம்மாவின் அப்பா, என் அப்பாவின் பல உறவுகளின் உயிர்களையும் குடித்திருந்தது. நான் வவுனியாவில் அப்போது அமைக்கப்பட்டிருந்த அகதிகள் முகாமில் பிறந்தபடியால், என் தாயார் தன் வனவாசத்தில் நான் பிறந்ததாக நினைத்து எனக்கு இராமச்சந்திரன் என பெயர் வைத்தார். எனது இரண்டாவது வயதில் என் தாயாருடனும் எனது அம்மம்மாவுடனும் எனது தாயாரின் சொந்த இடமான கிளிநொச்சிக்கு நாம் மீளக்குடியமர்ந்தோம். அந்த நாட்களைப் பற்றி எனது தாயார் எப்போதும் எனக்கு ஞாபகப்படுத்துவார்.

"வானம் பார்த்த கூரை
வற்றிப்போன வயிறு
காற்றில் ஆடும் கந்தை
கன்னத்தை நனைக்கும் கண்ணீர்
இத்தனைக்கு நடுவிலும்
மலர்ந்தாடிய கனவுகள்....."

என்று கூறுவார், மருத்துவராக வேண்டும் என்ற கனவோடு படித்த என் தாய் கருகிய பூவாகிப் போனார் யுத்தக் காற்றினால், ஆனால், அவரது கனவுக்கான குறியீடாக அவர் என்னை பார்த்தபடியால், நான் ஐந்து வயதாக இருக்கும் போதே வைத்தியராக வரவேண்டும் என்று சொல்லிச் சொல்லியே அநேக கதை சொல்வார், அந்நாட்களில், எமது மாவட்டத்தில் இருந்து படித்து புகழ் பூத்த வைத்தியராக இருந்த ஐயா சத்தியமூர்த்தி அவர்களின் படம் ஒன்று வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. அவரைப்போல் நீயும் சிறந்த வைத்தியராக வர வேண்டுமென என் தாய் எப்போதும் சொல்வார்.

இந்த கனவுகளோடே எனது தாயார் என்னை பாடசாலையில் சேர்ப்பதற்காக எனது கிராமத்திலிருந்து மிகத் தொலைவில் இருக்கும் நகர் பாடசாலை ஒன்றில் அனுமதித்தார். அதிகாலையில் எழுந்து, தானே சமைத்து, என்னை குளிப்பாட்டி, உடுப்பு உடுத்தி தனது சைக்கிளில் என்னை பாடசாலைக்கு கொண்டு வந்து விடுவார்.

என்னை வளர்ப்பதற்கும், என் அம்மாவின் தாயாரை பராமரிப்பதற்கும், என் அம்மா ஒரு சிறுகைத்தொழிலகம் ஒன்றில் பணியாற்றினார். அந்த வருமானத்தில் தான், மிகவும் அடக்கமான, சிக்கனமான வாழ்க்கை நடைபெற்றது. எனது தாயார் எதிர்பார்த்ததைப் போல் நான் கெட்டிக்காரனாக இல்லாதிருப்பது, எனது வருடாந்த தேர்ச்சி அறிக்கையில் வெளிப்பட்டதை பார்த்த எனது அம்மா, பல தடவைகள் என்னை கண்டித்துள்ளார்.

தானும் தனக்குள்ளே நொந்து அழுதுள்ளார், ஆனால், அவை எல்லாம். எனக்கு பெரிதான மன அழுத்தத்தை தரவில்லை.

காலம் உருண்டோடியது. நான் பலருக்கு நண்பனானேன், எனக்கும் பல நண்பர்கள் இருந்தார்கள். எட்டாம் வகுப்பின் தொடக்கத்திலேயே தனியாக நண்பர்களுடன் இணைந்து பாடசாலைக்குச் செல்லத் தொடங்கினேன். பாடசாலை, ரியூசன், வீட்டில் பாடம் என எனது தாயார் பல குத்துக் கரணங்களை அடித்து எனக்கு கல்வி புகட்டினார். என்றாலும் எனது புள்ளிகளில் மாற்றமில்லை. இருந்தாலும் தாயார் தனது முயற்சியை விடவில்லை.

எனது தாயாரின் விதவை அடையாளத்திற்காய் ஒரு வாழ்வாதாரம் ஒன்று ஒரு நிறுவனத்தால் ஒரு ஆடும், குட்டியுமாக வழங்கப்பட்டது. எனது ஓய்வு நேரங்களில் அவைகளை மேய்ப்பதில் கவனத்தை செலுத்தினேன். காலம், செல்லச் செல்ல, ஆடுகளை மேய்ப்பது எனது மகிழ்ச்சிக்கான களமானது. ஓய்வு நேரங்களை நானே உருவாக்கி ஆடுகளை மேய்ப்பதும், நண்பர்களையும் ஆடு மேய்க்க அழைப்பதுமான செயற்பாடுகளை செய்யத் தொடங்கினேன். படிக்கும் காலத்தில், நேரத்தில் ஆடுகளை மேய்க்கும் பழக்கத்தை எனது நண்பர்களின் பெற்றோர் அறிந்து என்னோடு பழகுவதை குறைத்து கொள்ளுமாறு கூறியதினால் நட்பு வட்டம் சுருங்கியது. எனது தாயார் எனது ஆட்டுப் பைத்தியத்தை கண்டு நான் அருமையாக வளர்த்த அந்த இரண்டு ஆடுகளையும் விற்பதற்கு விலை பேசினார், நான் அவரின் கால்களில் விழுந்து அழுது மன்றாடித்தான் அதை தடுத்து நிறுத்தினேன். என்று கூறியபோது எனது தாயார் முன்வரிசையில் அமர்ந்திருந்த வண்ணம் என்னை ஆழமாக உற்று நோக்கினார். ஏனென்றால் அது என் வாழ்வின் உயரத்திற்கு விதைபோட்ட நாளாகும்.

அது பாடசாலை பரீட்சை காலம், காலையில் எழுந்து பரீட்சைக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்த போது, ஆடுகளில் ஒன்று குட்டி போடுவதற்கான நிலையிலிருப்பதைக் கண்ட நான் அந்த மகப்பேற்றை முடித்து விட்டு போக முயற்சித்தேன்.

பாடசாலைக்கு செல்லும் போது பரீட்சை தொடங்கி அரை மணித்தியாலம் ஆகியிருந்தது. அது 10ஆம் வகுப்பின் இறுதித் தவணைப் பரீட்சை. வகுப்பாசிரியர் என் மீது மிகவும் பரிவு கொண்டவர். என் தாயாரின் உழைப்பு, கனவுகளை உணர்ந்தவர். எனவே பிந்தி வருவதை அவதானித்து, ஏன் என்னவென்று கேட்காமலே எட்டி என் கன்னத்தில் அறைந்துவிட்டு, எங்கே ரோட்டில மேய்ந்து விட்டு வருகிறாய் என்று ஏசத்தொடங்கினார். நான் ஆடு குட்டி போட்டது சேர், அது தான் கொஞ்சம் பிந்திட்டுது என்ற கூறினேன். "ஓ" அப்ப நீ இன்னும் ஆடு மேய்க்கிறத விடயில்ல, பேசாம ஆடு மேய்க்கிற வேலையப் பாரன், பிறகு ஏன் உனக்கு படிப்பு. "ஆடு மேய்க்கிற புத்தி இருந்தா" உனக்கு எங்க படிப்பு வர போகின்றது என்று கொஞ்சம் கடினமாகவே ஏசிவிட்டார். என்றாலும் பரீட்சை எழுத அனுமதித்தார்.

அன்று நான் வீட்டுக்கு வரும் போது "ஆடு மேய்க்கும் புத்தி" என்றால் என்ன, எங்களோடு வாழும் உயிர்களை நேசிப்பது அவைகளை வாழ வைப்பது என்ன ஒரு குறைவான புத்தியா என்று யோசித்தவண்ணமே வந்தேன்.

காலம் உருண்டோடியது, ஒரு தாய் ஒரு குட்டியுடன் ஆரம்பமாகிய என் ஆடு வளர்ப்பில் 10 ஆடுகள், ஒரு சிறிய ஆட்டுக்கூடமும் அமைத்திருந்தோம், முதல் குட்டியாய் வந்த கடாவை விற்று வந்த பணத்தில் ஒரு ஆட்டு பட்டியை அமைத்திருந்தோம்.

எனது தாயாருக்கும் பாடசாலை சமூகத்திற்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் எனது O/L பெறுபேறுகள் சிறப்பாக அமைந்திருந்தது. எனவே தாயார் என்னை வற்புறுத்தவே A/L உயிரியல் பாடத்தை தெரிவு செய்து படித்தேன்.

எனது தாயார் நான் மருத்துவராக வர வேண்டும் என்பதில் குறியாக இருந்தபடியால் இரவு பகலாக என்னைப் படிக்கும்படி கூறினார். என் படிப்பும் உயர்ந்தது, என் ஆடு வளர்ப்பும் பெருகியது. எனது வளாகத்தில் 20 ஆடுகள் கூட்டமாக இருந்தது.

A/L பரீட்சை முடிந்த விடுமுறை காலத்தில் ஆங்கிலம் பேசுவதற்கான பல வகுப்புக்களை எனது தாயார் ஒழுங்குபடுத்தியிருந்தார், எனினும் நான் ஆட்டுப்பட்டியை விரிவு படுத்துவது, ஆட்டு எரு, உரம் தயாரிப்பதில் எனது கவனத்தை செலுத்தினேன்.

அந்நாட்களில், ஆனையிறவு பகுதிகளில் கூட்டமாக ஆடு மேய்க்கும் தொழில் செய்பவர்களை நான் யாழ்ப்பாணம் போய் வரும் போது கண்டிருந்தபடியால் அவர்களை சந்தித்து "ஆடு வளர்க்கும் புத்தி" என்ன என்பதை அறிய ஆசைப்பட்டேன். நானும் நண்பன் ரவியும் சைக்கிளிலே சென்று கடைசியாக அவர்களோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்து.

முதலில் தயங்கினாலும் பின்பு சிறிது சிறிதாக எனக்கும் அவர்களுக்கும் நல்லுறவு ஏற்பட்டது. காலப்போக்கில் நான் அவர்களோடு இணைந்து ஆடுகளை மேய்க்க நேரத்தைச் செலவளிக்கத் தொடங்கினேன். இதை அறிந்த எனது தாயார் ஆட்டுப்பட்டியை கூண்டோடு விற்பதற்குரிய விலைபேசி விட்டார். ஒரு நாள் காலை என் வீட்டு வாசலில் ஒரு டிப்பர் வாகனம் வந்து நின்றது. புத்தளத்தில் இருந்து ஒரு முஸ்லீம் நண்பரும், உள்ளூர் தரகர் ஒருவரும் வந்து ஆடுகளை தூக்கி நிறை பார்க்க தொடங்கினார்கள் நான் அதிர்ச்சியடைந்தேன். அம்மாவோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டேன். இறுதியில் வீட்டில் மிகப்பெரிய சண்டையாகியது. எனது அம்மாவின் தாயார் இந்தச் சண்டையில் என் சார்பாக தனது மகளுடன் வாதாடினார். இறுதியில் ஆடு விற்கும் படலத்தை எனது தாயார் கைவிட்டார். ஆனால் நான் ஆடு மேய்க்கும் ஆக்களோடு தொடர்பு வைக்க மாட்டேன் என்ற வாக்குறுதியுடனே அந்த தீர்மானத்தை எடுத்திருந்தார்.

அந்த நாட்களில் மாவட்ட மட்டத்தில் நடந்த ஒரு கட்டுரைப் போட்டியில் "ஆடு மேய்க்கும் கலை" என்ற எனது கட்டுரைக்கு முதலாவது இடம் கிடைத்தது என்றவுடன் அரங்கம் நிறைந்த கரகோசம் எழுந்தது.

அந்தக் கட்டுரையில் ஆடு மேய்ப்பது ஒரு தொழில் என்ற நிலைக்கு அப்பால் அது ஒரு கலை, திறன், ஆடுகளுக்கு பேர் வைப்பது, தலைமை ஆடுகளை முன்நிறுத்தி நடத்துவது, எச்சரிக்கை ஒலிகளை அறிந்திருக்கச் செய்வது, குட்டித்தாச்சி ஆடு பராமரிப்பு, ஆட்டுக் குட்டி ஈனல் பராமரிப்பு. குட்டி பராமரிப்பு, இனச்சேர்க்கை செய்வது, பால் எடுப்பது, இப்படி பல திறன் சார்ந்த அறிவு இந்த கலையில் அடங்கியிருக்கின்றது, இதை தெழிலாக செய்பவர்களின், மனப்பாங்கு, அவர்களின் உள மகிழ்ச்சி குறித்து எனது கட்டுரை விபரித்து, இதை ஒரு கலையாகச் செய்யும் பல கலைஞர்கள் நம் ஊர்களில் இருக்கிறார்கள், இதை ஒரு பெரும் தொழிலாக செய்யும் தொழிலாளர்கள் இந்த மண்ணில் உருவானால், நமது வீட்டு பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்று எழுதியிருந்தேன், அதன் பரிசளிப்பு நிகழ்வில், கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய பொருளாதார பேராசிரியர், எனது கட்டுரையை மையமாக வைத்து பேசினார். பேச்சின் நிறைவில், ஆடு வளர்ப்புக்கான, சிறந்த புவியியல் பிரதேசம் வட கிழக்கு மாகாணங்கள், ஆட்டுப் பாலுக்கான சந்தை உலக அளவில் வெறுமையாக கிடக்கின்றது. அதை நிரப்புவோர் ஒரு சிலரே என்றார். அவரின் பேச்சின் நிறைவில் இராமச்சந்திரன் போன்ற இந்த கட்டுரையாளர்கள், ஏன் ஆடு வளர்ப்பு பொருளாதாரத்தை மேம்படுத்துவது குறித்து சிந்திக்கக் கூடாது என்று பேசி நிறைவு செய்தார்.

நான், அந்தக் கூட்டத்தில் இருந்து வெளியே வந்த போது, எனது அம்மா, தொலைபேசியிலே, இன்றிரவு A/L ரிசல்ற் வரப்போகுதாம் என்ற செய்தியை மகிழ்ச்சியோடு கூறினார், எனினும், நான் பேராசிரியரின் தொலைபேசி இலக்கத்தை கூட்டத்தினை ஒழுங்குபடுத்தியவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு விடைபெற்றேன்.

இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. பரீட்சை பெறுபேறுக்காக அல்ல, பேராசிரியரின் உரை நமது மாவட்டத்தின், தாயகத்தின் உற்பத்தி பொருளாதாரம் குறித்த எனது தேடல் மனதில் ஆயிரம் ஆயிரம் அலைகளை எழச்செய்தது.

இரவு 12 மணி A/L பரீட்சை ரிசல்ற் வெளிவந்தது. தூக்கத்தில் இருந்த என்னை எழுப்பிய அம்மா என்னை எழுப்பி கட்டிபிடித்து அழத்தொடங்கினார். பக்கத்து அறையில் படுத்திருந்த அம்மம்மா ஏனம்மா அழுற, அவனுக்கு ரிசல்ற் சரியில்ல என்றா விடு, அவனின்ர விருப்பப்படி ஆடு மேய்ச்சு பிழைச்சு கொள்ளட்டும் என்று கூற, இல்ல அம்மா, சந்திரன் தான் நமது மாவட்டத்தில் முதல் மாணவன், மருத்துவப் படிப்புக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றான் என்று கூறிய போது என் தலையில் இடி விழுந்தது போலிருந்தது, எழுந்து அம்மாவின் கரங்களில் இருந்த போனை வாங்கி பார்த்தேன் ரிசல்ற் உறுதியானது. எல்லாரும் இரவிரவாக வாழ்த்தத் தொடங்கினார்கள், அம்மா இரவோடு இரவாக புத்தூர் நாகதம்பிரானுக்கு வைத்த நேத்திக்கடன் நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்களை செய்யத்தொடங்கினார். சேவல் கூவும் நேரமது, நிலா வெளிச்சமும் ஆட்டுப்பட்டியில் போட்டிருந்த லைட் வெளிச்சமும், பகல் போலிருந்தது. யன்னல் வழியாக என் ஆட்டு பட்டியையும் அதில் அமைதியாக படுத்திருந்த ஆடுகளையும் நோக்கினேன்.

அந்த அமைதி ஒரு தெளிவான தீர்மானத்தை என் மனதில் ஏற்படுத்தியது. அது தான் காலையில் முதல்வேலையாக பேராசிரியரை சந்திக்கச் செல்வது. காலை விடிந்தவுடன், வீடு நிறைய ஆக்கள் வாழ்த்துவதும், புகழ்வதும், பாடசாலை, அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் வாழ்த்துக் கூறிக்கொண்டேயிருந்தார்கள், யாழ்பாணத்தில் ஒரு அலுவல் இருக்கின்றது என்று கூறி விட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டேன். அப்போது யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் போற்றுதற்குரிய அந்த பேராசிரியர் என்னை சந்திப்பதற்கு அரைமணித்தியாலம் நேரம் ஒதுக்கியிருந்தது என்பது, மிகப்பெரிய விடயமாகவே இருந்தது. அரை மணித்தியாலத்தில், 200 ஏக்கர், நிலம், அதன் அமைவிடம், அதன் சூழலியல் தன்மை, அதன் செயற்திட்டத்திற்கான இலங்கை மத்திய வங்கியின் வட்டியில்லாத கடன், அந்த கடனுக்கு இணையான, "USAID" நிறுவனத்தின் நன்கொடை, கால்நடைத் திணைக்களத்தின் வழிகாட்டல், என அனைத்தையும் ஒரு செயற்றிட்டமாக எனக்கு

முன் வைத்து, என்னை ஊக்கப்படுத்தி விட்டு, மேற்குறித்த விடயங்களை தான் ஒழுங்குபடுத்திய பின்பு என்னோடு தொடர்பு கொள்வதாகக் கூறிய பேராசிரியர் விடைபெறும் நேரம், தம்பி இப்ப என்ன செய்யிறியள் என்று கேட்டார், ஆடு மேய்க்கின்றேன் என்று கூறி விடைபெற்றேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து வசுவில் பயணமானேன். வேகமாக புறப்பட்ட வசு எனது கனவுகளுக்குத் தடையில்லை என்றது போல் அதிகமான சனக்கூட்டமில்லை இருபதாயிரம் ஆடுகளை வளர்க்க வேண்டும், 5000 பேருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற கனவுகள் ஓடியது. இடையில் சாவகச்சேரியை கடக்கும் போது தொலைபேசியில் அழைப்பு வந்தது. தம்பி உம்மட படம் பேப்பரில வந்திருக்கு நீரோ? அது பேராசிரியரின் குரல், நான் அதிர்ந்து போனேன். கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மருத்துவ துறைக்கு முதலாவது மாணவனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதில் கிடக்குது, நீர் தானே அது என்று கேட்டார், ஆம் என்று பதிலுரைத்தேன். என்ன தம்பி ஆடு மேய்க்கிறன் என்டு சொல்லிட்டு போராய். ஆடு தான் மேய்க்கப்போரன் சேர், நான் வைத்தியனானால் நோயாளிகளைக் குணப்படுத்தலாம். நான் ஆடு மேய்த்தால் நாட்டையே ஏன், உலகையே குணப்படுத்தலாம் என்றேன். வசுவின் வேகத்திற்கு நான் கூறியது இவருக்கு சரியா விளங்கயில்லை ஆனால் எனக்கு சரியா விளங்கியது நான் என்ன செய்யப் போகின்றேன் என்று.

வீட்டுக்கு வந்த நான், அம்மா நான் பல்கலைக்கழகம் போனாலும் உங்களுக்கு ஒரு தொழில் உருவாக்கித் தந்திட்டுப் போகப்போகின்றேன், ஒரு பெரிய ஆட்டுப்பண்ணை அமைப்போம்.

ஒரு வருடம் ஆகும் கம்பசுக்கு அவங்க கூப்பிட என்று கூறிவிட்டு, எனது முயற்சிகளை தொடங்கினேன், அம்மாவுக்குத் தெரியாது எனது செயற்றிட்டத்தின் பரப்பளவு, எனினும் அவர் என் விருப்பத்தை அங்கீகரித்தார்.

ஆறு மாதங்களில் அனைத்து விடயங்களும் பூர்த்தி செய்யப்பட்டு இரணைமடுவுக்கு கிழக்கு புறமாக இருக்கும் காடும் காடு சார்ந்த புல்தரையும் உள்ளடங்க 200 ஏக்கர் நிலப்பரப்பை 100 வருடங்கள் குத்தகைக்கு ஒப்பந்தமாகியது. பேராசிரியர் வழிகாட்டலும் எனது ஆர்வமும் இணைந்து எட்டாவது மாதத்தில் "பட்டி" "PATTI" என்ற எனது ஆட்டுப் பண்ணையை ஆரம்பித்தேன், தொடங்கும் போதே ஆயிரம் அடுகள், 11 பணியாளர்கள் என்று தொடங்கப்பட்டது.

"பட்டி" ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தில் 1300 ஆடுகளாக பெருகியது. அம்மா அதன் பிரதான முகாமையாளராக இருந்தார். இந்த மாதிரி ஆட்டுப்பண்ணையை பார்வையிட உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் பலர் வந்தார்கள். அப்போதுதான் இங்கிலாந்தில் "செம்மறியாட்டு வளர்ப்பும், பொருளாதார மேம்பாடும்" என்ற கருத்தரங்கிலும் ஆட்டுப்பால் நெய் குறித்த சிங்கப்பூர் கருத்தரங்கிலும் கலந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தது. அந்த இரண்டு கருத்தரங்கும் நிறைவு பெறும்போது மிகப்பெரிய தொழில் வல்லுனர்கள், முதலீடுகள் குறித்தும், நவீன இயந்திரங்கள், கட்டிடங்கள் குறித்த ஒப்பந்தங்களையும் கையெழுத்திட்டு நாடு திரும்பினேன். வீட்டுக்கு வந்தபோது பல்கலைக்கழகத்திற்கான அழைப்பு வந்திருந்தது. அம்மா அதை என்னிடம் கொடுத்து நீ இதை இன்னுமொருவருக்கான சந்தர்ப்பமாக மாற்றிவிடு, இப்போது நம்மட பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அனைவரையும் பங்குதாரர்களாக மாற்றி ஏழைகளின் பங்கு நிறுவனமாக நீ "பட்டியை" மாற்றினால் அது இந்த உலகத்திற்கு செய்யும் மிகப்பெரிய தொண்டு என்று அவர் என்னிடம் கூறினார். பெரு மகிழ்ச்சி அம்மாவின் சம்மதத்துடன் பட்டியை விரிவுபடுத்தினேன். பட்டி ஆரம்பிக்கப்பட்டு முதல் 10 வருடங்களில் 20 ஆயிரம் ஆடுகள் "பட்டி" பண்ணையிலும், 50 ஆயிரம் ஆடுகள் வீட்டுப் பண்ணைகளிலும் நாடு முழுவதற்குமான பங்குதாரர்கள் இன, மொழி வேறுபாடின்றி உருவாக்கினேன். பட்டியின் பத்தாவது வருடத்தில் நேரடி, மறைமுகமாக பணியாளர்கள் 5000 பேர் பணியாற்றினார்கள். மேலும் "PATTI Foundation" ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சியிலிருந்து உலகம்

முழுவதற்குமான களப் பயிற்சி மற்றும் தொண்டு விடயங்கள் முன்னெடுக் கப்படுகின்றன. தற்போது 15ஆவது வருடத்தை நிறைவு செய்யும் நேரத்தில 7000 தொழில் பங்குதாரர்களும், ஆட்டு நெய் மற்றும் பட்டி இறைச்சி உலகளாவிய பெறுமதி கொண்ட விற்பனைப் பொருளாக மாறி, பட்டி தோல் பொருட்கள் உற்பத்தி பொருளாதார வல்லரசுகளின் உற்பத்தியை தாண்டி செல்கின்றது.

என்று நான் கூறிய போது அரங்கத்தில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து நின்று கரகோசம் செய்தார்கள். அந்தக் கூட்டத்திற்குள் நான் பேச எழுந்து நின்ற போது என்னைப் பார்த்து, இடையன் நீ ஒரு மடையன் என்றவரும் கரகோசித்தார், அப்போது தான் எனக்கு தெரிந்தது அவர் ஒரு மன நோயாளி அல்ல மன நோயாளி போல் நடித்தார் என்பது.

சில மனிதர்கள் நம்மை செதுக்குவதற்கு
இவ்வுலகில் படைக்கப்பட்ட உளிகள்
அவர்கள் இல்லாவிட்டால்
நாம் சிற்பமாக முடியாது என்பது உண்மை.

என்ற பொன் மொழியுடன் எனது உரையை நிறைவு செய்தேன். தொடர்ந்து "நவீன உலகில் தமிழரின் பொருளாதார சக்தி" என்ற தலைப்பில் நான் ஆங்கிலத்தில் எழுதிய நூல் வெளியிடப்பட்டது. அந்நூல் ஈழத்தமிழரின் உலகிற்கான பொருளாதார பங்களிப்பு குறித்து பேசுகின்றது என்று கூறி மகா நாட்டின் தலைவர் "கிம்குவா" வெளியிட்டார். தொடர்ந்து பொருளாதார மகாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது. மகா நாட்டின் மூன்று நாட்களும் "பட்டி" பிரதான பேசு பொருளாக இருந்தது. இவ்வளவு உயர்ந்தும் நானும் எனது அம்மாவும் இன்னும் இந்திய அரசாங்கத்தால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கட்டித்தந்த வீட்டில் தான் குடியிருக்கின்றோம், இரவில் கிளிநொச்சியில் வெளவால்களின் எச்சங்கள் நித்திரையை குழப்புகின்றது என்ற கதை வீட்டுக்கு வந்த சர்வதேச விருந்தினர்களுக்கு சிறந்த விருந்தாகவிருந்தது.



# நாணயம்

சம்பளமில்லாத உத்தியோகத்திற்கு, இன்றுடன் இருபத்தைந்து வருடங்கள் முடிவடைகின்றது. ஏதோ நேற்றுத் தொடங்கி இன்று முடிந்த நிகழ்வுகள் போல் எல்லாம் ஓடி முடிவடைந்து விட்டது, என்று நினைத்து கொண்டு, தலைமாட்டில் வைத்திருந்த போனை எடுத்து நேரத்தை பார்த்தேன் அதிகாலை 4.30 மணியாகின்றது, இரவு 12 மணியிலிருந்தே பலரும் போன் எடுத்து, வாழ்த்தினார்கள். இனி நான் வழமையாக எழும்பும் நேரம் என்றதால் எழும்புவோம் என நினைக்க, விறாந்தையில் படுத்திருந்த மகன் கமலக்கண்ணன், "கண்ணன்" ஏதோ, ஐயோ, ஐயோ பிடிக்காதேயுங்கோ. அடிக்காதேயுங்கோ வாய் புலம்பினான், டேய், என்னடா இந்த காலையில வாய்புலம்பல் என்று சத்தம் போட்டு விட்டு படுக்கையை விட்டு எழுந்து, வேளைக்கு வெளிக்கிடுகிற அலுவல்களை பார்த்தேன்.

---

சாமி

**வண. T. S. யோசுவா**

6 மணிக்கு வசு எடுத்தால் தான், போய்ச் சேர 10 மணியாகும் பிறகு கூட்டத்தை முடித்து கொண்டு திரும்ப வேண்டும், இன்றைய நாள் முழுவதும் இப்படியே போக போகிறது, கண்ணன் நீ வேலைக்கு போகைக்குள்ள, சந்தனம் தாத்தாவ கூட்டிக்கொண்டு வந்து விட்டுட்டு போ என்று வெளிக்கிட்டேன், படலையை சாத்துகின்ற போதுதான் ஞாபகம் வந்தது. என்னத்திற்கு கண்ணன் வாய் புலம்பினவன், என்ன கனவு கண்டவன் என்று கேட்பம் என்று யோசித்து விட்டு, கண்ணனை கூப்பிட்டேன் அவன் கிணற்றடியில் நின்றதால் அங்கேயே சென்று என்ன கனவு கண்டு வாய் புலம்பின நீ என்று கேட்டேன்,

அம்மா பயங்கர கனவு நீங்க போயிட்டு வாங்கோ பின்னேரம் சொல்லுறன் என்றான், இல்லடா கண்ணா சொல்லு கேட்டிட்டு போவோம், என்றேன், அம்மா நீ கேட்டால், பிறகு யோசித்து கொண்டு ரோட்டில போவே வந்த பிறகு சொல்லுறன், என்று சொன்னான், இல்ல, நீ இப்ப எனக்கு சொல்லத்தான் வேண்டுமென்று நெருக்க எனக்கு வேலைக்கு நேரமாச்சு அம்மா, நீ போயிட்டு வா, நான் பின்னேரம் சொல்றன், தம்பி நீ சொல்லாட்டி நான் இன்றைக்கு கூட்டத்திற்கு போறதில்லை. என்று சொல்ல, இது என்னடா கரைச்சலா போச்சி என்று சொல்லத்தொடங்கினான்.

பொலிசுக்காரர் உன்னை கட்டி வைச்சு அடிக்கிறாங்கள், உண்மைய சொல்ல, சொல்லி, என்னவோ, காசு காணயில்லையாம், நீ கணக்கு காட்டயில்லயாம் என்று யாரோ வழக்கு வைச்சதால, நீ சிறைக்குள்ள இருக்கிற மாதிரி கனவு கண்டனான். நானும் சந்தனம் தாத்தாவும் தான் உனக்கு ஆதரவா கதைக்கிறம், மற்ற ஊர் சனம் எல்லாம், "கவிதா" கள்ளி, காசு சுருட்டிப் போட்டாள் என்று திட்டின மாதிரி கனவு கண்டனான் என்றான், எனக்கு கை, கால் எல்லாம் நடுங்கிற மாதிரியா கிடக்கு, உடம்பும் வேர்த்துக் கொண்டு வாற மாதிரி கிடக்கு, ஒன்றையும் வெளிய காட்டாம, ஓ நீ ஏதோ யோசிச்சு கொண்டு படுத்திருப்ப அது தான் அப்படி கண்டநீயாக்கும் என்று கூறி விட்டு நான் போயிட்டு வாறன் என்று சொல்லிப் போட்டு நேர சந்தனம் மாமா வீட்டுக்குப் போயிட்டு போவோம் என்று வீட்டை விட்டு வெளிக்கிட்டன்.

மூளையே கலங்கின மாதிரியா கிடக்கு, இன்றைக்கு 25 வருசமா இந்த "நாணயம்" சங்கத்தில, தலைவியா, செயலாளராக, பொருளாளராக இப்படி பதவி வகித்து இன்றுடன், எல்லா பொறுப்பையும் கூட்டத்தில கொடுக்கபோற நேரத்தில, இப்படியொரு கனவு, ஏன் கண்ணனுக்கு வந்திச்சு, எனக்கு கனவில் அவ்வளவு நம்பிக்கையும் இல்ல, ஆனாலும் "கனவு பற்றிய இரகசியங்கள்" என்ற புத்தகத்தை கிட்டடியில வாசிச்சபிறகு, எனக்கு கொஞ்சம் அதில நம்பிக்கை வரத் தொடங்கியிருச்சு, என்று நினைச்சுக் கொண்டு, சந்தனம் மாமாவின் படலையை தட்டினேன். சத்தத்த காணயில்ல. அவரும் பாவம், எனக்கும் கண்ணனுக்கும் இருக்கிற ஒரே சொந்தம் அவருதான், 77 வயசிலேயும் எங்கட இன்ப துன்பம் எல்லாத்திலும் அவர் தான் எங்கட ஆறுதல் அம்மாண்ட கடைசித் தம்பி, அவர் மட்டும் தான் இப்ப மிஞ்சி இருக்கிறார், அவர் நாட்டுக்காக எத்தனையோ தியாகங்களை செய்த ஒருவர், இப்ப நாங்கள் தான் அவருக்கு ஆறுதல், கலியாணம், பிள்ளை குட்டி என்று ஒன்றும் இல்ல, எனக்காகவும், கண்ணனுக்காகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். என்று நினைத்துக்கொண்டு திரும்பவும் படலையை தட்டினேன். என்னம்மா காலையிலேயே வந்து நிற்கிற என்று கூறிக்கொண்டு மெதுவாக படலயடிக்கு வந்தார், மாமா கதவை திறக்க தேவையில்லை, ஒரு கதை கேட்க வந்தனான். கண்ணன் ஒரு கனவு கண்டு வாய் புலம்பினவன், அது தான் அதற்கு ஒருக்கா விளக்கம் சொல்லுவீங்களா, என்று கேட்டன்.

என்னவாம் கண்டவன், உள்ளுக்கு வரப்போறியே, என்று படலைய திறக்க வெளிக்கிட்டார், நான் சொன்னன், படலைய திறக்கத் தேவையில்ல, எனக்கு விளக்கத்த சொல்லுங்கோ, என்று கனவ சொன்னன், கொஞ்சம் நேரம் யோசிச்சு போட்டு, எங்க போர இப்ப என்று கேட்டார், அது தான் இன்றைக்கு கடைசி கூட்டம், எல்லா பொறுப்பையும் கொடுத்திட்டு வரப்போரன். புது நிர்வாகம் இன்றைக்கு பொறுப்பேற்க இருக்கினம், அது தான் போக முன்னுக்கு, இப்படி ஒரு கனவு பயமா கிடக்குது மாமா, என்று சொல்ல.

சிரிச்சுக் கொண்டு, போயிட்டு வா "கவிதா" எல்லாம் நல்ல படியா நடக்கும், நம்ம தில்லையம்பதி நடராசனை நினைச்சுக் கொண்டு போயிட்டு உன்ர வேலைய முடிச்ச போட்டு வா. என்று கூறினார்.

கொஞ்சம் மனசுக்கும் ஆறுதலா கிடந்திச்சு என்றாலும், இன்னும் நெஞ்சு படபடப்பு நிற்கயில்ல, நேர வசுரான்டுக்க வந்து நிற்க வசுவும் வந்தது ஒரு சனமும் வசுவிலேயும் இல்ல என்று மனசெல்லாம் குழம்பிப் போச்சே என்ன செய்றது. ஏன் இப்படி ஒரு கெட்ட கனவு கண்ணனுக்கு வந்திச்சு, என்ற நினைவோடு அப்படியே வசுவில் அயர்ந்து விட்டேன்.

கொஞ்சம் தூரம் போக வசு நிறைய சனம், அப்பதான் கொண்டெக்டர் டிக்கட் டிக்கட் என்றார். டவுனுக்கு ஒரு டிக்கட் என்றேன். உங்கட மகன் எடுத்துப்போட்டார். என்று சொல்ல பின்னுக்கு திரும்பி பார்த்தேன் கண்ணனும் வசுவுக்குள் இருக்கிறான், ஏன் இவன் வேலைக்கு போகாம டவுனுக்கு வாரான் என்று நினைச்சு கொண்டிருக்க, பக்கத்து சீட்டில இருந்த ஒரு அம்மா, அழுகிற மாதிரி கிடந்தது, கொஞ்ச நேரத்தில கொஞ்சம் பெரிசா அழத்தொடங்கிட்டா, ஏனம்மா அழுறியள், என்னவும் உடம்புக்கு செய்யுதே என்று கேட்க, ஐயோ என்ற மகள் போயிட்டாளே. நான் என்ன செய்யபோறன், என்று அழத்தொடங்கிட்டா, வசுவில் இருந்த ஆக்கள் எல்லாரும் அவாவயே பார்க்கத்தொடங்கிட்டினம், பிறகு கொஞ்சம் அமைதியாயிட்டா, என்னம்மா நடந்திச்சு, என்று மெதுவா கேட்டன், ஐயோ, தூக்கு மாட்டிக்கொண்டு போயிட்டாளே, நான் என்ன செய்வன், அந்த நாசமா போனவங்கள், கொடுத்த கரைச்சலால பிள்ளை போயிட்டாவே என்று திரும்பவும் விம்மி, விம்மி அழத்தொடங்கிட்டா, எனக்கு புரிந்து விட்டது, இது "நாணயச்சாவு" கடன் வாங்கிப்போட்டு கொடுக்க வழியில்லாம போனதால பிள்ளை செத்துப் போயிட்டாள், இது நம்ம ஊருல, ஒரு வழக்கமான பழக்கமா போயிருச்சு, என்று நினைத்து கொண்டு, அதற்கு அப்புறம் அவாவிட்ட ஒரு கதையும் கொடுக்காமல் அமைதியாயிருந்தேன்.

என் நினைவெல்லாம், கலங்கிய ஆறுபோல ஓடத் தொடங்கியது, யுத்தம் முடிந்து 25 வருடங்கள் ஆகிடுச்சு, அந்த யுத்தத்தில, "குடும்பம்" என்ற கோயிலின்ர தெய்வங்களா இருந்த அம்மா, அப்பா, அண்ணா என்ற வீட்டுக்காரர் எல்லாரும் போயிட்டினம், நானும் கண்ணனும் மட்டும் தான் மிச்சம், அந்த புல்மோட்டை ஆசுபத்திரியில கண்ணன் பெறுறதிற்காக ICRC கப்பலில நான் தனிய வழியனுப்பேக்குள்ள, கனவிலும் நினைக்கயில்ல. என்ர உறவுகளை நான் இழப்பன் என்று கடசியா நானும் கண்ணனும் மட்டும் தான் மிச்சம், அப்பான்ர முகத்த காணாமலே வளர்ந்திட்டான். என்றாலும் எனக்கு அவன் தான் நிழல். நான் தான் அவனுக்கு நிழல், இன்றைக்கு சமூகத்தில நாலு பேர் மதிக்கிற நிலைக்கு நாங்க இருக்கிறம் என்றால், அது என்ர உழைப்பும் வாழ்க்கையும் தான். எப்படியும் வாழலாமென்று வாழுறதிற்கு வாழ்க்கையிருந்தாலும் இப்படிதான் வாழவேண்டுமென்று வாழுறதிற்கு ஒரு வழிகாட்டியா சந்தனம் மாமா இருந்ததால, இன்றைக்கும் ஒருத்தரும் என்ன கைய நீட்டி ஒரு பிழை சொல்லாம வாழ்ந்து கொண்டிருக்கிறன். 20 ஆயிரம் ரூபா கடன் எடுத்து நட்ட 100 தென்னை மரங்களும் 6 வருசத்தில காய்க்க தொடங்கிய பிறகு தான், நானும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு வழி கிடைச்சது. ஒரு தென்னை மரத்தில, சராசரி 15,000 ரூபா வருடாந்த வருமானம் வருசம் குறைந்தது 13 இலட்சத்திற்கு குறையாத வருமானத்தில, நான் என்னைப் போல பல பெண்களுக்கு வழிகாட்டியாக வாழக்கூடிய தாயிருக்கு 20,000 ரூபா எடுத்த கடனை 20 மாதத்தில கட்டி முடிச்சநான். அது ஒரு காலம் என்று நினைவு ஆறு ஓடிக்கொண்டிருக்க வசு திடீரென்று நிண்டது, வரவேண்டிய இடத்திற்கு வந்திட்டம் என்று பார்க்க, வசு டவுனுக்க தான் வந்திட்டுது. கண்ணன் வேகமாக முன்னுக்க இறங்கி விட்டான் நான் கடைசி ஆளா இறங்கி கண்ணனை தேடினேன், அவன் எனக்கு முன்பாக வேகமாக நடந்ததை போல தெரிந்தது. என்னத்திற்கு வந்தான் என்ர கூட்டத்திற்கு தான் அவனும் வந்திருப்பானோ. என்று நினைத்துக்கொண்டு பின்னாக போனேன்.

கூட்டுறவு மண்டபத்தில் கூட்டத்திற்கான ஆயத்தங்கள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. கண்ணனும் நானும் நடுப்பகுதியில் இருக்கும் கதிரையில் இருப்பதற்காக போனோம், கூட்ட ஒழுங்கமைப் பாளர்களில் ஒருவரான மைதிலி அக்கா முன்னுக்கு வாங்கோ என்று கூட்டிக்கொண்டு போய் இருத்தினா.

திட்டமிட்டபடி கூட்டம் ஆரம்பித்தது. புதிய நிர்வாகிகள், பொறுப்பேற்றார்கள், தொடர்ந்து சகலபொறுப்புகள் தொடர்பான ஆவணங்களும், கையளிக்கப்பட்டன. தொடர்ந்து கூட்டத்திற்கு, புதிய நிர்வாகத்தை பொறுப்பெடுக்கும் தலைவி சாந்தகுமாரி தலைமை தாங்கினா. என்னையும் கண்ணனையும் மேடைக்கு வந்து அமரும்படி கேட்டார்கள். நாங்களும் சென்று அமர்ந்தோம், அந்த மேடையின் நடுவில், வைக்கப்பட்டிருந்த மேசையில் "நாணயம்" என்ற தலைப்பில் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. தலைவி தனது அனுபவங்களையும் எதிர் கால திட்டங்களையும் குறித்து பேசிக்கொண்டிருந்தா. நான் மேசையில் அடுக்கி வைத்திருந்த புத்தகங்களில் ஒன்றை கையிலெடுத்து பார்த்தேன். நாணயம் என்ற தலைப்புக்கு கீழ், எனது படம் பெரிதாக பொறிக்கப்பட்ட அட்டை படமாக இருந்தது. புத்தகத்தின் முதலாம் பக்கத்தை விரித்தேன், அழகான, என் இளமைக்கால படம் 25 வருடங்களுக்கு முன்பு, நான் இந்த நாணயம் நிறுவனத்தை தொடங்கும் போது நடத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம் இருந்தது. பக்கத்தில் இருந்த சியாமளா புத்தகத்தை என் கையில் இருந்து பறித்து இப்ப வையுங்கோ. புத்தகம் வெளியிடும் போது தான் பார்க்க வேண்டுமென கூறினா, நான் கொடுத்து விட்டு, குமாரி பேசுவதை கேட்டுக்கொண்டிருந்தேன். குமாரி மிக அண்மையில் தான் நாணயத்தில சேர்ந்தார் என்றாலும், மிக சிறப்பான அங்கத்தவர். மிக விரைவிலே தலைமை பொறுப்பிற்கு வந்து விட்டார். அவர் இப்போது என்னைபற்றி தான் பேசுகிறார். நான் எப்படி இந்த நாணயத்தை தொடங்கி இருபத்தைந்து வருடங்கள் நடாத்தியதாக பேசுகிறார்.

அவர் பேச்சுக்கு ஒரு தலைப்பு கொடுக்க வேண்டுமானால் "அது ஒரு காலம்" என்று தான் கூற வேண்டும், என்றாலும் இன்று நாணயத்தில் நமது மாவட்டம் முழுவதிலிருந்து 4262 பெண்கள் அங்கத்தவராக இருக்கிறார்கள்.

குமாரி பேசி முடிந்ததும், நாணயம் வெள்ளி மலரை வெளியிடும்படி இன்றைய நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த இலங்கை வங்கி முகாமையாளரை அழைத்தார். அவர் வெளியிட்டு வைக்க நான், முதலாவது பிரதியைப் பெற்றேன், தொடர்ந்து பலருக்கு பிரதிகள் வழங்கப்பட்டன. தொடந்து நூல், வெளியீட்டு ஆய்வுரையை வழங்கும்படி கண்ணனை அழைக்கின்றோம் என்றவுடன், எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சொல்லவே இல்லை என்றேன். சொன்னாதான் கதையா? சொல்லாமலும் கதையிருக்கு என்று கூறிக்கொண்டு கண்ணன் பேசும் இடத்திற்கு வந்தான்.

நாணயச்சங்கத்தின் இருபத்தைந்தாவது வெள்ளி விழா மிக அமைதியாகவும் எளிமையாகவும் நடைபெறுகின்றது. அழைப்பிதழ் கூட பெரிதாக அடித்து பணத்தை விரயம் செய்யாதபடியால் யார் யார் நிகழ்வுக்கு வருகிறார்கள் என்பது பற்றி கூட்ட நிர்வாகிகளுக்கு மட்டும் தான் தெரிந்திருந்தது. ஒரு மாதத்திற்கு முன்பே, இப்புத்தகத்தை ஆய்வு செய்யும் படி, குமாரி அக்கா என்னிடம் கேட்டிருந்தார்கள், 15 நாளைக்கு முன்பு இப் புத்தகம் என் கையில் கிடைத்த போது நான் மிகப்பெரிய பாக்கியசாலி என்று நினைத்தேன். நான் ஒரு "வர்த்தக பட்டதாரி" ஆசிரியராக கடைமையாற்றுகின்றேன். ஒரு விதவை தாயால், அவருடைய நேர்மையான, உழைப்பால், முன்மாதிரியான வாழ்க்கையால் குற்றமற்ற ஒரு மனிதனாக நல்லொழுக்கம் உள்ள ஒரு மனிதனாக உருவாக்கப் பட்டிருக்கின்றேன். இதற்கு நாணயத்தால் வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபாய் கடனும், அந்த கடனால் வளர்க்கப்பட்ட 100 தென்னைகளும் என்னை வளர்த்தெடுத்தது. மேலும், இந்த மாவட்டத்தில், நான் பிறந்த மாவட்டத்திலிருந்து, ஒரு நிதி

நிறுவனம் உருவாக்கப்பட்டு இவ்வளவு சிறப்பாக நடைபெற்றதை நினைத்து பெருமைப்பட்டேன், குறிப்பாக அந்த பெருமைக்குரிய நிறுவனமாக இதை உருவாக்கிய என் தாயாரை நினைத்து நான் பெருமைப்பட்டேன்.

நேற்றிரவு தான் இந்த நூலை முழுமையாக வாசித்து முடித்தேன், அம்மாவுக்கு தெரியாமலே இதை நான் செய்ய வேண்டியிருந்தது. இப் புத்தகம் அம்மாவுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியாக இருக்க வேண்டும் என்று தான் கூட்ட ஒழுங்கமைப்பாளர்கள் நினைத்திருந்தார்கள். நான் வேறு விடயங்களுக்குள் போகாமல் நூலுக்குள் செல்ல விரும்புகின்றேன்.

இந்த நூல் ஒரு வரலாற்றின் முக்கியமான பதிவு, யுத்தத்திற்கு பின்பு, அந்த அவலங்களிலிருந்து மீண்டெழுந்த பெண்கள் சமூகத்தின் குறியீடாக காணப்படுகிறது. இந்த நூல் நான்கு பெரிய அதிகாரங்களை கொண்டுள்ளது ஒவ்வொரு அதிகாரத்தையும் விபரமாக சொன்னால் நேரம் போதாது தொட்டு மட்டும் பேச விரும்புகின்றேன். முதலாவது அதிகாரம். "நாணயமும் நாணயமும்" என்ற பேரில் கிளி, அக்கா என்று எல்லாராலும் அன்பாக அழைக்கப்படும் அன்னக்கிளி அவர்களால் எழுதப்பட்டுள்ளது. நாணயமும் நாணயமும் என்றால் என்னவென்று நினைக்கிறீர்கள் என்று அரங்கில் இருப்பவர்களைப் பார்த்து கண்ணன் கேட்டான். கவிதாவும் அவ தொடங்கிய இந்த சங்கமும் என்று பின்வரிசையில் அமர்ந்திருந்த ஒரு சகோதரி கூறினா. உண்மை தான் என்று கண்ணன் கூறினான்.

தொடர்ந்து கண்ணன் பேசினான். இந்த அதிகாரத்தில் திருமதி கவிதா.கமலரூபன் அவர்களின் குடும்ப பின்னணி மற்றும் அவர் பட்ட துன்பங்கள் குறித்து முதல் பகுதியில் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக 25 வருடத்திற்கு முன்பு நமது மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றி அழகாக குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் குறிப்பாக கணவன்மாரை இழந்த பெண்களின் நிலை குறித்து விபரமாக வரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

கணவன் உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? அவர்கள் இறந்திருந்தால் அதற்கான நீதி அதற்கான போராட்டங்கள் மற்றும் சட்டரீதியான தீர்மானங்கள் பொருளாதார நெருக்கடிகள், சமூக கலாசார நெருக்கடிகள், இப்படி அந்த காலத்தை விபரிக்கலாம் என்று கூறிய கண்ணன், திருமதி கவிதா அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை இங்கு அழகாக விபரிக்கப்பட்டுள்ளது. என்னுடையதும் என்னுடைய அம்மா, மற்றும் தாத்தாவினதும் வாழ்க்கை அனுபவங்களை இங்கே பதிவு செய்துள்ளார்கள். என்று சொன்ன போது என் உணர்வுக்குள் ஏதோ ஓடி அடங்கியது போலிருந்தது. தொடர்ந்து பேசினான். கவிதாவின் வாழக்கையிலிருந்த பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க. அக் காலத்தில் இருந்த அமைப்புகள் வலுவற்றதாக இருந்தபடியால் நிதியை கடனாகப் பெற்ற பெண்கள் பலர் தமது கடனை திருப்பிக் கொடுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் தான், கவிதா இந்த சங்கத்தை உருவாக்க காரணம் என்று கூறி இந்த சங்கத்தை கவிதா உருவாக்குவதற்கு எடுத்த முயற்சிகள் குறித்து அக்காலத்தில் பத்திரிகை நேர் காணலில் அவர் கூறிய விடயங்கள் அப்படியே இங்கு பதிவிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக கவிதா கூறிய ஒரு விடயம் சிறப்பாக பெரிய எழுத்தில் போடப்பட்டுள்ளது.

“பெண்கள் தூய்மையானவர்களாக, நேர்மையானவர்களாக இருக்க வேண்டும், நாணயமானவர்களாக இருக்க வேண்டும், பெண்களின் மனமும், சிந்தனையும் தான் அடுத்த தலைமுறையின் உருவாக்கத்திற்கான மிக முக்கிய சக்தியாக இருக்கின்றது, ஆனால் பெண்கள் குறிப்பாக குடும்ப பொறுப்பை ஏற்று நடத்திய பெண்கள் தமது சுமையை தாங்க முடியாது தமது உயிரை மாய்த்துக் கொள்கின்ற போது அவர்களை நம்பி இருந்த பிள்ளைகள், குறிப்பாக அவர்கள்

நாணயத்தை நம்பி கடன் கொடுத்த நிறுவனங்கள் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து சிந்திக்காமலே கடனை திருப்பி கொடுக்க முடியவில்லை, அவமானம் என்று நினைத்துக் கொண்டு மிகப் பெரிய வரலாற்று நாணயத் தவறை செய்து விடுகின்ற நிலையில் தான்'' இந்த பெண்கள் குழுவை தான் தொடங்கியதாக கூறிய அந்த வாசகத்தை கண்ணன் வாசித்த போது எல்லாரும் எழுந்து நின்று கரகோசித்தனர்.

தொடர்ந்தும் கண்ணன் பேசினான். இந்த புத்தகத்தின் இரண்டாவது அதிகாரம் "விதையும் விதையும்" என்ற தலைப்பில் இந்த சங்கத்தின் மூத்த அங்கத்தவர் திருமதி கவிதாவோடு இணைந்து சங்கத்தை தொடக்கிய திருமதி கமலாவதி அக்காவின் கட்டுரை இருக்கின்றது. அந்த கட்டுரையில் இந்த சங்கத்தை தாம் தொடங்கும் போது நூறு ரூபா பணத்துடன் தொடங்கியதாகவும் நான்கு பெண்கள் இணைந்து "சீட்டு சுழற்சி" முறையில் பணத்தை சேமித்து ஒருவருக்கு தொழில் செய்ய கைமாற்றாக வழங்கியதாகவும், அப்படி இணைந்து கொண்ட அத்தனை பெண்களும் வாராந்தம் தாம் கூடி தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டதாகவும், ஏமாற்றுதல், திருடுதல், கைவிடுதல், பணத்தை துர்ப்பிரயோகம் செய்தல், ஆடம்பரமாக செலவு செய்தல் போன்ற சமூக பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட்டு தூய்மையான பெண்ணிய வழக்கங்களை வாழ்வில் கடைப்பிடிக்க உறுதி எடுத்ததாகவும் அதுவே இச் சங்கத்தின் விதையாக இருந்தது என்றும், அந்த விதைகளுக்கு விதையாகவிருந்தது கவிதா என்ற இந்த விதை என்றும் கமலாவதி எழுதியிருக்கின்றார் என்று கண்ணன் கூறினான்.

பார்வையாளர்கள் மிக கவனமாக நூல் ஆய்வை இரசித்து கொண்டிருந்தார்கள், அனைவரின் கையிலும் நூல் வழங்கப்பட்டிருந்தது. அனைவரும் மிக ஆர்வமாக நூலை வாசிப்பதும் கண்ணனின் பேச்சை கேட்பதுமாக இருந்தார்கள்.

தொடர்ந்து மூன்றாவது அதிகாரத்தை குறித்து கண்ணன் பேசினான் இந்த அதிகாரத்தின் பெயர் "கவிதாவும் கதிரையும்" என்ற தலைப்பில் தற்போதய தலைவர் குமாரி அக்காவால் எழுதப்பட்டிருந்தது. குறிப்பாக கவிதாவின் நிர்வாகத்தையும், சங்கத்தை 25 வருட காலம் நடாத்தியது எவ்வாறு என்பது குறித்தும் அழகாக இப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது என்று கூறினான். குறிப்பாக நம்மவர்களில் ஒரு நிறுவனத்தை நடத்துகின்ற போது எத்தனை குற்றச்சாட்டுகள், அவமானங்கள், அபகீர்த்திகள் எல்லாம் வரும், எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு கவிதா எப்படி இதை நடாத்தினார் என்பதை சிறப்பாக எழுதியிருக்கிறார் குமாரி அக்கா ஒரு அமைப்பின் தலைவி, தான் சொல்வதை போல் வாழுதல் வேண்டும். என்பதை கவிதா நிரூபித்தவர், குறிப்பாக இளம்பெண்ணாக தன் மகனுடன் அந்த கிராமத்தில் தன் வாழ்க்கையை தொடங்கிய போது, பலரும் பல கதைகளை தங்கள் வாய்க்கு வந்த வண்ணம் கதைத்த போதும் தன் வாழ்வின் அறம், ஒழுக்கம், நேர்மை, நாணயம் இவைகளை நேரம் தவறாது கடைப்பிடித்தபடியால் அனைத்துப் பெண்களும் அவாவைப் பின்பற்றினார்கள் என்று கூறிய போது. ஒரே கரகோசம், இந்த நேரம் என் கண்களின் ஓரத்தில் என்னை அறியாமல் பாய்ந்த கண்ணீர் என் கன்னத்தை சுட்டது.

நாம் எப்படி நல்லவர்களாக இருந்தாலும் உலகம் ஒரு போதும் நம்மை நல்லவர்களாக ஏற்றுக்கொள்ளாது. ஏனென்றால் அவர்கள் நல்லவர்களாக வரும்வரை நம்மை அவர்களுக்கு நல்லவர்களாகத் தெரியாது. எனவே தான் மற்றவர்களுக்காக நான் நல்லவளாக வாழ்வதை விடுத்து எனக்காகவே நல்லவளாக வாழ்ந்தேன். என் வாழக்கை ஒரு கட்டத்தில் பலரையும் தொட்டபடியால் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட பெண்களுக்கு முன்மாதிரியானேன் என்று நான் எப்போதும் நினைப்பதை இப்போதும் நினைத்தேன். கண்ணன் நான்காவது அதிகாரத்தை குறித்து பேசத்தொடங்கினான்.

நான்காவது அதிகாரம் அறமும் அறமும் என்ற தலைப்பில் இந்த சங்கத்தின் அங்கத்தவராய் இருக்கின்ற தாமரை அக்காவின் மகள் செல்வி பானுப்பிரியாவால் எழுதப்பட்ட நீண்ட அழகான கட்டுரை என்று கண்ணன் கூறினான். நான் விரித்து பார்த்தேன் அந்த கட்டுரை மட்டும் 20 பக்கங்களை பிடித்திருந்தது. என்னதான் பானு எழுதியிருப்பாள். என்று யோசிக்க கண்ணன் அதை விபரிக்கத் தொடங்கினான்.

பெண்களால், பெண்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த நாணயம் என்ற அமைப்பில் இன்று நாலாயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் தமது வாழ்வை கட்டியெழுப்ப சிறுகடன் மற்றும் பெருங்கடன் திட்டங்களைப் பெற்று விவசாயம், கால்நடை வளர்ப்பு, வியாபாரம் என பல துறைகளில் தமது மேம்பாட்டை அடைந்துள்ளார்கள்.


"ஐயோ பாவம் இதுகள்" என்று மற்றவர்கள் பார்த்து பரிதாபப்பட நாம் வாழக்கூடாது. நம் அற வாழ்க்கையால் மற்றவர்கள் பார்த்து அதிசயிக்கதக்கதாக நாம் வாழனும் என்று பெண்களை உசுப்பேத்தி, உணர்ச்சி ஊட்டித் தான் இந்த சங்கம் தமது அங்கத்தவர்களை வளர்த்தது, அதன் விளைவாக இன்று இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் 1360 பேர் தன்னிறைவுள்ள பொருளாதார நிலைக்கு வந்து கோழிப்பண்ணையாளர்கள், ஆட்டு பண்ணயைாளர்கள், மாட்டு பண்ணையாளர்கள், தென்னந் தோட்டங்கள், அரைக்கும் ஆலைகள் என்று நடத்திக் கொண்டிருப்பதுடன் இந்தச் சங்கத்தின் அங்கத்தவதர்களாகத் தமது புதிய வாழ்வைத் தொடங்கிய பெண்களின் பிள்ளைகள் 179 பேர் பட்டப்படிப்பை முடித்து இன்று அரச உத்தியோகத்திலும் 168 பேர் வேறு நிறுவனங்களிலும் 266 பேர் தமது தாயாரோடு இணைந்து தொழில் செய்யிறவர்களாகவும் மாறியுள்ளனர். இப்படிப்பட்ட தாய்மார்களின் பிள்ளைகளில் ஒருவர் கூட இன்றுவரை எந்தவொரு குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்று பானுப்பிரியா சகல தரவுகளோடும் தனது கட்டுரையை எழுதியிருக்கிறார் என்று கண்ணன் சொன்ன போது மீண்டும் கரகோசம்.

தொடர்ந்து கண்ணன் பேசினான், நான்கு அத்தியாயங்களை தவிர மேலும் பல தகவல்கள் வரலாற்று சான்றிதழ்கள், பெற்ற விருதுகள் யாவும் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிறுவனம் உலகத்திலே போற்றப்படும் ஒரு நிறுவனமாக வந்திருக்க வேண்டும். ஆனால் இது அமைதியாக நடந்திருக்கின்றது. ஊடகங்களால் இப்படிப்பட்ட அமைப்புகள் குறித்து அதிகமாகப் பேசப்பட வேண்டுமெனக் கூறி, எனது தாயாரைப் பற்றி எழுதிய நூலை நானே ஆய்வு செய்ய கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் வரமாக கருதுகின்றேன் என்று கூறி விட்டு கண்ணன் அமர்ந்தான்.

தொடர்ந்தும் வங்கி அதிகாரி பேசினார். இலங்கையில் ஒரு சிறந்த கடன் வழங்கும் நிறுவனமென்றால் அது "நாணயம்" தான் பலர் நாணயம் அற்றவர்களாய் வாங்கிய கடனை செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு கடன் வழங்கியவர்களை அலைக்களித்த காலத்தில் நாணயம் ஒரு மிகப்பெரிய எழுச்சி, தற்போது நாணயத்தின் மொத்த சொத்து மதிப்பீடு 20 கோடி அதை இதுவரை காலமும் நிர்வகித்த கவிதா தனது 25 வருட வெள்ளி விழாவில் இன்னொரு தலைமுறைக்கு கையளிப்பது அவரது சிறந்த தலைமைத்துவத்தை குறிக்கின்றது. கவிதாவின் வெற்றிக்கு காரணம் அவருக்கு பின்னால் இருந்து இயக்கின ஒரு ஆண், அது தான் அவரது மாமா சந்தனம் ஐயா என்று கூறுவர், குடும்பத்தில் இருக்கும் பெண்களும் ஆண்களும் இணைந்து சமூகத்திற்காகப் பாடுபட முயற்சித்தால் சமூகம் சிறந்த முன்னேற்றமடையும் என்று கூறி அமர்ந்தார். ஆச்சர்யம், அதிர்ச்சி, அரங்க வாசலில் பொலிசார் வந்திறங்கினார்கள், பெருந்திரளான பொலிசார், அதிர்ச்சியுற்றேன் கண்ணன் என்னைப் பார்த்தான், சற்று நேரத்தில் வந்தவர்களில் மிக உயரமான ஒரு அதிகாரியை போல ஒரு பொலிசதிகாரி அரங்கிற்குள் நுழைந்து முன் வந்தார். குமாரி அக்கா மேடையிலிருந்து இறங்கி சென்றா. அரங்கு அமைதியானது. அந்த பொலிசு அதிகாரி ஏதோ என்னைப் பார்த்துப் பார்த்துக் கதைப்பது போலிருந்தது. குமாரி அக்கா கொஞ்சம் பதற்றத்துடன் இருப்பதைப் போலத் தெரிந்தது.

சற்று நேரத்தில், இன்னொரு வாகனம் வந்தது. அதற்குள் இருந்து ஒரு அதிகாரி வேறு ஏனைய பொலிசாரால் அழைத்து வரப்பட்டார். தற்போது எல்லாரும் மேடைக்கு வந்தார்கள். அனைவரும் எழுந்து நின்றார்கள். அரங்கிலிருந்தவர்கள் ஏதோ பேசத்தொடங்கினார்கள் குமாரி அக்கா பேசும் இடத்திற்கு சென்று யாவரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

நாங்கள் ஒருவரும் எதிர்பாராத சம்பவம் இங்கு நடைபெறப் போகிறது என்று கூறியவுடன் நான் சிலையானேன் என்று தான் கூறவேண்டும். கண்ணனின் கனவு பலிக்கப் போகிறதோ. நான் என்ன தான் பிழை செய்தேன் என்று யோசித்தேன். குமாரி அக்கா. தொடர்ந்து பேசினா வாங்கின கடனுக்காக தங்கள் உயிரை பெண்கள் மற்றும் ஆண்கள் மாய்த்த காலத்தில், ஒரு இளம் பெண்ணாக துணிவுடன் எழுந்து ஆயிரக்கணக்கான பெண்களின் உயிரை காத்து ஒரு மிகப்பெரிய நிதி நிறுவனத்தை கட்டியெழுப்பிய கவிதாவுக்கு உலக யுனெக்கோ நிறுவனம், பண்பாட்டின் குறியீடு "Symbole of culture" என்ற விருதை வழங்கியுள்ளது. அந்த செய்தியை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவே யுனெக்கோவின் இலங்கை பிரதிநிதி இங்கு வருகை தந்துள்ளார். அதற்கான உத்தியோக பூர்வமான நிகழ்வு வெகுவிரைவில் யெனிவாவில் நடைபெற உள்ளது. என்று கூறியவுடன் அனைவரும் எழுந்து கரகோசித்தார்கள் வானம் இடிந்து அங்கிருந்து பூமழை பொழிந்தது போல் இருந்தது. கண்ணன் அருகில் வந்து அம்மா என் கனவு பலித்தது என்றான்.





# அணில் கூடு

என்ன தான் என்றாலும் வரலாற்றையும் மரபுகளையும் மீறி இப்படிப்பட்ட கீழ்த்தரமான விடயங்களை நடத்த நீங்கள் அனுமதித்ததை ஏற்றுக்கொள்ளவே முடியாது, என்று அழுத்தம் திருத்தமாக கந்தசாமி கூறிய பொழுது ஏனையவர்கள் அமைதியாக இருந்தது ஏதோ நான் பிழைவிட்டு விட்டேன் என்று பாடசாலை சமூகமே எண்ணுகிறது போல என்று எனக்குத்தோன்றியது. வழமை, மரபு, வரலாறு இவைகளைப் பாதுகாக்கும் காவலர்களாக கூடிவந்திருக்கும் இந்த பெரியவர்களும் அதை முற்றிலும் மீறிவிட்டவனாக, எனவே நான் குற்றவாளி என்ற நிலையிலும் இப்போது நிற்கின்றேன்.

ஒரு கடை முதலாளியையே கூப்பிட்டிருக்கலாம் என்று மலர்விழி அக்கா ஏதோ சொல்லத் தொடங்க கந்தசாமி ஐயா தங்கச்சி அப்படி கதைக்கப்படாது, இந்தப் பள்ளிக்கூட பரிசளிப்பு விழாவில், அரசாங்க அதிபர்கள், வைத்தியர்கள், கல்விப் பணிப்பாளர்கள், என்று பிள்ளைகள் பார்த்து பெருமைப்படக்கூடிய பெரும் மனிதர்கள் சுமந்த மேடையும் மண்டபமும். இது இப்படிப்பட்ட இடத்தில "ச்சி", என்ன மனுசனப்பா இவர் போயும், போயும், என்று அவர் முடிப்பதற்கு முன்பு கதிரவேலு ஐயா தொடங்கிவிட்டார். தம்பி நீங்கள் அதிபர், நீங்கள் சம்பிரதாயங்கள் நல்லா கடைப்பிடிக்கத் தெரிஞ்சவர். ஏன் தான் இப்படி செஞ்சனீங்களோ என்று எங்களுக்குத் தெரியாது. நான் இனியும் பொறுமை காக்க முடியாத நிலையில அப்ப என்னத்த சொல்லவாறியள், நாளை காலை விடிஞ்சா பரிசளிப்பு இந்த மாவட்டத்தில் சிறந்த பாடசாலையாய் உருவெடுத்து வருகின்ற ஒரு பாடசாலையின்ர நிகழ்வில குழப்பங்கள் என்று வெளியார் கேள்விப்பட்டால், நிகழ்வின் தரம் கெட்டுப்போய்விடும் என்றேன்.

கந்தசுவாமி ஐயா முடிவ தெளிவா சொன்னார், நீங்கள் அழைத்திருக்கின்ற விருந்தினர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் தகுதி இல்லாதவர், எனவே பொருத்தமான ஒரு விருந்தினரை கூப்பிட்டு நிகழ்வை நடத்துங்கோ இதுதான் என்ர முடிவு என்று சொல்லி அமர்ந்தார்.

சரி நீங்க சொல்றத நான் மாத்தி செய்றதில ஒரு பிரச்சினையும் இல்லை, ஆனால் விருந்தினரை மாத்த சொல்ற காரணத்தை எனக்கு தெளிவாச்சொல்லுங்கோ என்று நான் மீண்டும் உறுதியாகக் கூறினேன். ஒரு மேசன் வேலை செய்யிற ஆளிட்டயும் அவரின்ட பெண்சாதிட்டயும் எங்கட பிள்ளையள் பரிசு வாங்கிறதிற்கு நாங்கள் தரம் கெட்டுப் போகயில்லை என்று மலர்விழி அக்கா அழுத்தமாகக் கூறினார். இதற்குப் பிறகும் நான் இவர்களோடு முண்டு பிடிக்காமல் ஆள மாத்திடுவோம் என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டேன், சரி, நான் ஆள மாத்துறன், ஆனால் நீங்களே ஒரு புது விருந்தினரை

சொல்லுங்கோ என்றேன். அவர்கள் ஆயத்தமாக வைத்திருப் பார்கள் போல, ஓய்வு பெற்ற கணக்காளர், எங்கட கிராமத்தை சேர்ந்தவர், பாடசாலையின் பழைய மாணவர் வெங்கடாசலத்தை கூப்பிடுங்கோ என்று பின்வரிசையில் இதுவரை அமைதியாக இருந்த தம்பி மனோகரன் கூறினார். சரி இதுதான் உங்கட முடிவு என்றால் நீங்களே அவரை ஒழுங்குபடுத்துங்கோ இன்றைக்கு ஒரு மாலைப்பொழுது தான் இருக்கின்றது. நாளை காலை நிகழ்வு, வேண்டுமென்றால் மாலை வீட்டுக்குப் போகும்போது உத்தியோகபூர்வமாக வெங்கடாசலம் சேரிடம் சொல்லி விட்டுப் போகிறேன். என்றவுடன் கூட்டம் நிறைவு பெற்றது. எப்படிப் போய் சற்குணத்திற்கு இதைச் சொல்லுறது என்றதுதான் எனக்குப்பிரச்சினை. சற்குணம், இந்தக்கிராமத்தில் பிறந்து வளர்ந்து இந்தப்பாடசாலையில் படிக்கும் போது குடும்ப வறுமையின் நிமித்தம் பாடசாலையிலிருந்து மேசன் தொழிலாளியாக, தன் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றார்.

நான் இந்தப் பாடசாலைக்கு அதிபராக வந்த காலத்திலிருந்து அவருடைய கடைசி மகள் கண்மணியின் படிப்பு விடயமாக அடிக்கடி என்னோடு கதைப்பதற்கு பாடசாலை வருவார். மிகவும் மென்மையான மனிதர், எப்போதும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்குவார். கடந்த பரிசளிப்பு நிகழ்வில், கண்மணி சிறந்த மாணவியாகத் தெரிவு செய்யப்பட்டு பல பதக்கங்களைப் பெற்று மருத்துவ மாணவியாக பல்கலைக்கழகத்திற்கு வழியனுப்பப்பட்ட அந்த நிகழ்வில் பல முக்கிய நிழ்வு ஒழுங்குகளை அவரே முன்நின்று நடாத்தினார். அந்த நேரத்திலேயே நான் இவரை ஒரு நிகழ்விற்கு விருந்தினராக அழைக்க வேண்டும் என்று யோசித்தேன். ஆனால் சமூகம் இந்தக் காலத்திலும் இப்படிப் பிற்போக்குத் தனமாகவும், குருட்டுத் தனமாகவும் இருக்கின்றதே என்ற கவலையுடன் வீதிக்கு வந்து சற்குணம் ஐயா வீட்டை நோக்கி சைக்கிளில் போகத்தொடங்கினேன். அவர் அப்பவும், தொடுகிலும் மாட்டன் என்று சொன்னவர், ஏன்சேர் இப்படிப் புதுசா, புதுசா யோசித்து தலை கீழா செய்யிறியள், எனக்கு இது கடினமா இருக்கின்றது

என்று கூறினார், அதிலும் அவரது மனைவி, இராசம்மா ஐயோ என்ன கூப்பிடாதேயுங்க நான் மேடையில ஏறியது இல்ல, அதுவும் பிள்ளைகளுக்கு பரிசு கொடுக்க எல்லாம் நான் மேடைக்கு வந்து செய்யமாட்டேன் என்று கூறியிருந்தார். என்றாலும் பல நாள் அவர்களின் வீட்டிற்குச் சென்று பாடசாலை மாணவர்களின் நலன் கருதி இதைச்செய்யுங்கோ என்று விடாப்பிடியாக கேட்ட படியால் தான், ஒருவாறு சம்மதித்தார்கள், எப்படித்தான் இப்ப நான் போய் சொல்றதோ தெரியல, நேற்றுக்கூட வழியில காணேக்க இரண்டுபேரும் வசுவால இறங்கி நடந்து போனவை கையில உடுப்பு பேக் மாதிரி தெரிஞ்சது, நான் நினைக்கிறன், இந்த நிகழ்வுக்கென்று ஏதோ புது உடுப்பு எடுத்திருப்பினம் போல. என்று யோசித்துக்கொண்டே சற்குணத்தின் படலையை தட்டினேன், இராசம்மா அக்கா தான் வந்தார், முகத்திலே மலர்ச்சியும் தெரிந்தது, சேர் பிள்ளைகளுக்கு சொல்லுங்கோ, காலில ஏதும் விழுந்து வணங்க வேண்டாமென்று, எனக்கு சரியான பயமும் கூச்சமாயும் இருக்குது சேர், என்றாலும் மகள் கண்மணி கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் ஒருமாரி தயார்ப்படுத்தி விட்டன் சேர் என்று சொல்லிக்கொண்டே வரவேற்றார். வாங்கோ சேர், வாசலில நிக்கவைத்து கதைத்து விட்டேன். உள்ளே வாங்கோ சேர் என்று இராசம்மா அக்கா கூப்பிட்டா. இல்லை அக்கா சற்குணம் அண்ணாக்கு ஒரு தகவல் சொல்ல வந்தனான் அவர் இன்னும் வீட்ட வரயிலயே என்று கேட்டேன். இல்ல சேர் வேலை முடிச்சு இப்ப தான் வந்தவர் வந்தவுடன் வெங்கடாசலம் சேரின்ர மனைவி ஒருக்கா வரச்சொல்லி போன் பண்ணினவ. அங்கபோட்டார் இருங்கோ போன் பண்ணுறன் வந்திடுவார் என்று அவருக்கு போன் எடுத்தார். சேர் வந்திருக்கார் வாறியளே என்று கேட்டார், அவர் ஏதோ ஒரு நீண்ட உரையாடலை வெளிப்படுத்தினார், இடைவிலகி சிறு வயதிலிருந்தே ஒரு கூலித்தொழிலாளியாக, நான் என் கதிரையில் பின்னாக சாய்ந்து அமர்ந்து கொண்டேன். ஒரு மேசன் தொழிலாளியின் வீடு ஒரு அழகான கலைக் கோயிலாகவல்லவா இருக்கின்றது

என்று யோசித்துக் கொண்டு, சற்குணம் அண்ணன் வேலை அலுப்பு நீங்க கள்ளு ஏதும் குடிக்கிறவரோ என்று தமாசாக கேட்டேன். ஐயோ! அவர் குடிப்பவர்களோடே சேர்வதே இல்லை, இவரோடு வேலை செய்கிற பலர் இவரால் தமது குடியை விட்டுவிட்டார்கள். திருமணம் முடித்து 25 வருட எங்களுடைய இல்லற வாழ்வில் எத்தனையோ துன்பங்கள், போராட்டங்கள் இந்தக் கிளிநொச்சியில் எத்தனை இடப்பெயர்வுகள் எங்கட குடும்பத்திலயும் உறவினர் பலர் யுத்தத்தில் இறந்து துக்கத்தில் இருந்திருக்கிறோம். ஒரு நாள் கூட கவலை நீங்குவதற்கு கள்ளு குடித்ததில்லை. எப்போதும் யோகர்சுவாமிகள் காட்டிய வழியில் வாழவேண்டும் என்று கூறுவார். ஏழு மணியாகி விட்டது இன்னும் காணவில்லையே என்று திரும்பவும் கோல் எடுத்தார் இராசம்மா, ஏதோ மீண்டும் கூறினார். சேர் 9 மணிக்கு பிறகுதானாம் வருவாராம் வந்தவுடன் உங்களுக்கு கோல் எடுக்கிறாராம் என்று கூறினார்.

ஆச்சர்யம், இன்னும் சில மணித்துளிகள் இங்கே இருக்கலாம் போலிருந்தது என்றாலும், நான் வீட்டுக்குப்போய் திரும்ப பாடசாலைக்குத் திரும்ப வர வேண்டும், நாளை பரிசளிப்பு நிகழ்வின் ஒழுங்குக்காக என்று நினைத்துக்கொண்டு, சற்குணம் அண்ணன் உழைக்கின்ற உழைப்பு எப்படி உங்களுக்கு போதுமா? குடும்பத்தை நடத்திச்செல்ல என்று கேட்டேன்.

சேர், அவர் மிகச்சிறந்த உழைப்பாளி மட்டுமல்ல ஒரு நல்ல குடும்பத்தலைவன். உழைக்கும் பணத்தை எப்படி செலவழிக்க வேண்டும், சேமிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லித் தந்திருக்கிறார். வேலைக்கு எல்லாரும் செல்வது போல காலையில் 8 மணிக்கு போய் 4 மணிக்கு வாறவரில்ல 6 மணிக்கு வேலைக்கு போனால் எடுத்த வேலையின் பகுதி முடிந்தால் தான் வேலையை நிப்பாட்டுவார். அவரின் தலைமையில் தற்போது 16 பேர் வேலை செய்கிறார்கள். எல்லாரையும் அப்படித்தான் பழக்கி வைத்திருக்கின்றார்.

எங்களைப் போல ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுத்திட்ட வேலைகளை பொறுப்பெடுத்தால், அந்த குடும்பங்களை கடன் படாமல் இருக்கத்தக்கதாக வேலையை சிக்கனமாகவும், அதிக நேரம் செலவழித்தும் வேலையைச் செய்வார்கள். சில நாட்களில் சாமமாகும் வீட்டிற்கு வருவதற்கு.

ஒரு நாள் கூட யாரிடமும் தன் உழைப்புக்கு மிஞ்சிய பணத்தை அவர் வாங்கியது இல்லை, அவரின்ட உழைப்பில தான், எங்கட இரண்டு பிள்ளைகளோடு அவரின்ட சகோதரியின் இரண்டு பிள்ளைகளையும் படிப்பிச்சவர், சகோதரின்ர கணவர் யுத்தத்தில காணாமல் போய் இன்னும் ஒரு முடிவும் இல்ல, என்றாலும் தங்கச்சிக்கு நாட்டுக்கோழி வளக்கிறதிற்கு ஒழுங்கு செய்து கொடுத்து, தானே வாராந்தம் போய் கணக்கு பார்த்து கொடுத்துவிட்டு வருவார். இங்கே வீட்டேயும் ஒவ்வொரு ஞாயிறு வீட்டு நிர்வாக கூட்டம் நடைபெறும். நான் வீட்டின் வரவு செலவு காட்ட வேண்டும். கண்மணி வீட்டின் செயலாளர் அறிக்கை வாசிக்க வேண்டும். மகன் சஞ்சீபன் கூட்டத்தை தலைமை தாங்க வேண்டும். கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தின் படி, வீட்டின் உணவு, கல்விச் செலவுகள், காணியில் இருந்து வருமானம், அயலவர்களுக்கு செய்ய வேண்டிய உதவிகள், போன்ற விடயங்கள் கதைத்து சரிப்படுத்துவார். என்று இராசம்மா அக்கா கூறி முடித்த பொழுது அவர் கண்களில் கண்ணீர் வந்தது, கடவுள் எங்கட வீட்டில இருக்கிற எங்க அப்பா தான், என்று தன் கணவரை தெய்வமாக கூறிய போது நான் மெய்சிலிர்த்துப்போனேன்.

நேரம் 8 மணியாகி விட்டது. நான் போய் வெங்கடாசலம் சேர் வீட்டிலே சற்குணம் அண்ணனை கண்டு விட்டு போறேன் என்று, இராசம்மா அக்கா வீட்டிலிருந்து விடைபெற்றேன். போகும் வழி இருட்டாக இருந்தது மனமும் இருட்டி இருட்டி விடிந்தது போலிருந்தது. எப்படிப்பட்ட மனிதர்கள், இந்த பூமியில் வாழ்கிறார்கள்.

ஒரு தூய்மையான கருத்தியல், அந்தக் கொள்கையில் அழகாகக் கட்டப்பட்ட ஒரு குடும்பம் அந்த குடும்பத்தில் அழகான மலர்களாய் உறவுகள், சமூகத்தில் அவரால் உருவாக்கப்பட்ட 18 குடும்பங்கள், நேர்மை, உண்மை, உழைப்பு, தூய்மை, இவைகளை விட ஒரு மனிதரிடம் எதைத்தான் எதிர்பார்க்கின்றது இந்த சமூகம். ஒருவன் செய்யும் தொழிலை வைத்து அவனுடைய வாழ்க்கையை அளவீடு செய்கின்ற படியால் தான் நமது சமூகத்தில் இன்று தொழிலாளர்களைக் கண்டு பிடிப்பதே அரிதாகி விட்டது. எல்லாரும் படித்து பட்டம் பெற்றும் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பதை மட்டும் இலக்காகக் கொண்டு நமது சமூகம் உருவாக்கப் படுகின்றபடியால் தான், சற்குணத்தைப் போல் நல்ல மனிதர்களை இந்த சமூகம் பெற்றெடுக்க முடியவில்லை என்று நினைத்துக் கொண்டு வெங்கடாசலம் ஐயாவின் கதவை தட்டினேன், மணி 8.10 ஆகி விட்டது. ஒரே மயான அமைதி சற்குணம் வந்து கதவை திறந்தார், வாங்க சேர், என்ன சேர் இங்கேயே தேடி வந்திட்டீங்க என்றார். சற்குணம் இல்ல, வெங்கடாசலம் சேரையும் சந்திக்க வேணும், அது தான் இங்கேயே வந்துட்டன் என்று கூறினேன். நான் கதைத்துக் கொண்டிருந்த போதே  வெங்கடாசலம் சேரின் மனைவி மங்கயர்க்கரசி வீட்டுக்கு வெளியே வந்து விட்டார். கேற்றடியில் லைட் வெளிச்சத்துல அவர் என்னை கண்டு விட்டு, கிட்டவந்து மதியம், கதிரவேலு ஐயாவும் மனோகரன் தம்பியும் வந்து என்று சொல்லத் தொடங்க, ஓம் அம்மா அதற்குத்தான் வந்தனான் உள்ளுக்கு வருகின்றேன். என்று அவாவின் பேச்சை அப்படியே நிறுத்தி விட்டு உள்ளே போக முயன்றேன். ஆனால் அவ முற்றத்தில் இருந்த கதிரையிலே என்னை இருத்திவிட்டு, இப்பதான் கொஞ்சம் சத்தமில்லாமல் நித்திரை கொள்கின்றார் சேர், தெரியாதே இருந்திட்டு எப்பயாவது கொஞ்சம் எடுக்கிறவர், இப்ப அவருக்கு பிளட்டுல சுகர் கொஞ்சம் கூடிட்டு தென்று ஆசுபத்திரியிலயும் சொன்னவை, என்னவோ தெரியாது, கொஞசம் எடுத்தாலும், சரியான குழப்பமும், குழறலும் இதால பக்கத்து வீட்டுக்காறர் எல்லாரும் எங்களோட பிரச்சனை அதுதான், என்று இழுத்தார்.

எனக்கு கொஞ்சம் விளங்கி விட்டது என்றாலும் சற்குணத்திற்கு இந்த நேரத்தில இங்க என்ன வேலை என்று புரியாதவனாக சற்குணத்தை பார்த்தேன். நான் பார்த்த பார்வையை புரிந்து கொண்ட மங்கயற்கரசி அம்மா, சற்குணம் இல்லாட்டி எங்கட பாடு பெரும்பாடு தான். சற்குணமும், அவரும், உந்த பள்ளியிலை ஒன்றாதான் படிச்சவயாம். சற்குணம் தான் இந்த மாதிரி நேரத்தில உச்சம் தலையில தேசிக்காய் தேச்சு விடுறது பிறகு தான் கொஞ்சம் அமைதியாய் இருப்பார். சற்குணம் இல்லாட்டி இங்க வீட்டில நாங்க யாரும் இருக்க முடியாது என்று கூறி கண் கலங்கினார்.

பாருங்கோ சேர் நிகழ்வு, கூட்டம், கொண்டாட்டம் என்று போனால், இப்படி எடுக்க பழகி இப்ப எங்கட நிம்மதியும், போய் பிள்ளைகளும் அத பார்த்து பழகி மூத்தவன் குடும்பத்தோட கொழும்பில் குடியிருந்தாலும் குடியும் பிரச்சினையும் அவைக்கும் நிம்மதியில்ல, இங்க எங்களுக்கு வாய்ச்ச இரண்டு மருமகன்மார் அவையும் இப்படித்தான் நாங்க ஒன்று சொல்லேலாது. நல்லா படிச்சு, கை நிறைய காசு உழைச்சு இப்படி வருத்தம், ஆசுபத்திரிக்கென்று செலவழிச்சுக் கொண்டு திரியிறோம் என்று கூறிக்கொண்டிருக்க. யாரது என்று உள்ளுக்குள்ளிருந்து சத்தம் வர சற்குணம் பள்ளிக்கூட அதிபர் வந்திருக்கிறார் என்று கூற அவரும் மெதுவா எழும்பி வெளியே வந்து, இது ஐந்தாவது தடவை நான் உங்கட பள்ளிக்கு வாரது என்று கொஞ்ச உளட்டலோடு என்றாலும் தெளிவாக கூறத்தொடங்க , நான் 6 மணியிலிருந்து 9 மணி வரை பார்த்த இரண்டு இரு வேறு நாடகங்களில் மக்களுக்கு மிகவும் தேவையான ஒரு நாடகம் தேவையென்றால், அது சற்குணத்தின் நாடகம் என்பதை இப்போது புரிந்து கொண்டு விட்டதால், இதற்கு மேலும் அவரைக் கதைக்க விட்டு சூழ்நிலையை குழப்ப விரும்பாமல் ஓம் சேர் நீங்களும் வருவீங்க ஏனென்றால் உங்கட நண்பன் சற்குணம் தான் நாளைய எமது பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினர் என்று கூறினேன். கொஞ்சம் அமைதியாக நின்ற வெங்கடாசலம் சேர், சரி அப்ப நான், நீங்களும் தான் சேர் என்றேன்.

ஓ இரண்டு பேருமே நல்லது நானும் நீயுமா, கண்ணா நானும் நீயுமா என்று பாடிக் கொண்டே திரும்பவும் உள்ளே போய்விட்டார், நான் சற்குணத்தின் கரங்களை பிடித்தேன் 30 வருடங்கள் மண்வெட்டியும் மேசன் கரண்டியும் பிடித்த கை அல்லவா காய்ந்து போயிருந்தது. இப்படிப்பட்ட கைகளால் தான் இந்த உலகம் வாழ்கின்றது என்று கூறி விட்டு, வீட்டுக்கு வரத்தொடங்கினேன். இரவு நித்திரையே வரவில்லை.

காலை விடிகின்ற போதே மேகம் இருட்டியிருந்தது, மழைக்கு வாய்ப்பு இருப்பது போல் தெரிகின்றது என்று வீதியில் இருவர் கதைத்துக்கொண்டு போனார்கள். மழை பெய்கிறதோ இல்லையோ இன்று இடி இடிக்கத்தான் போகிறது. ஊர் மக்களின் தீர்மானமா என்னுடைய சரியான, தெளிவான தீர்மானமா? இத்தனை கேள்விகளுடன் கிணற்றுக்குள் இருந்த தண்ணீர் வாளியில் எத்தனை தரம் தலையில் ஊற்றினதோ தெரியவில்லை குளித்துவிட்டு, நேரத்துடன் பாடசாலைக்கு புறப்பட்டேன்.

நேரம் குறிப்பிட்டது போல காலை 10.30 மணிக்கு சற்குணம் தம்பதிகள் மிகவும் நேர்த்தியாக வந்து விட்டார்கள் சற்குணம் ஒரு அழகான பட்டு வேட்டியும் இராசம்மா மிக எளிமையான ஒரு பட்டு சாரியுடனும் வந்திருந்தார்கள், நான் அவர்களை அழைத்து, எனது அதிபர் அறையில் அமர்த்தியிருந்தேன். நான் குறித்த 11 மணிக்கு நிகழ்வை ஆரம்பிப்பதில் குறியாக இருந்தேன். நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் எனது அலுவலக யன்னல் பக்கமாய் வந்து செல்வதை பார்க்கக் கூடியதாயிருந்தது, மேலும் சிலர் அங்குமிங்குமாகக் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். 10.50 மணிக்கு நானும் சற்குணம் தம்பதியினரும், ஏனைய விருந்தினரும் மேடைக்குச் சென்றோம். 11 மணிக்கு பாடசாலை கீதத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியது. பாடசாலைக்கீதம் பாடிக்கொண்டிருக்கும் போது, வெங்கடாசலம் சேர், அவர்கள் நிகழ்வு மண்டபத்திற்குள் தம்பதியினராக நுழைந்தார்கள், அவர்களை வரவேற்ற ஆசிரியர்கள் மேடைக்கு அழைத்து வந்தார்கள், நான் வரவேற்று மேடையிலே அவர்களை அமரச்செய்தேன்.

நிகழ்வுகள் யாவும் சிறப்பாக ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் ஏற்பாட்டில் இருந்தவாறு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நிகழ்வின் முதலாவது வாழ்த்துரையை வழங்க வருமாறு வெங்கடாசலம் அவர்களை அறிவிப்பாளர் அறிவித்தார். வெங்கடாசலம் சேர் அவர்கள் பேச ஆரம்பித்தார்.

பிள்ளைகள் பாருங்கோ, இன்றைக்கு நான் இங்க வந்திருக்கின்றன் என்றால் அதற்கு யார் காரணம் என்று சொல்லுங்கோ என்றார், பிள்ளைகள், ஒரே குரலில் அதிபர் என்றார்கள். இல்லை! சற்குணம், உங்கட இன்றைய நாளின் பிரதம விருந்தினர், அவரும் நானும் உற்ற நண்பர்கள் இந்த பாடசாலையில் முதலாம் ஆண்டு தொடக்கம் எட்டாம் ஆண்டு வரை ஒன்றாக படித்தோம். அவர் வீட்டு வறுமையால படிப்ப எட்டாம் ஆண்டிலேயே விட்டு விட்டு, அவரின்ட அப்பாவோட கூலி வேலைக்கு போனார், ஆனால், நம்மட சிறுவர் நன்நடத்தை பிரிவு அப்பொழுதே அவரை திரும்பவும் பாடசாலைக்கு சேர்த்தது, ஆனால் வீட்டு வறுமை அவரின் படிப்பை தொடர முடியாமல் செய்தது. திரும்பவும் ஒன்பதாம் வகுப்போடு, பாடசாலையிலிருந்து இடைவிலகினார். நான் A/L வரை இந்த பாடசாலையில் படித்தேன். பல்கலைக் கழகத்திற்கு தெரிவான கால இடைவெளியில் வீட்டில் இருக்கும் போது நானும் சற்குணத்துடன் இணைந்து மேசன் வேலைக்குப் போனேன். அந்த நாட்களில் தான், எனது தந்தையார் உடல் நலக்குறைவால் திடீரென மரணமடைந்தார், எனக்கு 3 சகோதரர்கள், அப்பாவின் மரணத்திற்கு பின்பு அவர்களின் படிப்பு, குடும்ப பொறுப்பு, இவைகளை நினைத்து பல்கலைக்கழகத்திற்கு போகாமல் இருந்து விட தீர்மானித்தேன். ஆனால் எனது பல்கலைக்கழக படிப்பின் முழு செலவையும் தனது வியர்வையால் தந்தவன் தான் எனது நண்பன் சற்குணம். அன்று சற்குணம் தனது மேசன் தொழிலால் என்னை படிப்பித்திருக்கா விட்டால், நீங்கள் இன்று என்னை வெங்கடாசலம் சேர் என்று கூப்பிட்டிருக்க மாட்டீர்கள். இந்த சேருக்கு பின்னால் ஒரு சேறு இருக்கின்றது. அந்த சேற்றில் கை வைத்து இந்த சேர் என்ற பட்டத்தை பெற்று தந்தவன் எனது நண்பன்.

இன்றைய நிகழ்வில் நான் கலந்து கொண்டிருப்பது என் வாழ்நாள் கடமை, நன்றி கடன், இப்படிப்பட்ட ஒரு சபையில் தெரிவிப்பதற்கே, நமது சமூகத்தில் உழைப்பாளிகளின் உழைப்பும் அதன் மேன்மையும் குறித்து ஒருவரும் அதிகமாக பேசுவதில்லை, ஆனால் நமது அதிபர் செல்வச்சந்திரன் எடுத்திருக்கும் இந்த முயற்சியை நான் பாராட்டுகின்றேன். நான் வாழ்நாளில் முன்னேற உழைத்த கரங்களால் நீங்கள் பரிசு வாங்க கொடுத்து வைத்தவர்கள் என்று கூறியதும் மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் கரங்களை தட்டினார்கள்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்ததாக பரிசு வழங்கும் நிகழ்வுக்காக சற்குணம் அவர்களை அறிவிப்பாளர் அறிவித்தார், ஆனால் அவர் தான் பேசிய பின்பு பரிசு வழங்குவதாக கூற நானும் சம்மதித்தேன், சற்குணம் பேசத்தொடங்கினார். பிள்ளைகளே, பெற்றோரே, உங்களில் ஒருவனாகி பல வருடங்கள் இந்த மண்டபத்தில் கடைசி வாங்கில் அமர்ந்து, இந்த மேடையில் பல மனிதர்கள், விருந்தினர்களை பார்த்திருக்கின்றேன். ஆனால் இன்று நானே மேடையில், அதுவும் பிரதம விருந்தினராக எனது மனைவியுடன் அமர்ந்திருப்பது மகிழ்ச்சியும், மன நிறைவும் தருகின்றது. நான் அதிகமாக பேச விரும்பவில்லை. ஒரே ஒரு கதையை மாத்திரம் உங்களுக்காக சொல்லி விடை பெற விரும்புகிறேன். இந்த கதையை நீண்ட காலத்திற்கு முன்னர் எனக்கு சொன்னார் ஒரு முனிவர்.

அப்போது எங்கள் கிராமத்திற்கு ஒரு முனிவர் வந்திருப்பதாக எல்லாரும் சொல்வார்கள். அவர் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து ஒரு கதை சொல்லுவார், அப்போது எனக்கும் ஒரு ஆசையாயிருந்தது. அவர் எனக்கு சொல்லும் கதையை கேட்பதற்கு.

நான் 14 வயதாக இருக்கும் போது பாடசாலை கல்வியை இந்த நாட்டின் சூழ்நிலை, குடும்ப வறுமையின் நிமித்தமாக கைவிட வேண்டியிருந்தது. அப்போது நான் தான் வகுப்பில் முதல் மாணவன், இது எனது நண்பன் வெங்கடாசலம் சேருக்கும் தெரியும், படிக்க வேண்டுமென்ற அவா பொங்கி வளிந்த

காலத்தில் கல்வியை தொலைத்து விட்டு வேலைக்கு சென்றதால் எனது இலட்சியங்கள் கனவுகள் குறித்து நான் எப்போது தனியாகவிருந்து பல தடவை அழுதிருக்கின்றேன், இந்த சூழ் நிலையில் தான். ஊர் கோயிலுக்கு அருகில் இருக்கும் ஆலமரத்தடியில் ஒரு முனிவர் வந்திருப்பதாக கேள்விப்பட்டு நானும் அங்கே சென்றேன். நீண்ட வரிசை, பலர் தங்கள் பிரச்சனைகளை சொல்லி கதை கேட்டார்கள், எனது தருணம் வந்தவுடன் நானும் சென்று அவருக்கு முன்பாக அமர்ந்தேன். என்னை முறைத்து பார்த்தவர் ஏன் இன்று பள்ளிக்கூடம் போகவில்லை என்று கோபமாக கேட்டார். இன்று இல்லை, இப்ப பத்து மாதகாலமாக பாடசாலை போகவில்லை, என்று கூறினேன், வீட்டில யாருக்கு வறுமையில்ல,

யாருக்கு துயரமில்ல, எல்லாரும் வறுமையிலிருந்து தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். வறுமையை காரணம் காட்டி பாடசாலையை இடை நிறுத்துவது குற்றம் என்று கூறினார். நான் வறுமையினால் பாதிக்கப்பட்டவன் அல்ல, வறுமையால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற வேண்டியே பாடசாலைக்கு செல்லவில்லை என்று கூறினேன். கல்வி, வாழ்க்கையை வாழ வைக்கும் என்று கூறினார். நான் துணிவாகவே வாழ்வதற்காகவே வேலைக்கு போக வேண்டிய நிலை வந்ததாக கூறினேன். அவர் என்னோடு தொடர்ந்தும் பேசினார். உன்னைப்போல் பலர் தம் இளம் வயதில், பாடசாலையை இடைநிறுத்தி வீதியில் நின்று, போதைக்கு அடிமையாகி இளம் வயதிலே அழிவார்கள் என்பதை அறிவாயா என்றார். ஐயா, நான் அழியக்கூடாது என்னுடன் வாழ்பவர்களும் அழியக்கூடாது என்பதற்காக உழைக்கப்போகின்றேன் என்றேன். கல்வியை சுவைத்தாயா என்று கேட்டார், சுவைத்தேன், அது பாடசாலை மதில்களை தாண்டியும் இருக்கின்றது. உனக்கு தெரியுமா? என்று கேட்டார், ஆம் ஐயா, கல்வி என்பது ஒரு தேடல், வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அதை தேடலாம், அதை ஒரு இடத்தில் ஒப்புவிப்பதுதான் பாடசாலை என்றேன். இப்போது அவரது கோபம் மறைந்து, முகத்தில் ஒரு புன்முறுவல் ஏற்பட்டது.

என் தோள்களைத் தொட்டவர், கொஞ்சம் நிமிர் என்றார் நிமிர்ந்தேன், என் கண்களில் வடிந்த நீரை அவர் கண்டார், உனக்கு ஒரு சிறிய கதை ஒன்று சொல்லட்டுமா என்றார், சொல்லுங்கள் ஐயா என்றேன், அவர் சொல்லத்தொடங்கினார்.

ஒரு அழகான, ஆலமரம், அதில் ஒரு அணில்கூடு, அடித்த புயல் காற்றால் கீழே விழுந்து விட்டது. இரை தேடச் சென்ற அணில் திரும்பி வந்து தன் கூட்டை தேடியது காற்றோடு காற்றாகிப் போனது தன் கூடு என்று உணர்ந்து அணில் அன்றிரவு மரத்தின் கொப்பிலேயே தங்கிவிட்டது, காலை விடிந்தவுடன் ஒரு காகம் அங்கே வந்து அணிலை நலம் விசாரித்தது, அணிலாரே, அணிலாரே, கூட்டை இழந்து மரக்கிளையிலே எப்படி உன் வாழ்க்கை போகப் போகின்றது? அணில் காகத்திற்கு கதை பகிர்ந்தது. இழந்தது கூட்டை தான், என் வாயையும், கால்களையும், வாலையும், கரங்களையும் ஆசைகளையும், கனவுகளையும் அல்ல, காற்றோடு போன கூடு கண்காணா இடத்தை நோக்கி போய்விட்டது. ஆனால் அந்த காற்று எங்கிருந்தோ கொண்டு வந்த நார்களும் இலைகளும் இங்கே இந்த மரத்திற்கு கீழே தான் கிடக்கின்றன. இருப்பது பறக்கும் போதே, எங்கோ கிடப்பதும் இங்கே பறந்து வந்து கால்களில் விழுந்து விடுகின்றது, என்று அணில் காகத்திற்கு கூறியது. காகம் இழப்பிற்கு பின்னால் இப்படியும் ஒரு கதை உண்டா? என்று விடைபெற்றது. என்று கூறிய முனிவர் நீ கல்விக்கான ஒரு கூடத்தை தான் இழந்தாய் கல்வியை இழக்கவில்லை. அது உன்னோடு தான் இருக்கின்றது என்ற கூறி நீ படிக்கும் இந்த பாடத்தில் பட்டம் யாரும் தரப்போவதில்லை. ஆனால் பலருக்கு நீ பட்டமாக இருப்பாய் என்று கூறினார்.

அன்பான பிள்ளைகளே நான் ஒரு நாள் கூடு இழந்த அணில் போல் இந்த கூடத்தை இழந்து நின்றேன். ஆனால் கல்வியை தொடர்ந்தேன். பலர் பட்டம் பெறும் வரைக்கும் பணத்திற்காக காத்திருந்தார்கள். நான் படித்த பாடத்தில் படிக்கும் போது பணமும் வந்தது, ஆனபடியால் பலரை வாழ்வித்தேன். இன்று என் பிள்ளைகள் இருவரும் பட்டதாரியாக உருவாகி வருகின்றார்கள். என்று கூறியவுடன் மாணவர்கள் கரகோசம் செய்தார்கள்.

சாமி வண. T. S. யோகசுவா

அதற்கு மேல் அவரால் பேச முடியாமல் உணர்ச்சி தழும்பியதால் அப்படியே நிறுத்திவிட்டு அவரும் மனைவியும் பிள்ளைகளுக்கு பரிசு வழங்கினார்கள். பரிசில் வழங்கிய நிறைவில் இவ்வருடத்துக்கான சிறந்த தமிழ் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி மதுவந்தி தனது பேச்சுத்திறனை வெளிப்படுத்தி தங்கப்பதக்கத்தை பெறுவதற்காக மேடைக்கு வந்தார். அவர் தனது பேச்சை தொடங்கு முன்பு சற்குணத்தையும் அவர் மனைவியையும் வணங்கி சென்றதை நான் ஆச்சரியமாகவே பார்த்தேன்.

மதுவந்தி தனது பேச்சை இப்படித்தான் பேசத்தொடங்கினாள்.

அன்பு பெற்றோர்களே பிள்ளைகளே, நான் பேச வந்த தமிழர் வாழ்வில் அறம் என்ற தலைப்பில் பேச்சை பேசுவதற்கு முன் ஒரு விடயத்தை கூறிவிட்டு பேசலாம் என்று நினைக்கிறேன். இன்று இப்பாடசாலையில் கற்கும் மாணவர்களில் நான் உட்பட 18 குடும்பங்களை சேர்ந்த மாணவ, மாணவிகள் 29 வரை இன்று வரை இடைவிலகாமல் இப்பாடசாலையில் படித்துக் கொண்டிருப்பதற்கு காரணம், சற்குணம் ஐயா தான், அவர் பழக்கிய மேசன் தொழிலை கற்றுக்கொண்ட எங்க அப்பாவின் உழைப்பு தான் இன்றுவரை எங்களை பாடசாலையில் கல்வியை கற்க செய்துள்ளது. ஒரு மாணவன் வறுமையினால் இடைவிலகி அவன் வீதியில் ரௌடியாகி குற்றம் செய்து சிறை சென்று வாழ்க்கையை தொலைத்துவிடும் இன்றைய சமூகத்தில், அன்று ஒரு மாணவன் இடைவிலகி, உழைத்து பலரையும் உழைப்புக்கு வழிநடத்தி, அறம் தவறாது வாழும் வாழ்க்கையை வாழ எங்கள் அப்பாக்களை உருவாக்கிய சற்குணம் ஐயா ஒரு பல்கலைக்கழகம் என்று கூறிய போது அரங்கம் அதிர கரகோசம் எழுந்தது. முன் வரிசையில் அமர்ந்திருந்த கதிரவேல் ஐயா தன் தோளில் போட்டிருந்த துண்டை எடுத்து தன் கண்களை துடைத்துக்கொண்டார்.

மதுவந்தி தமிழர் வாழ்வில் அறம் பற்றி பேசினாள் அது சற்குணத்தின் கதையை பற்றியதாகவே இருந்தது.



# வீரத்தாய்

நூற்றி இரண்டு வயது வரை ஒரு நோய் நொடியின்றி வாழ்ந்து மறைந்து போன முத்தம்மா அம்மாவின் நினைவாக இந்த நினைவு மண்டபத்தை சுவிசில் வாழ்கின்ற அவரின் மூத்த மகன் மோகனசுந்தரம் என்ற மோகன் கட்டி முடிச்சிருக்கின்றார். என்று மயில்வாகனம் தன் தொலைபேசியில் கூறிக்கொண்டிருந்தது எனக்கு அவ்வளவாக பிடிக்கயில்ல. அன்றைக்கும் நான் மயில்வாகனத்துக்கு சொன்னனான் இது அவரின் ஐந்து பிள்ளைகளும் சேர்ந்து செய்ததுகள். சும்மா சுவிசில இருக்கிற மோகன் பற்றி மட்டும் ஆக்களுக்கு சொன்னா, இங்க எங்களோட ஊரோட வாழ்ற, இந்த கட்டிடத்திற்காக தங்கட உழைப்ப, பணத்தை கொடுத்த மற்ற பிள்ளைகளுக்கு அது கொஞ்சம் துயரத்தையல்லோ கொடுக்கும்.

இவருக்கு எவ்வளவு சொன்னாலும் விளங்காது என்று நினைத்துக்கொண்டு கட்டிட திறப்பு விழாவுக்கான அழைப்பிதழ் கொடுக்கிற பேர் பட்டியல மயில்வாகனம் ஐயாட்ட கொடுத்தனான்.

மயில்வாகனம் ஐயா தான் எங்கட சன சமூக நிலையத்தின்ர தலைவர், நான் செயலாளர், மங்கையற்கரசி என்ற சொக்கலிங்கத்தின் மனுசி பொருளாளர். என்ன கனகு அழைப்பிதழ்ல உன்ர பேர வடிவா அப்பான்ர முழு பேரையும் கணேசலிங்கம் கனகரட்ணம் என்று போடாம, சும்மா க. கனகரட்ணம் என்று போட்டிருக்கிற, உங்கட அப்பா கணேசலிங்கம் இந்த ஊருக்கும் நாட்டுக்கும் செய்த சேவைக்கு நீங்கள் பிள்ளைகள், அவரின் பேரில ஒன்றும் செய்யேல்ல. அவரின்ரை பேரையாவது உங்கட பேரோட முழுசா போடுங்கடாப்பா என்று என்னைப்பார்த்து மயில்வாகனம் ஐயா சொன்னது சுருக்கென்று குத்தினது. முத்தம்மா அம்மாவின் பிள்ளைகள் ஞாபகார்த்த கட்டிடத்தை கட்டி போட்டினம் என்று நாங்களும் கட்ட முடியாது ஐயா. காலம் நேரம் வரும் அப்ப பார்ப்பம் என்று கூறினேன்.

முத்தம்மா பாட்டியின்ர வயசுக்கு அவர் இந்த ஊருக்கு செய்த பணிகள் குறித்த வாழ்க்கை குறிப்பு என்ற சிறிய நூலை வெளியிடுறதில ஊருக்குள்ள இருக்கிற சிலதுகள், தங்கட எதிர்ப்பை நாளைக்கு வெளியிட போயினமாம், அது நிகழ்வுக்கு வாற ஆக்களுக்கு கொஞ்சம் இடைஞ்சலா இருக்கப்போகுது என்று மயில்வாகனம் ஐயா கூறிய போது, யாரும் இங்க குழப்ப ஏலாது யாரப்பா இந்த கதைகள் கதைக்கினம். சொல்லுங்கோ இன்றைக்கே அத கிளியர் பண்ணிடுவோம் என்று கூறினேன்.

வேறு யாரு எங்கட பொருளாளர் மங்கயற்கரசி தான். "தாய்க்குலம் காத்த தலைமகள்" எங்கள் முத்தம்மா என்று எழுதியிருக்கிற கட்டுரையில பெண்கள் பாதுகாப்புக்கும், பெண்கள் மேம்பாட்டுக்கும் முத்தம்மா பாட்டி உழைத்த விடயங்கள் பற்றி கூறியது எல்லாம் பொய்.

வரலாற்றை திரிவுபடுத்தி எழுதி புத்தகத்தை வெளியிட ஏலாது என்று, மங்கயற்கரசி சொல்லுது நீ தான் அவவோடு கதைக்க வேணும் என்று, என்ர தலையில கட்டிவிட்டுட்டார். நாளை நடக்கவிருக்கும் நிகழ்வில எங்கட அரசாங்க அதிபர் பிரதம விருந்தினர், மற்றும் பல உள்ளூர் தலைவர்களும் கலந்து கொள்ளுற இந்த நிகழ்வில, நூல் வெளியீட்டுரைய எங்கட பாண்டியன் சேரும், ஆய்வுரைய தணிகாசலம் ஐயாவும் செய்யினம். வாழ்த்துரைக்கு எங்கட கிளிநொச்சி கம்பஸில இருந்து திருமதி ராதிகா சிவமணி வாறார். எல்லாம் நல்லாத்தான் போகுது, வெளிநாட்டில இருந்து மோகன சுந்தரம் வந்தாச்சி, ஊர் பிள்ளைகளுக்கு குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கு நினைவு பரிசில்கள், கேடயங்கள், என நிறைய கௌரவிப்புக்கள் எல்லாம் நடக்கப் போகுது. இந்த நேரத்தில ஏனப்பா மங்கயற்கரசி இப்படி புத்தகத்தை பற்றி கதச்சு குழப்புவான், அவள் ஒரு சபை குழப்பியும் கிடையாது. புருசன்ட கதை கேட்டு கூட்டத்தை குழப்புற ஆளும் இல்ல, வேறு யாரும் அவளுக்கு பின்னுக்கு இருந்து இயக்கவும் முடியாது. ஏன்தான் மனுசி குழப்புதோ தெரியல என்று நினைத்துக்கொண்டு மயில்வாகனம் ஐயாட்ட இருந்து விடைபெற்றேன். தம்பி மங்கயற்கரசியோடு கதைக்கிறத மறக்காத என்று மயில்வாகனம் ஐயா திரும்பவும் ஞாபகப்படுத்தினார்.

விட்டுக்கு வந்து வாசல தாண்டயில்ல என்ர மனுசி சாரதா தொடங்கிட்டா, இனி இந்த ஊர் வேல பாக்கிறத விட்டுட்டு நம்மட வீடு, பிள்ளைகளின்ர அலுவல பாருங்கோ, காசு இருந்தா கட்டிடம் கட்டுவினம், கதை எழுதுவினம், என்ன பச்சைப் பொய் எல்லாம் எழுதியிருக்குதுகளாம், என்று புறுபுறுக்க தொடங்கினா? ஏனப்பா மாதர் எல்லாம் பொங்குறியள், முத்தம்மா பாட்டி எவ்வளவு காலம் உங்கட மாதர் சங்கத்திற்கு தலைவியா இருந்தா எத்தனையோ சேவை எல்லாம் இந்த ஊருக்கு செய்திருக்கிறா என்று கூற, அவா பெண்களுக்கு என்ன சேவை செய்தா என்று கூறுங்கோ என்று என்னைப் பார்த்து கேட்டாள் சாரதா. சரி சரி நான் ஒருக்கா மங்கயற்கரசி அக்க வீடு வரைக்கும் போய்ட்டு வாரேன் என்று கூற, ஓ அவாட்டயே போறீங்க போங்க, நல்லா

கொடுக்குறதுக்கு தான் இருக்கிறா என்று கூற, நாளைக்கு அப்ப நிகழ்ச்சிய நிப்பாட்ட வேண்டியது தான் என்ற கலக்கத்தோட மங்கயற்கரசி அக்கான்ர வீட்ட போனேன்.

மங்கயற்கரசி அக்கா ஒரு ஓய்வுபெற்ற கிராம அலுவலர். இந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்து இந்த கிராமத்தில கிராம அலுவலரா பணியாற்றி ஓய்வுபெற்றவர், குறிப்பா பெண்கள் உரிமைகளுக்காக அன்றும், இன்றும், என்றும், குரல்கொடுக்கின்ற ஒரு தளபதி என்று தான் கூற வேண்டும். கிராமத்தில மட்டுமல்ல கிராமத்துக்கு வெளியேயும் பெண்கள் உரிமைக்காக குரல் கொடுக்கிறதால "தாய்க்குல விளக்கு" என்ற விருது அண்மையில எமது சமூக சேவை அமைச்சு அவருக்கு வழங்கி கௌரவிச்சது. அந்த நேரத்தில முத்தம்மா பாட்டி உயிரோட இருந்தவா, தன்னைமாதிரி பெண்களுக்கு உழைச்சாக்களுக்கு என்னதான் கொடுத்தவை, கண் கெட்ட உலகம் என்று சொன்ன கதை இந்த மங்கையக்கரசிக்கு யாரோ போய் சொல்லிப்போட்டினம். அதிலிருந்து மங்கயற்கரசிக்கும் முத்தம்மா பாட்டி குடும்பத்திற்கும் பனிப்போர் நடந்தது. இப்ப கட்டிட திறப்பு விழாவிலும் நூல் வெளியீட்டிலும் அது எதிரொலிக்க போகுது யார் நினைச்சது. என்று நினைத்துக் கொண்டு மங்கயற்கரசி அக்கான்ர படலைக்க போனான், அங்க பார்த்தா பெரிய சத்தமா கிடக்கு, ஆக்களும் கூடி நின்று பாக்குதுகள். ரோட்டில நின்று பார்த்துக்கொண்டிருந்த சனங்கள், இது என்னடாப்பா ஒரு புத்தகத்திற்கு இவ்வளவு சண்டையே என்று பேசிக்கொண்டு நின்றதுகள். நான் மெதுவா ஆக்கள விலத்திக்கொண்டு வீட்டுக்க போனா, அங்க முத்தம்மா பாட்டின்ர மூத்த மகன் மோகன சுந்தரமும் கடைசி மகள் தவபாக்கியமும் நின்று சத்தம் போட்டு கதைக்குதுகள்.

இவ தானாம் பெண்களின் காவலாளி, ஊர்ல நடக்கிற அநியாயத்திற்கு ஒரு நீதியும் இல்ல, பட்ட பகல்ல பச்ச குழந்தைகள திண்டுபோட்டு கிணத்துக்குள்ள தூக்கி வீசிப்போட்டு போறாங்கள். இவை என்ன பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்கினம். இந்த மானங்கெட்ட பதவிகளும் பரிசுகளும், இவளவைக்கு யாரு கொடுத்தது என்று தானே

நாங்களும் கேக்கிறம் என்று சத்தம் போட்டுக்கொண்டு நின்றவேளை மோகன் அண்ணா வலு அமைதியாக ஏதோ சொல்லப்பார்க்கிறார், ரெண்டு பொம்பளைகளும் விடுதுகள் இல்ல. ஒரு மாதிரி நான் போய், அந்த பெரிய மனுசன் ஏதோ சொல்ல பாக்குது. கொஞ்சம் கேளுங்களேனப்பா என்று ஒரு சத்தம் போடத்தான் கொஞ்சம் சத்தம் அடங்கினது.

அவயின்ர சத்தம் கொஞ்சம் அடங்கி அமைதியாயிருக்க, வெளியில வேடிக்கை பாத்ததுகள் எல்லாம் கதைக்க தொடங்கிட்டுதுகள். முத்தம்மா பாட்டி நடந்து திரிஞ்ச காலத்தில் ஒரு நாள் கூட பெண்களுக்கை எதிராக நடந்த வன்முறைகள் சார்ந்த விடயங்களுக்கு எதிராக நடந்த எந்த போராட்டத்திற்கு வந்ததா சரித்திரம் இல்ல. போற பொம்பிளைகளையும் இது தேவையில்லாத வேலை என்று மறிச்சுப்போடுவா என்று கனகாம்பிகா கதைக்க, ஏய் என்னடி கதைக்கிறா அவா தெய்வமடி முத்தம்மா பாட்டிய போல ஒரு பெண்களுக்கு காவலா இருந்த ஒரு ஆள் இந்த உலகத்தில இல்ல என்று பாசமலர் கதைக்க, வாய்ச்சண்டை கைச்சண்டையா மாறுற நிலைக்கு வந்திட்டுது. குடுமிய கட்டிக்கொண்டு முத்தம்மாவா. மங்கயற்கரசியா பெண் காவல் தெய்வங்கள் என்று முட்டி மோத தொடங்கிட்டுதுகள். எல்லாத்தையும் தூரத்தில நின்று பார்த்துக்கொண்டிருந்த கணபதி ஐயா மெதுவா நடந்துட்டே வந்து, பெண்டுகளே கொஞ்சம் நில்லுங்கோப்பா நான் சொல்லறத கேளுங்கோ. நான் சொல்லுறத கேட்டீங்கள் என்றால் நாளைக்கு இந்த நிகழ்வு நடத்துறதா இல்லையா என்று தீர்மானம் எடுக்கலாம் என்று கூற, வேர்த்து விறுவிறுத்து தலைவிரி கோலமாய் நின்ற பெண்கள் கொஞ்சம் அமைதியானார்கள். கொஞ்சம் பொறுமையா கேளுங்கப்பா, என்று கணபதி தாத்தா கதைக்கத்தொடங்கினார், முத்தம்மா அக்காவ உங்கள விட எனக்கு தான் கூடத்தெரியும். அவா அந்த ஊரின்ர வேர், அவா வந்து இங்க காடு வெட்டி குடியேறிய பின்பு தான் நாங்கள் எல்லாம் இங்க வந்தனாங்க. அவா ஒரு மூன்றாம் வகுப்புத்தான் படித்திருப்பா, ஆனால் உலகத்திற்கு பல உண்மைகளை வாழ்ந்து காட்டிட்டு போனவா, எங்கட

காலத்தில இப்ப மாதிரி இல்ல, இத விட மோசமா பெண்களை நடத்தினவங்கள். பொம்பளை பிள்ளைகள பச்சிளங் குழந்தைகளை மானபங்கப்படுத்தி கற்பழித்து, தெருவில வீசிப் போட்டு போன காலமது.

ஒரு இனத்தை அழிக்கிறதுக்கு அணுகுண்டு போட தேவையில்ல, இளம் சமுதாயத்திற்கு நல்லா குடிக்குறதுக்கு வாய்ப்ப ஏற்படுத்தி கொடுத்து அவங்கள ரவுடிகளாக, காவாலிகளாக உருவாக்கிட்டா காணும் மிச்சமெல்லாம் அவங்களே செய்து முடிச்சு இனத்த அழிச்சுப்போடுவாங்கள் என்று எங்களை அழிக்க நினைச்சவங்கள், கண்டுபிடிச்சிருந்த புதிய யுக்தி அந்தக்காலத்தில இருந்திச்சி. ஒரு இனம் இன்னொரு இனத்த அழிச்சாத்தான் அது இன அழிப்பு, தாங்களே தங்கள அழிச்சுக்கொண்டா எந்த நாடடில யாருக்கிட்ட போய் நீங்க நீதி கேட்பியள், அப்படி ஒரு காலத்தில இந்த சமூகம் அழிஞ்சு கொண்டிருந்தது. களவு, கற்பழிப்பு, ரௌவுடித்தனம். காவாலித்தனம் இத பார்த்து படிச்ச சனங்கள் எல்லாம் மூட்டைய கட்டிக்கொண்டு வெளிநாடுகளுக்கு ஓடிட்டுதுகள். மிஞ்சியிருந்த சனங்கள் இந்த போதைக்கு அடிமையான கூட்டத்திற்கு அடிமையாய் இருந்து தங்கட வாழ்க்கைய தொலைச்சுக்கொண்டிருந்த காலத்தில முத்தம்மா பாட்டி பெண்களின் காவலாளராக ஒரு புதிய நிலைப்பாட்டை எடுத்தவா.

அப்ப இந்த மங்கயற்கரசி இளம் பெட்டை, இவாவும் அவரோடு சேர்ந்து தான் ஊர் ஊராய் போய் சனங்களுக்கு விழிப்பு கொடுத்தவ. ஆனால் பிறகு இரண்டு பேரும் கொள்கையில பிரிஞ்சிட்டினம்.

இவ்வளவு நேரமும் அமைதியாய் கேட்டுக்கொண்டிருந்த மோகன் ஐயா ஏதோ சொல்ல வாயெடுத்தார், என்றாலும் கணபதி ஐயா விட்ட பாடில்லை தொடர்ந்து பேசினார்.

பெண்கள் ஆண்களால பாதிக்கப்படினம் என்றது உண்மை, ஆனால் எல்லா ஆண்களுக்கும் ஒரு பெண் தான் அடித்தளம்.

தாயாக, தங்கையாக, அக்காவாக, மனைவியாக, மகளாக பல வடிவங்களில் இருக்கும் ஒரு பெண் சமூகத்திலிருந்தே ஒரு ஆண் பெண்ணுக்கு எதிரான வன்முறையாளனாக மாறுகின்றான். ஆகவே ஆண்களின் உருவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்பது தான் முத்தம்மா அக்காவின் கொள்ளை. ஒரு பெண் பாதிக்கப்படும் போது கொதித்தெழும் பெண்களும், பெண்கள் அமைப்புக்களும் தங்கள் வீட்டில் இருக்கும் ஆண்களை நிலை தவறாத ஆண்களாக இருக்க, பாதுகாக்க பெண்களுக்கு சொல்லிக்கொடுப்பதில்லை என்பது தான் முத்தம்மா பாட்டியின் வாதம்.

அப்பாவாக, தாத்தவாக, அண்ணனாக, தம்பியாக, மகனாக, மருமகனாக தங்கள் வீட்டில் இருக்கும் ஆண்கள் எப்படி பெண்களை பார்க்கின்றார்கள், எப்படிப்பட்ட முறையில் பெண்களை அணுகுகின்றார்கள் என்பதை வீட்டில் இருக்கும் அம்மா, மாமி, மனைவி, மகள், சகோதரிகள் அவதானித்துக கொண்டிருப்பதும், அவர்கள் பிழையான பாதையில் செல்கின்றவர்கள் என்று கண்டால் உடனடியாக வயது வேறுபாடின்றி வீட்டுக்குள் பெண்கள் புரட்சி செய்தால் அவர் வீதிக்கு வரத்தேவவையில்லை என்பது தான் முத்தம்மா பாட்டியின் நிலை.

இதுவரை பொறுமையாக இருந்த மோகன் ஐயா தயவுசெய்து இங்க நிக்கிற எல்லாருக்கும் நான் ஒரு உண்மைய சொல்ல வேண்டும் என்றதிற்காகத்தான், எங்கட அம்மான்ர பேரில இந்த நினைவாலயத்த கட்டினாங்க. பெண்களுக்கான பாதுகாப்புக்கான அரண்களாக ஆண்களை எப்படி மாற்ற முடியும் என்றதில என்ர அம்மா வாழ்ந்து காட்டின வாழ்க்கைய பற்றித்தான் அந்த நூலில எழுதியிருக்கு. அதை முதல்ல வாசிச்சு பாருங்க, பிறகு ஏதும் குறையிருந்தால் கதைப்போம். நாளைக்கு அந்த நிகழ்வ குழப்பாதயுங்கோ என்று தாழ்மையாக கேட்கிறேன் என்றார். எல்லாரும் அமைதியாக இருந்தவை, மங்கயற்கரசி அக்கா, நான் அந்த நிகழ்வுக்கு வர மாட்டேன் என்று சொன்னவா.

உடனே மோகன், நீங்கள் பெண்களின் காவலர் என்றால் ஒரு புது முறையில பெண்களின் பாதுகாப்ப மேம்படுத்துற விசயத்த நீங்க ஏற்கிறீங்களோ, இல்லையோ கட்டாயம் வருவியள் என்று சொல்லிவிட்டு புறப்பட்டார். எல்லா சனமும் கொஞ்ச கொஞ்சமாய் போன பின்பு, நானும் வெளிக்கிடுறேன் என்று சொல்லிப்போட்டு வெளிக்கிட, மங்கயற்கரசி அக்கா தம்பி நீ உன்ர மனுசி உன்னை கண்காணிக்குறத விரும்புவாயோ என்று சொல்லிவிட்டு போ என்றார். ஐயோ அக்கா நான் இன்றைக்கும் ஒரு குற்றமும் பழியும் இல்லாமல் இருப்பதற்கு என்ர அம்மாவும், என்ர அக்கா, மனுசியும் தான் காரணம் என்று கூறிவிட்டு வீட்டை நோக்கி புறப்பட்டேன்.

வீட்டுக்கு போகாமல் புத்தக ஆய்வுரை செய்யும் தணிகாசலம் ஐயான்ர வீட்ட சைக்கிள விட்டன். என்ன தான் முத்தம்மா பாட்டிய பற்றி அந்த புத்தகத்தில எழுதியிருக்குது, எப்படி அத மங்கயற்கரசி அக்கா மோந்து பிடிச்சவா என்ற யோசனையுடன் தணிகாசலம் ஐயாட்ட போனேன், அவர் முத்தத்தில கிடந்த சாய்வு நாற்காலியில முத்தம்மா பாட்டியின்ர புத்தகத்த வச்சு வாசிச்சுக் கொண்டிருந்தார், என்னடாப்பா இந்தப்பக்கம், ஐயா நீங்க நாளைக்கு செய்யிற புத்தக ஆய்வுக்கு ஒருக்கா ஞாபகப்படுத்த வந்தனான் என்று கூறினேன்.

நானும் பல மேடையில, பல புத்தகங்கள் ஆய்வுரை செய்திருக்கிறன் ஆனால் முத்தம்மா பாட்டியின்ர வாழ்க்கை குறிப்பு என்ற இந்த நூல் நம்மட ஊர் பெண்களுக்கான ஒரு வரம் என்று தணிகாசலம் ஐயா கூறினார். என்னதான் ஐயா எழுதியிருக்கினம் இதில, ஒருக்கா சொல்லுங்கையா என்று கூறிக்கொண்டு முற்றத்திலிருந்த வாங்கில குந்தினான்.

தம்பி பெண்களை தெய்வமாக வணங்கும், போற்றும் ஒரு சமூகம் நாங்கள் ஆனால் இன்றைய நவீன உலகத்தில பெண்களை ஒரு போதையா, தன்னுடைய காம தேவைகள், இன்பங்களை, ஆசைகளை தீர்த்துக்கொள்கின்ற ஒரு இன்ப பொருளா இயல்பாகவே ஆண்கள் பார்க்கிறாங்க.

இல்லாட்டி பெத்த புள்ளய தன்ர சொந்த சகோதரிகள தனது காம இன்பத்திற்கு பலியாக்கிற அநியாயத்த நாங்க எங்க கேள்விப் பட்டிருக்கிறோம்.

இதற்கு முத்தம்மா பாட்டி ஒரு விதிவிலக்கா தன்ர வாழ்க்கைய வாழ்ந்து காட்டியிருக்கா.

உனக்கு தெரியும் தானே அந்த அம்மாவுக்கு 4 ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும். அவ தன்ர பிள்ளைகளுக்கு காலையில எழுந்தவுடன் சொல்லிக் கொடுக்கும் வசனத்தை இன்றைக்கு வரைக்கும் இந்த பிள்ளைகள் கடைப்பிடிக்குது மட்டுமல்லாமல் அவ உருவாக்கின "பெண்களுக்கான ஆண்கள்" "MEN FOR WOMEN" என்ற அமைப்புக்களில் இருக்கிறவர்கள் எல்லாரும் வீடுகள்ள சொல்லிக்கொண்டு வருகினம், எந்த வீட்டில எல்லாம் இந்த ஒழுங்கை நாள்தோறும் தங்கட பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுத்தாங்களோ அந்த வீடுகளிலுள்ள ஆண்கள் எல்லாரும் அவர்கள் சமூகத்தில பெண்களின் காவலர்களா இருக்கிறாங்க என்பது மட்டுமல்ல, அப்படிப்பட்ட ஆண்கள் எல்லாரும் தாங்கள் எப்படி பெண்களுக்கு பாதுகாப்பா இருக்கிறோம் என்பது பற்றி எழுதின பல ஆக்கங்கள் இதிலிருக்குது. என்று கூறினார். ஐயா நீங்க சொல்லுறது உண்மை. என்ர அம்மாவும் எனக்கு அந்த வசனத்தை சொல்லித்தந்தவா இப்பையும் காலையில எழுந்தா முதலாவது நான் படுக்கையிலே இருந்து சொல்லுற முதல் வசனம் அது தானய்யா. என்னுடைய மனைவி என்னுடைய மகன்மாருக்கு அத சொல்லிக் கொடுத்து அவங்களும் அத சொல்லுறாங்கள்.

> என்னை கருத்தாங்கியவள் என் அன்னை, என் உயிரே அவள் உதிரம், அவள் உதிரத்தால் உருவான என் தங்கை, என் தமக்கை அவர்களும் என் அன்னையே. அன்னை என்பது உறவு மட்டுமல்ல அது ஒரு தத்துவம், அது அன்பு,

அனைத்து பெண்களும் அன்னைகளே, அன்னையின் வடிவமாகின்றவர்களே. அத்தனை பெண்களும் அன்னையானால் அன்னைகள் மானம் காத்திட நான் இருப்பேன். கட்டியவள், கரம் பிடித்தவள் கூட அன்னையின் ஒளி வடிவமே. அன்னையை போல் அனைத்து பெண்களும் அத்தனை பேருக்கும் நான் காவல், காவல். என் பார்வையில் காமம் இல்லை, பார்க்கும் இடமெல்லாம் அன்னையின் அருள் வடிவமே, அருள் வடிவமே.

என்று தொடர்கின்றது. இதை பலநாள் பாடமாக்கி சொல்லி வாழ்நாள் முழுவதும் சொல்லியிருக்கின்றேன் என்று கூறினேன். தணிகாசலம் ஐயா இதை வாழ்க்கையில கடைப்பிடிச்சவங்க எல்லாரும் மது அருந்தாம வாழ்ந்திருக்கிறாங்க, ஏனென்றால் இப்படிப்பட்ட இலட்சியங்களை கடைப்பிடிக்க வேண்டுமென்றால் மது அதற்கு ஒரு தடையாயிருக்கும் என்பதை உணர்ந்து வீட்டில மது குடிக்காத ஆன்மாக்கள உருவாக்கிற தாய்மாருக்கு மகுடம் சூட்டி "வீரத்தாய்" என்று தொடர்ந்து முப்பது வருடமா முத்தம்மா பாட்டி விழா எடுத்து, ஆயிரக்கணக்கான தாய்மாரை கௌரவிச்சிருக்கிறா, குடிக்காத பிள்ளைகளை பெற்ற தாய் மட்டுமே வீரத்தாய் என்பதுதான் முத்தம்மா பாட்டியின் சபதம். ஒருவன் குடிகாரன் இல்லை என்பது அவன் தாய்க்கு சூட்டும் மகுடம் என்று எல்லா வீடுகளிலும் ஒரு வாசகம் வாசலில் இப்பொழுதும் ஒட்டப்பட்டிருக்கிறது என்று நானும் கூறினேன்.

இப்ப தம்பி என்ன தான் நாம புள்ளைகள வளர்த்தாலும், போனும், நட்பும் என்று இந்த பூகோளமய உலகத்தில பிள்ளைகள் நாசமாய் போகுதுகள். ஆனால் அன்னையை பார்க்கும் பார்வையை போல எல்லா பெண்களையும் பார்க்க தூண்டும் ஒரு பார்வையை ஒரு தாய் உருவாக்கி விட்டால் அவள் வீரத்தாய் தான் என்று கூறினார். நேரமாகி விட்டது என்று கூறிவிட்டு வீடு நோக்கி பயணமாகினேன்.

என் வீட்டின் முற்றத்தில் எனக்காக காவல் நின்ற என் மனைவி, என் தாயார், என் மகள்கள் எல்லாரும் எங்க போயிட்டு இவ்வளவு நேரமாகி வாறியள் என்று ஒருசேர கேட்கும் வழமையான கேள்விக்கு வழமையை போல் முழு விளக்கமும் கொடுத்த பின்பு தான் இரவு சாப்பாட்டுக்கு போனோம். முத்தம்மா பாட்டி உருவாக்கிய வீரத்தாய்களின் வரிசையில் என் வீட்டு தெய்வங்களும் இருக்கும் வரை என்னாலும் என் மகனாலும் எந்த வீட்டு பெண்களுக்கும் ஆபத்தில்லை என்ற பெருமூச்சுடன் நின்மதியுடன் படுக்கையில் கண்மூடினேன்.

கனவில் ஒரு முனிவர் திடீரென தோன்றி அணுகுண்டை விட போதை சக்தி வாய்ந்தது. ஆனால் ஒரு தாயின் கடமை அதை விட சக்திவாய்ந்தது என்று கூறி மறைந்தார். கண் விழித்தேன் யாரோ எழுதிய கவிதை என் தலைமாட்டில் சிந்திக்கிடந்தது. விளக்கை கொழுத்தி கூட்டிச்சேர்த்தேன் அது பேசியது.

காடும் எரியும் போது
அது காடு தானே
எரிகின்றது என்றோம்
காற்றோடு வந்து
மோதிய புகை
அந்த காட்டின்
கதை சொன்ன போது
காது கொடுக்க நேரமில்லை

நேற்று நம் ஊரின்
எல்லை வரை தீ பரவி
விட்டது என்று யாரோ
சொன்னது உண்மை தான்
வந்து போகட்டும்
அவர்கள் பார்த்து
கொள்வார்கள் என்று
தான் கண்களை
மூடிக்கொண்டோம்

இன்று காலை முற்றத்தில்
நின்ற பூவும், பிஞ்சும்
கருக்கி கொட்டிய தீயை,
வீட்டுக்குள் இருந்து
எட்டி நின்று
வேடிக்கை பார்த்தோம்

கொஞ்ச நேரத்தில்
வீடு பற்றி எரிகின்றது
என்று வீதியில்
போகின்றவர் கூவிச் சொல்ல
யார் யார் வீடோ
தெரியவில்லை என்றோம்

சிரசில் தீ சுட்ட பின்னும்
தீயின் நடுவில் வெந்த பின்னும்
தீண்டுதல் இன்பம் கண்டோம்
என்று தத்துவம் பேசுவோம்

ஏனென்றல்
அது "நாம்"






# ஊறுகாய்

இந்த இடத்தில தான் கடை இருந்தது என்று தர்மரத்தினம் தன் கடையிருந்த இடத்தை தன் பேரப்பிள்ளைகளுக்கு காட்டினார். கூடிவந்திருந்த பலர் தர்மரத்தினம் அவர்களோடு ஆரம்ப நாட்களில இந்த சந்தையில் வியாபாரம் செய்தவர்கள், சிலர் அவர்களின் பிள்ளைகள், தொடர்ந்தும் பரம்பரையாக இந்த சந்தை வியாபாரத்தை செய்து வருகிறார்கள். நான் இந்த சந்தைக்கு வந்து இப்ப ஐந்து வருடங்கள் தான் ஆகின்றது, ஆனால் சந்தை வியாபாரத்தில் தர்மரத்தினம் ஐயாவை குறித்து பேசாதவர்கள் இல்லை, கூடி வந்திருந்தவர்கள் தர்மரத்தினம் ஐயாவை, நீண்ட நாட்களுக்கு பின்பு கண்டிருந்தபடியால், இப்போது அவருடைய வியாபாரமும் முன்னேற்றமும் குறித்து, ஆவலாய் விசாரித்தார்கள்.

நானும் என்னை அறிமுகப்படுத்த விரும்பினேன். அவர் என்னை பார்த்து நீங்கள் புள்ள புதுசு போல என்று சொல்ல ஐயா நான் இப்ப 5 வருடம் தான் இந்த சந்தையில வியாபாரம் செய்றன், என்ர பேர் வான்மதி, என்ர கணவர் யுத்தத்தில இறந்த பின்னர், பிள்ளைகள் வளக்கிறதிற்கு வசதியா கிடைச்சது கூலித்தொழில். நீண்ட காலமா திருச்செல்வம் அண்ணன் காணிக்க தான் வேலை செய்தனான். சந்தைக்கு நான் தான் கீரைகொண்டாறனான், நீண்ட நாளாய் இந்த சந்தையில ஒரு வியாபாரியா வரணும் என்று ஆசைப்பட்டு ஐந்து வருடங்களுக்கு முன்பு தான், இதில கீரை விக்கிறதுக்கு இடம் கிடைச்சது, இப்ப மரக்கறி சந்தைக்க இடம் கிடைச்சது, அதில தான் எங்கட குடும்பம் சீவியம் போகுது என்று கூறினேன். நல்லது புள்ள நல்ல வியாபாரியாய் இரு என்று கூறி விட்டு மற்றவர்களோடு கதைக்க தொடங்கினார், "நல்ல வியாபாரியாய் இரு" என்று அவர் சொன்னது அவரது பொன் மொழி என்று எல்லோரும் சொல்வார்கள், எனக்கு அவரின்ர வாயிலிருந்து இந்த ஆசீர்வாதம் கிடைச்சது மிக மகிழ்ச்சியை தந்தது.

தர்மரத்தினம் ஐயாவை பற்றி இந்த சந்தையில நீண்ட காலமா வியாபாரியா இருக்கிற காமாட்சியக்கா கதை கதையா சொல்லுவா, நல்ல மனுசன், மனிதாபிமானத்திற்கு அவர் தான் அடையாளம், நேர்மையா வியாபாரம் செய்ததால் குடும்பத்தில சரியா சிரமப்பட்டவர். வறுமை அவரை போட்டு ஆட்டி படைச்சது, என்றாலும் அவர் தன்ர கொள்கையில உறுதியாயிருந்ததால இன்றைக்கு நல்லாயிருக்கிறார் மகாராசன், என்று அடிக்கடி கூறுவார். தர்மரத்தினம் ஐயா இப்ப இங்கிலாந்தில இருக்கிறார், அவரின்ர இரண்டு பிள்ளைகள் அமெரிக்காவிலும் இரண்டு பிள்ளைகள் தென் ஆபிரிக்காவிலும் இருக்கிறாங்க, யுத்தம் இந்த நாட்டிலிருந்த பல குடும்பங்களை உலகம் முழுவதும் சிதறடித்தது, ஆனால் தர்மரத்தினம் ஐயா யுத்தத்தில அவரும் காயப்பட்டவர், ஒரே மகளை இழந்தவர், சொத்து சுகம் எல்லாம் இழந்து வவுனியா அகதி முகாமிலிருந்து ஒரு பேக்கோட தான் திரும்பி வந்தவரென்று சொல்லுவினம், மீள்குடியேற்றத்திற்கு

பிறகு இந்த சந்தையில எல்லா வியாபாரிகளை போல அவரும் தன்ர சந்தை பங்கை கைவிடாம, வியாபாரம் செய்தவர், ஆனால் இன்றைக்கு இவர் இந்த சந்தையில இல்ல, இந்த நாட்டிலேயும் இல்ல, உலகத்தில எங்கோ ஒரு இடத்தில உயர்ந்த மனிதராய் வாழ்றாரு என்ற "சந்தையிலிருந்து சாதனை வரை" என்று ஒரு புத்தகமே எழுதலாம் போல என்று, நினைத்துக்கொண்டு நான் என் மரக்கறிக் கடைக்கு திரும்பி வந்து விட்டேன்.

என்னம்மா தர்மரத்தினத்த பார்த்த நீயே இங்கால பக்கம் வருவாரோ இல்ல நான் ஒருக்கா போய் பாத்திட்டு வரட்டே என்று கேட்டார். காமாட்சி அம்மா, எல்லா பழைய ஆக்களையும் பாத்திட்டு தானாம் போவாராம் என்று கூறினவ,நீங்கள் அவரோடு வியாபாரம் செய்தநீங்க, உங்களை பார்க்காமலா போகப் போறார், இருங்கோ வருவார் என்று கூறினேன். இன்றைக்கு வழமை போல சந்தையில வியாபாரம் அவளவா களைகட்டயில்ல, கொஞ்ச மரக்கறிகள் தான் இருந்தது, தண்ணி தெளித்து வைத்திருந்தேன். மரக்கறி சாப்பிடுறதால வருத்தங்கள் வருதென்று "நஞ்சு", கிருமி, மருந்து என்று எல்லாரும் மீனையும் இறைச்சியையும் வாங்கி சாப்பிடுதுகள். அப்ப நாங்க என்னத்த சாப்பிடுறது என்று நினைத்துக்கொண்டு, பேசாம தோட்ட வேலைக்கே போயிரலாம் போல இருக்குது காமாட்சி அம்மா என்று கூறினேன். அவாவும் உனக்கு அதுதான் சரி, பிள்ள குட்டிகளோட இந்த வருமானத்தில எப்படியப்பா குடும்பம் நடத்திறது. என்று புலம்பிக் கொண்டு நிற்க தர்மரத்தினம் ஐயா எங்கட கடைத்தெருவால வந்து கொண்டிருக்கிறார் போல தெரிஞ்சுது, ஓ, அவர் தான் வாறார், இன்றைக்கு ஒருக்கா நேரயே கேட்டிடுவோம். என்ன தான் சொல்லப் போறார், மனசில இருக்கிறத கேக்கிறதிற்கு ஏன் பயப்படுவான் என்று நினைத்துக் கொண்டு நானும் காமாட்சி அம்மாவோடு சேர்ந்து ஐயாவை வரவேற்றோம். ஆ, நீ வான்மதி இது தான் உன்ர கடையா என்று எனது தோள்களை தட்டினார். என்னப்பா எல்லாம் காஞ்சி போய் கிடக்குது புது மரக்கறி இன்றைக்கு வரயில்லையோ என்று காமாட்சி அம்மாவை பார்த்து கேட்டார்.

அத ஏன் பேசுவான் ஐயா என்று சந்தை வியாபாரத்தில இப்ப இருக்கிற சிரமத்தை எல்லாம் கொட்டி தீர்த்தவா இன்னும் தான் நம்ம ஊருல வாங்கிற ஆக்களையும் கொடுக்கிற ஆக்களையும் மாற்றம் வரயில்ல என்று சொல்லிகொண்டு, ஒன்றுக்கும் யோசிக்காதேயுங்கோ கெதியென்று உங்கட மரக்கறி கடைக்கு எல்லாம் ஒரு நல்ல காலம் பிறக்க போகுது என்று கூறிக்கொண்டு அடுத்த கடைக்கு போக தொடங்கினார், நான் பின்னாக சென்று ஐயா, நானும் எனது பிள்ளைகளும் உங்கள ஒருக்கா வந்து சந்திக்க இருக்கிறமையா, சந்திக்கலாமே என்று கேட்டநான், என்னபுள்ள மூன்று நாளைக்கு இங்க தான் நிற்க போறன், கிளிநொச்சி குளத்திற்கு முன்றோட்டு தெரியும்தானே, அதால வந்து என்ர சகோதரியின்ர பேர் சீதான்ர வீடு எதென்டு கேட்டா காட்டுவினம், வாருங்கோ புள்ள, மத்தியானத்திற்கு பிறகு வீட்டில தான் இருப்பேன் என்று கூறினார்.

எனக்கு மிகுந்த மகிழ்ச்சி, வீட்டுக்கு நேரத்தோடு வந்து சேர்ந்தேன், மகள் வாணியையும் மகன் நகுலனையும் இன்றைக்கு A/L வகுப்புகள் இரண்டு பேரையும் நிப்பாட்டி போட்டு என்னோட வாங்கோ தர்மரத்தினம் ஐயா வீட்ட போயிட்டு வருவம் என்று கூறினேன், மகன் நகுலன் இந்த வருடம் A/L வர்த்தகம் எக்சாம் எடுக்க போறான், மகள் இப்ப தான் A/L படிக்க தொடங்கியிருக்கிறா, இப்படிப் பட்ட மனுசர போய் சந்திச்சா தான் எங்கட பிள்ளைகளுக்கும் வாழ்றதிற்கு வழி தெரியும்.

இன்றைக்கு ஊருல யாரைப் பார்த்தாலும் படிச்சவ, படிக்காதவ, ஏழை, பணக்காரன் வேறுபாடின்றி ஏமாத்திறது, களவெடுக்கிறது, குழிபறிக்கிறது, தட்டிப்பறிக்கிறது என்று வாழ்ந்திட்டு இருக்கிறோம், மனிதர்களை காண்பது அரிதிலும் அரிதாகி விட்டது, என்ன செய்ய இந்த மண்ணில வந்து பிறந்திட்டோம், என்று நினைத்துக் கொண்டு, தர்மரத்தினம் ஐயாவின் வீட்டை நோக்கி மூன்று பேரும் சைக்கிள்லை வந்து சேர்ந்தனாங்க.

வாசலிலே நிறைய பிள்ளைகள் இருந்து கதைத்து கொண்டிருந்ததுகள். எல்லாரும் ஐயான்ர பேரப்பிள்ளைகள் போல கிடந்தது. உள்ளுக்கு ஏதோ சோடிச்சு கொண்டிருந்தவ, நான் போக, சந்தயில கண்ட பேரப்பிள்ள என்ர பேர மறக்காம, கொச்சை தமிழில் வாங்க வான்மதி அக்கா என்று கதிரையில கொண்டு போய் இருத்தினது.

நாங்கள் போய் கொஞ்ச நேரத்தில, கனக்க ஆக்கள் வர தொடங்கிட்டினம், பிறகுதான் தெரிஞ்சது ஐயாவுக்கு இன்று எழுபதாவது பிறந்த நாளாம், அட இன்றைக்கு அவரிட்ட எப்படித்தான் தனிய கதைக்கிறது. என்று யோசித்து கொண்டு நிற்குறதுக்குள்ளேயே, தர்மரத்தினம் ஐயா வணக்கம் வான்மதி என்று கூறிக்கொண்டு வீட்டுக்குள்ள இருந்து வெளிய வந்தார், இவர்கள் தான் பிள்ளைகளா? என்று கேட்டுவிட்டு, என்ன படிக்கிறீர்கள் என்று கேட்டார், இரண்டு பேரும் படிக்கிற வகுப்ப சொல்ல, நல்ல மனிதர்களாக இந்த உலகத்தில எல்லா சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வீங்க என்று கூறினார். எனக்கு ஏதோ கடவுளே வந்து வாழ்த்தின மாதிரி இருந்திச்சு.

சரி வான்மதி நீயும் பிள்ளைகளும் வந்தது எனக்கு சந்தோசமா இருக்குது பிறந்த நாள் முடிஞ்சு சாப்பிட்டு தான் போகணும், சாப்பிடுற நேரத்தில ஏதோ கதைக்க வேணும் என்று சொன்னநீ தானே, அப்ப கதைப்பம் என்று கூறி விட்டு நகர்ந்தார்.

நிறைய பேர், எல்லாரும் பெரிய உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் என்று பலரும் வந்திருந்தார்கள். எனக்கு பெரும் கூச்சமாக இருந்தது இந்த கூட்டத்துக்குள்ள நாமும் வந்து நிற்கிறோமே என்று எல்லாரும் தங்களுக்குள்ளே கதைத்து கொண்டிருந்தார்கள். ஐயா தருமரத்தினம் தன் பேத்தி ஒரு பிள்ளையை கூப்பிட்டு, எங்களை காட்டி ஏதோ சொன்னார், அந்த பிள்ளை எங்கள் பக்கத்தில் வந்திருந்து நகுலனுடனும், வாணியுடனும், ஆங்கிலத்திலும் தமிழிலும் கதைத்துக் கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் ஒரு வாகனம் முன்னுக்கு வர, பல, மோட்டார் சைக்கில்கள் மற்றும் பொலிசு வாகனம், யீப்புகள் என்று கட கடவென்று வாகனங்கள் வந்தது எனக்கு பக் பக் என்று மனம் பதைத்தது, ஆனால் வாகனத்தில் வந்தவர், இலங்கை பொருளாதார அமைச்சர் என்று பக்கத்திலிருந்த ஆறுமுகம் ஐயா கூறினார். ஆறுமுகம் ஐயாவும், தர்மரத்தினம் ஐயாவும் ஒரே வயதை ஒத்த வியாபாரிகள் என்று சொல்வார்கள், அவரும் இப்ப தான் வந்து எனக்கு பின்னால இருந்தவர் போல.

தர்மரத்தினம் ஐயா அமைச்சரை வரவேற்றார், அவருக்காக காத்திருந்தது போல, அவர் வந்தவுடன், கேக் வெட்ட ஆயத்தமானார்கள். ஆனால் என் மனம் எங்கெங்கோ ஓடியது ஒரு சாதாரண சந்தை வியாபாரிக்கு இவ்வளவு மரியாதை ஏன், இவர் எப்படி முன்னேறினார் என்பதை அவரிட்டயே கேட்டு தெரிஞ்சு கொள்ள வேணும் என்று யோசித்து கொண்டிருந்தேன். கேக் வெட்டி முடிந்தது, அமைச்சர், எழுந்து தர்மரத்தினம் ஐயாவை வாழ்த்தி பேசினார். இலங்கையில் முக்கியமான அமைச்சு பதவியான பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் ஒரு தமிழன் இருக்கிறார் என்று சொன்னார்கள், அட இவர் தான் அவர் என்று யோசித்து கொண்டிருக்க, நன்றாக அழகு தமிழில் வாழ்த்தி பேசத்தொடங்கினார்.

ஒரு மகிழ்ச்சியான நேரம், இந்த கிளிநொச்சி மண்ணின், மாணிக்கம் என்று போற்றப்படுகின்ற ஐயா தருமரத்தினம் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களே, அரசாங்க அதிகாரிகளே, வியாபாரிகளே, பொது மக்களே, குடும்ப உறவுகளே, என்று சொல்லத்தொடங்க, அட இவ்வளவு முக்கியத்தர்கள் இங்க வந்திருக்கிறார்களா என்று யோசித்தேன்.

அவர் தொடர்ந்து பேசினார், உலக வர்த்தக சங்கத்தின், தலைவராக கடந்த 10 வருடங்கள் தொடர்ந்து பணியாற்றி வரும் திரு தர்மரத்தினம் அவர்கள் உலகளாவிய பொதுமகனாக நோக்கப்படுகின்ற ஒருவர், இவர் நமது கிளிநொச்சி சந்தையில்

ஒரு சாதாரண வியாபாரியாக தான் தன் வாழ்க்கையை தொடங்கி, பல காலம், இந்த சந்தையில் தொழில் செய்து வந்தவர், இன்று உலகளாவிய வியாபார நிறுவனமான "ஊறுகாய்" நிறுவனத்தின் தாபக தலைவரும், உலக பல பொருளாதார நிறுவனங்களில் பல உயர்ந்த பதவியில் வசித்து வருபவருமான தர்மரத்தினம் அவர்கள், இலங்கையின் பொருளாதார மேம்பாட்டின் முக்கிய புள்ளியாக பார்க்கப்படுகிறார்.

அவருடைய அழுத்தம், செல்வாக்கு காரணமாக இன்று இலங்கையில் தமிழ் மக்களுக்கான, பாதுகாப்பு, மேம்பாடு, போன்ற விடயங்களை அரசாங்கம் செய்ய முற்படுகின்றது. குறிப்பாக நான் மட்டுமல்ல பல தமிழர்கள் முக்கிய அமைச்சு பொறுப்புகளில் இருப்பது, அவருடைய அழுத்தம் காரணமாகவே, என்று கூற ஒரே கரகோசம் ஏற்பட்டது. தொடர்ந்து அமைச்சரின் தலைமையில் பலரும், வாழ்த்தி பேசினார்கள். நிறைவாக தர்மரத்தினம் ஐயாவை பேசுவதற்கு அழைத்தார்கள்.

நான் ஒன்றும் பெரிய பேச்சாளன் இல்ல, நான் அமைச்சர் சொன்ன மாதிரி இன்றைக்கு உலகத்தில பெரிய ஆள், அதற்கு காரணம் என் " மனம்" தான் ஒரு வியாபாரி எப்படி வாழ வேண்டும் என்பதற்கு நான் இலக்கணமாக விரும்பினேன். இன்று வரை நானும் எனது பிள்ளைகளும் அதை செய்து வருகின்றோம். என்று கூறிவிட்டு, இன்றைக்கு காலையில் நான் வியாபாரம் செய்த கிளிநொச்சி சந்தையை எனது பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் பூட்டப்பிள்ளை களுக்கும் காட்டினேன். இங்கிருந்து தான் எனது பயணம் ஆரம்பமானது. என்றால், அதற்கு காரணம், இந்த மண் எனக்கு கற்றுத்தந்தது, தியாகத்திற்கு பேர் போன மண். தியாகத்தை பற்றியே எப்போதும் பேசிய நாங்கள், அந்த தியாகத்தின் பெறுமதிகளை எங்கட வாழ்க்கையில கடபிடிக்காமல் போய்விடக்கூடாது என்பதில் அன்றிலிருந்து இன்றுவரை நான் உறுதியாவிருக்கின்றேன்.

என்று கூறிவிட்டு, வான்மதி என்று என்னை கூப்பிட்டார். நான் திடுக்கிட்டு போனேன், இங்க வாம்மா, நீயும் பிள்ளைகளும், இங்க வாங்கோ என்று கூப்பிட்டார். எனக்கு பெரும் கூச்சமும் குழப்பமாக போய் விட்டது. என்றாலும் நானும் பிள்ளைகளும் முன்னோக்கி சென்றோம். என் கரத்தை பற்றி பிடித்த தர்மரத்தினம் அவர்கள், வான்மதி போலத்தான், இன்றைக்கும் நிறையப்பேர், ஒரு அழகான வாழ்க்கைக்காய், உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். காலையிலிருந்து வான்மதி என்னிடம் ஏதோ கேட்க துடித்துக் கொண்டிருக்கிறாய் இப்ப கேளம்மா என்று சொன்னார். எல்லாரும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள், என்றாலும் துணிவுடன் கேட்டேன், எப்படி இந்த கிளிநொச்சி வியாபாரி, உலக வியாபாரியா மாறினீங்க என்று சுருக்கமாக கேட்டேன். ஐயா சிரித்து விட்டு, வியாபாரம் என்றாலே, நுட்பம், சிக்கனம், தந்திரம், உருட்டு, பிரட்டு, ஏமாற்று என பல வகைகளில் பேசுவார்கள். ஆனால் வியாபாரம் என்றால் மனிதாபிமானம் என்பதை என் வாழ்க்கையில் நான் நிரூபித்தேன். உழைத்து வியர்வை சிந்தி வாழும் இரு சமூகங்களை மனிதாபிமானத்தோடு இணைக்கும் பாலம் தான் வியாபாரம்.

இந்த உலகில் உற்பத்தியாளர்கள், மற்றும் நுகர்வோர் என்ற இரண்டு சமூகங்கள் இருக்கின்றன, இந்த இரண்டு சமூகங்களிலுமே, முதலாளிகளும், பணக்காரர்களும் இருக்கிறார்கள், ஆனால் அதிகமானோர், ஏழை விவசாயிகளும், ஏழை தொழிலாளரும், என்பதே உண்மை, அப்படிப்பட்டவர்களுக்கு துரோகம் செய்யாத அல்லது செய்யக்கூடாத ஒரு தொழில், எதுவென்றால், அது வியாபாரம் என்பேன்.

வாங்கும் போதும், விற்கும் போதும், நேர்மையுடனும் உண்மையுடனும் இருந்தால். நாம் முன்னேற முடியாது. என்று முன்னேறுவதற்காய் நேர்மையற்றவர்களாய் வாழ்ந்திட்டு போகும் இந்த உலகத்தில், வாங்கியவர்களுக்கும், விற்கிறவர்களுக்கும் நான் உண்மையாயிருந்தேன். என்று கூற மீண்டும் கரகோசம் ஏற்பட்டது.

வான்மதியை போல நம் தேசத்து பிள்ளைகளுக்காக எனது வாழ்க்கை அனுபவங்களை சுருக்கமாக இந்த இடத்தில் கூற விரும்புகின்றேன், எல்லாமே முடிந்து போனது என்று அழுது கண்ணீர் விட்ட மிஞ்சிய ஒரு கூட்ட மக்களில் நானும் ஒருத்தன், முள்ளிவாய்க்காலில் இருந்து விடைபெறும் போது, ஒரு அழகான காலத்திடமிருந்து நான் விடைபெற்றதாகவே நினைத்தேன். மீண்டு வந்தவுடன், அந்த காலத்தை மீண்டும் கொண்டு வருவோம், அதை பெற்றுத்தருவோம், இதை வாங்கித்தருவோம், உங்களை அங்க கூட்டிக்கொண்டு போகின்றோம் என்றெல்லாம், புதிது புதிதாய் முளைத்த அரசியல்வாதிகள், கூறி எம் சமூகத்திடமிருந்த மீதி நம்பிக்கையையும் உரித்து நடுத்தெருவில் நாதியற்ற வர்களாக்கிய காலம். எம்மை அடக்கியவர்களிடம் நாம் இழந்ததை விட நாம் யாரை நம்பி மீள குடியமர்ந்து எம் தலைவர்கள், எம் பிள்ளைகள் என்று வாக்களித்தோமோ அவர்களே எம்மை ஏமாற்றி நடுத்தெருவில் விட்ட காலமது. அக்காலத்தில், நான் ஒரு வியாபாரியாக இந்த சமூகத்திற்கு நன்மை செய்ய யோசித்தேன், செய்ய யோசித்தது இரண்டு தான்.

உற்பத்தி செய்யும் விவசாயியை
ஏமாற்ற மாட்டேன், அவனை
நட்டப்படுத்த மாட்டேன்
வாங்கின்ற நுகர்வோரை
ஏமாற்ற மாட்டேன்,

இந்த இரண்டும் தான், இன்று வரை என் தாரக மந்திரம், இதை இரண்டையும் செய்து ஒரு வியாபாரி வாழமுடியுமா? முன்னேற முடியுமா? என்ற கேள்விக்கு நானே பதில் என்பதை உலகம் தெரிந்து கொண்ட போதுதான், நான் உலகத்தின் வியாபாரியானேன். என்று கூறிய போது அவரது கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் கரைந்தது.

அது ஒரு கடினமான வியாபாரம், அதற்காக, நானும் எனது குடும்பமும் பல நாட்கள் பட்டினியாயிருந்தோம், பல துன்பங்களை கடந்தோம்.

ஒரு காலைப் பொழுது அதிகாலையில் எழுந்தவுடன் என் மகள் மல்லிகா, அப்போது அவளுக்கு வயது 12, அப்பா இரவு ஒரு பயங்கர கனவு கண்டேன், என்று சொன்னா, என்னம்மா, எல்லாருக்கும் கனவு வரும்தானே, என்று நான் சாதாரணமாய் சொல்ல, இல்ல அப்பா, நீங்கள் அப்பா. ஆக்கள கத்தியால வெட்டிக் கொல்லுற மாதிரி கனவு கண்டநான், இரவெல்லாம் நித்திரை வரயில்ல, என்று பதட்டத்துடனேயே சொன்னாள், என்னம்மா இரவு படுக்கைக்குள்ள எதையாச்சும், நினைத்து கொண்டு படுத்தநீயே, என்று கேட்டனான், இல்ல! நேற்றிரவு, உணவும் உடல் ஆரோக்கியமும் என்ற பாடம் படிச்சனான், அதில சந்தையில வாங்கி சாப்பிடுர மரக்கறிகள் நிறைய நஞ்சு ஊறிய மரக்கறிகளாக இருக்கிறதாலே, நிறைய சிறுவர்கள், பெண்கள்புற்று நோய் வந்து இறக்கினம் என்று இருந்தது. அதுதான். என்ன அதுதான் இழுக்கிற என்று கேட்டேன்., நீங்கள் விக்கிற மரக்கறியும் நஞ்சு மரக்கறியா அப்பா என்று கேட்டாள் மல்லிகா, மௌனமானேன். நான் அதற்கு காரணமல்ல என்றேன், யாரோ உற்பத்தி செய்யிறத நாங்க விற்கிறோம். அவ்வளவு தான் என்றேன், இல்லையப்பா நீங்களும், ஏதோ ஒரு வகையில இதற்கு காரணம் என்று கூறினாள், அன்றிலிருந்த என் ஒரே மகள் மல்லிகாவின், மன அழுத்தத்திற்கு மாறாக தொழில் செய்யக்கூடாது என்று யோசித்த நான், நானே, வீட்டில் இரசாயனமற்ற மரக்கறி உற்பத்திகளை செய்யத் தொடங்கினேன், என்ர மனுசியும், நான்கு பெடியளும், மகள் மல்லிகாவும் கூட என்னோட மாலை நேரங்களில் தோட்டத்தில் வேலை செய்வார்கள், உற்பத்தி செய்த மரக்கறிகள், கீரைகள், நானே எனது மரக்கறி கடையில் விற்பனைக்கு கொண்டு வந்தேன், என் கடைக்கு வாடிக்கையாளராயிருந்த பலர் தமது வரவை குறைத்து புதிய கடைகளை தேடினார்கள். பெரிசா இருக்கணும், பூச்சியில்லாம இருக்கணும், பச்சையா இருக்கணும், வட்டமா இருக்கணும், நீட்டா இருக்கணும், என்று

கூறி எனது இரசாயனமற்ற மரக்கறிகளை தவிர்க்கத் தொடங்கினார்கள், நாளாந்த சந்தை வருமானம் படிப்படியாக குறைந்தது, மிஞ்சின மரக்கறிகளை ஆட்டுக்கும், மாட்டுக்கும், கொண்டு வந்து போட்டு விட்டு, வருமானம் குறைந்ததால், பல நாட்கள், நானும் எனது பிள்ளைகளும், பட்டினி கிடந்தோம் என்று சொல்லும் போது, தர்மரத்தினம் ஐயா விம்மி வெடித்து அழுதார்.

எத்தனையோ முறை எனது வாடிக்கையாளர்களை இந்த மரக்கறியின் ஆரோக்கியம் குறித்து கூறியும் வியாபார தந்திர மாயையில் விழுந்தார்கள், எனவே மரக்கறி வியாபாரத்தை விட்டு விட்டு தோட்டம் செய்வதில் கவனத்தை செலுத்தினேன், இரசாயனமற்ற தோட்டம் செய்து மரக்கறிகளை சந்தைக்கு கொண்டு சென்றபோது நஞ்சூறிய மரக்கறிகளுக்கு இருந்த கவர்ச்சி எனது மரக்கறிகளுக்கு இல்லை என்று கூறி எனது வியாபார நண்பர்களே, என்னை கைவிட்டார்கள்.

வியாபாரத்தையும் விட்டு தோட்டத்தையும் விட்டு விட்டு, கூலித்தெழிலுக்கு போனேன், அந்த காலத்தில் கடும் சண்டை நடந்த காலம், ஒரு நாள் எனது வீட்டில் இருந்து A/L ரியூசனுக்கு போன மகள் மல்லிகா திரும்பி வரவில்லை. அது ஒரு நீண்ட கதை அதை இந்த இடத்தில் சொல்ல விரும்பவில்லை, அலையாத நாட்கள் இல்லை தேடாத இடம் இல்லை இறுதியாக அவளே நேரில் வந்தாள், இந்த நாட்டுக்கான தன் கடமை என்று கூறி சில நாட்கள் எங்களோடு இருந்து விட்டு போனாள். அவள் வீட்டில் இருந்த நாட்களில், என்னோடு தான் எப்போதும் கதை, அப்பா நீங்கள் திரும்பவும் சந்தையில வியாபாரம் செய்யவேணும், உங்கள மாதிரி நேர்மையான, உண்மையான, மக்களை நேசிக்கின்ற வியாபாரிகள், இந்த நாட்டுக்கு தேவை, நீங்க திரும்பவும் வியாபாரியா மாறுறத நான் பார்க்கணும் என்று கேட்டார். அடுத்த நாளே திரும்பவும் எனது கடையை நான் எடுத்து நடாத்திறதிற்கான வாய்ப்பு இருந்திச்சு, தெரியும்தானே, மகள் ஒரு முக்கியமான, பொறுப்பில இருந்தவ,

என்றபடியால சும்மா மூடிக்கிடந்த கடைய திறக்க பெரிய பிரச்சினை இருக்கேல்ல, அவளே வந்து கடைய திறந்து முதல் மரக்கறி வாங்கிட்டு, கையில 100 ரூபா கைவியளமாய் தந்திட்டு போனவ, மீண்டும் பொங்கி அழுகிறார். சிறிது அமைதிக்கு பின்பு மீண்டும் தொடர்ந்தார்.

போகைக்க என்ர கைய பிடிச்சு அப்பாவுக்கு ஒரு ஐடியா தரப்போரன் என்றா. சொல்லம்மா என்றன். அப்பா மிஞ்சிய மரக்கறிய ஆட்டுக்கு மாட்டுக்கு போடாதேயுங்கோ அப்பா என்ன மரக்கறி என்றாலும், அச்சாறு, ஊறுகாய் போடுங்கோ போடைக்க நம்மட நாட்டு கீரைகளையும் அதோட சேர்த்து போட்டு வைச்சீங்க என்றா நல்லாயிருக்கும் எல்லாருக்கும், எல்லாக் காலத்திலும், எல்லா மரக்கறியும், இரசாயனமில்லாத நல்ல உணவா கொடுக்க முடியும் என்று சொல்லிட்டு போனா. போனவ ஒரு மாதத்தில என்ற மல்லிகா. அப்படியே போயிட்டா மீண்டும் அதே உணர்ச்சியும், கண்ணீரும் எல்லாம் நடந்து முடிந்து. மீண்டும் 2011 திரும்பி வந்தோம்.

சற்று அமைதிக்கு பின்பு ஒரு பெரு மூச்சுடன் உரத்தமாக பேசத் தொடங்கினார். தர்மரத்தினம் வீட்டில இரசாயனமற்ற மரக்கறி உற்பத்தி சந்தையில இரசாயனமற்ற விற்பனை அதுவும், மலிவு விற்பனை திரும்பவும் தொடங்கினேன். ஆனால் கவர்ச்சியற்ற மரக்கறிதானே. எனவே மிஞ்சிற மரக்கறியில, என்ற மூத்தவனும் கடைசியும் ஊறுகாய் போட்டார்கள். முருங்கக்காய், பயிற்றங்காய், போஞ்சிக்காய், கத்தரிக்காய், மாங்காய், என்று மிஞ்சிற மரக்கறிகளை, வெயில வத்தல் மாதிரி போட்டு பிறகு ஊறுகாய் போட்டோம். எல்லா ஊறுகாயிலும், முருங்கை, முல்லை, முசுட்டை, புளிச்சகீரை, தூதுவளை, கங்குன், பசளி, பருப்பு கீரை என்று ஒரு பதினைந்து வகையான நாட்டு கீரைகள் காயவச்சு தூளாக்கி அதயும் கலவை பண்ணி போட்டநாங்கள் போத்தல அடைச்சு அதயும் சந்தையில வைச்சநான். சிலர் வாங்கினார்கள். பலர் சிரித்து போட்டு போனார்கள்.

அந்த நாட்களில் தான் கண்டியில் ஒரு சர்வதேச உணவு காட்சி ஒன்று நடந்திச்சு, இதற்கு பல மாவட்டங்களில் இருந்து நமது மரபு சார் உணவுகள் கோரப்பட்டன, நான் 16 வகையான ஊறுகாயுடன் அந்த கண்காட்சியில் கலந்து கொண்டேன், ஆயிரக்கணக்கானவர்கள் தமது உணவுடன் வந்தார்கள். அந்த உணவு கண்காட்சியில, சில உணவுகள் தெரிவு செய்து, அதன் இரசாயனமற்ற நிலை. அதன், நோய் எதிர்ப்பு சக்தி என்பது குறித்து ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அதற்கான விசேட பரிசில்களும் வழங்கப்பட்டன. எனது ஊறுகாய்களில் சில ஆய்வுகள் எடுக்கப்பட்டது. கண்காட்சியின் கடைசி நாள், திடீரென்று கண்காட்சி பகுதிக்கு பல உணவு விஞ்ஞானிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் எல்லாரும் கூடி வந்தார்கள். உங்களுடைய உணவுகளில் பல உணவுகளில். மிக ஆச்சர்யமான நோய் எதிர்ப்பு சக்தியுள்ளது. குறிப்பாக பல நோய்களுக்கான மருந்தாக இதுவரை உலகத்தில் கண்டு பிடிக்காத மருந்தாக இருக்கிறது. தயவு செய்து அதன் செய்முறை அதன் உள்ளடக்கம் "இன்கிரிடன்" சொல்லுங்கோ. என்றார்கள். கண்காட்சி ஒழுங்கமைப்பாளர் ஒரு சிங்கள நண்பர் எனக்கு சிங்களத்திலும் தமிழிலும் சொன்னார். சொல்லாதேயுங்கோ என்றார். நான் சொன்னேன். உடனே சொல்ல முடியாமல் இருக்கின்றது என்று பல உலக உணவு நிறுவனங்களின் தலைவர்களும் அங்கு வந்திருந்தார்கள். நிகழ்வின் முடிவில் நான் கிளிநொச்சிக்கு வருவதற்காக புறப்பட்டுக்கொண்டிருந்தேன். திடீரென்று என் அறைக்கு வந்த இரண்டு வெள்ளைகாரரும், ஒரு உள்ளூர் வாசியும் பல கோடி பணம் தருவதாகவும் உற்பத்தி மற்றும் உள்ளீடுகள் குறித்த முழுமையான விபரத்தை கேட்டார்கள். நான் வீட்டுக்கு வந்து என் பிள்ளைகளிடம் கேட்டு சொல்வதாக கூறினேன். ஆச்சர்யம்.

ஒரு வாரத்தில் என் வீட்டுக்கு வந்த இங்கிலாந்து உயர் தானிகராலய அதிகாரிகள் ஒரு விசேட அழைப்பிதழை தந்து என்னை இரண்டு நாட்களில் தங்கள் கொழும்பு அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு வரும் படி கூறினார்கள்.

அக்கூட்டத்தில் நானும் மகன் வரதனும் கலந்து கொண்டோம். அன்று தான். அங்கு தான். ஒரு புதிய விடியல் தொடங்கியது. பல பேரங்களின் பின்னர் எமது உறுதியளிப்பை தொடர்ந்து எனக்கும், என் மகனுக்கும். இங்கிலாந்தில் இதே ஊறுகாய் உற்பத்தியை செய்ய சகல வசதிகளும் செய்து தருவதாகவும் தங்கள் நாட்டு பிரசாவுரிமை உங்கள் இருவருக்கும் வழங்கப்படும் என்று கூறினார்கள்.

எனது மனைவியும், இரண்டு மகன்மாரும் நமது நாட்டு கீரைகளின் பவுடர்களையும் மரக்கறி வத்தல்களையும் அனுப்புவார்கள். நாங்கள் இருவரும் அங்கிருந்து இந்த உள்ளீடுகளை வைத்து இதன் உற்பத்திகளை செய்ய வேண்டும்.

இதற்கு மேல் உங்களுக்கு தெரியும் தானே என்ன நடந்தது என்று நம் நாட்டின் நாட்டு கீரைகள் உலக மக்களின் நோய்களை தீர்க்கும் நிவாரணியாக எனது கைவண்ணத்தில் வெளிவரத்தொடங்கியது. இன்று நான் உலக வர்த்தக நிறுவனத்தில் தலைவராக கடந்த பல வருடங்களாக இருக்கின்றேன். எனது இரண்டு மகன்மார் ஆபிரிக்க நாடுகளில் ஊறுகாய் கொம்பனிகளை நடத்துகிறார்கள், இருவர் அமெரிக்காவிலிருந்து கொண்டு வியாபாரத்தை நடத்துகிறார்கள். இன்று உலகம் முழுதும் "Oorukai" ஊறுகாய் உணவுகள் பேர் பெற்றவையாக மக்களின் நோய் நிவாரணியாக மாறியிருக்கின்றது.

இதை ஒட்டியதாக பல ஊர்களில் நமது நாட்டு கீரைகளை அபிவிருத்தி செய்யும் தொழில் நிறுவனங்களை உருவாக்கியிருக்கிறோம். எனது நாற்பந்தைந்தாவது வயதில் ஆரம்பமான இந்த பயணத்தில் இன்று தர்மரட்ணம் உலக பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தும் ஒருவராகி விட்டேன். நமது இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊறுகாய் மிகப்பெரிய செல்வாக்கு செலுத்துகின்றது.

எனது எழுபதாவது பிறந்தநாளில் நான் இந்த மண்ணுக்கு கொடுக்கும் பரிசு இருக்கிறது. அது தான் ஊறுகாயின் புதிய பரிமாணமான வானியல் தளங்களில் (Space) வாழும் மனிதர்களுக்காக தயாரிக்கும் விசேட ஊறுகாய் தயாரிப்பை கிளிநொச்சியில் உருவாக்குவோம். அதில் வான்மதி, காமாட்சி போன்றவர்களின் பிள்ளைகள் இளம் பங்குதாரர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கூறிய போது வானம் அதிர கரகோசம் எழுந்தது. ஐயா பேசி அமர்ந்தார். இலங்கை விழா கோலம் பூண்டது.

நானும் எனது பிள்ளைகளும் எங்களை போன்றவர்களும் அதன் கொண்டாட்டங்களில நாயகர்கள் ஆனோம்.

வாங்கிறபோதும் விற்கிற போதும் வியாபாரத்தை இறைவனுக்கு செய்யும் தொண்டாவே இன்றும் செய்கின்றேன். என்ற ஐயாவின் வெற்றி வாசகத்தை நகுலன் தன் கரங்களில் ஏந்திக்கொள்ள வீட்டை நோக்கி சைக்கிளில் புறப்பட்டோம்.





# மருந்து

சீதையம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுவதில் நான் இறுதியாக வெற்றி பெற்றதாகவே நினைக்கின்றேன். இந்த முடிவுக்கு நான் வருவதற்கு அவர் நடந்து கொண்டது தான் காரணம், எங்கட வீட்டு வேலைக்காக எங்கள் தாத்தா காலத்தில் ஒரு சிறுமியா வந்து சேர்ந்தவா தான் சீதையம்மா, தாத்தா ஒரு ரயில்வே உத்தியோகத்தரானபடியால், பல்வேறு பிரதேசங்களில், பணியாற்றியவர், எந்த இடத்தில் என்று தெரியவில்லை எங்கையிருந்தோ எங்கள் வீட்டு வேலைக்கு சேர்த்துவிடப்பட்ட அந்த சீதை சிறுமிக்கு இப்போது 85 வயதாகி விட்ட நிலையில், இன்றும் எங்கள் குடும்பத்தில் ஒருவராயிருந்து குடும்பத்தின் நல்லது கெட்டது எல்லாம் அவாவின் ஆலோசனைப்படி நடக்குமளவிற்கு, முக்கியம் பெற்று விட்டார், எனது அம்மாவின் நல்ல நண்பியாக

எங்கள் எல்லாரையும் தோளில் போட்டு வளர்த்த சீதையம்மா, எங்கள் வீட்டு வேலைக்காரி என்ற நிலையிலிருந்து, எங்கள் வீட்டு உறுப்பினரைப் போலவே இருந்து வருகிறார். அம்மா, அப்பாவின் மரணத்திற்கு பின்பு, அதிகமாக நாங்கள் மூன்று சகோதரர்களும் சீதை அம்மாவை தான் எங்கள் வீட்டு பெரியவராக எல்லாவற்றிற்கும் முதன்மைப்படுத்தி வருகின்றோம். ஆனால் இன்று அவர் வீட்டை விட்டு முதியோர் இல்லத்திற்குப் போகப் போறா, எங்கள் குடும்பத்திற்காய், தன் வாழ்க்கையே தியாகம் செய்த ஒரு பெண், சொந்தம், பந்தம் என்று எதுவும் அவருக்கு இல்லை, இருந்ததோ தெரியல்லை, ஆனால் நாங்கள் தான் அவருக்கு எல்லாம் அவருக்கு தெரியாமலே, இந்த ஒழுங்குகளை செய்து போட்டு வந்திட்டன், இன்றைக்கு மாலை 6 மணிக்கு முன்பு அவாவ கொண்டு போய் விட்டிட்டு வந்தாதான், இந்த வீட்டில நிம்மதியாயிருக்கலாம். என்று நினைத்துக் கொண்டு, சீதையம்மாவை தேடினேன், அவர் வீட்டுக்கு பின்புறமாக உரலில் மிளகாய்துாள் இடித்துக்கொண்டிருந்தார்.

என்னை கண்டதும், என்னப்பா அண்ணாதுரை, இவ்வளவு நேரமாகியும் உன்ர மனுசி கண்மணி இன்னும் படுக்கையால எழும்பயில்லை, இப்படியா விட்டா என்ன நடக்கப்போகுதோ தெரியல்ல. குழந்தை பெறப் போறவ நாலு வேலை செய்தா தானே, உடம்புக்கு நல்லது, என்று தனது பழைய பல்லவியை பாடத்தொடங்கிட்டா. சீதையம்மா அவான்ட விசயத்தில நீங்க தலை போடாதேயுங்கோ, நீங்க கதைக்கிறது அவாவுக்கு பிடிக்குதில்ல, நீங்க உங்கட வேலைய மட்டும் பாருங்க, இன்றைக்கு பின்னேரம், நேரத்தோடு வெளிக்கிடனும், ஒரு ஆஸ்பத்திரிக்கு போய் உடம்பெல்லாம் செக் பண்ணனும், சில நேரம், உடம்பு செக் பண்ணி, ஏதாவது வருத்தம் இருந்தா கொஞ்ச நாளைக்கு அங்க தான் இருக்க வேண்டி வரும் என்று நான் கூற. எனக்கென்ன ராசா, உடம்பிலை பிரச்சினையா இருக்கு, 85 வயசு ஆகிட்டு, கடவுளே எண்டு, ஒரு காய்ச்சல் தடிமன் தவிர என்ன வருத்தம் எனக்கிருக்கு, பிறந்ததிற்கு

ஒரு நாள் கூட ஆசுபத்திரி பக்கம் போகாத எனக்கு என்னப்பா உடம்ப செக் பண்ண கிடக்கு. இதெல்லாம் தேவை இல்ல தம்பி, காடு வா வா என்று சொல்லுற வயசில, இருக்கும் வரை இருந் திட் டு போக வேண் டியது தானே. என் று வஞ்சகமில்லாமல் சீதையம்மா கதைத்தது, எனக்கு கொஞ்சம் சஞ்சலமாகவேயிருந்தது.

என்றாலும் கண்மணியையும், அவான்ட குடும்பத்தாக்களையும் சமாளிக்கிறதிற்கு வேறு வழியே இல்லையே, ஒரே ஒரு மகளாக செல் வரத் தினத் திற் கும் , அஞ் சலாவிற் கும் பிறந் த கண்மணிக்கு நாலு அண்ணன்மார் எல்லா அண்ணன்மாரும் பிரான்சு, லண்டன்ல செட்டிலாயிட்டினம், அவைக்கு தங்கச்சி தான் உலகம், வாழ்க்கை எல்லாம் நான் ஒரு வங்கி முகாமையாளர் என்றதால மிக கவனமாக விசாரித்து தான் மாப்பிள்ளைகளை பார்த்து, போனவருசம் கலியாணம் நடந்தது. என்ர அண்ணன்மார் இரண்டு பேரும், அரசாங்க உத்தியோகம், அவை தனிக்குடித்தனமா பிள்ளை குட்டிகளோட வாழினம், எல்லா புள்ள பெத்துக்கும் சீதையம்மா தான் அவைக்கு உதவியாயிருந்தா, உதவிக்கு தேவை என்றாமட்டும் தான், சீதையம்மாவை என்ர அண்ணன்மார் கூப்பிடுவினம் அண்ணன்மாரின்ர 5 பிள்ளைகளையும் சீதையம்மா தான் வளர்த்து விட்டா, எங்கட வீட்டின்ர மூத்த பேரப்பிள்ள கலையரசிக்கு சீதையம்மான்ட உயிர், அவாவோட தான் படுத்து தூங்குவா இப்ப கெம்பசு முடிச்சு, வீட்டில இருக்கிறா தான் ஒரு நல்ல டாக்டர் என்று உலகம் முழுவதும் தெரியனும் என்றதான் அவான்ட இலட்சியம். அவாவுக்கு மட்டும் தான் சீதையம்மாவை வீட்டை விட்டு அனுப்ப போற விசயம் தெரியாது. தெரிஞ்சா பொங்கி எழுந்திடுவாள். என்னதான் செய்றது என்று தெரியல்ல.

இந்த வீடு தாத்தா கட்டி அம்மாவுக்கு கொடுத்த வீடு, நான் கடைசி என்றதால இந்த வீடும் வீட்டில இருக்கிற எல்லா, சாமான்களும் எனக்கே தந்து போட்டினம், அதோட

சீதையம்மாவையும் இந்த வீட்டிலேயே தந்து போட்டு போட்டினம். இப்ப நம்ம குடும்பத்தில நாள்தோரும் பிரச்சினைக்கு சீதையம்மா காரணமாய் போயிட்டார். என்று நினைத்துக்கொண்டு, நித்திரையாய் இருந்த கண்மணியை தட்டி எழுப்பினேன், மணி 10 ஆகுதப்பா எழும்புமேன்.

என்ன அவாவை விட்டுட்டு வார ஒழுங்கு எல்லாம் சரியே, என்று கேட்டுக்கொண்டு படுக்கையை விட்டு எழும்பினா. ஓம் எல்லாம் சரி, இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் 6 மணிக்கு முதல் கொண்டு வந்து விடட்டாம் காசு தான் கொஞ்சம் கூட கேக்கிறாங்க. 5 இலட்சம் அட்வான்ஸ் மாதா மாதம் 20 ஆயிரம் கட்டணமாம், அப்பா சீதையம்மாவின் பேரில் சேர்த்து வைச்ச காசு இப்ப 20 இலட்சம் இருக்கு, அப்பாவும், அம்மாவும் நெடுகலும் சொல்றவை, சீதையம்மாவ ஒரு குறையுமில்லாமல் இருக்கதான் இந்த காச போட்டு வைக்கிறம், அவாவின்ட கடைசி நாட்கள, இந்த காச வைச்சு அவாவ பாத்துக்குங்கோ. என்று சொன்னது, இப்ப நமக்கு உதவுது.

அது சரி, காசு பிரச்சினையில்ல மாசம் 50 ஆயிரம் என்றாலும் கட்டலாம். என்ர அண்ணன்மார் தருவினம், கிழவிய இன்றைக்கு பின்னேரம் வீட்டை விட்டு அனுப்பணும். என்று கண்மணி தெளிவா சொல்லிப் போட்டா.

எப்படி இந்த பிரச்சினைய கையாளுறது என்று தெரியல, மனுசி இன்னும் 15 வருசத்திற்கு உயிரோட இருக்கும் போல, என்ன தான் செய்றது என்று யோசித்துக்கொண்டு அடுப்பில இருந்த சுடுதண்ணிய கண்மணிக்கு முகம் கழுவுறதற்காக தண்ணியோட கலக்குவோம் என்று தூக்கினேன், அது தவறி கையில பட்டு விட்டது, மூன்று விரல்கள் சுடுதண்ணி பட்டுவிட்டது, அம்மா என்று என்னை அறியாமலே கத்தி விட்டேன், உடனே பின்பக்கம் நின்ற சீதையம்மா என்ன ராசா என்று பதறியடித்து ஓடிவந்திட்டா, என்ன தம்பி, கூப்பிட்டிருந்தா நான் வந்து கலந்து கொடுத்திருப்பனே, என்று சொல்லி விட்டு

அடுப்புக்கு மேல தட்டுல இருந்த கோழி எண்ணைய எடுத்து கையில தடவிட்டா, ஆச்சர்யம் அப்படியே அடங்கிவிட்டது.

இப்படித்தான் வீட்டில, எங்கள் எல்லாருக்கும் மருந்து தருவா. நான் சின்ன பிள்ளையா இருந்த காலத்தில இருந்து இப்ப வரைக்கும் சின்ன வருத்தம் தொடக்கம் பெரிய வருத்தம் வரைக்கும் சீதையம்மா தான் மருந்து தாறவா, ஆசுபத்திரிக்கு மருந்து எடுக்க போறது என்றா அது கடைசியாக தான் இருக்கும். எல்லா வருத்தத்திற்கும் அவா தான் கை மருந்து செய்து தாறவா. அதால தான் அண்ணன்ர மகள் கலையரசி நான் டொக்டரா வாரதிற்கு சீதையம்மா தான் காரணம் என்று சொல்லுவா,

கண்மணி குளிச்சிட்டு வர சாப்பாட்டு மேசையில, சாப்பாடு ரெடியா இருந்திச்சு, வாழைத்தண்டு சம்பலோட, இடியப்பமும், கீரை சொதியும் இருந்தது, இரண்டு பேருமா சாப்பிடுவோம் என்று சாப்பாட்டை திறந்தவுடன், சாப்பாட்டை பார்த்து விட்டு கண்மணி வழமை போல கத்த தொடங்கினா, வாழைத்தண்டு இப்ப என்னத்துக்கு காலையில செய்து வச்சிருக்கிறா, இங்க, சொதிக்க கீரை, சம்பலுக்க கீரை, இடியப்பத்தில, ஏதோ மணக்குது அதற்குள்ள என்னத்த போட்டாவோ தெரியாது என்று சொல்லி போட்டு, சாப்பாட்டு மேசையிலிருந்து ரூமுக்குள் போயிட்டா, இப்படித்தான் ஒவ்வொரு நாளும் சண்டை, சீதையம்மாவுக்கு 85 வயசிலேயும், நல்லா கண் தெரியும் ஆனா காது தான் கொஞ்சம் கேட்காது, ஆனா கண்மணியில உயிரயே வச்சிருக்கிறா சீதையம்மா.

ரூமுக்குள்ள போன கண்மணியை திரும்பவும் சாப்பிட கூப்பிட்டேன், இந்த சனியன் இன்றைக்கு தொலையட்டும், பிறகு சாப்பிடுரன் என்று சொல்லிக்கொண்டு, அவான்ட தாய்க்கு போன் போட்டு, அழுதழுது சாப்பாட்ட பற்றி சொல்லத் தொடங்கிட்டா, அங்கால, மாமி போடுற சத்தமும் கேட்குது, உனக்கு எத்தனை தடவ சொல்லிப்போட்டன்.

அந்த காட்டு கிழவியோட இருக்கிறத விட்டிட்டு, இங்க வீட்டோட வந்திரு என்று, இன்னும் பெறுறதற்கு ஒரு மாதம் தான் இருக்கு அதற்குள்ள, என்னென்ன நடக்கும் என்று தெரியாது, எங்க போன அவரிட்ட கொடு, என்று என்னட்ட தர, என்ன தம்பி, வாழைத்தண்டு, குப்பைகீரை என்று, என்ன என்ர பிள்ளைய மிருகம் என்றா நினைச்சநீங்க. இல்ல மாமி என்று நான் சொல்ல வாயெடுக்க என்னை விடாமல் கதைக்கத் தொடங்கினா.

நானும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறன், குனிய சொல்லுறது, நிமிர சொல்லுறது, துள்ள செல்லுறது, நடக்க சொல்லுறது அவள் என்ன பொம்மையே, கண்மணிய நாங்கள், தங்க தட்டில தான் வைச்சு வளர்த்தநாங்க. அரிசி இடிக்கிறது, உழுந்து ஆட்டுறது, எல்லாம் அந்த கிழவின்ர வேலை, அவா செய்றதென்றா அவா செய்யட்டும். என்ன துணிவிருந்தா என்ற பிள்ளைய உலக்கைய பிடிக்க சொல்லியிருப்பா. என்ற கண்மணிக்கு உரல், அம்மி, உலக்கை, ஆட்டுக்கல்லு என்று அவள் கண்ணாலே கண்டதில்ல, எங்கட பொறுமைக்கு ஒரு எல்லையிருக்கு. இப்படி இனி நடந்திச்சு என்றா என்ற பிள்ளைய கொடுமைபடுத்திறியள் என்று பொலிசில சொல்ல வேண்டி வரும். மாமியின் கதை எல்லை மீறுகிறது என்றது போல தெரிஞ்சது. மாமி நான் சொல்லுறத ஒருக்கா கேளுங்கோ நீங்க இவ்வளவு காலமா சொன்னத நாங்க கேட்டநாங்க, இனி நாங்க சொல்றத கேளுங்கோ, என்று தொடர்ந்து கதைக்க தொடங்கினா.' அவங்கள் வெளிநாட்டில இருந்து கொதிக்கிராங்கள், கண்மணிய ஒரு நல்ல குடும்பத்தில கட்டி கொடுக்கிறம் என்று நினைச்சு தான், செய்து வைச்சநாங்க, ஆனா இப்படி ஒரு காட்டு குடும்பம் என்று எங்களுக்கு தெரியாம போயிட்டுது என்று மாமி சொன்னவுடன், எனக்கு உடம்பெல்லாம் நெருப்பை ஊற்றியது போலிருந்தது. மாமி அளவோட கதையுங்கோ யாரு காட்டு குடும்பம்.

நீங்களா? நாங்களா? நான் இவ்வளவு சொல்லியும் நான் சொல்லுறதிற்கு கொஞ்சம் காது கொடுக்க உங்களுக்கு முடியல, அப்ப நீங்கள் மனுசரே நாங்க மனுசரே, மனுசர் என்றால் மற்றவ சொல்ல வாறத கேட்டுப் போட்டு கதைக்க வேணும், அது உங்களுக்கு தெரியல்ல.

உங்கட பிள்ளைய தங்க தட்டில வைச்சு வளர்த்ததால தான் 25 வயசில தைபொயிட், பிரசர், கொலொற்ரோல், தைரோயுடு, இடுப்புப்புடி, கழுத்துபிடி, மூட்டு வலி, தலை வலி என்று கலியாணம் கட்டுனதிலிருந்து வீடு ஆசுபத்திரியுமா திரியுரோம், எங்கள தங்க தட்டில வளகக்கயில்ல ஆனா இதுவரைக்கும், இந்த 30 வயதிலேயும் ஆசுபத்திரி பக்கம் போகயில்ல எங்கட மூத்த அண்ணனுக்கு 50 வயது அவருக்கு இதுவரைக்கும் ஒரு வருத்தமும் இல்ல, ஏனென்டா சீதையம்மா எங்கள இந்த தரையில வைச்சு தான் வளர்த்தவா, இனியும் காட்டு குடும்பம், காட்டு மனுசி என்று சொன்னனீங்க என்டா தெரியும். என்று கூற, என்ன தெரியும் என்ன செய்ய போரியள் வீட்டை விட்டு கண்மணிய துரத்த போரியளா. ஏலுமென்றா துரத்தி பாருங்கோ. நாங்களும் பார்க்கிறோம் என்று மாமி குழற, அது மாமி நீங்க தான் வீட்ட விட்டு துரத்துற ஆக்கள், நாங்கள் அத செய்ய மாட்டோம், ஆனால் உங்க உபத்திரத்தாலே என்ற சீதையம்மாவ தான் நான் வீட்ட விட்டு இன்றைக்கு பின்னேரம் துரத்தபோரன், என்று சொன்னதும் மாமியின் சத்தம் அடங்கியது. இத முதல்ல சொல்லியிருக்க வேண்டியது தானே. என்றார், எங்க நான் சொல்லுறத நீங்க கேட்கிற நிலையில இருந்தாவல்லோ என்று கூறிவிட்டு, போன கண்மணியிட்ட கொடுத்துட்டு ரூமுக்கு வெளியே வந்தேன். வெளியிலே சீதையம்மா கையில எண்ணை சட்டியுடன் நின்றா, ஞாயிற்று கிழமை என்றா எனக்கு தலையில எரிச்ச எண்ணை வைச்சு உடம்புக்கு எண்ணைய பூசி விட்டுட்டுதான் மத்தியானம் சமைக்க தொடங்குவா, இந்த 30 வருசத்துல ஒரு நாள் கூட அவ இத செய்ய தவறியதில்ல, எரிச்ச எண்ணய தலையில வைச்சிட்டு, உடம்புக்கு எண்ணை பூசினாப்பிறகு

பச்சத்தண்ணீரில குளிக்கணும், குளிச்சு முடிஞ்சிட்டு வீட்டுக்குள் வந்தா, ஒரு கிளாசு சுடுதண்ணியும், சுட்ட உள்ளியும் இருக்கும், அதற்கு பிறகு, சுடு சோத்தில நல்லெண்ணை, விட்டு முதலில சோறு சாப்பிட்டுட்டுதான், பிறகு மிகுதி சாப்பாட்ட சாப்பிடனும். எனக்கு அவாவ பாத்தவுடன் அழுகை வந்திட்டுது அவாவ கட்டிப்பிடிச்சு அழத்தொடங்கினேன். சீதையம்மா வார ஞாயிற்று கிழமை, எனக்கு யாரு எண்ணை தேய்ச்சு விடுவினம், பாவம் அவாவுக்கு காது கேட்காததாலே, நான் என்ன சொல்லி அழுறன் என்று அவாவுக்கு சரியா விளங்கல. ஏன் ராசா அழுகிற என்ன கண்மணியோட சண்டை பிடிச்சு போட்டியா. அவா கற்பினித் தாய், அவளோட சண்டை பிடிக்காதே என்று சொல்லிக் கொண்டு, தலையில எண்ணைய தேச்சி போட்டு அவ குசினிக்குள்ள போயிட்டா.

பணம், கல்வி, பதவி, பெரிய குடும்பம் என்று பார்த்து கலியாணம் பண்ணுறது முக்கியமில்ல, நம்மோடு இணைந்து நாம் பின்பற்ற நல்ல வாழ்க்கை முறைய பின்பற்றுபவர்களை பார்த்து கலியாணம் செய்யாம போயிட்டமே என்று நொந்து கொண்டு வாசலில் நின்ற வேப்பம் மரத்தடிக்கு சென்றேன். இது வேப்பம் பூ காலம், சீதையம்மா பழைய வேட்டியெல்லாம் எடுத்து அழகா தைச்சு பரன் மாதிரி கட்டியிருந்தவா, வேப்பம் பூவெல்லாம் அதில தான் கொட்டி கிடந்தது, இந்த பூக்கள் எல்லாம். வடகத்திற்காய் காத்து கிடக்குது, அந்த வடகத்தின் சுவைக்காக இந்த நாவு காத்து கிடக்கிறது. ஆனா நீ மட்டும் சீதையம்மா அனாதை மடத்தில் காத்திருக்க ஒருவருமில்லா தவளாய், இருக்க போறாயே என்று மனமெல்லாம் ஏதோ ஓடியது. என்று திரும்பி பார்க்க கண்மணி யாரோ போன் அடிக்கினம். என்று போன தந்தா, சித்தப்பா எப்படி என்று அண்ணன்ர மகள் கலையரசி, அரசி என்று தான் கூப்பிடுவம். என்னம்மா அரசி கன நாளைக்கு பிறகு என்றேன் எப்படி சித்தப்பா சீதையம்மா? என்று நான் கேட்பதற்கு பதில் சொல்லாமல் சீதையம்மாவை பற்றி அரசி விசாரித்தாள்.

இருக்கிறா நல்ல சுகமாயிருக்கிறா, இப்ப அங்க வாரத்திற்கு தான், நானும் அப்பாவும், அம்மாவும் வெளிக்கிட்டம், சீதையம்மாவுக்கு ஒரு கிப்ட் இருக்குது எனட்ட, ஆனால் அது சேப்ரைசா இருக்கட்டும், அங்க வந்திட்டு, பின்னேரம் டவுன்ல நடக்கிற என்ர கண்காட்சிக்கு அவாவ கூட்டிக்கொண்டு போக போரேன் என்று அரசி சொன்னது எனக்கு பகீர் என்றது. இன்றைக்கு ஒரு முடிவு கட்டலாம் என்றா, இது முடியாது போலிருக்கே. என்ன செய்றது என்று யோசித்தேன். அரசி தொடர்ந்து பேசினா, சித்தப்பா, நீங்களும் சித்தியுங்கூட இந்த கண்காட்சிக்கு வரலாம். என்ற ரிசேச்ல நான் கண்டு பிடிச்ச விசயங்கள சொல்லப்போறன் சொல்லுற விசயங்கள் காட்சியில இருக்கும் என்று கூறினா அரசி. சரி அரசி நீ வீட்டுக்கு வா தீர்மானிப்போம் என்று கூறி போனை வைத்தேன்.

கண்மணி, கொஞ்சம், உற்சாகத்தில் இருந்தது போலிருந்து, எங்கட 85 வருட சொத்தை வீட்டில இருந்து அனுப்புற கடைசி நாள் அவாவுக்கு கொண்டாட்டம், எனக்கு திண்டாட்டம் அண்ணன்மார் இருவருக்கும் விசயம் தெரியும், பெரியண்ணன், அரசியிட்ட சொல்லியிருக்க மாட்டார், அவாவுக்கு மெதுவா எடுத்து சொல்ல வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டு கிணற்றடிக்கு குளிக்க போனேன்.

இன்று இவ்வளவு வசதியாயிருந்தும், பாத்ரூமில சுடுதண்ணி வசதியிலிருந்தும் கிணற்றில அள்ளி குளிக்கிறது உடம்புக்கு நல்லம் என்று விபரம் தெரிஞ்ச காலத்தில இருந்து சீதையம்மா கிணற்றடிக்கு தான் குளிக்க அனுப்புவா. இனி யார் அத கவனிக்க போரது என்று நினைத்து கொண்டு கிணற்றிலிருந்து தண்ணீரை அள்ளி ஊற்ற தொடங்கினேன். ஒவ்வொரு வாளி தண்ணீர் இழுத்து தலையில ஊற்றவும் 40 செக்கன் செல்லும் அந்த பெரிய வாளியில தண்ணி இழுத்து குளிச்சிட்டு வந்தா ஏதோ மனசில இருந்த பாரமெல்லாம் குறைந்த மாதிரி இருக்கும். குளித்து முடித்து விட்டு வீட்டுக்குள் வந்தேன் அரசி சீதையம்மாவுடன் குசினிக்குள் கதைத்துக் கொண்டிருந்தா, அண்ணாவும், அண்ணியும் கண்மணியுடன் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

என்னை கண்டதும் அரசி சீதையம்மாவை, முன் விறாந்தைக்கு கூட்டிக்கொண்டு வந்து பரிசு பெட்டியை கொடுத்தா. சீதையம்மா ஆசையுடன் திறந்து பார்த்தா. அது ஒரு மிசின். என்ன புள்ள இது என்று கேட்டா "அம்மாச்சி" இது உங்களுக்கு காது கேட்க பண்ணுற மிசின் இனி வீட்டில யாரும், சத்தமா கதைக்க தேவையில்ல, உங்களை பற்றி ஏதும் கதைக்கிறது என்றா இரகசியமா தான் கதைக்க வேணுமென்று சத்தமா சொல்லிக்கொண்டு, அந்த மிசின இயக்கி அவான்ர காதில கொழுவினா. சீதையம்மாவின் முகத்தில மலர்ச்சி. அட வீட்டுக்கு முன்னுக்கு நிற்கும் வேப்ப மரத்தில் நின்று குயில் கூவுது போலிருக்குது, எல்லாம் நல்லா கேட்டுது என்று கூறி விட்டு மீண்டும் அரசியும் சீதையம்மாவும் குசினிக்குள் போய் விட்டார்கள், என்ன இன்றைக்கு கொண்டு போய் விடப்போறியோ என்றார் அண்ணா, ஓம், இதால வீட்டில ஒரே பிரச்சினை, தீர்க்கிறதிற்கு ஒரு வழியுமில்ல, என்று கூறினேன். சரி அவாவுக்கு தெரியாமலே அவான்ர உடுப்பு சாமான்கள எடுத்து கார்ல போடுங்கோ, கண்காட்சி முடிஞ்சதும் அரசி அப்படியே கொழும்புக்கு போக போரா அவளை வேனிலே அனுப்பி போட்டு, நாம கொண்டு போய் விட்டுட்டு வருவோம். என்று அண்ணாவும் அண்ணியும் கூறி எனது முயற்சிக்கு ஒத்துழைத்தார்கள்.

சீதையம்மாவின் கைவண்ணத்தில் எல்லாருக்கும் இறுதி மதிய உணவு, நாட்டு கீரை, கூட்டு மசியல், கருவேப்பிலை சம்பல், வாழைத்தண்டு சொதி, பப்பாக்காய் வறை, என வளவில் இருக்கிற காய், இலைகளிலே தான் சாப்பாடு, எங்கட வயல் குத்தரிசி சோறு, இது எல்லாம் சீதையம்மா எங்கட மூன்றாவது பரம்பரை வரைக்கும் எங்களுக்கு செய்ற தொண்டு என்று நினைத்துக்கொண்டு சாப்பிட்டு முடித்தோம்.

மாலை மூன்று மணி, சீதையம்மாவும், அரசியும் ஒரு காரில், நானும் கண்மணியும், அண்ணாவும், அண்ணியும் ஒரு காரிலுமாக வீட்டை விட்டு புறப்பட்டோம், எங்கட காரில சீதையம்மாவின் உடுப்பு பேக்கும், அவான்ர சில முக்கிய

ஆவணங்களும் இருந்த பேக்கும் இருந்தது, சீதையம்மா பெரிதாக வீட்ட விட்டு வெளிக்கிடுறதில்ல எப்போதாவது, வீட்ட விட்டு வெளிக்கிட்டா, தாத்தா பாட்டியின் படத்த கும்பிட்டிட்டு தான் வெளிக்கிடுவா, அதே போல் அவர்களின் படங்களை கும்பிட்டிட்டு, நிமிரக்குள்ள, அரசி நில்லுங்க சீதையம்மா, என்று கூறி விட்டு அவாவின் காலில் விழுந்து வணங்கினா. மகராசியா இரும்மா என்ற சீதையம்மாவின் வாழ்த்துதலுடன் யாவரும் வீட்டை விட்டு புறப்பட்டோம்.

அரசி எங்களுக்கு முன்னுக்கு போனவா, கண்காட்சி டவுன்ல நடக்குது என்று சொன்னவ, எங்க நடக்குது என்று சொல்லயில்ல, நான் முன்னுக்கு போறன் நீங்க எனக்கு பின்னுக்கு வாங்கோ என்று கூறிய படியால், நாங்கள் ஒருவரும் எதிர்பாராத வண்ணம், “வேர்கள்” முதியோர் காப்பகத்தையே வந்தடைந்து விட்டோம்.

நான் அண்ணனிடம் கேட்டேன், என்ன அரசிக்கு தெரிந்து விட்டதா. இல்லை என்று இழுக்க அரசி எங்கள் கார் கதவை இழுத்து திறந்து, இங்க தான் என்னுடைய உரையும் கண்காட்சியும் நடக்க போகுது என்று கூறி எங்களை இறங்கும் படி கூறினா. மிகுந்த பதற்றத்துடனும், குழப்பத்துடனும் காரில் இருந்து இறங்கினோம், அந்த முதியோர் இல்லத்தின் இயக்குனர் இளங்குமரன், அரசியை வரவேற்றார் எங்கும் அலங்காரம். “மருந்து” என்ற மிகப்பெரிய கட்டவுட் வைக்கப் பட்டிருந்தது. அந்த கட்டவுடில் ஒரு புறம் சீதையம்மாவின் படமும், மறுபுறம், அரசியின் படமும் போடப்பட்டிருந்தது. அங்கிருந்த பிரதான மண்டபத்திற்குள் நுழைந்தவுடன், பெருந்திரளான, பெண்கள், மற்றும் முதியவர்கள் இருந்தார்கள். குறிப்பாக நிறைய கர்ப்பிணிப்பெண்கள் கூடி வந்திருந்ததை போன்று தெரிந்தது. அரங்கின் மறுபுறத்தில் கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுருந்தது. ஒரு பகுதியில் உணவு காட்சியும், மறு புறத்தில், உணவு தயாரிக்கும் பாரம்பரிய பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன.

மாவட்ட அரசாங்க அதிபர். மாணிக்கவாசகர், கூட்டத்திற்கு தலைமை தாங்கினார், அவர் பேசும் போது, இன்றுடன் ஆரோக்கிய உணவு மாதம் நிறைவு பெறுகின்றது. எமது மாவட்டம், வறுமை, மற்றும் போசாக்கு இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்ற நிலையில் Dr.கலையரசி அவர்களை இதற்கு தீர்வு கொடுக்கும் படியான உரையாற்றும்படி அழைத்தோம், போசாக்கு உணவு குறித்து அவர் அண்மையில் தான் தனது பட்டபடிப்பை முடித்திருக்கின்றபடியால் அவரின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றேன் என்று கூறினார். கலையரசி மேடையில் நின்ற வண்ணம் சீதையம்மாவை அன்போடு மேடைக்கு அழைக்கின்றேன் என்று கூற, சீதையம்மா, மிகுந்த கூச்சத்துடன் மேடையை நோக்கி சென்றார், அரசாங்க அதிபர் அவருக்கு பொன்னாடை போர்த்த ஏனைய விருந்தினர்கள் அவருக்கு சான்றிதழும் பரிசும் வழங்கினார்கள்.

கண்மணி முழுசி முழுசி என்ன பார்க்கிறா எனக்கு ஒன்றும் விளங்கயில்ல நான் கண்மணி பக்கம் திரும்பாமலே மேடையை பார்த்துக் கொண்டிருந்தேன். சீதையம்மா மேடையிலேயே அமர்த்தப்பட்டார். இப்போது அரசி பேச தொடங்கினா. அனைவருக்கும் வணக்கம், நான் அண்மையில் தான் ஒரு பொது உடலியல் நிபுணராக எனது வைத்திய படிப்பை நிறைவு செய்தேன். குறிப்பாக "ஆரோக்கியமான போசாக்கு உணவும் உடல் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களும்" என்பது தான் எனது ஆய்வுப் பொருள், எனது ஆய்வின் உண்மைகளை பல நாட்டு விஞ்ஞானிகளும் தற்போதும் ஆராய்ந்து உண்மை என்று உறுதிப்படுத்தி, என்னை தங்கள் பல்கலைக்கழகங்களுக்கு பேராசிரியையாக பணியாற்ற அழைத்திருக்கிறார்கள். இன்று மாவட்ட அரசாங்க அதிபர் இந்த நிகழ்வுக்கு அழைத்த போது, எனது மக்களுக்கு எனது ஆய்வின் உண்மைகளை சொல்வதற்கு ஒரு மிகப்பெரிய சந்தர்ப்பமாக கருதி இங்கு வந்திருக்கின்றேன்.

இன்று மருத்துவம் உலக அளவில் மிக உயரிய உச்சங்களை தொட்டு நிற்கின்றது, நவீன தொழில்நுட்பம் மருத்துவ துறையின் மேம்பாட்டுக்கு அதி உன்னத பங்களிப்பை செய்து வருகின்றது. அதே போல், நோயினால் ஏற்படும் தாக்கங்களும் மாறுபட்ட நிலையில் புதிய வடிவங்களில் உயர்ந்து வருகின்றது. சில நோய்களை கட்டுப்படுத்து வதற்கான முயற்சிகள் வெற்றியடையவில்லை. அல்லது அது அது முந்திக்கொண்டு செல்கின்றது எனக்கூறலாம்.

காலத்திற்கு காலம் புதிய நோய்களும், அதற்குரிய தீர்வுகளும், சம காலத்திலேயே கிடைத்து விட்டாலும் சில நோய்களுக்கான தீர்வுகள் அறிவியலால் இன்னும் தொடப்பட முடியாத வைகளாகவே இருக்கின்றது. என்றாலும், விஞ்ஞானமும் அதனால் மனிதருக்கு கிடைக்கும் நன்மைகளும் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இன்று இந்த மேடையில் நிற்கும் கலையரசி ஒரு வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தாலும், ஒரு ஏழையால் வளர்க்கப்பட்டேன், ஒருவரின் ஏழ்மையில் இருக்கும் நலன்களை, அனுபவிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அதற்கான காரணகர்த்தாவாக இருப்பது. இங்கு எங்களோடு அமர்ந்திருக்கும் சீதையம்மா என்ற எனது "அம்மாச்சி" நான் அவரை அம்மாச்சி என்று தான் அழைப்பேன்.

எனது பாட்டனாரால் ஒரு சிறுமியாக தத்தெடுக்கப்பட்டு, எங்கள் வீட்டிலேயே, வளர்ந்து, எங்கள் வீட்டின் உதவியாளராக இருந்த அம்மாச்சி எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கு, எனது குடும்பத்தில் எனது பாட்டனார், எனது பாட்டி, மற்றும் எனது தந்தை வழி தாத்தா, பாட்டி மற்றும் அப்பா, சித்தப்பாமார், எவருக்கும் மரபு ரீதியாக, நீரிழிவு, கொழுப்புயர்வு, இரத்த அழுத்தம், போன்ற பல மரபு ரீதியான நோய்கள், ஏன் பேரப்பிள்ளைகளாக இருக்கும், எங்களுக்கும் கூட இதுவரை இல்லை, இதற்கான காரணம் அம்மாச்சியின் வாழ்க்கை முறையும், அவர் எங்களுக்கு கற்றுத்தந்த உணவு முறைமைகளும்.

நான் எங்கள் குடும்பத்தில் மூத்த பேரப்பிள்ளை என்றதால் நான் அதிக காலங்கள் அம்மாச்சியுடன் தான் நெருக்கமாக வளர்ந்திருக்கின்றேன், காலையில் எழுதல் தொடக்கம் மாலை படுக்கை வரை, எனது வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதில் அவாவின் செல்வாக்கு அளப்பரியது.

காலையில் 4.30க்கு எழுதல் உடலுக்கு கிடைக்கும் மிக முக்கிய மருந்து இரவு 9 மணிக்கு பிந்தாது படுத்தல் மிகச்சிறந்த மருந்து என்பதை அவாவிடம் இருந்து கற்றுக்கொண்டேன்.

நான் பாடசாலை செல்ல தொடங்கிய போது, அப்பாவும், அம்மாவும் அரசாங்க அதிகாரிகளாக இருந்தபடியால் என்னை காரில் ஏற்றியிறக்க எங்கள் வீட்டு சாரதிக்கு ஒழுங்கு படுத்தியிருந்தார்கள். ஆனால் அம்மாச்சி, தானே அப்பா அம்மாவிடம் பேசி தான் அரசியை நடத்திக்கொண்டு போய் கவனமாக கூட்டி வருகின்றேன் என்று ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தை என் பிஞ்சு கால்களால் நடக்க அவர் நடை பழக்கினார்.

"நடப்பதை" போன்று உடலுக்கு உயரிய மருந்து வேறொன்றுமில்லை என்று சொல்லப்படுகிறது. நான் நடப்பதற்கும் அம்மாச்சியுடன் வேகமாக நடப்பதற்கும் பழகினேன். வீட்டிலிருந்து பாடசாலைக்கு புறப்பட்டால் நேரத்துடன் புறப்பட்டு விடுவோம், வீதியில் அழைத்துச் செல்லும் போது வீதியின் இருமருங்கிலும் இருக்கும் பூனைப்பழம், கொவ்வைப் பழம், முள்ளிப் பழம், நெல்லிக்காய், நாவல் பழம், பாலைப் பழம், வீரைப் பழம், என எங்கள் மண்ணில் காலத்திற்கு காலம் காய்க்கும் பழங்கள் எல்லாம் எனக்கு பிடுங்கி தருவார் என்னை பிடுங்கி உண்ண ஊக்கப்படுத்தினார். இன்று அப்படிப்பட்ட பழங்கள் உலக அளவில் நோய் எதிர்ப்பு சக்திகளாக கண்டு பிடிக்கப்பட்டு அவைகளால் மருந்துகள் செய்யப்படுகின்றன. ஓய்வு நேரங்களில் பூக்களை இரசிப்பதற்கும், குயில்களில் சத்தத்தை

கேட்பதற்கும் பறவைகள் பறப்பதை பார்ப்பதற்கும், என்னை அழைத்துச்சொல்வார். மழையில் நனைந்து, வெயில் காய்ந்து, பனியில் குளிர்ந்த அனுபவங்களை மிகச் சிறிய வயதில் நான் அவரால் பழக்கப்பட்டேன். குயில்களில் சத்தத்தை கேட்பதற்கும் பறவைகள் பறப்பதை பார்ப்பதற்கும், என்னை அழைத்துச்சொல்வார். மழையில் நனைந்து, வெயில் காய்ந்து, பனியில் குளிர்ந்த அனுபவங்களை மிகச் சிறிய வயதில் நான் அவரால் பழக்கப்பட்டேன். இவை ஒவ்வொன்றும் உயரிய மருத்துவ கொடைகள் அம்மாச்சி எப்போதும் சொல்லும் ஒரு வாக்கியத்தை இந்த இடத்தில் நான் சொல்ல விரும்புகிறேன், “நமது உடலே ஒரு மருந்து தான்” அதற்கே மருந்து தேவை என்று வரும் போது உயிரோட இருக்க கூடாது என்று சொல்லுவா. இந்த நிமிடம் வரை 85 வயதிலும் ஒரு நாள் கூட உயரிய மருந்துக்கு அம்மாச்சி சென்றதில்லை.

நமது உடல் தன்னை தாக்க வரும் கிருமிகளை தாக்கி அழிக்கும் சக்தியை தனக்குள் வைத்திருக்கின்றது. ஆனால் மிகப்பெரிய சோகம் என்னவென்றால், அந்த நோய் எதிர்ப்பு சக்தியை நமது வாழ்க்கை முறைகளால் நாம் அழித்து விட்டு அந்த கிருமிகளை கொல்ல மருந்துகளை நாடுவது சில நேரங்களில் அந்த மருந்துகளும் மிச்சமிருக்கும் நோய் எதிர்ப்பு சக்திகளையும் அழித்து விடுகின்றன என்று சொன்ன போது அரங்கம் அதிர கரகோசம் எழுந்தது. அரசியின் அனுபவ பேச்சும், சீதையம்மாவின் மகிமையும் என்னை மெய்சிலிர்க்க செய்தது. அரசி தொடர்ந்தும் பேசினாள். எங்கள் அப்பாவின் பரம்பரை வீட்டை நீங்கள் இன்னும் சென்று பார்க்கலாம். அங்கே அம்மாச்சி ஒரு உணவு உலகத்தை தன்னை சுற்றியும் அமைத்து வைத்திருக்கின்றார்.

நமது தமிழர் தாயகத்தில் நமது நாளாந்த உணவுக்கு மிக முக்கியமான போசாக்கு நிறைந்த கீரைகளும் மரக்கறிகளும் இருக்கின்றன. இவை யாவும் தான்தோன்றிகள். நாம் நடாமல், பராமரிக்காமல், பசளை போடாமல் வளரக்கூடியவை, எந்த

வெப்பத்திலும், குளிரிலும், மழையிலும் நின்று வாழக் கூடியவைகள். அவைகள் தான் எங்கள் நாளாந்த உணவாக, அவர் சமைத்து தருவார். அவரால் வளர்க்கப்படும் நாட்டு கோழியின் முட்டையும் அதன் இறைச்சியையும் தவிர இன்று வரை முட்டை, இறைச்சி என்று அவர் சமையலுக்கு யாரும் வாங்கி கொடுக்க முடியாது.

எங்கள் வீட்டில் இருக்கும் இலுப்பை, வேம்பு மரங்களில் இருந்து பெறப்படும் கொட்டைகளிலிருந்து தானே எண்ணை தயாரிப்பார். கிழமைக்கு ஒரு முறை இலுப்பை எண்ணையில் சமையல் இருக்கும். எங்கள் வீட்டில், நான் மூத்த மகள், எனக்கு இரண்டு தம்பிகள், அவர்களும் மருத்துவ துறையில் படிக்கிறார்கள், எல்லாரும் நாங்கள் அம்மாவின் வயிற்றில் இருந்த போது அம்மாவை பராமரித்தவர் அம்மாச்சி தான் என்று அரசி சொன்ன போது கண்மணியை லேசாக திரும்பி பார்த்தேன் அவள் சாதுவாக கேட்டுக் கொண்டிருந்தது எனக்கு ஆறுதலாக இருந்தது. என்ர அம்மா அடிக்கடி சொல்லுவா, நீங்கள் மூன்று பேருமே எனக்கு சுகப்பிரசவம். சீதையம்மா என்னை சும்மாவே விடமாட்டா. ஏதாவது தன்னோட சேர்ந்து வேலை செய்ய சொல்லுவா. வேலை செய்யக்குள்ள நல்ல கதை சொல்லுவா, பாட்டு பாடுவா, சேர்ந்து என்னையும் பாடச்சொல்லுவா, நானும் அவாவும் எங்கயும் போறது என்றா நடந்தே போயிட்டு வருவோம் என்று கூட்டிக்கொண்டு போய் வருவா. நீங்க வயிற்றில இருக்கக்குள்ள அவ எனக்கு தந்த சாப்பாடு, கதைகள், பாடல், பயிற்சிகள் எல்லாம் தான் நீங்க ஒரு ஆரோக்கியமான பிள்ளைகளாக பிறக்க காரணமாக இருந்தது. என்று அடிக்கடி சொல்லுவா. எங்கள் வீட்டில் இப்பொழுதும் எல்லா வசதியும், பணமிருந்தும், எல்லாரும் கிணற்றில் அள்ளி தான் குளிக்க வேண்டும். அம்மி, உரல், திரிகை, ஆட்டுகல்லு, இன்று வரை எங்கள் வீட்டில் பயன்படுத்தப்படுகிறது. ஞாயிற்று கிழமை என்றால் வீடு அமர்களமாகிவிடும். அன்று தான் அக்கிழமைக்கு தேவையான விடயங்கள் எல்லாம் இடித்து திரித்து அரைத்து வைக்கப்படும். அப்பா, அம்மா, தம்பிமார், நான் எல்லாரும் சேர்ந்து செய்வோம்.

ஆரோக்கியம் என்பது நமது வாழ்க்கை முறையில் இருந்து தான் தொடங்குகிறது. அம்மாச்சியை போல் வாழத்தொடங்கி விட்டால் ஆரோக்கியம் நம்மோடிருக்கும். போசாக்கு நிறைந்த உணவு நம் வீட்டு முற்றத்திலும், கோடிப்புறத்திலும், நாடுவாரின்றி கிடக்கின்றது. உலகம் அவைகளை எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்க துடிக்கின்றது.

ஒரு காலத்தில், நம் ஊர்கள் மீது கறுவா. கராம்பு, ஏலக்கா போன்றவைக்காக படையெடுத்த மேற்கத்தேய நாடுகள் இன்று நமது முருங்கை கீரையும், பூவரசம் பூவையும், குறிஞ்சாவையும் தேடி நம் காலடியில் வந்து நிற்கின்றது. ஆனால் நாமோ பீட்சாவையும், கே. எப்சி, கோழித் துண்டுகளையும் தேடி பணத்தை கொண்டு போய் கொட்டி வருகின்றோம். அங்கே இருந்து தான் நமது நோய்களையும் வாங்கி வருகின்றோம். என்று கூறியவுடன் மீண்டும் கரகோசம். இப்போது கண்மணியும் சேர்ந்து கரங்களை தட்டினா தொடர்ந்து அரசி முழங்கினாள். இங்கே நிறைய கர்ப்பிணிப் பெண்கள் வந்திருக்கின்றீர்கள். உங்கள் வீடுகளிலும் எங்கள் அம்மாச்சி போல் பல அம்மாச்சிகள் இருக்க கூடும், அவர்கள் தான் நமது வருங்கால தலைமுறையினரின் ஆரோக்கியம். அவர்களோடு வாழுங்கள், அவர்களை போல வாழுங்கள், அவர்களுக் காகவும் வாழுங்கள், அப்போது என்னை போல மிகச்சிறந்த இந்த உலகத்திற்கு தேவையான தலை முறைகளை பெற்றெடுப்பீர்கள். இந்த முதியோர் இல்லத்தில் எத்தனையோ அம்மாச்சிகளும் அப்பாச்சிகளும் தொலைத்து விடப் பட்டுள்ளார்கள். இந்த ஆரோக்கியங்களை இங்கே கொண்டு வந்து தள்ளி விட்டு அமைதியாய் ஆரோக்கியமாய் வாழ்வதற்கு பலர் முயற்சித்து கொண்டிருக்கிறார்கள். இவர்களே ஆரோக்கியத்தின் விதைகள் இவர்கள் இங்கிருந்தால் வீட்டில் எப்படி ஆரோக்கியம் துளிர்விடும். யாராவது ஆரோக்கியம் இல்லாதவர்கள், இங்கிருக்கும் இந்த ஆரோக்கியங்களையும் வாங்கி செல்லுங்கள்.

எங்கள் அம்மாச்சியுங் கூட இன்று உங்கள் விலைக்காக என்று சொன்ன போது அம்மாச்சி ஒரு முறை திரும்பி பார்த்தார் அரசியை, அரசி குப்பென வெடித்து அழுதாள்.

கண்மணி மேடையின் கீழிருந்து நோ நோ என கதறியழுதாள். பாவம் அம்மாச்சிக்கு தெரியாது. அவாவின் உடுப்பு பை இந்த முதியோர் இல்லத்திற்கு வந்து விட்டதென்று.

அரசி அழுகையை நிறுத்தி பேசினாள். பாவம் என்ற சித்தி எல்லாரையும் போல அவாவும் யோசித்ததில ஒரு பிழையும் இல்ல. ஆனால் அம்மாச்சி இல்லாம ஆரோக்கியமில்ல என்று தெரிஞ்சதால அவா கீழேயிருந்து நோ நோ என்று அழுறா.

அம்மாச்சியை இன்றைக்கு இந்த முதியோர் இல்லத்தில் விடுவதற்காகவே என் சித்தப்பாவும், சித்தியும் இங்கே கூட்டிக்கொண்டு வந்தார்கள். ஆனால் அம்மாச்சியின் பிள்ளை அதற்கு முன்பு இங்கே அதே அம்மாச்சியை குறித்து பேச முடிவு எடுத்து விட்டேன் என்பது அவர்களுக்கு தெரியாது.

தெய்வங்கள் இல்லாத கோயில்கள் இல்லை. அம்மாச்சிகள் இல்லாத வீடுகளும் இல்லை. அப்படி இல்லாதிருந்தால் இங்கிருந்து ஒரு அம்மாச்சியை கொண்டு போய் வீட்டில் வையுங்கள், ஆரோக்கியம் தானாய் வரும் என்று கூறி முடித்தாள்.

எல்லாரும் அழுகையுடன் அம்மாச்சியை கட்டி அணைத்தார்கள், கண்மணி அம்மாச்சியின் கால்களை தேடினாள் அவாவை வணங்குவதற்காய்.

## வாசித்த பின் தோன்றியவை

### இன்றும் நாளையும் முளைக்கும் சந்ததிக்கானவை.

இந்தக்கதைகள் அனைத்தும் ஒரு கனவு என்பது மிகவும் கடினமானது என்பதை அறிவோம். அப்துல் கலாம் சொன்னார் கனவு காணுங்கள் என்று எல்லாக்கதைகளும் இனி முகிழும் சூழல் எப்படி மாறவேண்டுமோ அதனை காட்சிப்படுத்தி இருப்பதை காணலாம்.
கலாநிதி யோசுவா அவர்கள் ஒரு சிற்பி. அந்த சிற்பியின் கலை வண்ணமாக சமூகம் என்ற சிற்பம் எவ்வாறு முகிழ்கின்றது என இந்தக் கதைகளைக் காணலாம்.

மிகவும் எரிச்சலூட்டும் ஆனால் ஒரு சுக அனுபவத்தை தரும் கதைகள் அப்படி என்றால் என்ன தமிழ்க்கதைகளின் கதாநாயகனாக காணும் புதுமைப்பித்தன் தனது கதைகள் சமூகத்தின் பிம்பம் என்றார். ஆனால் இவர் இந்த சகாப்தத்தின் மிகுந்த துணிச்சலுள்ள படைப்பாளியாகவே நான் பார்க்கிறேன். எப்படி சமூகம் இருக்க வேண்டும் என உரத்துச் சொல்வது சாதாரண வேலையா?

ஆர்தர். சி. கிளாக் தனது கற்பனைகளாலேயே மனுக்குலத்தை இன்று வாழவைத்துள்ளார் அவரது கற்பனையே நாம் இன்று தவிர்க்க முடியாமல் பாவிக்கும் அலைபேசிகள் அவ்வாறே இதிலுள்ள கதைகள் இந்த இயற்கைமீதான அதீத கரிசனையும் அதனை நம்பி வாழும் மனிதனை அதனோடு எப்படி பிணைக்கலாம் என்ற கற்பனையும் ஆகும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்பது வள்ளுவன் சொன்னது அதுவே இந்த கதைகளின் அடிநாதமாகினும் அதில் மிகுந்த தேர்ச்சி உள்ளது.

இயற்கை எமக்களிக்கும் கொடைகளை நாம் மிகுந்த கரிசனையோடு பற்றி, மிகுந்த ஆயுளோடு அரோக்கியமாக வாழவும் பொருளாதாரத்தில் நலிவுறாமல் இருக்கவும் இந்தக் கதைகள் புது வழிகளை காட்டுகின்றன.

சமூக நலனில் தன் ஆயுளை நனைத்து இரவும் பகலும் பல்வேறு பரிமாணங்களில் சமூகம் செழுமைபெற உழைத்துவருபவர் கலாநிதி அவர்கள்.

சாமி

அந்த வகையில் அவரது சித்தாந்தங்களே அவரது கதைகள் கார்ல்மாக்சு எதைச் சொன்னாரோ அதுபோல அவரது சித்தாந்தங்களே கதைகளாக ஆக்க இலக்கியமாக மனதை வருடுகின்றன.

இந்த நூற்றாண்டின் மிகவும் துணிச்சல்மிக்க எழுத்துக்களாக இவரை நான் பார்க்கிறேன் அழிந்து சிதைந்து வாழ வழிதெரியாமல் உள்ள சமூகத்தில் இருந்துதான் புதிய சிந்தனைகள் முளைக்கும் என்பதற்கு இவைகள் மிகுந்த கனதியான சாட்சியங்களாகின்றன.
இவை ஒரு சராசரி சிறுகதையை ஒத்த இலக்கணத்தை கொண்டவை அல்ல, அதன் உருவ அமைப்பை தகர்ப்புச்செய்கின்றன அவர் தனது கருத்தை வாசகனிடம் செலுத்துவதற்கு எந்த உபாயங்களை பயன் படுத்தலாமோ அதனை அவர் பயன்படுத்தி இந்தக் கதைகளை சொல்கிறார்.

## சாமி

தொகுப்பின் முதலாவது கதை "கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி" என்று பழைய பாடல் உண்டு உழுதுண்டு வாழ்பவனே இந்த உலக மாந்தர்களை வாழ வைக்கிறான் என்ற சிந்தனை தமிழர்களிடம் பண்டு தொட்டு ஊறியுள்ள விழுமியம். அதனால் விவசாயத்தை அவர்கள் ஒருபோதும் குறைந்த கௌரவம், குறைந்த தொழிலாக கணிப்பதே இல்லை, எனினும் இந்த இரண்டு நூற்றாண்டு களிலும் வாழ்ந்த மனிதர்கள் இதனைக்கடந்து பல வாழும் வழிகளை நோக்கி பயணித்து விட்டார்கள்.

வேட்டையுகம், விவசாயயுகம், கைத்தொழில் யுகம், தொழில்நுட்ப யுகம், சேவையுகம் என அறிஞர்கள் வரையறை செய்கிறார்கள். இதில் விவசாயம் கனதியாக கருத்தியல் உலகில் இருந்து மங்கிப் போயுள்ளது உணவில்லாவிட்டால் வாழமுடியாவிட்டாலும் அந்த உழைப்பவனை மதிக்கின்ற, அவனைப் போற்றுகின்ற மனப்பாங்கை காலாதி காலமாக சமூகம் குறைத்துக் கொண்டே வருவது தெரிகிறது.

விவசாயி கொண்டுவரும் உணவுப்பொருட்களை நீதியான சந்தைப்படுத்தும் முறைமை இல்லை இதனால் இந்த நாட்டில் விவசாயம் கைவிடப்படுகிறது மாற்றீடாக வெளிநாட்டிலிருந்தே உணவுப்பொருட்கள் இறக்கும் முயற்சிகளை அரசுகள் மேற்கொள்கின்றது.

விவசாயிகள் தினம்தோறும் புறக்கணிக்கப் படுகிறார்கள் இது இனிவரும் சந்ததிக்காவது செல்லக்கூடாது. அவர்கள் விவசாயிகளை மிகுந்த மரியாதைக்குரியவர்களாக பார்க்கவேண்டும் என இந்தக்கதை வலியுறுத்துகிறது.

இதில் கதை சொல்லும் பாணி மிகவும் வாசிப்பார்வத்தை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒரு சிறுகதைக்குரிய வளர்ச்சிப்போக்கை பின்பற்றி இருப்பினும் இந்தக்கதாசிரியர் மிகவும் துணிச்சலாக வடிவம் பற்றி அலட்டிக் கொள்ளாது கருத்துக்கான காட்சி பற்றியே கரிசனை கொள்கிறார்.

அத்தோடு இந்தக் கதையின் முடிவு ஒரு நல்ல சிறுகதை எப்படி பொசுக்கென்று செய்தியை சொல்லி மறையுமோ அதில் எந்தக் குறையையும் வைக்காது மறைகிறது. வியக்க வைக்கும் முடிவில் மனம் நின்று யோசிக்க வைக்கின்றது. அது வாசகனை மிகவும் வேகமாக சென்றடைகிறது என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை. மொழி நடை மிகவும் இயல்பாக பரவிக்கிடக்கிறது அது வாசிக்கும் மாந்தர்களுக்கு காட்சியை விரிக்கும் பாங்கு மிகவும் அழகானதே.

## மக்கள்

இன்று மனிதரை மனிதராக பார்க்காது இனங்களாகப் பார்த்தல் ஒரு கேவலமான நிலைமை. அதிலும் இந்த நாட்டில் அந்தக் கொடுமை உலகில் எங்கும் இல்லாதவாறு அரங்கேறி ஓய்ந்து இருக்கிறது, ஓய்ந்து விட்டதாக கூற முடியாது. இந்த இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசும் சிந்தனையாளர்களும் மிகவும் சிரமப்படுகின்றார்கள்.

பாடசாலைகளை அதற்காக நெறிப்படுத்துகிறார்கள், செயற்பாடுகளை முன்வைக்கிறார்கள். இந்தக்கதை ஒரு நல்லிணக்க முயற்சி எவ்வாறு வெற்றியளிக்கிறது என்பதை ஒரு அழகான கற்பனையில் கொண்டு வருகிறது இதனை மிகவும் நேர்த்தியாக செயற்படுத்தி நல்லிணக்கத்தை எற்படுத்தும் கனதியான முயற்சிகளை முன்னெடுத்தது போலவே இந்தக்கதை மனசில் வியாபிக்கிறது.

இவை மனிதகுலத்திற்கு நல்வழிகாட்டும் இலக்கிய வடிவம் அறம்போதித்த சங்கமருவிய கால இலக்கியங்கள் போலானவை. இந்தக்கதையை பொறுத்தவரை ஒரு மொழிபெயர்ப்புக்கான கனதியைக் கொண்டுள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

மனிதர்கள் எல்லோரும் ஒற்றுமையையே விரும்புகிறார்கள் யாரும் மற்றவர்களை அன்னியப்படுத்த இப்போது இந்த நாட்டில் விரும்பவில்லை.

இதில் கதை சற்று அதிகமான காட்சி விரிப்புகளை கொண்டுள்ளது. அதனை இன்னும் செறிவாக்கி இருக்கலாம் என வாசிக்கும்போது படுகிறது.

ஒரு சிறுகதை பதச்சோறான காட்சிகளுக்கு மட்டும் உணர்ச்சிகளுக்கு மட்டும் அதிக அழுத்தம் கொடுத்து திருப்பங்களில் அவசியமான காட்சிகளை கொண்டு வருமாயின் அது வாசகரை நனைக்கும்

## ஆட்சி

இந்தக்கதைக்கூடாக ஒரு நாடு எங்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என சொல்லப்படுகிறது. அசாத்தியமான துணிச்சலோடு இந்த பகைப்புலம் மனதுக்குள் விரிகிறது சனாதிபதியாக இருக்கும் ஒருவர் இதன் நிகழ்வெளி கற்பனையானதாகவே அமைகிறது. இங்கு கூர்ந்து நோக்க வேண்டியது யாதெனில் ஒரு மக்களுக்கான அரசியல் வாழ்வை ஒருவர் வடிவமைக்க எண்ணும் உயரிய கோட்பாடுகளாக இக்கதை தனது கருத்தை அழுத்திச் செல்கின்றமையால் வடிவம்பற்றி அலட்டிக்கொள்ளவில்லை.

இதனை ஒரு புது சிறுகதைப்பண்பாகவே எண்ணவேண்டும் கருத்தியல் செறிவினாலான இந்தக்கதையில் வாசகனை கட்டிவைத்திருப்பது புதிய கருத்துக்களே.

இவ்வாறான கதைகளை துணிச்சலோடு கொண்டுவரும் படைப்பாளிகள் மிகக்குறைவே, அந்தவகையில் இந்த நூற்றாண்டின் புதிய சிந்தனைகள் மனுக்குல விமோசனத்துக்கான பாதைகளை காட்டிநிற்கும் கதைகளில் ஒன்றாக இதனைக் கூறலாம்.

இதனை வாசிக்கும்போது சிங்கப்பூரை புதிய உலகுக்கான நாடாக துணிச்சலோடு வடிவமைத்த லீக்வான்யூ ஞாபகத்தில் வருகிறார். இதனை அரசியல் வழிகாட்டியாக அரசியல் வாதிகள் வாசிக்க வேண்டும் ஆசிரியர் தனது கருத்துக்கு கற்பனை நிகழ்வொளியை அமைத்துள்ளார் எனலாம்.

மனிதன் எதை அசாத்தியம் என்று எண்ணுகிறானோ அதனை சாத்தியமாக்கலாம் என பொதுவாக இந்த படைப்பிலக்கியத்தை பார்க்கிறேன். இதுதான் மனித குலத்தை நடத்தும் இலக்கியம் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை .

நிகழ்ந்ததை சொல்லி கழிவிரக்கத்தை ஏற்படுத்தும் கதைகளும் மனித உணர்வுகளை பரிமாறி மனித உலகத்தின் யதார்தங்களை சுவைப்பதற்காக பதிவுசெய்யும் கதைகள், கதைகள் தான், அவை அழகியல் ரசனைக்கானவைதான். ஆனால் இவை சிந்தனை ஆட்சிக்கான பரிமாணத்தில் எழுந்து வருகின்றன.

ஏன் பாரதி சொல்லவில்லையா சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம் அது இதுவரை மட்டும்தான் நிகழவில்லை இனி நிகழாது என்பதற்கில்லை.

## சந்தனம் மிஞ்சினால்

பிள்ளைகள் எவ்வாறு குடும்ப வருவாய்க்கு பங்களிக்கலாம் என இக்கதை பேசுகிறது. இதனை வாசிக்கும்போது இதனை சாதாரண மக்களிடம் எடுத்துச் செல்ல நாடகமாக்கினாலென்ன என்ற விசையே எனக்குள் எழுந்தது.

மேலும் ஒரு குடும்பம் சமூகத்தை எவ்வாறு காக்கவேண்டும் என்ற சிந்தனையும் வலியுறுத்தப்படுகிறது. “இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை” என்பது பொதுவாக கொள்ளலாம் தெருவெங்கும் கிடக்கும் ஆரோக்கிய உணவுகளுக்கான சிந்தனையும் மிகுந்த துணிச்சலோடு முன்மொழியப்படுகிறது.

இங்கு வரும் முனிவன் இந்தக்கதையின் பிரதான பாத்திரம் அவரது கருத்தாக பேசப்படும் விடயங்களே கதை நகர்வாக கதைவெளிக்குள் விரிகின்றன.

இதில் சிறப்பம்சம் என்னவெனில் மனிதன் மட்டுமல்ல எம்மோடு பறவைகள் விலங்குகள் பிராணிகள் எல்லாம் சேர்ந்ததே உலகம். நமது வாழ்வு என்கிறார்.

மனதை வருடும் உண்மைகளை இந்தக்கதை பேசுகிறது. மனிதப்பிறவி பற்றியே சிந்திக்காமல் வாழும் மனித உலகத்தில் இது ஒரு சிந்தனை தூண்டலே தனிமையோடும் வாழவைக்கும் மனித எண்ணங்களிலிருந்து இந்தக்கதை வேறுபட்டு சிந்திக்க வைக்கிறது.

மிகவும் சுவையான சிந்தனைகளை தூண்டும் கதை இது. இயற்கை மருத்துவம் இழையோடி கதையை கனதியாக்குகிறது. அழுத்த வேண்டியவற்றை கவிதைத்துணுக்குகளாக இதில் காணலாம் பைபிள் கதைகளில் வரும் காட்சிகள்போல விரியும் காட்சிகளையும் காணலாம்.

“பிள்ளைகளே இன்னொருவன் உழைத்து உழைப்பினால் நேர்மையாய் வாழ்ந்து இந்த இயற்கை கொடுத்த அத்தனை வளங்களையும் நேசித்து அந்த இயற்கையோடு இணைந்து வாழ்ந்து அதனையும் வாழ்வித்து அந்த வாழ்வின் இன்பங்களை பிறர்க்கும் பகிர்ந்து வாழ்பவன் எவனோ அவன் மனிதன். அவனுக்குள் ஓராயிரம் மனிதர்களை வாழ்விக்கும் மருந்து, விருந்து இருக்கிறது அவன் பாதங்களை தொடுவதும் வணங்குவதும் நாம் பெற்ற பேறு என்று சொல்லுவேன்” இந்த பந்தியில் இந்தக்கதையின் கரு வெளிவருகிறது.

## பட்டி

இது ஒரு முயற்சியாளனின் வெற்றி பற்றி காட்சிகளை விபரிக்கிறது. இளைஞர்களுக்கு இது ஒரு உற்சாக பானம் எனலாம். ஒவ்வொருவரது மனதிலும் நம்பிக்கையே எல்லா வெற்றிகளுக்கும் அடிப்படை என்கின்ற கருத்தியலில் இக்கதை மையம் கொள்கிறது.

இதிலுள்ள சிறப்பாக நான் பார்ப்பது கிளிநொச்சி பற்றி அதன் வளங்கள் வளர்க்கப்படவேண்டிய நிலைமைபற்றி ஒரு ஆய்வாகவும் புனைகதையாகவும் இது இரட்டைப்பரிமாணமடைவதே. அதனால் ஒரு பிரதேசத்தின் மக்கள் இதனை கருத்தேற்றிக்கொள்ளும் சூழ்நிலை அழுத்தம் பெறுகிறது.

இந்தக் கதைக்கு கதாசிரியர் நிகழ்வெளியை சுருக்கி இருக்கலாம் என்று எனக்குத்தோன்றியது. எனினும் அழகான காட்சிகளுக் கூடாகவே கதை சொல்லப்படுகிறது.

---

"சில மனிதர்கள் நம்மை செதுக்கும் உளிகள்" மிகவும் பெறுமதியான கருத்தியல் என எனக்குப் பட்டது. வெட்ட வெளிச்சமாக இந்தக் கதைகளுக்குள் கதாசிரியர் தனது கருத்தை முன்வைக்கிறார் அவரது துணிச்சலே இக்கதைகளின் உயிர்.

இது ஒரு சுப்பமேன் கதைதான். அவை கடந்த நூற்றாண்டில் பல சாதனைகளை மனிதன் செய்வதற்கு தூண்டியாக இருந்தது என்பதை ஏற்றே ஆக வேண்டும் அதிமானுடத்தனம் என்பது சாத்தியமாகியும் உள்ளதே இந்த நவீன உலகு.

## நாணயம்

ஒரு முன்மாதிரி பெண்ணின் உழைப்பை எடுத்துக்காட்டும் கதை கதையோட்டம் மிகவும் சுருக்காக செல்கிறது.

இதன் சிறப்பு கதைவெளி மிகவும் குறைவு வாசகனின் கண்ணுள் சிக்கலில்லாத காட்சிகளும் கருத்தும் விரிகிறது. குழப்பமான கதை போல திகில் கடைசிவரை உருவாக்கப்பட்டது. கதையை வாசிக்க தூண்டுகிறதோடு ஒரு பெண்கள் அமைப்பு எத்தகு பலத்தோடு பொறுப்புணர்ச்சியோடு வளரந்தது என்பதும், வளர்க்கலாம் அதற்கு நாணயம் உண்மை உழைப்பு, ஏமாற்றாமை, முன்மாதிரி தலைமைத்துவம் ஆகியன அடிப்படையானவை என்பதே இந்தக் கதை சொல்லவந்த கோட்பாடு என புரிகிறது.

பொருளாதாரம் மனித குலத்தில் எவ்வளவு முக்கியத்துவமானது அதனை கட்டி எழுப்ப மனிதர்கள் ஒரு கணம் சிந்திக்க வேண்டும் என்பதே இதன் அடிநாதம்.

குறிப்பாக பெண்களுக்கு வலுவூட்டும் கருத்தியலோடு அவர்களது பிள்ளைகள் சமூகத்தில் எவ்வாறு அடையாளத்தைப் பெற எண்ண வேண்டும் என்பதும் இங்கு கோடிகாட்டப்படுகிறது.

யுத்தத்தின் பின்னான மக்கள் கூட்டத்திற்கு, அனேகமாக பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஆண்துணை இல்லாத பெண்கள் இக்கதை மூலம் உற்சாகம் பெறுவார்கள்.

கதாசிரியர் ஒரு நாடகர் என்பதற்கு நல்ல சாட்சியமாக இவரது கதைகோர்ப்பு அதாவது கதை வெளியில் சம்பவங்களின் கோர்ப்பு மிகவும் அனாயாசமாகத் தெரிகிறது. குறைந்த அளவான பாத்திர வார்ப்பு வாசகனை கவனக்குவிப்புக்கு இட்டுச் செல்கிறது.

கருத்து வலுவாக இருப்பினும் கதைவெளியும் சம்பவங்களை கோர்ப்பதும் அதாவது கதையை முன்வைக்கும் உத்தியும் பலவீனமானால் கதையின் கருவையே சிதைத்து விடும். எனவே இந்தக் கதை சொல்லல் அவற்றைத் தகர்க்கிறது. அது அவரது கதைசொல்லும் ஆளுமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறதெனலாம்.

## அணில் கூடு

பாடசாலைப்பரிசளிப்புக்கு சமூகத்தில் நல்லொழுக்கம், நல்ல உழைப்பு, நேர்மை, அறநெறிவழிவாழ்வு, பரோபகாரம் போன்ற நல்ல குணங்களுள்ள நற்குணம் என்ற ஒரு சாதாரனன் பாடசாலை விழாவுக்கு பிரதம அதிதியாக அழைக்கப்படுகின்றதை காட்டும். சாதாரண இயல்பான கிராம மக்களின் குணங்களுடே இந்த கதைவெளியும் கதாமாந்தர்களும், அலைவிக்கப்படுகிறார்கள். ஒரு முன்மாதிரியான கதாபார்திரமும் குடும்பமும்.

கிழமைக்குக் கிழமை கூட்டம் வைத்து குடும்பச் செயற்பாடுகளை இவர்கள் திட்டமிடுகிறார்கள் என்பது வாசகனுக்கு பிரமிப்பையும் அதன் யதார்த்தத்தையும் அதன் சிறப்பையும் காட்டுகிறது.

இங்கும் உழைப்பும் சேமிப்பும் மற்றவருக்கு உதவுதலும் மேலோங்கி நிற்கும் கருப்பொருள்களாகும். வாழத்தொடங்கும் இளைஞர்களை தம்பதியரை இக்கருத்துக்கள் பற்றிக் கொள்ளுமாயின் இந்த சமூகம் நிறைவான சமூகமாக மாறும்.

இக்கதை எப்படி வாழவேண்டும் என்பதற்கு வழிகாட்டுகிறது. அணில்கள் தேடும் மூலப்பொருட்கள் அவர்களுக்கு மீண்டும் இயற்கையிலிருந்தே கிடைக்கிறது என்பது இந்தக் கதை வெளிப்படையாக உணர்த்திநிற்கும் கருத்தியல்.

## வீரத்தாய்

இந்தக்கதை கதாசிரயரின் எதிர்பார்க்கையை இந்த மண்ணின்தாய் ஒருத்தியிடம் இருக்கலாமே என்ற ஏக்கத்தின் பிரதிபலிப்பாகவே காணப்படுகின்றது. இதனை கதை வடிவத்துக்கு தனது கருத்தியல் பார்வையினால் கட்டி எழுப்பி இருக்கிறார். அதன் அழகியல்பரிமாணம் மெருகேற்றப்படவே வேண்டும்.

## ஊறுகாய்

இந்தக்கதை பொருளாதாரத்தை இந்த பிரதேசத்தில் எவ்வாறெல்லலாம் தோற்றுவிக்கலாம் என்ற அதிமானுடத்தன்மைக்கு உதாரணமாக இருக்கிறது. இக்கதையின் நீட்சி வாசகனின் மனதில் அழுத்தம் பெறத்தவறுகிறது.

இதனை செப்பனிடுவதும் பல கருத்துக்களை ஒரு சிறுகதைக்குள் நுழைவிக்காமல் பார்ப்பதும் இந்த கதாசிரியர் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்.

கருத்துக்களே அதிக ஆட்சி செய்யின் அது கதை அழகியலை பாதிக்கும், எனவே எனக்குப்பட்டது எனினும் கனதியான செய்தியை இக்கதை வலியுறுத்தி வாழும் விழுமியங்களை மிக ஆழமாக பதிவு செய்கிறது.

குறிப்பாக ஒரு வியாபாரி எவ்வாறான நேர்மை எவ்வாறான அறத்தை பேணவேண்டும் என்பதற்கு இந்தக் கதைக்கூடாக அறிவுரை சொல்லப்படுகிறது அந்த தர்மம் ஒருவனின் வியாபாரத்தை எவ்வாறு செழுமைப்படுத்தும் என்பதனை கோட்பாட்டு வாதகதையான இதில் புரியலாம்.

## மருந்து

இந்தக்கதையை வாசிப்பது வாசகர் ஒவ்வொருவரதும் கட்டாய கடமை என்றே நினைக்கிறேன். கதை நகரும் தொழில்நுட்பம் மிகவும் சுவையானது வலிந்து புகுத்தப்பட்ட கருத்தியல் காட்சிகளற்று ஒரு நீரோட்டமாக கதை சொல்லப்படுகின்றது.

இதனை வாசித்து முடித்தபோது கண்கள் பனித்தன. ஒரு தாயன்பை முதுமையின் பெறுமானத்தையும் நவீன மனிதர்களின் வாழ்க்கை முறையையும் ஒரு ஆண் தனது கருத்துக்களை பழக்கவழக்கத்தை தொடர்ந்து பேண முடியாது. நவீனம் என்ற பொய்மைக்குள் ஒரு பெண்ணுக்காக அடிமைப்பட்டுப் போகின்றமை அழகாக சொல்லப்படுகிறது.

ஒரு கையாலாகாத கணவனின் நிலை இன்றைய சமூகத்தில் பனி மூட்டமாய் வியாபித்துள்ள, ஆண் அடிமைத்தனம் கதாசிரியரின் கதை சொல்லலின் பக்க விளைவாக மேற்கிழம்புகிறது மிகவும் சிந்திக்க வைக்கும் அழகியல் இழையோடும் அழகான கதை.

இன்று பெற்றதாயின் கைச்சமையல் சுவையை பெறமுடியாது தவிக்கும் பல ஆண்களின் நிலை இந்த அம்மாச்சி ஒரு செவிலியாக வாழ்ந்த நேர்மை அழகாகச் சித்தரிக்க கதாசிரியர் நகர்த்தும் கதை சம்பவங்கள் கண்ணில் தெரிகின்றன.

இந்த தொகுப்பில் சாமி, நாணயம், அணில்கூடு, மருந்து போன்ற கதைகள் மனிதர்களின் சிறப்பை அழுத்தமாக பேசும் யதார்த்தமான கதைகள்.

எல்லாக்கதைகளும் உழைப்பை வலியுறுத்தும் அதேவேளை தன்னம்பிக்கையை கட்டி எழுப்ப முயல்கின்றமை இந்த தொகுப்பின் இலக்காக அமைகிறது.

இவ்வாறான கதைகளை ஏனைய படைப்பாளிகளால் இதன் பின் ஆக்க முடிந்தால் அது இந்த கதாசிரியர் போட்ட விதை என குறிப்பிடுவது கொஞ்சமும் மிகை இல்லை.

நல்ல சிந்தனையை இளம் சமூகம் தமது விழுமியமாக வரித்துக் கொள்ளும் அக்கதைகள் அடுத்த அடுக்குச் சமூகத்தின் தாரக மந்திரமாக அவர்களது கைகளில் இவை சென்றடைய வேண்டும்.

பாடசாலைகள் பாட நூல்கள் இந்த கதைகளின் கருத்தியல் செழுமைகருதி சேர்த்துக் கொள்ள வேண்டும். புனைகதைகளின் பண்புகளில் ஒன்று சிக்கல் இங்கு சிக்கல்கள் பற்றியதான அழுத்தம் குறைவு. எனினும் உள்ளார்ந்த கேள்விகளோடு வாசகன் பயணிக்க வைக்கப்படுகிறான்.

சமூகவாழ்வின் யதார்த்த சிக்கல்கள் பேசப்படாது இங்கு வழமையான சிறுகதைகளிலிருந்து வேறுபட்டு புதிய கருத்தியல்சார் கற்பனை சிக்கலை இவர் தோற்றுவித்து அதற்கு வழிசொல்கிறார்.

இது மார்க்சு முன்னெடுத்த சித்தாந்தம் போல் புதிய கருத்தியல் விசையாகிறது. பிரெஞ்சு எழுத்தாளர் பல்சாக் அன்ரன்செக்கோ, நிக்கொலாய் கொகோல் போன்றவர்கள் மாக்சின் கருத்தியலுக்கு கலை வடிவம் கொடுத்த படைப்பாளிகள் எனக்கூறப்படுகின்றது.

அந்தவகை எழுத்தாகவே இதனை பார்க்கலாம். இருப்பியல் கருத்தில் எழுதிய பதுமைப்பித்தன், குபரா தோமசுமான், பிரான்சிசு காப்கா, அல்பேட் மாசு ஆகியோரது ஆக்கங்கள் நம்பிக்கை வீழ்ச்சிபற்றி பேசிய ஆக்கங்கள் என்கிறார்கள். pessimism

ஆனால் இந்தக்கதைகள் எவையும் அப்படியானவை அல்ல. இவற்றுக்கு புது இலக்கணம் அவசியம் optimism இங்கு பேசப்படுகின்றது.

இது அறிவியல் புனைய வகைக்குள் வரும் கதைகள். இது சமூக வளர்ச்சி பற்றிய சிந்தனையின் பாற்பட்டது. 1920 களில் இவற்றை ஒத்த அறிவியல் தளம் விரிந்தது என்பர், கைத்தொழில் புரட்சிக்குப்பின் இது அழுத்தம் பெற்றது.

தமிழ் மரபில் பேசப்பட்ட புட்பக விமானம் என்ற எண்ணக்கரு, பூதர்கள் பாத்திரங்களை உருவாக்குதல், ஆகாயத்தில் பறத்தல் இதைப்போல செல்லியின் அறிவியல் படைப்புகள் பெரும் திருப்பமாகின .

கல்வினுடைய மின்னியல் கண்டுபிடிப்பு பற்றிய கதைகள் அறிவியல் புலக்காட்சிகளை எழச்செய்தன இதனைப்போல சமூகபொருளாதார விழுமியச் சிந்தனைகளை இவை முகிழ்க்கின்றன.

இந்த கதைகளின் வெற்றி இதன் கருத்தியல் தளம் என்பது மிகவும் சிறப்பானது. பொதுவாக இந்தப்படைப்பாளி வண கலாநிதி யோசுவா மிகுந்த துணிச்சலோடுதான், சமூக விமர்சன தேர்ச்சியோடுதான் இந்தக்கதைகளை முன்வைக்கிறார்.

அது ஒரு சிறுகதைப் படைப்பாளிக்கு இருக்க வேண்டிய மிகவும் அவசியமான தேர்ச்சி அதனை இந்த எழுத்துக்கள் பேசும். வரலாற்றில் நிலைக்கும்.

தான் எதைக் கண்டேனோ, அனுபவித்தேனோ அதனை எழுதுவதாகவே பதுமைப்பித்தன் போன்ற எழுத்தாளர்கள் சொல்லுவார்கள்.

அதற்கு மாறாக இலக்கியம், மனிதகுலம் எங்கு போக வேண்டும் எனச் சொல்லும் இலக்கியங்கள் இந்த உலகில் படைக்கப்படுகின்றன என்பதற்கு இந்த சிறுகதைத்தொகுப்பு கட்டியம் கூறுகிறது.

இந்த சாத்தியமான கற்பனைகள் ஏழனத்துக்குரியவைகளாக தோற்றமளிக்கலாம் என்பது புரிகிறது. அது தான் சிறந்த இலக்கியம் மனிதர்கள் எதனை உடனே ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்களோ அந்த சிந்தனைதான் அவர்களை காலகதியில் வழிநடத்தும்.

அது என்னவெனில் மனித இயங்கியல் சூழலில் எது வரவேண்டும் எனச் சொல்லும் போது அதற்கு பழக்கப்படாத மாந்தர்கள் அதனை உடனே நிராகரிப்பார்கள். சோக்ரடீசும் அவ்வாறே கொல்லப்பட்டார் என்பது மனித குலத்தின் வரலாற்றில் நல்ல படிப்பினை என்றும், இதற்கொப்ப பெரும் சிந்தனையால் இந்த உலக இயக்கத்தை திசைகோட்படுத்திய மாமேதை கால்மாக்சு வறுமையால் வாடினார், நாடுகடத்தப்பட்டார். இவை ஒரு புதிய சிந்தனை முளைக்க நீண்ட நாள் எடுக்கும் என்பதற்கு சான்றுகள். இந்த எழுத்துக்களும் மிகுந்த உயிர்த்துடிப்பு மிக்க எழத்துக்கள். காலக்கிரமத்தில் இவை இந்த மனிதர்களில் முளைவிடும்.

கதாசிரியர் ஒரு விடயத்தை கருத்தில் கொள்ளவேண்டும் பல கருத்தியல்கள் இயல்பாக வருவதைவிட வலிந்து ஒரு கருவூலத்துள் புகுத்தாது கட்டுரைப்பாங்கை தவிர்ப்பதும் இந்த கதைகளை ஒரு சனரஞ்சக வாசிப்புக்கு கொண்டு செல்லும் வாய்ப்பாகும்.

அவ்வாறெனில் கதையின் சித்தாந்தம் சமூகத்துக்குள் செல்ல அதன் அழகியல் பரிமாணம் வலுப்பெறவும் வேண்டும். பிராந்திய மொழி மிக நேர்த்தியாக இக்கதைகளுக்கு வலுச் சேர்க்கிறது. வீட்டில் அன்றாடம் பயிலும் காட்சிகளும் அழகியல் தன்மையை வலுவாக்கியுள்ளன. இரவில் நிலவை இரசித்தல் அழகான காட்சி என்பேன்.

---

மற்றவர்களைப்பற்றி கவலைப்பட்டு தன்னை இழப்பவர் படைப்பாளியாக முடியாது. சமூகத்துக்கு செய்தி சொல்லவும் முடியாது. அந்த உண்மைக்கு சான்றாக இருப்பது இந்தக் கதைகள்.

இந்தக்கதைகள் கருத்தியல் பரிமாணத்தை ஒருவரும் எட்டாத அளவு உயரத்துக்கு கொண்டு சென்றுள்ளது. இவை இன்றும் நாளையும் முளைக்கும் சந்ததிக்கான கதைகள் எனலாம்.

*பெருமாள் கணேசன்*
*அதிபர்*
*சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்.*

## நூலாசிரியரின் இதர நூல்கள்

01. ஒரு நதியின் ஊற்று

02. மண்

03. மலையில் கசிந்த உதிரம்

04. கரிக்காட்டுப் பூக்கள்

05. மௌனத்தின் வலி

06. அழகான காலங்கள்

## குறிப்பு

வினாக்களுக்கு விடையளித்து பரிசில்களை வெல்லுங்கள்.....

1. ரேவதியின் கோயிலுக்கான பயணம் எவ்விடத்தில் முடிந்தது? யாரை வணங்கினாள்?
2. நந்தினியின் எழுத்துருவில் உருவான பேச்சை வாசித்த மாணவன் யார்?
3. மானுடம் தொலைக்காட்சியின் பிரதான நோக்கம் என்ன?
4. "கைக்குள் செல்வம்" என்ற தத்துவத்தை யார் யாரிடம் கூறியது?
5. மாணிக்கம் இராமச்சந்திரன் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட நூலின் பெயர் என்ன?
6. நாணயம் 25ஆம் ஆண்டு மலரில் எத்தனை அதிகாரங்கள் உண்டு? அவை எவை பற்றி பேசுகின்றன?
7. தமிழர் வாழ்வில் அறம் பற்றி யார் பேசியது? அவள் தன் பேச்சுக்கு முன்பு தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்தினாள்?
8. உலக வர்த்தக நிறுவனத்தின் தலைவராக இருக்கின்றவர் எந்த நிறுவனத்தை நடத்துகின்றார்?
9. தாய்க்கு சூட்டும் மகுடம் எது என வீடுகளில் எழுதப்பட்டிருந்தது?
10. கண்மணியின் மருத்துவ ஆராய்ச்சியின் தலைப்பு என்ன?

பத்து கதைகளையும் வாசித்த பின்பு பத்து வினாக்களுக்கும் பதில் அனுப்புவோரின் சிறந்த பதில்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் உள்ளன. உங்கள் பதில்களை எதிர்வரும் 30.09.2018 இற்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

"சாமி"
காவேரி கலாமன்றம்
இல 566, நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம் கிழக்கு,
கிளிநொச்சி.

## என் பார்வையில்....



தேடல்கள் நிறைந்த மனிதன் ஆளுமையில் உயர்ந்து நிற்பான். நிறைந்த வாசிப்பும். தேடலும் கைவரப்பெற்றால் அந்த மனிதன் ஓர் ஆக்கப் படைப்பாளியாகவும் மாறி விடுவான். அத்தகைய ஒருவரான வண T.S. யோசுவா அவர்களின் எழுத்தாக்கமாக இந்த நூல் மலர்ந்துள்ளது.

2012 ஜனவரியில் அரச பணியின் நிமித்தம் கிளிநொச்சி மண்ணுக்கு எனது வருகை நிகழ்ந்து வந்த நாள் முதல் இன்று வரையும் அவருடனும். அவர் இயக்குநராக உள்ள காவேரி கலா மன்றத்துடனும் ஆத்மார்த்தமான ஆழமான நட்பு தொடர்கின்றது.

அவரை ஒரு நிர்வாகியாக. மதகுருவாக. நடிகனாக. கலைஞனாக. எழுத்தாளனாக. சமூக சேவகனாக பலவித முகங்களாக கண்டு பழகியவர்களில் யானும் ஒருவன். அவரது எழுத்துக்களை பல முறை தரிசித்துள்ளேன். இப்பொழுது சாமி என்ற நூலின் வடிவில் சந்திக்கின்றேன்.

வாழ்க்கைப் பாதையில் நாம் பதித்த தடங்களை பல வித கோணங்களில் சிறுகதைகள் எனக் கூறக்கூடிய வடிவத்தில் பத்துப் பாகங்களாக பதிவிட்டுள்ளார். புனைவுசார் வடிவங்களாக இக்கதைகள் வெளிப்பார்வைக்கு தெரிந்தாலும் சம்பவங்கள் காட்சிகள் யாவும் புனைவு சாரா உண்மைச்சம்பவங்களேயாகும்.

வண T.S. யோசுவா அவர்களின் பட்டறிவு களங்கள். சமூக அபிவிருத்திக்கு தேவையான செயற்திட்டங்கள் ஆகியவை இக்கதைகள் ஊடாக சொல்லப்படுகின்றன. பொருளாதார ரீதியான கட்டுமானங்கள். அபிவிருத்திகள் நிறையவே நாட்டில் நடக்கின்றது. வாழ்க்கைத்தரம் மலையளவு உயர்ந்து விட்டது. ஆனால் மனிதர்களது பணத்தை சுரண்டும் நவீன காலனித்துவ சிந்தனைகள் இக்கதைகள் ஊடாக கண்டிக்கப்படுகின்றன. அநியாயச் சிந்தனைகளுக்கு சாட்டையடி கொடுக்கப் படுகின்றது. நற்சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. சினிமா என்பது ஓர் கனவுத் தொழிற்சாலை. அது போல புனைவுசார் கதை வடிவங்களும் கற்பனை வடிவங்களாக அமையக்கூடாது என்பதில் மிகவும் கவனம் செலுத்தியுள்ளார்.

தமிழ்வாசகப் பரப்பிற்கு வளம் சேர்க்கும் புதுவரவு மிகுந்த வரவேற்பைப் பெறுமெனத் திடமாக நம்புகிறேன். வாழ்த்துகிறேன் மென்மேலும் படைப்புகளைத் தர இறைவன் மிகுந்த ஆரோக்கியத்தை தரவும் இறைஞ்சுகிறேன்.

**வேதநாயகம் தபேந்திரன்.**
*மாவட்ட அலுவலகர் - கிளிநொச்சி,*
*சமூக சேவைகள் திணைக்களம்,*
*வடமாகாணம்.*

**ISBN :978-955-7825-02-1**
**Bar Code : 9 789557 825021**